# உலகப் பழமொழிகள்

ப. ராமஸ்வாமி

மாவட்ட நூலக ஆணைக்கு

வள்ளுவர் பண்ணை
டி. 2வது மெயின் ரோடு சி.ஐ.டி.நகர், சென்னை-35

நெல்லை மாவட்ட நூலக ஆணைக்குழு
6281

முதற் பதிப்பு: டிசம்பர், 64
மூன்றாம் பதிப்பு: மார்ச், 75
நான்காம் பதிப்பு: ஜூலை, 81
முழு உரிமையும் பண்ணைக்கே

**விலை ரூபாய் 15-00**

வெளியிட்டோர்:
வள்ளுவர் பண்ணை

விற்பனை உரிமை:

**திருமகள் நிலையம்**
13, எர்ரபாலு தெரு, சென்னை-600001
PHONE: 26183

மாருதி பிரஸ், 173, பீட்டர்ஸ் ரோடு, சென்னை - 600 014.

...லை மாவட்ட நூலக ஆணைக்குழு

# பதிப்புரை

ஒரு நாட்டின் பழமொழிகளைத் தொகுத்தாலே அது அறிவுக் களஞ்சியமாகவும், அநுபவக் களஞ்சியமாகவும் விளங்கும். இந்நூல் உலகிலுள்ள பல நாடுகளின் பழமொழிக் களஞ்சியம். இது ஒவ்வொரு குடும்பத்திலும் இருக்கவேண்டிய நூல், நாள்தோறும் படித்துப் பயன்பெற வேண்டிய நூல். ஆசிரியர் திரு. ப. ரா., படிக்கப் படிக்க இனிமை பெருகும்படி, இதைத் தொகுத்து மொழி பெயர்த்துள்ளார்.

இதற்குத் தமிழ் மக்களின் பேராதரவு கிடைத்து நான்காம் பதிப்பு வெளிவருகிறது.

ஆசிரியருக்கும், சிறப்பாக அச்சிட்டு உதவியவர்களுக்கும் எமது நன்றி.

ந. பழநியப்பன்
வள்ளுவர் பண்ணை

சென்னை-35.

# குறிப்பு

இந்நூலில் பழமொழி ஒவ்வொன்றின் இறுதியிலும் அது வழங்கும் நாட்டின் பெயர் குறிக்கப் பெற்றுள்ளது. சிலவற்றிற்கு ஆசிரியர்களின் பெயர்கள் குறிக்கப் பெற்றுள்ளன.

ப. ஏற்பாடு என்பது விவிலிய வேதத்தில் பழைய ஏற்பாடு, பு. ஏற்பாடு புதிய ஏற்பாடு, ஸெக். என்பது ஸெக்கோஸ்லேவேகியா, கீ. நா. என்பது கீழ்த்திசை நாடுகள். சில பழமொழிகளுக்கு அவைகளைத் தோற்றுவித்த சாதியார், அல்லது சமயத்தாருடைய பெயர்கள் கொடுக்கப் பெற்றுள்ளன. உதாரணமாக சீக்கியர், ஜைனம், ஸூஃபி முதலியவை.

# உள்ளுறை


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | கடவுள் | 9 |
| 2. | கோயில் | 18 |
| 3. | வழிபாடு | 19 |
| 4. | சமயம் | 22 |
| 5. | சமரசம் | 24 |
| 6. | சுவர்க்கம் | 24 |
| 7. | நரகம் | 25 |
| 8. | தத்துவஞானம் | 26 |
| 9. | ஆன்மா | 27 |
| 10. | நாத்திகம் | 28 |
| 11. | குருக்கள் | 28 |
| 12. | சயித்தான் | 30 |
| 13. | விதி | 31 |
| 14. | அதிருஷ்டம் | 33 |
| 15. | துரதிருஷ்டம் | 35 |
| 16. | மூடநம்பிக்கை | 36 |
| 17. | நாளும் கோளும் | 37 |
| 18. | உலகம் | 38 |
| 19. | நிலையாமை | 40 |
| 20. | இயற்கை | 40 |
| 21. | உயிர் | 44 |
| 22. | மனிதன் | 44 |
| 23. | வாழ்க்கை | 46 |
| 24. | ஆடவர் | 50 |
| 25. | பெண்கள் | 52 |
| 26. | காதல் | 59 |
| 27. | பெண் பார்த்தல் | 65 |
| 28. | திருமணம் | 67 |
| 29. | கணவன் | 72 |
| 30. | மனைவி | 74 |
| 31. | கற்பு | 79 |
| 32. | வீடு | 79 |
| 33. | அண்டை வீட்டுக்காரர் | 81 |

| | | ப |
|---|---|---|
| 34. | இல்வாழ்க்கை | |
| 35. | குழந்தைகள் | |
| 36. | தாய்தந்தையர் | |
| 37. | குலம் | |
| 38. | இனம் | |
| 39. | குடும்பம் | |
| 40. | சகோதரர் | |
| 41. | மாமியார் | |
| 42. | மருமகன் | |
| 43. | சுற்றம் | |
| 44. | கைம்பெண் | |
| 45. | அநாதைகள் | |
| 46. | பழமை | |
| 47. | ஒற்றுமை | |
| 48. | விருந்து | |
| 49. | இளமை | |
| 50. | முதுமை | |
| 51. | உடற்குறைகள் | |
| 52. | ஆரோக்கியம் | |
| 53. | நோய் | |
| 54. | வைத்தியம் | |
| 55. | மருந்து | |
| 56. | மரணம் | |
| 57. | கல்லறை | |
| 58. | நன்மையும் தீமையும் | |
| 59. | உலக அநுபவம் | |
| 60. | உலகத்தோடு ஒழுகல் | |
| 61. | உலக நாடுகளும் மக்களும் | |
| 62. | செல்வம் | |
| 63. | சொத்து | |
| 64. | பணம் | |

| | | |
|---|---|---|
| 65. | வறுமை | 141 |
| 66. | ஏழைமை | 144 |
| 67. | பிச்சை | 146 |
| 68. | நல்வினை | 146 |
| 69. | தீவினை | 148 |
| 70. | கழுவாய் | 151 |
| 71. | கழிவிரக்கம் | 151 |
| 72. | இன்பம் | 151 |
| 73. | துன்பம் | 154 |
| 74. | மகிழ்ச்சி | 155 |
| 75. | கவலை | 157 |
| 76. | துக்கம் | 158 |
| 77. | அன்பு | 160 |
| 78. | இரக்கம் | 162 |
| 79. | அறம் | 163 |
| 80. | ஈகை | 163 |
| 81. | தயாளம் | 168 |
| 82. | உலோபம் | 168 |
| 83. | உதவி | 170 |
| 84. | நன்றி | 172 |
| 85. | நம்பிக்கை | 175 |
| 86. | சுத்தம் | 177 |
| 87. | அழகு | 178 |
| 88. | விகாரம் | 180 |
| 89. | கல்வி | 181 |
| 90. | கேள்வி | 182 |
| 91. | ஐயம் | 183 |
| 92. | அறிவு | 183 |
| 93. | மடமை | 186 |
| 94. | இசை | 191 |
| 95. | கலைகள் | 192 |
| 96. | சிந்தனை | 193 |
| 97. | முன்யோசனை | 194 |
| 98. | பழமொழிகள் | 196 |
| 69. | சரித்திரம் | 199 |
| 100. | நூல்கள் | 199 |
| 101. | ஆசிரியர் | 200 |
| 102. | கற்பனை | 200 |
| 103. | உரையாடல் | 200 |
| 104. | விவாதம் | 201 |
| 105. | மறதி | 201 |
| 106. | செயலறிவு | 202 |
| 107. | கவனிப்பு | 202 |
| 108. | முக்கியம் | 204 |
| 109. | எச்சரிக்கை | 205 |
| 110. | ஒழுக்கம் | 205 |
| 111. | பண்பு | 208 |
| 112. | மனச்சான்று | 209 |
| 113. | மனநிறை | 210 |
| 114. | நடுநிலை | 211 |
| 115. | மானம் | 211 |
| 116. | அவமானம் | 212 |
| 117. | நாகரிகம் | 212 |
| 118. | உண்மை | 213 |
| 119. | பொய் | 215 |
| 120. | நேர்மை | 218 |
| 121. | வாக்குறுதி | 218 |
| 122. | அடக்கம் | 219 |
| 123 | பணிவு | 220 |
| 124. | மரியாதை | 221 |
| 125. | அவமதிப்பு | 222 |
| 126. | செருக்கு | 222 |
| 127. | தற்புகழ்ச்சி | 224 |
| 128. | நாணம் | 224 |
| 129. | வழக்கம் | 225 |
| 130. | பழக்கம் | 225 |
| 131. | திறமை | 227 |
| 132. | வலிமை | 228 |
| 133. | மெலிவு | 229 |
| 134. | மௌனம் | 229 |
| 135. | பேச்சு | 230 |
| 136. | குணம் | 233 |
| 137. | கடமை | 234 |
| 138. | உரிமை | 235 |
| 139. | கோபம் | 235 |
| 140. | பொறுமை | 237 |
| 141. | நாவடக்கம் | 239 |
| 142. | இன்சொல் | 240 |
| 143. | மன்னிப்பு | 241 |

| | | |
|---|---|---|
| 144. | இன்னா செய்யாமை | 242 |
| 145. | நிதானம் | 242 |
| 146. | இடையூறு | 243 |
| 147. | சாதுரியம் | 243 |
| 148. | அருமை | 244 |
| 149. | செயல் | 245 |
| 150. | கருத்துடைமை | 245 |
| 151. | ஊக்கம் | 246 |
| 152. | சோம்பல் | 247 |
| 153. | தாமதம் | 249 |
| 154. | முயற்சி | 250 |
| 155. | உறுதி | 251 |
| 156. | இயலாமை | 252 |
| 257. | தவறு | 253 |
| 158. | கருவி | 253 |
| 259. | இதயம் | 253 |
| 160, | உணர்ச்சி | 256 |
| 161. | வீரம் | 256 |
| 162. | வெற்றியும் தோல்வியும் | 258 |
| 163. | துணிவு | 259 |
| 164. | அச்சம் | 259 |
| 165. | அபாயம் | 262 |
| 166. | நட்பு | 262 |
| 167. | புத்திமதி | 268 |
| 168. | பெருமை | 269 |
| 169. | மதிப்பு | 271 |
| 170. | புகழ் | 273 |
| 171. | வசை | 275 |
| 172. | பதவி | 276 |
| 173. | உழைப்பு | 276 |
| 174. | நேரம் | 278 |
| 175. | காலம் | 279 |
| 176. | ஓய்வு | 281 |
| 177. | வேலை | 282 |
| 178. | களைப்பு | |
| 179. | தொழில் | |
| 180. | பயன் | |
| 181. | வியாபாரம் | |
| 182. | இலேவாதேவி | |
| 183. | இரகசியம் | |
| 184. | இலாபமும் நஷ்டமும் | |
| 185. | ஊதியம் | |
| 186. | அற்பம் அற்பமா? | |
| 187. | சிக்கனம் | |
| 188. | செழிப்பு | |
| 189. | வீண் | |
| 190. | அவசியம் | |
| 191. | வாய்ப்பு | |
| 192. | மலிவு | |
| 193. | கிராக்கி | |
| 194. | விவசாயம் | |
| 195. | குடியானவர் | |
| 196. | பொதுமை | |
| 197. | கடன் | |
| 198. | இரவல் | |
| 199. | இனாம் | |
| 200. | பரிசு | |
| 201. | பசி | |
| 202. | உணவு | |
| 203. | பெருந்தீனி | |
| 204. | சுவை | |
| 205. | உபவாசம் | |
| 206. | சமையல் | |
| 207. | உடை | |
| 208. | நாடு | |
| 209. | தேசபக்தி | |
| 210. | போர் | |
| 211. | அமைதி | |
| 212. | மொழி | |

6281

# கடவுள்

ஒன்றே குலமும், ஒருவனே தேவனும். —திருமூலர்

அல்லாவைத் தவிர வேறு ஆண்டவனில்லை. —குர்ஆன்

தேவனே நமக்குச் சரணாலயம், நமக்கு வலிமை.
—பழைய ஏற்பாடு

தேவன் நம் பக்கம் இருந்தால், எவர் நமக்கு எதிராக இருக்கக் கூடியவர்?
—புதிய ஏற்பாடு

ஞானத்தின் ஆரம்பம் ஆண்டவனுக்கு அஞ்சுதல்.
—பழைய ஏற்பாடு

இறைவனோடு கலத்தல் என்பது மற்றெல்லாவற்றிலிருந்தும் பிரிதல்; மற்றவைகளிலிருந்து பிரிதல் என்பது இறைவனோடு கலத்தல். —ஸூஃபி

நான் எந்தப் பொருளைப் பார்த்தாலும், அதிலுள்ள இறைவனைக் காணாமல் இருந்ததில்லை. —ஸூஃபி

மரத்தடியில் ஆளில்லாத போதுதான், ஆண்டவன் தேங்காயை விழச் செய்கிறான். —அரேபியா

ஒளி ஒளியிலிருந்து வருகிறது; இரண்டு ஒளிகளும் ஆண்டவனிடமிருந்து வருகின்றன. —அரேபியா

நீ கர்த்தரைத் தேடிக் கண்டுபிடிக்க முடியுமா?
—பழைய ஏற்பாடு

ஆண்டவருக்குப் பயந்து, அவர் கட்டளைகளை நிறைவேற்று.
—பழைய ஏற்பாடு

ஆண்டவர் அன்பானவர்; அன்பில் வசிப்பவன் ஆண்டவரில் வசிக்கிறான்; ஆண்டவரும் அவனில் வசிக்கிறார்.
—புதிய ஏற்பாடு

ஆண்டவரே நமது அடைக்கலமும், வல்லமையும்.
—பழைய ஏற்பாடு

மரம் நட்டவன் தண்ணீர் விடுவான். —தமிழ் நாடு

அன்புள்ள இடத்தில் ஆண்டவன் இருக்கிருன். —தமிழ் நாடு

குழந்தையும் தெய்வமும் கொண்டாடும் இடத்தில். —( ” )

அல்லா சொத்து எல்லாருக்கும். —தமிழ் நாடு

மனிதர்கள், பெண்களின் முகங்களில் நான் இறைவனைக் காண்கிறேன். —விட்மன்

இருத்தல் என்பது இறைவனுடன் வாழ்தல். —எமர்ஸன்

கடவுள் இருக்காவிட்டால், அவரை (நாம்) உண்டாக்கிக் கொள்ள வேண்டியது அவசியம். —வால்டேர்

பல்லைக் கொடுத்த பகவான் ரொட்டியும் கொடுப்பான். —இந்தியா

கடவுள் ஒவ்வொரு பறவைக்கும் உணவளிக்கிருர்; ஆனுல் அதைக் கூட்டில் கொண்டுபோய் வைப்பதில்லை. —( ” )

உன்னை நினைத்த கடவுளே மறுபடி உன்னைக் காயவும் வைப்பார். —இந்தியா

ஆண்டவன் நம் பக்கம் இருந்தால், வெற்றி முன்னதாகவே வந்துவிட்டதாகக் கொள்ளலாம். —இந்தியா

கடவுள் பூரணத்தையும் நிரப்புகிருர். —இந்தியா

சத்தானுனது ஒன்றுதான், முனிவர்கள் அதைப் பல பெயர்களால் அழைப்பர். —இந்தியா

மனிதர்களிடம் கொள்ளும் அன்பே கடவுளிடம் அன்பு கொள்ள வழி காட்டுகின்றது. —இந்தியா

அன்னையும் பிதாவும் அன்பாயுள்ளனர் : ஆனுல் ஆண்டவன் அவர்களிலும் அன்பாயிருக்கிருன். —டென்மார்க்

கடவுள் வாரச் சம்பளம் கொடுப்பதில்லை; ஆனுல் அவர் முடிவில் கொடுக்கிருர். —ஹாலந்து

ஆண்டவன் ஒருவனைக் கைவிடத் தீர்மானித்தால், சுண்டெலி கூட அவனைக் கடித்துக் கொன்றுவிடும் —ஹாலந்து

இறைவனின் கோபத்தை எடை போடலாம், ஆனால் அவன் அருளுக்கு அளவே கிடையாது. —இங்கிலாந்து

(இராட்டினத்தில்) கதிரைத் தயாராக வைத்திருந்தால், கடவுள் பஞ்சை அனுப்புவார். —இங்கிலாந்து

ஆண்டவன் உள்ள இடத்தில் எல்லாம் இருக்கின்றன. —( ,, )

ஆண்டவனுக்காக இழப்பது இலாபமேயாகும். —இங்கிலாந்து

மனிதன் தன்னால் இயன்றதைச் செய்வான்; இறைவன் தான் நினைப்பதைச் செய்வான். —இங்கிலாந்து

ஆண்டவன் நிச்சயமாகக் கரைச் சேர்ப்பான்; ஆனால் கடலில் புயல் வராதென்று அவன் உறுதி சொல்லமாட்டான். —இங்கிலாந்து

உன் இதயத்தை ஆண்டவனுக்கும், உன் தானங்களை ஏழைகளுக்கும் அளிப்பாயாக. —ஸ்காட்லந்து

அபாயம் நீங்கியதும் நாம் ஆண்டவனை மறந்து விடுகிறோம். —ஸ்காட்லந்து

சயித்தான் செத்தொழிந்தால், ஜனங்கள் கடவுளுக்காக ஒன்றும் செய்யமாட்டார்கள். —ஸ்காட்லந்து

ஆண்டவனுக்கு ஒரு விளக்கு ஏற்றினால், சயித்தானுக்கு இரண்டு ஏற்றுங்கள். —ஸெர்பியா

வானின் அருளிருந்தால், விருந்துக்கு வேண்டிய ஆடு உன் வீடு தேடிவரும். —ஆர்மீனியா

உன்னுள்ளேயே தேடு, இறைவனைக் காண்பாய். —குர்திஸ்தானம்

இருவர் உள்ள இடத்தில், கடவுளைச் சேர்த்து, மூவர் உள்ளனர். —கீழ்நாடுகள்

'பிஸ்மில்லா' என்று இறைவன் திருநாமத்தால் எதையும் தொடங்கினுல், நன்மையே வரும்; ஆனுல் இது நரி வேட்டையிலன்று. —ஆப்கானிஸ்தானம்

கத்தி தலைக்குமேல் வந்ததும், மனிதனுக்குக் கடவுளின் நினைவு வருகின்றது. —ஆப்கானிஸ்தானம்

இறைவனும் ஈச்சம்பழங்களும் சேர்ந்தாற்போல் உனக்குக் கிடைக்க முடியாது. —பாரசீகம்

கடவுள் இருக்கிருர் என்பதற்கு அத்தாட்சி கேட்பவர்கள் (சொந்தக் கால்களில் நிற்காமல்) மரக் கால்களுடன் நிற்பவர்கள்.

இறைவன் திருநாமமே செல்வம், அது நம்மை அடுத்துக் காக்கும். —சீக்கியர்

தாளுகக்' கடவுளுக்கு அஞ்சாதவன் கட்டாயத்தினுல் மனித சமூகத்திற்கு அஞ்சவேண்டும். —ஸூஃபி

கடவுளுக்கு அஞ்சு; அடுத்தபடியாகக் கடவுளுக்கு அஞ்சாதவனைக் கண்டு அஞ்சு. —போலந்து

கடவுள்மேல் பாரத்தைப் போட்டுவிட்டு உன் வண்டியைத் தள்ளு. —போலந்து

கடவுள் அடிக்கடி நம்மிடம் வருகிருர், ஆனுல் பெரும்பாலும் அந்த நேரங்களில் நாம் வீட்டில் இருப்பதில்லை. —ஃபிரான்ஸ்

கடவுளின் (அடியார்களாகிய) ஞானிகளை அண்டுவதைப் பார்க்கினும், கடவுளையே அண்டு. —ஃபிரான்ஸ்

இறைவனில்லாமல் எதுவுமில்லை. —ஃபிரான்ஸ்

நம் இறைவன் ஒரு வலிய கோட்டை. —லூதர்

கடவுள் பாலைத்தான் கொடுப்பார், பாத்திரத்தையும் கொடுப்பதில்லை. —ஜெர்மனி

பக்தியைப் பார்க்கினும் பயமே அதிகத் தெய்வங்களை உண்டாக்கி யிருக்கிறது. —ஜெர்மனி

முதலில் செல்வம் சேர்க்கவேண்டும், பிறகு கடவுளுக்குத் தொண்டு செய்ய வேண்டும். —ஜெர்மனி

உலகத்திற்குத் தேவையில்லாதது கடவுளுக்கு அளிக்கப் பெறுகின்றது. —ஜெர்மனி

ஆண்டவனுடைய பேரறிவும், மனிதனுடைய தவறும் சேர்ந்து உலகை ஆள்கின்றன. —ஜெர்மனி

கடவுளைத் துணையாகக் கொண்டவனுக்கு உலகம் பகை யாகும். —ஜெர்மனி

கடவுள் பாவங்களை மன்னிக்கிறார், இல்லாவிடில் சுவர்க்கம் காலியா யிருக்கும். —ஜெர்மனி

கடவுள் துணிகளாகக் கொடுப்பதில்லை, நூற்பதற்குப் பஞ்சாகக் கொடுக்கிறார். —ஜெர்மனி

கடவுள் செல்வர்களுக்கு நிறைய ஆடுமாடுகளையும், ஏழை களுக்குக் குழந்தைகளையும் அளிக்கிறார். —ஜெர்மனி

மனிதன் ஆண்டவனிடம் செல்ல நொண்டுகிறான், சயித்தா னிடம் செல்லத் துள்ளி ஓடுகிறான். —ஜெர்மனி

தேவைகளை யெல்லாம் குறைத்துக்கொண்டவன் தெய்வத்தின் அருகிலுள்ளவன். —ஜெர்மனி

தேவர்களுக்கு அஞ்சுபவனைக் கண்டு நாம் அஞ்ச வேண்டும். —கிரீஸ்

ஆண்டவனுக்கு அஞ்சாதவனைக் கண்டு நாம் அஞ்சவேண்டும். —துருக்கி

கோழிகூடத் தண்ணீர் பருகும்பொழுது வானை நோக்கு கின்றது. —துருக்கி

அல்லா கொடுக்கும் பொழுது, 'நீ யார் மகன்?' என்று கேட்ப தில்லை, —துருக்கி

குருட்டுப் பறவையின் கூடு கடவுள் கட்டியது. —துருக்கி

ஆண்டவர் ஏழைக்கு இன்பமளிக்க விரும்பிஞல், அவனுடைய கழுதையை முதலில் காணுமல் போக்கி, மறுபடி அகப்படும்படி செய்வார். —துருக்கி

ஒவ்வொருவனும் தனக்காக இருக்கிருன்; கடவுள் எல்லோருக்குமாக இருக்கிருர் —யூதர்

நோய் வருமுன்பே ஆண்டவன் மருந்தை அனுப்புகிருன். —யூதர்

ஆண்டவன் ஒரு கரத்தால் தண்டித்தாலும், மறு கரத்தால் அரவணைத்துக் கொள்கிருன். —யூதர்

சவாரி செய்பவன்தான் மனிதன்; கடிவாளத்தைப் பிடித்திருப்பவர் கடவுள். —யூதர்

செல்வந்தன் கடவுளைத் தன் சட்டைப்பையில் போட்டுக் கொண்டு போகிருன்; ஏழை தன் இதயத்தில் வைத்திருக்கிருன். —யூதர்

இதயமே சிறந்த உபதேசியார்; காலமே சிறந்த ஆசிரியர். உலகமே சிறந்த புத்தகம்; கடவுளே சிறந்த நண்பர். —யூதர்

கடவுள் உயரே இருக்கிருர், ஜார் அரசரோ தொலைவில் இருக்கிருர். [ஜார்—ரஷ்யச் சக்கரவர்த்தி] —எஸ்டோனியா

தமக்குத் தாமே உதவிக் கொள்வோருக்கே தெய்வம் துணை செய்யும். —இங்கிலாந்து

கண்ணியமான நீதிபதி மெலிந்த ஊழியர்களைப் பெற்றிருக்கிருர்; வல்லமையுள்ள ஒரு தெய்வம் கொழுத்த பூசாரிகளைப் பெற்றிருக்கிறது. —சீனு

எந்த விஷயத்திற்கும் திட்டமிட வேண்டியது மனிதன்; முடித்து வைக்க வேண்டியது இறைவன். —சீனு

மண்ணுல் செய்த சாமி ஆற்றைக் கடக்கும் பொழுது தன்னையே காத்துக்கொள்ள முடியாது. —சீனு

தெய்வத்தையே எதிர்ப்பவன் வேறு எவரிடத்தில் பிரார்த்தனை செய்ய முடியும்?
—கன்பூஷியஸ்

சுவர்க்கம் என்பது இறைவனுடன் ஒன்றி நிற்றல். —( ” )

கடவுள் உனக்கு நிறைய ஆடுகளைக் கொடுப்பார்; ஆனால், நீ தான் மந்தையைக் காத்துக்கொள்ள வேண்டும்.
—அல்பேனியா

மீனுக்கு ஏரியின் அடித்தளம் தெரியும்; ஆண்டவனுக்குக் கடலின் அடித்தளம் தெரியும்.
—ஃபின்லாந்து

ஒரே கடவுள், ஒரே சட்டை, ஒரே மனைவி. —ஜெர்மனி

மனைவியர் நல்லவரா யிருந்தால், கடவுளும் ஒருத்தியை மணந்திருப்பார்.
—ஜியார்ஜியா

கடுமையான நோயில் கடவுள்தாம் மருத்துவர். —ஹங்கேரி

கடவுளை ஏமாற்ற எண்ணுபவன் முன்பே தன்னை ஏமாற்றிக் கொண்டு விட்டான்.
—இத்தாலி

கடவுள் அருளிருந்தால், சிலந்தி வலையே சுவராகும்; இல்லையானல், சுவரும் சிலந்தி வலையாகும்.
—இத்தாலி

ஒவ்வொரு நாளும் திருடனுக்குச் சயித்தான் உதவிசெய்கிறான்; ஒரு நாள் கடவுள் காவற்காரனுக்கு உதவி செய்வார்.
—நீகிரோ

இறைவன் எறும்பை அழிக்க நினைத்தால், அதற்குச் சிறகுகளை அளிப்பான்.
—பாரசீகம்

நெருக்கடி நேரும்போது ஒருவன் முதலில் கடவுளிடம் திரும்புகிறான், பிறகு யூதனிடம் (லேவாதேவிக்காரனிடம்) திரும்புகிறான்.
—போலந்து

ஒருவனுடைய உடல் ஜார் சக்கரவர்த்தியின் உடைமை, ஆன்மா ஆண்டவனுடையது, முதுகு பண்ணையாருடையது.
—ரஷ்யா

கடவுளின் கால்களைப் பிடி, சயித்தானின் கொம்புகளைப் பிடி.
—ரஷ்யா

கடவுள் மூளையையும் அழகையும் சேர்த்துவைப்பதில்லை.
—ரஷ்யா

கடவுளின் கிருபை இருந்துவிட்டால், ஒருவனுடைய நாய் பத்துப் பன்றிக் குட்டிகளை ஈனும். —ரஷ்யா

கடவுள் எல்லாவற்றையும் எல்லோருக்குமாகக் கொடுத்திருக்கிறார், ஒருவருக்காக அல்ல. —ரஷ்யா

உழுபவனுக்கு ஆண்டவன் துணை உண்டு. —ரஷ்யா

கடவுள் நினைத்தால், சேவலும் முட்டையிடும். —ரஷ்யா

இறைவன் நல்ல உழைப்பாளி, ஆனால் அவன் (நம்) உதவியை நாடுகிறான். —பாஸ்க்

கர்த்தர் பாவமற்றவரல்லர், ஏனெனில், அவரே உலகைப் படைத்திருக்கிறார். —பல்கேரியா

கடவுள் தேவர்களோடு வாழ்கிறார்; மனிதன் மனிதர்களோடு வாழ்கிறான். —பல்கேரியா

தன் கடவுளை அறியாத மனிதன் கடலுக்குப் போனால் தெரியும். —ஃபின்லந்து

வானத்தில் கடவுள் இருக்கிறார்; பூமியில் புல் இருக்கிறது.
— ஐஸ்லந்து

கடவுள் தம்மை நோக்கி வருபவனிடம் தாமே செல்கிறார்.
—ரஷ்யா

கடவுளோடு கடலிலும் செல்லலாம், அவரில்லாமல் வாயிற்படியையும் தாண்ட வேண்டாம். —ரஷ்யா

கடவுளை நோக்கிச் செல்லு, நல்ல சாலையைக் காணலாம்.
—ரஷ்யா

இறைவனுடன் எவரும் ஒப்பந்தம் செய்வதில்லை. —ரஷ்யா

ஈசன் விரும்பும்பொழுது, நீரும் நெருப்புப் பற்றி எரியும்.
—ரஷ்யா

கடவுள் தொழிலாளியுடன் இருக்கிறார். —செர்பியா

ஆண்டவனிடத்தில் நீ அன்பு செலுத்தினல், அவனுக்கு நீ அஞ்ச முடியாது; நீ அஞ்சினல், அன்பு செலுத்த முடியாது. —செர்பியா

கடவுளின் தொழுவில் எல்லாவிதமான கால்நடைகளும் உண்டு. —செர்பியா

சிறு வீட்டில் கடவுளுக்கு ஒரு மூலையில் இடமிருக்கிறது. பெரிய வீட்டில் அவர் நடுக்கூடத்தில் நிற்கவேண்டி யிருக்கிறது. —சுவீடன்

ஒவ்வொரு நாளும் தன் ரொட்டித் துண்டைக் கொண்டு வருகின்றது. —ஆப்பிரிக்கா

புலியைப் படைத்ததற்காகக் கடவுளை நோக வேண்டாம்; அதற்குச் சிறகுகள் அளிக்காததற்காக நன்றி கூறுங்கள். —ஆப்பிரிக்கா

எல்லாத் துன்பங்களுக்கும் மருந்து ஆண்டவன்தான். —( ” )

கடவுள் முக்காலத்திற்கு அப்பாலும் இருப்பார். —ஆப்பிரிக்கா

நாளைக்காகச் சேர்த்து வைப்பவன் கடவுளிடத்தில் நம்பிக்கை யில்லாதவன். —சிலீ

கடவுள் ஒருவரேயாயினும் பல பெயர்களைப் பெற்றிருக்கிறர். —கிரீஸ்

சத்தியமே கடவுள், ஒளி அவர் நிழல். —பிளேட்டோ

கடவுள் விரும்பாவிட்டால், தெய்வீக ஞானிகளாலும் முடியாமற் போகும். —இத்தாலி

கடவுள் பொறுமையோடு இருக்கிறர், ஏனெனில் அவர் நித்திய மானவர். —அகஸ்டின்

கடவுளின் அநுமதியில்லாமல் நாம் எதையும் செய்வ தில்லை. —லத்தீன்

கடவுள் இருப்பதால் நாம் இருக்கிறேம். —சுவீடன்பர்க்

# கோயில்

ஒவ்வொருவன் நெஞ்சிலும் ஒரு தேவாலயம் இருக்கின்றது.
—ஜெர்மனி

தூக்கம் வராதவன் மாதாகோயிலுக்குப் போகிறான். —( ” )

ஆலயத்திற்கு அருகிலிருப்பவன்தான் தொழுகைக்குக் கடைசியாக வருவான். —அயர்லந்து

கிராமந்தோறும் கிறிஸ்துவின் கல்லறை உள்ளது —பல்கேரியா

குளிர்காலத்தில் கோயிலுக்குப் போகாதவன் நல்லகாலத்தில் நரகத்தை அடைவான். —ஃபின்லந்து

நீ கடவுளைக் காணுமுன், அடியார்கள் உன்னை உண்டு விடுவார்கள். —ருமேனியா

விக்கிரகங்கள் செய்பவன் அவற்றை வணங்குவதில்லை.—ரஷ்யா

கோயிலுக்கு அருகில் குடியிருப்பவர்கள் தெய்வங்களை வெறுப்பார்கள். —சீனா

இரவும் பகலும் சிறைச்சாலை அடைத்தேயிருக்கிறது; ஆயினும் அது எப்பொழுதும் நிறைந்திருக்கிறது. ஆலயங்கள் எப்பொழுதும் திறந்தே யிருக்கின்றன; ஆனால் அவைகளில் ஆளேயில்லை. —சீனா

கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம். —தமிழ்நாடு

ஆண்டவனுக்காக ஒரு கோயில் அமைத்தவுடன், சயித்தானும் அருகிலே ஒரு மடத்தைக் கட்டுகிறான். —இங்கிலாந்து

ஆலயம் என்பது நான்கு சுவர்களிடையே உள்ள கடவுள்.
—ஃபிரான்ஸ்

கோயிலுக்குள்ளே செல்லும்பொழுது. உலகை வெளியே விட்டுச் செல்லுங்கள். —ஸ்பெயின்

கட்டாயத்தினால் கோயிலுக்கு வந்தவன் தொழமாட்டான்.
—ஸ்லாவேகியா

தீயது எதையும் கோயிலுக்குள் வரவிடவேண்டாம். —லத்தீன்

உண்மையான கோயில்கள் இதயத்தில் அமைந்துள்ளன.—( ” )

# வழிபாடு

என் பெயரால் எங்கே இரண்டு மூன்று பேர்கள் கூடியுள்ளனரோ, அவர்களின் நடுவில் நான் இருக்கிறேன்.
—புதிய ஏற்பாடு

சொற்களில்லாமலே தொழுகையும் இருக்கலாம். —இங்கிலாந்து

பயத்தினுல் மட்டும் இறைவனைத் தொழுவோர், சயித்தான் வந்தால், அவனையும் தொழுவர். —இங்கிலாந்து

பிரார்த்தனை மேலே ஏறும், அருள் கீழே வரும். — யூதர்

கடவுளைத் தொழு, ஆனுல் பாறைகளைக் கவனித்துப் படகை ஓட்டு. — இந்தியா

உன் கண்களையும், நாசியையும், வாயையும் மூடிக்கொண்டு கடவுளைத் தொழு. வெளிக் கதவுகளை அடைத்த பிறகு உன் உட்கதவுகள் தாமே திறக்கும். —இந்தியா

நண்பா! கடவுளை நேசிப்பதில், விவசாயி தன் நிலங்களை நேசிப்பதுபோல் இருக்கவேண்டும்; அவன் நஷ்டங்கள் அடைகிறுன், தீர்வைகள் செலுத்துகிறுன், எனினும் தன் வயல்களில் ஆசை வைத்திருக்கிறுன். —இந்தியா

சாமியைத் தூக்குவோர் சாமியைக் கும்பிடுவதில்லை.
—இந்தியா

பிரார்த்தனையும் வேண்டும், மருந்தையும் பயன்படுத்து.
—இந்தியா

பிரார்த்தனைகள் வீணுய்ப் போயிராவிட்டால், உலகமே பாழாய்ப் போயிருக்கும். —இந்தியா

நாய்களின் பிரார்த்தனை பலித்துவிட்டால், வானத்திலிருந்து எலும்புகள் மழையாகப் பெய்யும். — துருக்கிஸ்தானம்

கப்பலுக்குரிய பிரதேசம் கடல், இதயத்திற்குரிய பிரதேசம் தியானம், —மலாய்

பிரார்த்தனை நம்மை ஆண்டவன் பாதையில் பாதி வழி கொண்டு செல்லும்; உபவாசம் அவனுடைய அரண்மனை வாயிலண்டை கொண்டு செல்லும்; தான தர்மங்கள் உள்ளே செல்வதற்கு அனுமதி பெற்றுக் கொடுக்கும்.
—கீழை நாடுகள்

பறவைகள் இறைவனின் புகழைப் பாடுகையில், நான் மௌனமா யிருக்கலாமா? —பாரசீகம்

அறுபது ஆண்டுப் பக்தியைவிட ஒரு நிமிடத் தியானம் மேல். —ஸூஃபி

தன்னை மறத்தல் இறைவனை நினைத்தலாகும். —ஸூஃபி

தொழுகையின்போது நீ கைகளைக் கட்டிக் கொள்ளுகிறாய், (அப்பொழுது) கர்த்தர் தம் கரங்களை நீட்டிக்கொண்டிருக்கிறார். — ஜெர்மனி

(கடலின்) கரை நெருங்கியவுடன் பிரார்த்தனைகள் நின்று விடுகின்றன. —ஸூஃபி

தேவை ஏற்பட்டால் யூதனிடமும், கஷ்டம் நேர்ந்தால் பாதிரியாரிடமும், பயம் வந்தால் கடவுளிடமும் செல்வது மக்களின் வழக்கம். —போலந்து

படுத்துகொண்டே பிரார்த்தனை செய்தால், கர்த்தர் உறங்கிக் கொண்டே கேட்பார். —ஜெர்மனி

பக்தியுடன் தொழு, அத்துடன் சம்மட்டியைப் பலமாகத் தட்டிக்கொண்டும் இரு. — இங்கிலாந்து

தொழுகை படிக்க வேண்டுமானால், கடலுக்குப் போ. —( ”

கரை சேர்ந்தவுடன் தொழுகையும் நின்றுவிடும்.—இங்கிலாந்து

பிரார்த்தனையே பகலின் திறவுகோலாயும், இரவின் பூட்டாயும் இருக்கவேண்டும். —இங்கிலாந்து

பத்து விரல்களுக்குள் கடவுளைப் பிடித்து அடக்கி விடலாம்.
—பல்கேரியா

ஆலயத்தை வலம்வருபவர்கள் அத்தனை பேர்களும் தெய்விக ஞானிகள் அல்லர். —ஸெக்

இழந்துபோன பொருள் இறைவனுக்கு அர்ப்பணம்.
—ஸ்பெயின்

[பசுவை இழந்துவிட்ட ஒருவன், அது அகப்பட்டால் தன் குழந்தைகளைச் சேரவேண்டுமென்றும், அகப்படாவிட்டால் கடவுளைச் சேரவேண்டுமென்றும், உயில் எழுதி வைத்தானும்.]

பிரார்த்தனையால் கிடைக்கும் பொருளுக்கு மேலாக அருமையுள்ளது எதுவுமில்லை.
—ஸ்பெயின்

கடவுளிடம் பிரார்த்தனை செய், அவருக்குச் சலிப்பே கிடையாது.
—ஆப்பிரிக்கா

கடவுள் ஒருவர் இருக்கிறார் என்று நீ குழந்தைக்குச் சொல்ல வேண்டிய அவசியமில்லை.
—ஆப்பிரிக்கா

கடவுள் கடலைப் படைத்தார், நாம் கப்பலைப் படைக்கிறோம்; அவர் காற்றைப் படைத்தார், நாம் பாய்ச்சீலையைப் படைக்கிறோம்.
—ஆப்பிரிக்கா

அவர் அமைதியைப் படைத்தார், நாம் துடுப்புகளைப் படைக்கிறோம்.
—ஆப்பிரிக்கா

மரக்கட்டைச் சாமிக்குச் சப்பாத்துக்கட்டை காணிக்கை.
— இந்தியா

கோதுமை மலிவானால், வீடுதோறும் பூசை நடக்கும். — ( " )

நம்பிக்கையில்லாமல் பிரார்த்தனை செய்பவன் தன் முறையீடுகள் நிறைவேற்றப்படுமென்று நம்பமுடியாது.
— ஃபிரான்ஸ்

இறைவனிடம் நன்றியுள்ள ஒரு சிந்தனையே முழுப் பிரார்த்தனையாகும்.
— ஜெர்மனி

கல்விப் பயிற்சியில் சிறந்த பாதி நன்றாகப் பிராத்தனை செய்தல்.
—லூதர்

உனக்காகப் பிரார்த்தனைச் செய்யவேண்டாம். உனக்கு எது நன்மை என்பது உனக்கே தெரியாது.
— கிரீஸ்

கடவுள் கோபமா யிருந்தால், பிரார்த்தனையின் குரலால் இளகி விடுகிறார்.
— லத்தீன்

## சமயம்

ஒழுக்கத்தை இழந்தவன் தன் சமயத்தையும் இழக்கிறான்.
— இங்கிலாந்து

ஒழுக்கமுறை தீமையை மறைத்து வைக்கும், சமயம் அதைத் தீர்த்துவிடும்.
—வேல்ஸ்

சமயம் இல்லாத மனிதன் கடிவாளம் இல்லாத குதிரை.
—லத்தீன்

பசுக்கள் என்ன நிறமானாலும் பால் வெள்ளைதான்; மலர்கள் பலவகையானாலும் பூசை ஒன்றுதான்; சமயங்கள் பலவானாலும் மூர்த்தி ஒன்றுதான்.
— இந்தியா

மோஸஸ் எழுதியதைக் கடவுள்தாம் படிக்கவேண்டும் —( '' )

தைரியம் இல்லாவிட்டால், மதம் இல்லை. — அரேபியா

வீட்டில் உணவிருந்தால், விருந்தாளியைப் பற்றிய கவலையில்லை; மனிதன் சமய வாழ்க்கையில் முறையாக இருந்தால் மரணத்தைப்பற்றிக் கவலையில்லை. —ஆப்கானிஸ்தானம்

கோணங்கள் (பிரதானமாய்த்) தெரியாதபடி சதுரமாயிருங்கள்; அற்பத்தனம் இல்லாமல் கண்யமாயிருங்கள்; வெறும் வேடங்கள் இல்லாமல் நேர்மையாய் இருங்கள்; வெளிப் பகட்டு இல்லாமல் அறிவுடன் திகழுங்கள். —ஸூஃபி

உங்கள் (புத்திக்) கூர்மையை நிதானப்படுத்துங்கள்; உங்கள் கருத்துக்கள் பின்னிச் சிக்கலாவதைப் பிரித்துத் தெளிவு படுத்துங்கள்; உங்கள் (புகழ்) ஒளியைக் குறைத்துக் கொள்ளுங்கள்; உங்கள் காலத்திற்குத் தகுந்தபடி ஒழுகுங்கள்.
—ஸூஃபி

மாலுமிகளுக்கு வடதுருவம் எப்படியோ, அப்படிக் கிறிஸ்தவர்களுக்கு விவிலிய வேதம்.
— ஜெர்மனி

சமயத்திற்கு இரண்டு குழந்தைகள்; அவை விருப்பும் வெறுப்பும்.
—ரஷ்யா

தன் சமயத்திற்காக உயிர் துறப்பவன் ஓர் இராஜ்யத்தை அடைகிறான்.
—ரஷ்யா

கிழக்கு மேற்கு இரண்டு திசைகளையும் பார்த்து வணங்குபவன் ஒரு சமயத்தையும். சேர்ந்தவனல்லன். —ரஷ்யா

மனிதன் நல்லவனுயிருக்கக் கற்பிக்கும் ஒவ்வொரு சமயமும் நல்லதேயாம் —பெயின்

சமயத்திற்கு நில எல்லைகள் இல்லை. —இங்கிலாந்து

சமயம் இதயத்தில் உள்ளது, முழங்காலில் அன்று. —( " )

உலகில் சமயமே தலைசிறந்த கவசம், அது வெளிவேடத்திற்கான உடையன்று. —இங்கிலாந்து

தத்துவஞானத்தின் தமக்கைதான் சமயம். —இங்கிலாந்து

ஒருவருடைய சமயம் மற்ஞெருவருக்குப் பயித்தியமாகத் தோன்றும். —இங்கிலாந்து

சமயம் ஒன்றே ஒன்றுதான். அதில் நூற்றுக்கணக்கான மாதிரிகள் இருக்கலாம். —இங்கிலாந்து

மதத்தில் வெறிகொள்வது சமயப் பற்றில்லாத சமயம். —இங்கிலாந்து

ஒருவரையொருவர் வெறுத்துக்கொள்ளும் அளவுக்குத்தான் நம்மிடையே சமயம் நிலவுகின்றது. ஒருவரையொருவர் நேசிக்கும் அளவுக்கன்று. —இங்கிலாந்து

சமயம் மக்களை எவ்வளவு மூடர்களாக ஆக்குகின்றது! —( " )

நட்பைப் போலவே சமயத்திலும் அதிக உணர்ச்சியிருப்பதாகக் காட்டிக் கொள்பவர்களே அந்தரங்க சுத்தியில் குறைந்தவர்கள். —இங்கிலாந்து

சமய வாழ்க்கை பெரிய முயற்சியாகும், அது பாட்டுப் பாடுவதன்று. —ஃபிரான்ஸ்

ஆதாயமளிக்கும் சமயத்திற்கு ஆள்பிடிக்க வேண்டியதில்லை. —இத்தாலி

சமயமில்லாத மனிதன் இலகானில்லாத குதிரை போன்றவன் —லத்தீன்

சமயம் அனைத்தும் வாழ்க்கையைப் பற்றியது, சமயத்தின் வாழ்க்கை என்பது நன்மை செய்தல். —சுவீடன்பர்க்

சமயம் மக்களை மயக்கும் அபின். —மார்க்ஸ்

## சமரசம்

உன்னதமான ஆன்மாவுக்கு உலகனைத்தும் தாயகம். —கிரீஸ்

மனிதனின் பிறப்பிடம் உலகம். —லத்தீன்

யாதும் ஊரே, யாவரும் கேளிர். —தமிழ்நாடு

நான்கு கடல்களுக்கு நடுவிலுள்ள அனைவரும் சகோதரர்களே. —சீனு

இருவர் குதிரை ஏறினல், ஒருவர் பின்ஞல் அமரவேண்டும். —இங்கிலாந்து

கடல் எந்த நதியையும் விலக்குவதில்லை. —இங்கிலாந்து

சமரசமுள்ள இடத்திற்கு ஆண்டவன் தன் ஆசியை அனுப்புகிருன். —பல்கேரியா

உலகம் அனைத்தும் ஒரே தேசம் —இத்தாலி

மனிதர்களோடு சமாதானம் செய்துகொண்டு, உன் பாவங்களுடன் போராடு. —ரஷ்யா

அமைதிவேண்டுமானுல், எவரையும் மறுத்துப் பேச வேண்டாம். —ஹங்கேரி

உலகம் முழுதும் நம் சொந்தவீடு போலவே இருக்கிறது. —லத்தீன்

## சுவர்க்கம்

சுவர்க்கத்திற்குச் செல்பவன் தன் இதயத்தை முன்னதாக அங்கு அனுப்பிவிடவேண்டும். —இங்கிலாந்து

சரிகை ஆடைகளுடன் நரகத்திற்குப் போவதைவிட, கந்தல்களுடன் சுவர்க்கத்திற்குச் செல்வது மேல். —இங்கிலாந்து

சுவர்க்கத்திற்கு மூடுபல்லக்கில் செல்ல முடியாது. —( " )

சுவர்க்கத்திற்கு ஒரு வழிக்கு மேலேயும் உண்டு. —இங்கிலாந்து

சுவர்க்கத்திற்குப் பாதை இருக்கிறது, ஆனால் அதில் யாரும் செல்வதில்லை; நரகத்திற்கு வாயிலே இல்லை; ஆனால் மனிதர்கள் அதில் ஏறிக் குதிக்கிறார்கள். —சீனா

சுவர்க்கமும் நரகமும் உன் இதயத்திலுள்ளவை. —ஜெர்மனி

சுவர்க்கத்தை அடைவதைவிட, நரகத்தை அடைவதில் சிரமம் அதிகம். —ஜெர்மனி

நாம் எங்கே மடிந்தாலும், அங்கிருந்து சுவர்க்கம் சிறிது தூரம் தான். —ஹாலந்து

என் தந்தையின் வீட்டில் (வசிப்பதற்குப்) பல பெரிய இடங்கள் உண்டு. —புதிய ஏற்பாடு

கடவுள் சரி என்றால், சுவர்க்கம் என்னுடையது. —ஸ்பெயின்

இறைவனின் வலையில் கண்ணிகள் பெரியவை, ஆயினும் அதிலிருந்து எதுவும் தப்புவதில்லை. —லாவோத்ஸே

குழந்தைப் பருவத்தில் நம்மைச் சுற்றிலும் சுவர்க்கம் இருக்கிறது. —வோர்ட்ஸ்வொர்த்

மலைகளில் ஏறாமல் எவரும் சுவர்க்கத்தின் உயரத்தைத் தெரிந்துகொள்ள முடியாது. —சீனா

நில மார்க்கமாயும், கடல் மார்க்கமாயும் நாம் சுவர்க்கத்திற்கு அருகிலே ஒரே அளவு தூரத்தில் இருக்கிறோம். —கில்பெர்ட்

## நரகம்

தெய்வ நம்பிக்கை யில்லாதவர்களைச் சுற்றியுள்ள வளையம் நரகம். —குர்ஆன்

சுவர்க்கத்திற்கு ஒரே பாதை, நரகத்திற்குப் பல பாதைகள் உண்டு. —ஹங்கேரி

நரகத்தில் விசிறிகள் இல்லை. —எகிப்து

நரகமும் உயர்நீதி மன்றமும் எப்பொழுதும் திறந்தே யிருக்கின்றன. —இங்கிலாந்து

எந்த நரகமும் மனிதர்களைப் பயமுறுத்திப் பாவத்திலிருந்து விலகச் செய்ய முடியாது. —இங்கிலாந்து

நரகத்திலுள்ளவர்கள் சுவர்க்கம் வேறு இல்லையென்று நினைக்கிறார்கள். —இங்கிலாந்து

நரகப் பாதையில் நல்லெண்ணங்களால் தளம் போடப் பட்டிருக்கிறது. —இங்கிலாந்து

[தொடக்கத்தில் எல்லோரும் நல்லெண்ணத்துடன் தான் தொடங்குவர், ஆனால் செயல் புரியும்போது வேறு வழியில் திரும்பி விடுவர்.]

நரகத்துள் இறங்குதல் எளிது. —விர்கில்

தீமைக்குப் பதிலாக நன்மையைச் செய்தால், எந்த நரகுக்கும் அஞ்ச வேண்டாம். —இங்கிலாந்து

நரகம் ஆண்டவரின் கோபம்—பாவத் தீயின்மீது அவருக்குள்ள வெறுப்பு. —இங்கிலாந்து

நரகத்திற்குச் செல்லும் பாதை நடக்க எளிதாயுள்ளது. —கிரீஸ்

## தத்துவ ஞானம்

பிறந்ததற்காக அழும் குழந்தை அறிவுள்ளதுதான் —பார்சி

குழந்தை 'ஏன்' என்று கேட்பதுதான் தத்துவஞானத்தின் திறவுகோல். —இதாலி

அடுத்தவன் மனைவியைத் தன் தாயென்றும், மற்றவன் உடைமைகளை மண்கட்டிகளென்றும், மக்கட் சமூகத்தைத் தானென்றும் கருதுபவன் தத்துவஞானி. —இந்தியா

தத்துவஞானிக்கு எலிகூடத் தோண்டுவதைக் கற்பிக்கும். —சீனா

வறுமையின் இனிய பால் தத்துவஞானம். —இங்கிலாந்து

பலர் தத்துவ ஞானிகளைப் போலப் பேசுகின்றனர்; ஆனால் மூடர்களைப் போல வாழ்கின்றனர். —சீனா

தத்துவஞானிகள் சந்திர மண்டலத்தில் வசிப்பவர்கள் —சீனா

நீ தத்துவஞானியாக இரு, ஆனால் தத்துவத்தோடு, மனிதனாகவும் இரு. —ஹ்யூம்

தத்துவஞானமே தலைசிறந்த சங்கீதம். —பிளேட்டோ

தத்துவம் வழி காட்டும், அடையவேண்டிய லட்சியம் ஞானம்.
—லத்தீன்

கலைகளுக்குத் தாய் தத்துவ ஞானம். —லத்தீன்

மனத்திற்கு உண்மையான மருந்து தத்துவஞானம். —லத்தீன்

சுதந்தரத்தை அநுபவிக்கவேண்டுமானுல், தத்துவஞானத்திற்கு அடிமையாயிருக்க வேண்டும். —லத்தீன்

தாடி பேன்களை உண்டாக்குமே ஒழிய அறிவை உண்டாக்காது.
—கிரீஸ்

தாடியிருந்தால் போதும் என்றுல், வெள்ளாடும் சமயப் பிரச்சாரம் செய்யலாம். —டென்மார்க்

## ஆன்மா

மலர்களில் மணம் போலவும், எள்ளில் எண்ணெய் போலவும், விறகில் தீயைப் போலவும், பாலில் நெய் போலவும், கரும்பில் இனிமை போலவும், உடலில் ஆன்மாவை ஞானிகள் உணர்ந்துகொள்ள வேண்டும். —இந்தியா

அது நீதான். —இந்தியா

உடலை அதிகம் போற்றினுல், ஆன்மாவுக்குக் கேடு. —போலந்து

அவசியமானுல் உன் உடைகளைப் பற்றிக் கவனிக்காமலிருக்கலாம், ஆனுல் ஆன்மாவைச் சுத்தமாக வைத்துக் கொள்ளவும். —மார்க் ட்வெயின்

சிறு உடல்கள் பெரிய ஆன்மாக்களைப் பெற்றிருக்கின்றன.
—இங்கிலாந்து

ஆன்மா விதைத்தது எதுவும் அவமாகாது. —இங்கிலாந்து

ஆன்மா நித்தியமானது, அதற்குப் பல உடல்களாகிய உடைகள் வரிசையாக உடுத்தப் பெறுகின்றன. —பிளேட்டோ

நமது நெஞ்சினுள்ளே ஒரு தெய்வத்தன்மை உள்ளது.
—லத்தீன்

ஆன்மாதான் நம்மைப் பெருமையுள்ளவர்களாகச் செய்கின்றது. —லத்தீன்

ஒரு மனிதன் உலகம் முழுவதையும் பெற்று, தன் சொந்த ஆன்மாவை இழந்துவிட்டால், என்ன பயன்? —புதிய ஏற்பாடு

ஆன்மாவைப் பெற்றிருப்பதில் மிருகங்களும் நம்மோடு பெருமை யடைந்துள்ளன. —பிதரகோரஸ்

செல்வம் குறைந்தால் சீர்திருத்தலாம்; ஆனால் ஆன்மாவின் வறுமையை நிரப்பவே முடியாது. —மாண்டெயின்

## நாத்திகம்

நாத்திகன் சயித்தானுக்கு ஒரு படி மேற்போனவன். —இங்கிலாந்து

## குருக்கள்

மக்களை மூன்று பால்களாகப் பிரிக்கலாம்: ஆடவர், பெண்டிர், பாதிரிகள். —ஃபிரான்ஸ்

இந்த உலகிலே இரத்தம் உறிஞ்சுவோர் மூவர் உண்டு; முகட்டுப் பூச்சி, தெள்ளுப்பூச்சி, பிராமணன். —இந்தியா

மூன்று பொருள்களை நான் கண்டதே யில்லை. எறும்பின் கண், பாம்பின் கால், முல்லாவின் தானம். [முல்லா - முஸ்லிம் குரு.] —பாரசீகம்

பாதிரியாரின் மகன் சயித்தானின் பேரப்பிள்ளை. —பல்கேரியா

ஊரை எழுப்ப வேண்டுமானால், முதலில் பூசாரியை எழுப்ப வேண்டும். —ஜப்பான்

கடவுளின் நண்பன் குருக்களின் பகைவன். —ஜெர்மனி

வக்கீல்கள் பணப்பையைக் காலி செய்கிறார்கள்; வைத்தியர்கள் வயிற்றைக் காலி செய்கிறார்கள்; பாதிரிமார்கள் ஆன்மாவைக் காலி செய்கிறார்கள். —ஜெர்மனி

எந்த வம்புக்கும் ஒரு பாதிரியாரும் பெண்ணும் காரணமாக இருப்பார்கள்.

—ஜெர்மனி

பாதிரிமார்களுக்கும் பெண்களுக்கும் மறதி என்பதே கிடையாது.

—ஜெர்மனி

பாதிரிமார்கள் முதலில் தங்களையே ஆசீர்வதித்துக் கொள்கிறார்கள்.

—ஜெர்மனி

குடியானவர்களுக்கு மனைவியர் இருக்கும்வரை பாதிரிமார்களுக்கு விவாகம் அவசியமில்லை.

—ஜெர்மனி

நெருப்பின் அருகில் இறகை வைக்காதே; உன் மனைவி அருகில் பாதிரியாரை விடாதே.

—ஜெர்மனி

ஒரு சாமியாரால் இருபது பாவிகள் உற்பத்தியாகிறார்கள்.

—அயர்லாந்து

உபதேசியார் தம் வருமானத்திற்குத் தக்கபடி உபதேசம் செய்தால் போதும்.

—அயர்லாந்து

அளவுக்கு அதிகமாக வைதிகமாயுள்ள சாமியாரை ஆண்டவனுக்கே பிடிக்காது.

—பல்கேரியா

உபதேசியார் பையும் நரகக் குழியும் நிறைவதே யில்லை.

—எஸ்டோனியா

மக்கள் எப்படியோ, அப்படியே குருக்களும் இருப்பர்.

—லத்தீன்

ஒரு செம்புக்காகப் போதகர்கள் எத்தனையோ செம்புகளைப் பாடுகின்றனர்.

—லத்தீன்

ஈக்களும் பாதிரிமார்களும் எந்த வீட்டிலும் நுழையலாம்.

—ரஷ்யா

நல்ல பாதிரியாரின் நட்பும் வேண்டாம், கெட்டவரின் பகையும் வேண்டாம்.

—ஸ்பெயின்

நோயற்ற பசுவை நாடிக் காகம் வரும், நோயுற்ற மனிதனை நாடிப் பிராமணன் வருவான்.

—இந்தியா

திருமணம் செய்து கொண்டால் ஒரு வாரம் சுகமா யிருக்கலாம்; ஒரு பன்றியை அடித்தால் ஒரு மாதம் சுகமாயிருக்கலாம்; பாதிரியாகி விட்டால், வாழ்க்கை முழுதும் சுகமா யிருக்கலாம்.

—போலந்து

நாடறிந்த பார்ப்பானுக்குப் பூணூல் எதற்கு? —தமிழ்நாடு

தீய போதகர்கள் சயித்தானை ஆலயத்துள் அழைத்து வந்து விடுவர். —இங்கிலாந்து

ஒவ்வொரு மனிதனும் தன் வீட்டிற்குக் குரு. —இங்கிலாந்து

போதகர் எப்படியோ, அப்படி மக்கள். —இங்கிலாந்து

போதகர்களுக்குள் சண்டை வந்து விட்டால், சயித்தானுக்குக் கொண்டாட்டம். —ஜெர்மனி

குருக்கள் உன்னிடம் வந்து விட்டால், மகிழ வேண்டாம்; விரைவில் அவர் யாசகம் கேட்கத் தொடங்குவார். —ரஷ்யா

## சயித்தான்

தலை நுழையாத இடத்தில் சயித்தான் தன் வாலை நுழைப்பான். —இத்தாலி

பிசாசுகளைப் பிசாசுகளைக் கொண்டே ஓட்டவேண்டும். —ஜெர்மனி

சயித்தானைப் பற்றிப் பேச்செடுத்தவுடன், அவன் வந்து விடுவான். —லத்தீன்

சயித்தானின் சிநேகம் சிறைவாசல் வரை. —துருக்கிஸ்தானம்

மனித இனத்தின் சயித்தான் மனிதன்தான் —கீழைநாடுகள்

சயித்தான் அடிக்கடி சிலுவையடியிலே அமர்ந்திருப்பான். —போலந்து

சயித்தான்களிலே கழிவான சயித்தான் தொழுது கொண்டிருப்பான். —போலந்து

நீக்ரோக்களின் சயித்தான் வெண்மையா யிருப்பான். —பல்கேரியா

சுவரில் சயித்தான் படத்தை வரைபவன் தன் உருவத்தைப் போல வரைகிறான். —செக்

சயித்தான் கறுப்பு நிறமே பூசியிருக்கிருன், ஆனல் நம் கண்ணுக்கு அவன் சிவப்பாகவே தோன்றுகிருன். —ஃபின்லந்து

சோம்பலுள்ள மனிதனைச் சயித்தான் கண்டால், அவனுக்கு வேலை கொடுத்து விடுவான். —இங்கிலாந்து

சயிந்தானை எழுப்புவது எளிது, கிடத்துவது அரிது. —இங்கிலாந்து

சயித்தான் ஒருபோதும் தொலைவிலில்லை. —இங்கிலாந்து

நோய் வந்துவிட்டால், சயித்தானும் சாமியாராவான். —இங்கிலாந்து

சயித்தானும், தன் காரியத்திற்காக, வேதத்திலிருந்து மேற்கோள் காட்டுவான். —ஷேக்ஸ்பியர்

# விதி

நூல் தீருகிறவரை கழி சுற்றிக்கொண்டேயிருக்கும். —ஜெர்மனி

குல்லாவுக்காகப் பிறந்தவன் கிரீடத்திற்கு ஆசைப்படக் கூடாது. —போலந்து

வாழ்க்கையில் அழுதவன் சிரித்துக் கொண்டே சாவான். —போலந்து

சில சமயங்களில் மனிதர்கள் தங்கள் விதிகளுக்கு யஜமானராயிருக்கின்றனர். —ஷேக்ஸ்பியர்

பாலங்கள் கட்டிப் பாதைகளைச் செப்பனிடுபவனுக்கு இரு கண்களும் அவிந்து போகின்றன; கொலையும் தீ வைத்தலுமே தொழிலாயுள்ளவன் நெடுங்காலம் சுகமாக வாழ்கிருன். —சீனு

சாகாத விதியுடையவனுக்குத்தான் மருந்து பலிக்கும். —சீனு

விதிக்குப் பணிவது அறிவுடைமை. —சீனு

விதியை விலக்கலாம் என்று ஒரு வழியிலே சென்றால், அங்கேயும் அது முன்வந்து நிற்கும். —ஃபிரான்ஸ்

பெண்ணிடமாகப் பிறந்த மனிதன் எவனும் விதியைத் தடுக்க முடியாது. —கிரீஸ்

நடக்க வேண்டியவை நடந்தே தீரும். —இதாலி

நடக்கலாம் என்று நம்பும் விஷயங்களைப் பார்த்து விதி சிரிக்கின்றது. —இங்கிலாந்து

தூக்கிலே சாகும் விதியுடையவன் நீரிலே மூழ்கிச் சாக மாட்டான். —இங்கிலாந்து

விதியைத் தாங்குவதுத்தான் அதை வெற்றி கொள்ளும் வழி. —இங்கிலாந்து

விதியின் தீர்ப்பையே மனிதன் கண்ணை மூடிக்கொண்டு நிறைவேற்றுகிறான். —ஜெர்மனி

பணிந்தவர்களுக்கு விதி வழி காட்டுகின்றது; பணியாதவர்களை இழுத்துச் செல்கின்றது. —இத்தாலி

விதியிலிருந்து தப்பியோட இடமே யில்லை. —லத்தீன்

நீருள் ஆழ்ந்து போகும் விதியுள்ளவனுக்குக் கரண்டி நீர் போதும். —யூதர்

தவளை எவ்வளவு துள்ளினாலும், குட்டையிலேயே கிடக்கும். —கால்மிக்

ஆடு கத்தியையே எண்ணிப் பார்க்கின்றது; கசாப்புக்காரன் இறைச்சியையே எண்ணுகிறான். —குர்திஸ்தானம்

சாகத்தான் வேண்டுமென்றால், சிறு மீன்களால் கருவிக் கருவித் தின்னப் படுவதைவிட, பெரிய முதலையால் விழுங்கப் படுவது மேல். —மலாய்

கடல் இருந்தால், கடற் கொள்ளைக்காரர்களும் இருப்பார்கள். —மலாய்

தூக்கில் தொங்குவதும், மனைவி வாய்ப்பதும் விதியின் பயன். —இங்கிலாந்து

நீ ஒரு தேனீயானால், உனக்கும் ஒரு கூடு உண்டு. —பல்கேரியா

காலையிலே கூவிய சேவல் மாலையிலே பருந்தின் வாயில் இருக்கிறது. —ஃபின்லாந்து

கைக்கும் வாய்க்கும் இடையில் எத்தனையோ விஷயங்கள் நேர்ந்து விடுகின்றன. —கிரீஸ்

காய்ந்த மரம் கீழே விழக் காத்திருக்கும் பொழுது, ஒரு பச்சை மரம் சாய்கின்றது! —ஆப்பிரிக்கா

ஆறு நிறைய நீர் போனாலும், நாய் நக்கித்தான் குடிக்க வேண்டும். —தமிழ்நாடு

எதுவும் உலகில் நடைபெறும்—செல்வம் மிகுந்தவனும் ஓர் ஏழையின் வீட்டை நாடிச் சென்று தட்ட நேரலாம். —ரஷ்யா

விதி சிலரைத் தன் சிறகுகளில் தூக்கிச் செல்லும், சிலரைத் தரையிலே போட்டு இழுத்துச் செல்லும். —ஸ்பெயின்

தன் உயிரைப் பற்றி அதிகமாகக் கவனமாயிருப்பவனை ஒரு சருகு விழுந்து கொன்றுவிடும். —ஆப்பிரிக்கா

## அதிருஷ்டம்

அதிருஷ்டம் வந்து தட்டும் பொழுது, கதவைத் திறவுங்கள். —ஸ்பெயின்

அதிருஷ்டமுள்ளவனுக்குச் சேவலும் முட்டையிடும். —கிரீஸ்

அதிருஷ்டம் குருடு, எவர் மடியிலும் போய் விழும். —எஸ்டோனியா

கடவுள் 'இழு' என்று சொன்னால், உன் முன் கயிறு வந்து விழும்; அவர் 'ஏறு' என்று சொன்னால், உன் முன் குதிரை வந்து நிற்கும். —இந்தியா

முன்னால் போகும் ஊஞ்சல் பின்னாலும் வரும். —இலங்கை

ஆகாயத்திலிருந்து ஈச்சம்பழம் விழுந்தால், நீயும் வாயைத் திற. —சீனா

அதிருஷ்டம் வந்தால், யார்தான் வரமாட்டார்? அது வரா விட்டால், யார்தான் வருவார்? —பல்கேரியா

வானத்திலிருந்து தங்கமாக மழை பெய்யும் பொழுது, உன் துணிகளை யெல்லாம் விரித்து ஏந்திக்கொள்.
—கீழைநாடுகள்

அதிருஷ்டம் நமக்குத் தூக்கத்தில் வரும். —ஃபிரான்ஸ்

அதிருஷ்டமுள்ள மனிதன் வாயைத் திறந்துகொண்டு வீட்டில் உட்கார்ந்திருந்தால் போதும். —ஜெர்மனி

அதிருஷ்டம் சிற்றோடையாக வந்தால், துரதிருஷ்டம் காட்டாருக வரும். —அயர்லந்து

அதிருஷ்டமுள்ளவன் அழகன்தான். —அயர்லந்து

அதிருஷ்டமும் துரதிருஷ்டமும் ஒரே கிணற்றில் தொங்கும் இரண்டு வாளிகள்; ஒன்று மேலே வந்தால், மற்றது கீழே தாழும். —டென்மார்க்

கொடுக்கிற தெய்வம் கூரையைப் பிரித்துக் கொண்டுவந்து கொடுக்கும். —தமிழ்நாடு

ஆசையிருக்கிறது தாசில் பண்ண, அதிருஷ்டமிருக்கிறது கழுதை மேய்க்க! —தமிழ்நாடு

பல்லக்கேற ஆசையுண்டு, உன்னியேறச் சீவனில்லை.
—தமிழ்நாடு

அதிருஷ்டம் என்ற பசு சிலருக்குத் தலையைக் காட்டும், சிலருக்கு வாலைக் காட்டும். —இத்தாலி

அதிருஷ்டம் ஒருவனை அதிகமாய்த் தட்டிக் கொடுத்தால் அவன் மூடனாவான். —லத்தீன்

அதிக அதிருஷ்டம் அபாயமானது. —ரஷ்யா

அறிவில்லாதவனுக்கு வரும் அதிருஷ்டம், பயனற்றதாகும்.
—ரஷ்யா

இளமையான பசு கிடைக்கும் பொழுது, கயிறு தயாரா யிருக்கட்டும். —ஸ்பெயின்

அதிருஷ்டம் வரும்போது முண்டிக்கொண்டு வரும். —ஸ்பெயின்

நைல் நதியில் தள்ளினாலும், அவன் வாயில் ஒரு மீனோடு வெளியே வந்து விடுவான், —அரேபியா

கெட்டதைவிட நல்லதிருஷ்டத்தைத் தாங்கப் பெருங் குணங்கள் தேவை. —ஃபிரான்ஸ்

அதிருஷ்டமும் துரதிருஷ்டமும் பக்கத்து வீட்டுக்காரர்கள். —ஜெர்மனி

ஒவ்வொரு மனிதனுடைய வீட்டு வாயிலிலும் அதிருஷ்டம் ஒரு முறையாவது வந்து தட்டும். —இத்தாலி

நல்லதிருஷ்டம் வரும்போது நல்ல புத்தி இருப்பது அரிது. —லத்தீன்

அதிருஷ்டம் ஒருவனுக்குத் தாயாயிருக்கும், மற்றொருவனுக்கு மாற்றாந் தாயாயிருக்கும். —இங்கிலாந்து

அதிருஷ்டத்தை எதிர்பார்த்திருப்பவனுக்கு மதியச் சாப்பாடு நிச்சயமில்லை. —இங்கிலாந்து

மனிதன் அதிருஷ்டத்தைத் தேடுவதில்லை, அதுவே அவனைத் தேடி வருகிறது. —துருக்கி

அதிருஷ்டமில்லாவிட்டால், பிறவாமலிருப்பதே மேல். —யூதர்

அதிருஷ்டம் கைகளில் வலிமையில்லாதவள்; அவள் கை தூக்கி விட்டவர்களை விரைவில் நழுவவிட்டு விடுவாள். —ஜெர்மனி

## துரதிருஷ்டம்

நாற்பது ஆண்டுக் காலத்தில் ஒரு சமயம் நான் திருடப் புறப்பட்டேன்; ஆனால் அன்று இரவு முழுதும் நிலவு காய்ந்து கொண்டிருந்தது. —கீழைநாடுகள்

சுவர்க்க வாயிலில் ஓர் ஏழை ஆயிரம் ஆண்டுகள் காத்திருந்தான்; அவன் கொஞ்சம் கண்ணயர்ந்த நேரத்தில் அது திறந்து அடைத்துக்கொண்டு விட்டது. —பாரசீகம்

அதிருஷ்டம் கெட்ட நேரத்தில், ஒட்டகத்தின் மேலுள்ளவனையும் நாய் கடித்துவிடும். —இந்தியா

குருடன் கோலை இழப்பது ஒரு தடவைதான். —இந்தியா

அதிருஷ்டம் கெட்ட காலத்தில் உன் கழியே பாம்பாகும். —இந்தியா

நான் உப்பு விற்றால் மழை பெய்கிறது; மாவு விற்றால் காற்றடிக்கிறது. —ஜப்பான்

எனக்கும் பாதரட்சைகள் இல்லாததை எண்ணி நான் வருந்திக்கொண்டே யிருந்தேன்; பாதங்களே யில்லாத ஒரு மனிதனை நான் கண்டபின், என் வருத்தம் தீர்ந்தது. —அரேபியா

அதிருஷ்டமில்லாதவன் பிரேதங்களுக்குப் போர்த்தும் துணிகளை வியாபரம் செய்யத் தொடங்கினால், அப்புறம் எவரும் சாவதில்லை. —அரேபியா

அதிருஷ்டம் கெட்ட பெண்ணுக்கு வருடத்திற்கு இரண்டு குழந்தைகள். —ஆப்கானிஸ்தானம்

ஆட்டைத் தேடுபவன் ஓநாயைக் கண்டான்! —ஃபிரான்ஸ்

அரண்மனையிலிருந்து பால் கிடைத்தால், அதிலே ஒரு சுண்டெலி மிதக்கும்! —ஜெர்மனி

அதிருஷ்டமில்லாதவன் கூழிலும் துரும்பு கிடக்கும். —வேல்ஸ்

கடல் முழுதும் தேனாக மாறியதும், ஏழை மனிதன் எடுத்துக் குடிக்கும் தன் கரண்டியைத் தொலைத்து விட்டான். —பல்கேரியா

இன்று மனிதன், நாளைக்குச் சுண்டெலி. —இங்கிலாந்து

## மூட நம்பிக்கை

எல்லா மக்களுக்கும் மூட நம்பிக்கைகள் உண்டு. —இங்கிலாந்து

ஆள் மேலே இடி விழுந்த பிறகு, இடி விழும் பலனைப் பஞ்சாங்கத்தில் பார்க்க வேண்டியதில்லை. —சீனா

ஆடுகள் ஆடுகளையே தொடர்ந்து செல்லும். —யூதர்

ஆச்சரியமானதும் அற்புதமானதும் ஒரு வாரத்துக்கு வியப்பா யிருக்கும்.
—ஆப்பிரிக்கா

ஒருவன் தன் கோடரியை விழுங்கப் போவதாகச் சொன்னால், நீ அதன் காம்பைப் பிடித்துக்கொண்டு அவனுக்கு உதவி செய்.
—ஆப்பிரிக்கா

மூட நம்பிக்கை மனவலிமை யில்லாதவர்களின் மதம்.
—இங்கிலாந்து

மூடநம்பிக்கை இறைவனில்லாத சமயம். —இங்கிலாந்து

நோயும் துக்கங்களும் வருகின்றன, போகின்றன; ஆனால் மூடநம்பிக்கையுள்ள ஆன்மாவுக்கு அமைதியேயில்லை.
—பர்ட்டன்

மூடநம்பிக்கை இறைவனை மறுப்பதாகும். —பேகன்

அந்த இகழ்ச்சியான பொருளை நசுக்குங்கள். —வால்டேர்

மூட நம்பிக்கை மனத்தை விஷமாக்கி, அதன் அமைதி அனைத் தையும் அழித்து விடுகின்றது.
—லத்தீன்

புரியாத விஷயத்திற்கு நாமாகக் கற்பித்துக் கொள்ளும் விளக்கம் மூடநம்பிக்கை, அது காலங் கடந்தும் தங்கி நிற்கும்.
—இங்கிலாந்து

## நாளும் கோளும்

குறி சொல்பவனுக்குத் தன் விதியே தெரியாது. —ஜப்பான்

ஏழைகள் ஜோசியர் வீட்டை விட்டு வரமாட்டார்கள்; செல்வர்கள் மருந்துக் கடையை விட்டு வரமாட்டார்கள்.
—சீனா

சோம்பேறி ஜோசியனாகிறான். —அரேபியா

வெள்ளி, செவ்வாயில் புறப்படவும் வேண்டாம், போய்ச் சேரவும் வேண்டாம்.
—அரேபியா

# உலகம்

புதிய உலகம் வேண்டும் என்று விரும்புகிறவன், முதலில் பழைய உலகை விலைக்கு வாங்கவேண்டும். —ஹாலந்து

உலகம் அனைத்தும் நித்தியமான கடவுளர்களின் கோயில். —ஸெனீகா

உலகம் உயர்ந்த உடையணிந்த திருமணப் பெண்; அவளை மணந்துகொள்பவர் தம் ஆன்மாவைப் பரிசப் பணமாகக் கொடுக்க வேண்டும். —ஹாஃபீஸ்

உலகத்தைவிட நீதியான ஒருவரை நான் கண்டதில்லை; நீ அவளுக்கு உதவி செய்தால், அவளும் உனக்கு உதவி செய்வாள்; நீ அவளைக் கைவிட்டால், அவளும் உன்னைக் கைவிடுவாள். —ஸூஃபி

செவிடன் இருமுறை சிரிப்பான். —ஆப்கானிஸ்தானம்

[மற்றவர் சிரிப்பதைப் பார்த்துத் தானும் சிரிப்பான். ஏன் சிரித்தார்கள் என்பதைக் கண்ட பிறகு மறுமுறையும் சிரிப்பான்.]

இந்த உலகத்தின் அமைப்பில் நம்பிக்கை வைப்பவன் காகிதம் கப்பலில் கடல் யாத்திரை செய்பவன். —( ” )

உலகம் யாத்திரிகனின் சத்திரம். —ஆப்கானிஸ்தானக்

ஓநாயுள்ள இடத்தில் பறவைகள் பட்டினி கிடப்பதில்லை. —ஜெர்மனி

உலகம் உன்னை விடுவதற்கு முன்னால், நீ அதை விட்டுவிடு. —ஜெர்மனி

உலகம் நம்பிக்கையையும், மாமூல் வழக்கத்தையும் கொண்டு வாழ்கின்றது. —செர்பியா

மூடனுக்கு உலகம் இனிமையானது. —யூதர்

உலகம் ஒரு நடனமாது; ஒவ்வொருவர் முன்னாலும் அது சிறிது நேரம் நடனமாடும். —எகிப்து

[illegible] பற்றிய மனிதனின் அறிவு சுருக்கம்; வானின் [illegible]ல் பெரிய பெரிய தொகைகளே உண்டு. —சீனா

பிரபஞ்சத்தைப் படைத்த பிரபுவே! சுவர்க்கத்திலிருந்து இறங்கி வந்து, நீர் படைத்த உலகைப் பாரும்! —யூதர்

வெகுமதி, தண்டனை—இவை இரண்டுமே உலகை ஆளுகின்றன. —அமெரிக்கா

உலகம் அனைத்தும் ஓர் கனவு போன்றது. —அமெரிக்கா

உலகம் ஓர் ஏணி; சிலர் மேலே ஏறுகிறார்கள், சிலர் கீழே இறங்குகிறார்கள். —இத்தாலி

உலகம் அற்ப மூளைகளால் ஆளப்படுகின்றது. —இத்தாலி

இந்த உலகிலிருந்து ஒவ்வொரு மனிதனும் எவ்வளவு எடுத்துக் கொள்கிறானோ, அவ்வளவு அவனுடையது. —இத்தாலி

வாருங்கள், என்னைப் பின்பற்றுங்கள், உளறிக் கொண்டிருக்கும் உலகத்தை விடுங்கள்! —தாந்தே

உலகம் எப்படி யிருக்கிறதோ அப்படியே கொள்ளுங்கள்; எப்படி இருக்கவேண்டும் என்று பாராதீர்கள். —ஜெர்மனி

உலகம் முன்னைவிட அறிவு பெற்றிருக்கிறது. —ஃபிரான்ஸ்

அங்கி அணிபவனுடையது, உலகம் அதை அநுபவிப்பவனுடையது. —இங்கிலாந்து

ஒரு சமயம் துன்பம், ஒரு சமயம் இன்பம்; இவ்வாறு செல்கின்றது உலகம். —சாஸர்

உலகம் ஒரு நாடக மேடை, ஆண் பெண் அனைவரும் அதில் நடிப்பவர்கள்......... —ஷேக்ஸ்பியர்

உலகம் தான் ஏமாறவே விரும்புகிறது. —ஹாலந்து

ஒருவன் தன் வீட்டைவிட்டு வெளியேறாமலே உலகைத் தெரிந்து கொள்ள முடியும். —லாவோத்ஸே

உலகைப் பற்றிய அறிவை உலகிலிருந்துதான் பெறவேண்டும், அறையிலிருந்தன்று. —செஸ்டர்ஃபீல்டு

பூமி, விருந்தினர்களுக்கு விருந்தளித்துவிட்டு, அவர்களை வதைத்து விடும். —பாரசீகம்

பூமி, எல்லாப் பொருள்களையும் உண்டாக்கி, எல்லாவற்றையும் திரும்ப வாங்கிக்கொண்டு விடும். —இங்கிலாந்து

# நிலையாமை

நிலையாமை ஒன்றே நிலையானது. —தமிழ்நாடு

ஓர் இடத்தைத் தன்னுடையது என்று சொல்பவனைக் கண்டு பூமியே சிரிக்கின்றது. —இந்தியா

'எனக்கு நேரமிருக்கும்பொழுது செய்கிறேன்' என்று சொல்லாதே; உனக்கு நேரமிருக்கும் என்று யார் சொன்னது? —யூதர்

எல்லா மனிதர்களும் தங்களைத் தவிர, மற்றவர்கள் அனைவரும் அநித்தியர்கள் என்று எண்ணுகிறார்கள். —இங்கிலாந்து

அநித்தியர்களுக்கு உரியதெல்லாம் அநித்தியமே: —கிரீஸ்

எல்லாப் பொருள்களும் பூமியிலிருந்து தோன்றியவை; எல்லாப் பொருள்களையும் பூமி மறுபடி எடுத்துக் கொள்கின்றது. —கிரீஸ்

நீ அநித்தியமானவன் என்பது நினைவிருக்கட்டும். —கிரீஸ்

அழகாக மலர்வது விரைவாக வாடும். —எஸ்டோனியா

# இயற்கை

இயற்கையின் விளக்கத்தைத் தொடர்ந்து செல்பவன் ஒரு காலும் வழி தவறான். —ஜெர்மனி

ஒரு மரத்திலுள்ள கனிகளை எண்ண முடியும்; ஆனல் ஒரு கனியினுள் இக்ருகும் மரங்களை எண்ண முடியாது. —ஆங்கில நாடோடிகள்

உப்பை உண்டவன் தண்ணீர் குடிப்பான். —இந்தியா

எறும்புக்கு பனித்துளியே வெள்ளமாகும். —இந்தியா

ஆறுகள் இயற்கையில் இனிய நீருடன் ஓடுகின்றன, அவை கடலில் கலந்த பிறகே உவர்ப்பாகின்றன. —இந்தியா

காற்றில் ஆடாத மரமில்லை. —இந்தியா

நாரையின் வெண்மை பறக்கும் போதே தெரியும். —இலங்கை

மரத்தடியிலே இரட்டிப்பு மழை. —இலங்கை

மேற்கே பார்த்துக் கொண்டிருந்தால், சூரிய உதயத்தைக் காணவே முடியாது. —ஜப்பான்

இலைகள் அதிகமாயிருந்தால், கனிகள் குறைவாயிருக்கும். —அரேபியா

நெருப்புக்கும் நீருக்கும் இரக்கம் கிடையாது. —குர்திஸ்தானம்

நெருப்புக்கும் நீருக்கும் சிறிதுதான் வேற்றுமை. —மலாய்

வாழை ஒரு முறைதான் குலை தள்ளும். —மலாய்

தண்ணீருக்குள் கல் அழுகுவதில்லை. —கீழை நாடுகள்

தனித்திருக்கும் ஓநாய் சிங்கம்தான். —கீழை நாடுகள்

கறுப்புக்கு அப்பால் நிறமில்லை. —ஆப்கானிஸ்தானம்

சந்திரன் பல மலர்களைப் பார்க்கும், மலர்கள் ஒரு மதியையே பார்க்கும். —பாரசீகம்

குதிரைகளுக்குத்தான் வயதைப் பார்க்கவேண்டும். —ஃபிரான்ஸ்

நாம் தாகமில்லாமல் பருகுகிறோம்; எந்த நேரத்திலும் காதல் புரிகிறோம்; நமக்கும் விலங்குகளுக்கும் இதுவே வேற்றுமை. —ஃபிரான்ஸ்

ஆப்பிள் கனி மரத்திலிருந்து தொலைவில் போய் விழுவதில்லை. —ஜெர்மனி

பகலுக்கு இரவு தேவை. —ஜெர்மனி

ஓர் ஆந்தை வெளியே வந்துவிட்டால் மற்ற இரண்டு பின் தொடரும். —போலந்து

இயற்கை ஒரு நூல்; ஆண்டவரே அதன் ஆசிரியர்.
—இங்கிலாந்து

இயற்கையின் விதிகளுக்கு விதிவிலக்கு இல்லை. —இங்கிலாந்து

மனிதன் இல்லாத இடத்தில் இயற்கை கட்டாந்தரை.
—பிளேக்

இயற்கையை வெருட்டினால், அது விரைவில் திரும்ப வந்து விடும்.
—ஃபிரான்ஸ்

இயற்கைக்கு மாறுபட்டது அனைத்தும் அரைகுறையானவை.
—ஃபிரான்ஸ்

கல்வியைவிட இயற்கைக்கு எப்பொழுதும் ஆற்றல் அதிகம்.
—ஃபிரான்ஸ்

இயற்கையின் உண்மை சுரங்கங்களிலும் குகைகளிலும் மறைந்து கிடக்கின்றது.
—கிரீஸ்

இயற்கையானது எதுவும் இழிவானதன்று —கிரீஸ்

இயற்கையை மாற்றுவது கடினம். —லத்தீன்

இயற்கை எந்த இடத்தையும் காலியாக (வெறுமையாக) விட விரும்புவதில்லை.
—லத்தீன்

இயற்கை எதையும் வீணாகச் செய்வதில்லை. —லத்தீன்

இயற்கை இறைவனின் கலை. —லத்தீன்

வழக்கம் இயற்கையை ஒருபோதும் வெல்ல முடியாது.—லத்தீன்

பூமி ஒன்றுதான் மனிதனின் நண்பன். —பல்கேரியா

ஆதாம் காலத்திலிருந்தே கழுதை சாம்பல் நிறம்தான்.
—ஸெக்

சின்னஞ்சிறு தேனீக்களே ஏழைகளின் குட்டிப் பசுக்கள் —ஸெக்

வனத்திற்கு ஒருநாள் செல்பவன் ஒரு வாரத்திற்கு வேண்டிய உணவுடன் செல்லவேண்டும்.
—ஸெக்

பூனை வயிற்றில் எது பிறந்தாலும், அது எலி பிடிக்கும். —ஸெக்

பட்டுச் சட்டையிலும் சீலைப்பேன் இருக்கும். —எஸ்டோனியா

பூனை மீனை வாலிலிருந்துதான் கடித்துத் தின்னும். ( ,, )

பூனையைத் தடவத் தடவ அது வாலை அதிகமாய்த் தூக்கும்.
—எஸ்டோனியா

எந்த நிறம் சேர்ந்தாலும், கறுப்புநிறம் மாருது.—இங்கிலாந்து

கரை கண்ணுக்குத் தெரிந்துவிட்டதால், நாயும் பூனையும் நீருள் ஆழ்ந்துவிட மாட்டா. —இங்கிலாந்து

மூடுபனியை விசிறியால் விரட்ட முடியாது. —இங்கிலாந்து

பூனையிடம் பூனையையே எதிர்பார்க்கலாம். —இங்கிலாந்து

பூனையின் மகன் எலியைக் கொல்வதைத்தவிர வேறென்ன செய்வான்? —இங்கிலாந்து

மாலை வருகையில் எல்லோரையும் வீடுகளுக்கு அழைத்து வருகின்றது. —ஸ்காட்லந்து

எல்லா விறகிலிருந்தும் புகை வரும். —கிரீஸ்

பல் இருந்தால் தவளையும் கடிக்கும். —இத்தாலி

(மனிதன் முறையாகவே நடக்க முடியும்,) பின்புறமாக நடக்க முடியாது. —லத்தீன்

பெண்சிங்கம் ஒரு குட்டிதான் போடும். ஆனல், அது சிங்கக் குட்டி! —அமெரிக்கா

இந்த உலகில் எல்லாம் இரண்டு இரண்டாக உள்ளன.
—அமெரிக்கா

செயற்கையான கொம்புகள் பொருந்தி நிற்கமாட்டா.
—அமெரிக்கா

குட்டை இருந்தால், தவளைகளும் இருக்கும். —ரஷ்யா

காய் கனிந்தால், தானுக விழும். —செர்பியா

சந்திரனும் வெளிச்சமாயிருக்கிறது, ஆனல் அது சூடளிப்ப தில்லை. —ரஷ்யா

பூமியைப் போல் உனக்குச் செல்வம் பொங்குவதாக! —ரஷ்யா

எறும்பும் எறும்புடன் பேசும். —ரஷ்யா

உருகாத மெழுகு கிடையாது. —ஸ்பெயின்

பல ஈக்கள் சேர்ந்து ஒரு கழுதையைக் கொன்றுவிடும். —ஸ்பெயின்

நண்டின் வயிற்றில் பறவை பிறக்காது. —எகிப்து

## உயிர்

மூச்சு என்பது உயிரின் இசை. —இந்தியா

## மனிதன்

பல்லக்கில் இருப்பவன் மனிதன், பல்லக்குத் தூக்குபவனும் மனிதன்தான். —சீனு

உலகம் என்ற சாணையில் மனிதன் ஒரு கத்தி. —ஆர்மீனியா

உலகம் என்ற பானையில் மனிதன் ஒரு கரண்டி. —ஆர்மீனியா

ஒரு மனிதன் வாழ்ந்தான் என்பதற்கு, அவன் ஒரு வீடாவது கட்டியிருக்க வேண்டும், ஒரு மகனையாவது பெற்றிருக்க வேண்டும், அல்லது ஒரு நூலாவது எழுதி யிருக்க வேண்டும். —இதாலி

மனிதன் காற்றடைத்த ஒரு தோற்பை. —லத்தீன்

நீ கடலுடன் போட்டியிட்டுக் கொண்டிருக்கும் ஓர் ஆறு. —லத்தீன்

மனிதன் நடமாடும் பிணம். —ரஷ்யா

ஒருவன் பூரண மனிதனுக விளங்க வேண்டுமானல், அவன் பொதுப் பள்ளியில் மூன்று ஆண்டுகளும், பல்கலைக் கழகத்தில் ஓராண்டும், சிறையில் இரண்டாண்டுகளும் கழித்திருக்க வேண்டும். —ரஷ்யா

ஒவ்வொரு மனிதனும் பொதுமக்களே. —ஸ்பெயின்

மெலிந்தவனை அரை ஆள் என்றும், பருத்தவனை இரண்டு ஆள் என்றும் கணக்கிடுவதில்லை. —ஆப்பிரிக்கா

மனிதன் தானே தனக்குச் சயித்தான். —இந்தியா

மலை இடம் பெயர்ந்துவிட்டது என்று நீ கேள்விப்பட்டால் நம்பலாம்; ஆனால் ஒரு மனிதன் குணம் திருந்திவிட்டான் என்று கேட்டால், அதை நம்ப வேண்டாம். —அரேபியா

மனிதனும் விலங்குகளும் ஒன்றுபோலத்தான் இருக்கிறார்கள். —அரேபியா

மேலான மனிதன் தேடுவது அவனுள்ளேயே இருக்கிறது; சாதாரண மனிதன் தேடுவது மற்றவர்களிடம் இருக்கிறது. —கன்ஃபூஷியஸ்

மனிதனைப் போல நடந்து கொள்பவனே மனிதன் —ஹாலந்து

வெட்கம் மனிதனை விட்டு விலகி நின்றால், அவன் விலங்காவான். —சுவின்பர்ன்

தெய்வப் படைப்பில் மனிதனே தலைசிறந்தவன் —இங்கிலாந்து

மனிதன் இயற்கையில் ஓர் அற்புதம். —இங்கிலாந்து

மனிதனுக்கு முதன்மையான பகைவன் மனிதனே. ( ” )

சிரிக்கும் மிருகம் மனிதன் ஒருவன்தான். —இங்கிலாந்து

வெட்கப்படும் விலங்கு மனிதன் ஒருவனே. —மார்க் ட்வெயின்

மனிதர்களுக்கு மனம் பளிங்கு, பெண்களுக்கு மனம் மெழுகு. —ஷேக்ஸ்பியர்

இரக்கமற்ற தன்மையைக் காட்டிலும் மனிதனுக்கு இழிவானது எதுவுமில்லை. —ஸ்பென்ஸர்

புத்தகங்களைப் படிப்பதைக் காட்டிலும், மனிதர்களைப் படிக்க வேண்டியது அவசியம். —ஃபிரான்ஸ்

மனிதன் தனக்குள் ஒரு கொடிய விலங்கை வைத்திருக்கிறான். —ஜெர்மனி

மிருகத்தையும் அதிமானிடனையும் பிணைத்துக் கட்டும் கயிறு மனிதன். —நீட்ஷே

[மனிதனே தன்னிலும் மேம்பட்ட அதிமானிடனு கப் பரிணமிக்க முடியும் என்ற கொள்கையுடையவர் நீட்ஷே என்ற தத்துவஞானி.]

மனிதனுக்கு மனிதன் கடவுள். —கிரீஸ்

பெரும்பாலான மனிதர் தீயவர். —கிரீஸ்

மனிதன் பகுத்தறிவுள்ள விலங்கு. —லத்தீன்

மனிதன் தனக்கு எவ்வளவு வேண்டியவனே அதைவிட அதிக மாகத் தேவர்களுக்கு வேண்டியவன். —லத்தீன்

மனிதனுக்கு மனிதன் ஓநாயாக இருக்கிறான். —லத்தீன்

மனித சமூகத்தை விட்டு மேலெழுந்து நிற்காத மனிதன் ஓர் அற்பப் பொருளாவான். —செனிகா

ஒரு மனிதனைத் தெரிந்து கொள்வதினும், பத்து நாடுகளைத் தெரிந்து கொள்ளல் எளிது. —யூதர்

## வாழ்க்கை

இளந் தளிர்களும் உதிர்ந்த சருகுகளும் எங்குமே காணப் பெறுகின்றன. —இந்தியா

சில சமயம் மூழ்குதல், சில சமயம் மேலெழுதல் : இதுதான் வாழ்க்கை. —இந்தியா

வாழ்க்கை காற்றின் நடுவிலுள்ள ஒரு தீபம். —ஜப்பான்

வாழ்க்கை என்பது அன்பும் மனைவியும். —ஜப்பான்

உணவுக்காகவும், உடைக்காகவுமே நாம் இரண்டு கால்களாலும் ஓடித் திரிகிறோம். —சீனு

உன் வாழ்க்கையில் ஒவ்வொரு நாளும் உன் சரித்திரத்தில் ஓர் ஏடாகும். —அரேபியா

சுவர்க்கத்திற்குச் செல்வோன் பயிற்சி நிலையமே வாழ்க்கை. —அரேபியா

வாழ்க்கை, இரு பகுதிகளுள்ளது: ஒன்று கழிந்தகாலம் என்ற கனவு, மற்றது வருங்காலம் என்ற விருப்பம். —அரேபியா

நீ காலையைக் கண்டிருக்கிறாய், இன்னும் மாலையைக் காண வில்லை. —யூதர்

வாழ்க்கை மனிதனுக்குக் கொடுக்கப்பட்ட கடன்தான்; மரணம் என்னும் கடன்காரன் அதைப் பெற்றுக் கொள்ள ஒருநாள் வருவான். —யூதர்

வாழ்க்கை என்பது இடைவிடாத குடிவெறி—மகிழ்ச்சி மறைந்த பின்பும், தலைவலி இருந்துகொண்டே யிருக்கும். —பாரசீகம்

மூச்சு வருவதும் போவதும் தொட்டிலின் ஆட்டம்; முடிவான தூக்கம் வருமுன் எச்சரிக்கையா யிரு. —பாரசீகம்

வாழ்க்கை ஒரு வெங்காயம், அதை உரிக்கும்பொழுது கண்ணீர் வரும். —ஃபிரான்ஸ்

வாழ்க்கை என்னவென்று நாம் தெரிந்து கொள்ளுமுன், பாதி வாழ்க்கை கழிந்து விடுகின்றது. —ஃபிரான்ஸ்

வாழ்க்கையின் முற்பகுதி இரண்டாம் பகுதியை விரும்புவதில் கழிகின்றது; இரண்டாம் பகுதி, முதற் பகுதிக்காக வருந்துவதில் கழிகின்றது. —ஃபிரான்ஸ்

நாம் வருகிறோம், அழுகிறோம், இதுதான் வாழ்க்கை; நாம் அழுகிறோம், போகிறோம், இதுதான் மரணம். —ஃபிரான்ஸ்

நேற்று, இன்று, நாளை ஆகிய மூன்று நாட்களே மனிதனின் நாட்கள். —ஃபிரான்ஸ்

மரணத்தைப் பற்றிச் சிந்திப்பவன் வாழத் தொடங்குகிறான்; —ஜெர்மனி

பன்னிரண்டு வயதில் குழந்தைப் பருவத்தைப் புதைக்கிறோம்; பதினெட்டில் வாலிபப் பருவத்தையும், இருபதில் முதற் காதலையும், முப்பதில் மனிதரிடம் கொண்ட நம்பிக்கையை யும், அறுபதிலிருந்து சிறிது சிறிதாக ஐம்புலன்களையும் புதைத்து விடுகிறோம். —ஜெர்மனி

ஒவ்வொரு மணியும் (நேரமும்) நம்மைக் காயப்படுத்திக் கொண்டேயிருக்கின்றது. கடைசி மணி அடித்தவுடன் ஆவி பிரிகின்றது. —ஜெர்மனி

இன்று வாழுங்கள், பழமையை மறவுங்கள். —கிரீஸ்

வாழ்க்கை தீமையில்லை, தீமையாக வாழ்வதிலேயே தீமை உள்ளது. —கிரீஸ்

நல்லதோ, கெட்டதோ நாம் அனைவரும் வாழத்தான் வேண்டும். —இத்தாலி

நன்றாக வாழ்வதற்குச் சொற்ப வாழ்வே போதுமானது —லத்தீன்

நீ வாழ்ந்திருக்கும் வரை, எப்படி வாழவேண்டும் என்பதைக் கற்றுக் கொண்டேயிரு. —லத்தீன்

வாழ்க்கை பயன்படுத்தப் பெறுவதற்காகவே நமக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. —லத்தீன்

நாளையே மரிக்க வேண்டியவனைப் போல வாழ்ந்து கொண்டிரு. —லத்தீன்

நாம் வாழத் தொடங்கிக்கொண்டே யிருக்கிறோம், ஆனால் வாழ்வதில்லை. —லத்தீன்

நாம் வாழ்க்கையைச் சிறு துண்டுகளாக்கி வீணாக்குகிறோம். —லத்தீன்

செத்துக்கிடக்கும் சிங்கத்தைவிட, உயிருள்ள சுண்டெலி மேல். —ரஷ்யா

மரணம் வரும் வரையில் எல்லாம் வாழ்க்கைதான். —ஸ்பெயின்

தலைசிறந்த மரணத்தைவிட, மட்டமான வாழ்க்கையும் மேலானது. —யூதர்

## ஆடவர்

மனிதன் ஆறு—பெண் ஏரி. —குர்திஸ்தானம்

பத்து நாள் பெண்ணாயிருப்பதைவிட, ஒரு நாள் ஆணாயிருப்பது மேல். —குர்திஸ்தானம்

ஆணும் பெண்ணும் மண்வெட்டியும் வாளியும்போல —குர்திஸ்தானம்

பெண் ஒரு கோட்டை—ஆண் அவள் கைதி. —குர்திஸ்தானம்

628

ஆடவர் நெல், பெண்டிர் குத்திய அரிசி. —சயாம்

[நெல் தானாக முளைக்கும், அரிசி முளைக்காது.]

மனிதர்களுக்குக் குணத்திற்கு முன்னால் அறிவு தேவை. பெண்களுக்கு அறிவுக்கு முன்னால் குணம் தேவை. —ஜெர்மனி

தனியாயிருக்கும் பிரமசாரி மயில்; காதல் புரிய ஒரு கன்னி கிடைத்தவன் சிங்கம்; கலியாணமானவன் கழுதை. —ஜெர்மனி

பிரமசாரியும் நாயும் எதையும் செய்யலாம். —போலந்து

மணவாழ்க்கையைப் புகழ்ந்து பேசு; ஆனால் நீ தனித்திரு. —இத்தாலி

பிரமசாரி தண்ணீரில்லாத வாத்துப் போன்றவன். —ரஷ்யா

தினசரி க்ஷவரம் செய்துகொள்வதைவிட, வருடத்திற்கு ஒரு பிள்ளை பெறுவதே எளிது. —ரஷ்யா

[ரஷ்ய சிப்பாய்கள் இவ்வாறு தங்கள் மனைவியரிடம் சொல்வது வழக்கம்.]

ஆடவர் அழகை ஒரு குணமாகப் பார்க்கின்றனர்; பெண்கள் குணத்தை அழகாகப் பார்க்கின்றனர். —ஸ்பெயின்

சேவல் தன் குப்பை மேட்டிலிருந்துதான் கூவும்; கோழி ஊரெங்கும் சுற்றிக் கூவிவரும். —ஸ்பெயின்

பொன்னுக்குச் சோதனை நெருப்பு; பெண்ணுக்குச் சோதனை பொன்; மனிதனுக்குச் சோதனை பெண். —அமெரிக்கா

பத்து மனிதரில் ஒன்பது பேர் பெண்கள். —துருக்கி

[பெரும்பாலோர் ஆண்மையில்லாதவர்கள்.]

ஆண்பிள்ளையின் சொற்கள் அம்பு போன்றவை; பெண்பிள்ளையின் சொற்கள் ஒடிந்த விசிறி போன்றவை. —சீனா

பெண் அடிமையாயிருந்தால், ஆண் சுதந்திரமாகயிருக்க முடியுமா? —ஷெல்லி

மற்றவர்களுடைய பெண்களிடத்திலும், பணத்தினிடத்திலும் விளையாட வேண்டாம். —இங்கிலாந்து

# பெண்கள்

பிராணிகளின் படைப்பில் பெண்ணே முதன்மையான எழிலுடையவள். —யூதர்

இயன்ற பொழுதெல்லாம் பெண்கள் சிரிப்பார்கள்; அழ வேண்டுமென்று தீர்மானித்து விட்டால், அழுவார்கள். —ஃபிரான்ஸ்

பெண் என்ருல் பேயும் இரங்கும். —தமிழ்நாடு

ஒவ்வொரு மனிதனும் பெண்ணின் மகன். —ரஷ்யா

பெண்ணே, உன்னிடம் மூன்று நல்ல குணங்களும், நாலு லட்சம் தீய குணங்களும் இருக்கின்றன. நல்லகுணங்கள்: இசை பாடுதல், (இறந்த கணவனுடன்) சதியாக எரிதல், பிள்ளைகள் பெறுதல். —இந்தியா

மனிதனுக்குப் போர் எப்படியோ, அப்படிப் பெண்ணுக்குப் பிரசவம். —இந்தியா

பெண்களிடமிருந்து தன்னைக் காப்பாற்றிக் கொள்ளச் சயித்தான்கூடப் பிரார்த்தனை செய்கிருன். —இந்தியா

அத்திப் பூவையும், வெள்ளைக் காகத்தையும், நீரிலுள்ள மீனின் காலையும் பார்த்தாலும் பார்க்கலாம், ஒரு பெண்ணின் மனத்திலுள்ளதைப் பார்க்கவே முடியாது. —இந்தியா

பெண்ணின் பேச்சிலே தேன் இருக்கிறது; உள்ளத்திலே நஞ்சைத் தவிர வேறில்லை. —இந்தியா

ஆடவர்களே இல்லாவிட்டால், பெண்கள் அனைவரும் கற்புடையவர்களே. —இந்தியா

ஏணியில்லாமலே தூக்கில் ஏறவேண்டுமானுல், ஒரு பெண்ணின் உதவியால் முடியும். —இலங்கை

கோழிதான் சேவலைக் கூவச் சொல்லுகிறது. —ஜப்பான்

நாவுதான் பெண்ணுக்கு வாள், அது துருப்பிடிப்பதேயில்லை. —ஜப்பான்

பெண் மனிதனின் குழப்பம். —லத்தீன்

பெண்புத்தி பின்புத்தி. —தமிழ்நாடு

வயது வந்த பெண் (தீர்வை கட்டாமல்) கடத்தி வந்த உப்பைப் போன்றவள். —சீனு

[விரைவிலே வெளியேற்ற வேண்டும்.]

பெண்ணின் உரோமத்தால் பெரிய யானையையும் கட்டிப் பிடிக்கலாம். —சீனு

இளமங்கையை வீட்டில் புலிபோல் காத்துவர வேண்டும்.—சீனு

ஆடவர்கள் இதயங்களால் சிரிப்பார்கள், பெண்கள் உதடுகளால் மட்டும் சிரிப்பார்கள். —அரேபியா

பெண்பிள்ளை பயணம் போகிருள் என்ருல், ஓர் ஆண்பிள்ளை அவளுக்குக் கதவைத் திறப்பதுதான் காரணம். —அரேபியா

ஒரு நல்ல பெண் ஏழு பிள்ளைகளுக்கு மேல். —ஆர்மீனியா

உனக்கு ஓர் இரகசியம் தெரியவேண்டுமா? ஒரு குழந்தை, பயித்தியக்காரன், குடிகாரன், அல்லது ஒரு பெண்ணிடம் கேட்டுப் பார். —ஆர்மீனியா

ஆணைவிடப் பெண்களுக்குப் பசி இரட்டிப்பு, புத்தி நான்கு மடங்கு, ஆசைகள் எட்டு மடங்கு அதிகம். —பர்மா

பெண்களை அழவிடுவதில் மனிதர்கள் கவனமாயிருக்க வேண்டும்; ஏனெனில் ஆண்டவன் அவர்களுடைய கண்ணீர்த் துளிகளை எண்ணிப் பார்க்கிருன். —யூதர்

கழுதை ஏணிமேல் ஏறும்பொழுது, பெண்களிடம் நாம் ஞானத்தைக் காணலாம். —யூதர்

பெண்ணுக்குக் கூந்தல்தான் நீளம், மூளை கட்டை. —கால்மிக்

பெண் முற்றிலும் ஆணின் உடைமையாகாள். —குர்திஸ்தானம்

மன்னன், மாது, குதிரை—மூன்றையும் நம்பவேண்டாம். —பாரசீகம்

பெண்ணுல் துயரமே வரும், ஆயினும் பெண் இல்லாத வீடே இருக்க முடியாது. —பாரசீகம்

இரண்டு பெண்களும் ஒரு வாத்தும் இருந்தால் போதும்—அது ஒரு சந்தையாகி விடும். —பாரசீகம்

பெண்பிள்ளைக்கு இருமுறை பயித்தியம் பிடிக்கும்; அவள் காதல் கொண்ட சமயம், தலை நரைக்கத் தொடங்கும் சமயம். —பாரசீகம்

குடியானவனுக்கு வேண்டியது நிலம், பிரபுவுக்குக் கௌரவங்கள், சிப்பாய்க்கு யுத்தம், வியாபாரிக்குப் பணம், விவசாயிக்கு அமைதி, தொழிலாளிக்கு வேலை, சித்திரக்காரனுக்கு அழகு, பெண்ணுக்கு உலகம் முழுவதும் தேவை. —பாரசீகம்

பாடும் பெண்ணுக்கு அகமுடையான் தேவை. —அல்பேனியா

அழகான பெண்ணும், நீண்ட கிழிசலுள்ள அங்கியும் எந்த ஆணியிலும் மாட்டிக் கொள்ளும். —இங்கிலாந்து

விகாரமான ஸ்திரீ வயிற்றுவலி, அழகுள்ளவள் தலைவலி. —இங்கிலாந்து

பத்துவயதில் பெண் தேவகன்னியா யிருப்பாள், பதினைந்தில் கள்ளமற்ற முனிவரைப் போலிருப்பாள், நாற்பதில் சயித்தானுவாள், எண்பதில் சூனியக்காரியாவாள். —இங்கிலாந்து

பெண்ணின் முன்பாகத்திற்கும் கழுதையின் பின்பாகத்திற்கும், பாதிரியாரின் எல்லாப் பாகங்களுக்கும் எச்சரிக்கையா யிருக்கவேண்டும். —இங்கிலாந்து

பெண்களுக்கும், குருமார்களுக்கும், கோழிகளுக்கும் எவ்வளவு இருந்தாலும் போதாது. —இங்கிலாந்து

பெண்பிள்ளை சயித்தானை வென்று விடுவாள். —அயர்லந்து

உயிருள்ளவரை பெண்களுக்கு வர்ணங்களில் ஆசையிருக்கும். —அயர்லந்து

சணலை நெருப்பிலிருந்து காப்பது கஷ்டம். —ஸ்காட்லந்து

வாயாடியின் வாய் சயித்தானின் அஞ்சல் பை. —வேல்ஸ்

பெண்கள் சயித்தானின் சாட்டைகள். —வேல்ஸ்

பெண் உள்ளம் தாமரை இலைமேல் உருளும் நீர்த்துளிபோல் நிலையற்றது. —சயாம்

உறுதியான செருப்பு வேண்டுமானுல், ஒரு பெண்ணின் நாவை அடித்தோலாக வைத்துத் தைக்க வேண்டும்—அது ஒரு போதும் தேயாது. —ஃபிரான்ஸ்

மூன்று விலங்குகளே தம்மைச் சிங்காரித்துக் கொள்வதில் நேரத்தைக் கழிப்பவை—அவை பூனைகள், ஈக்கள், பெண்கள். —ஃபிரான்ஸ்

மனிதனின் பணப்பைக்காகவே பெண் படைக்கப் பெற்றிருக்கிருள். —ஃபிரான்ஸ்

ஆயுதங்களையும், பெண்களையும், பூட்டுக்களையும் தினந்தோறும் பார்த்துவர வேண்டும். —ஜெர்மனி

கன்னிப் பருவம் சாந்திமயம், கற்பு முக்தி நிலை, விவாகம் சிறைவாசம். —ஜெர்மனி

கன்னிப் பருவம் கதிரவன், கற்பு சந்திரன், விவாகம் இரவு. —ஜெர்மனி

ஒரு கன்னி எதையும் வாங்கவும் கூடாது, கொடுக்கவும் கூடாது. —ஜெர்மனி

ஒரு சேவல் பன்னிரண்டு கோழிகளை அடக்கியாளும்; ஒரு பெண் ஆறு ஆடவர்களை அடக்கியாள்வாள். —ஜெர்மனி

துணையில்லாமல் செல்லும் பெண்ணுக்கு எல்லோரும் துணையாகச் சுற்றுவார்கள். —ஜெர்மனி

நூறு தெள்ளுப் பூச்சிகளைக் காத்துவிடலாம், ஒரு கன்னியைக் கட்டிக் காப்பது கஷ்டம். —போலந்து

கெட்ட பெண்ணிடம் அவளைப் புகழ்ந்து ஒரு வார்த்தை சொல்லு; நல்ல பெண்ணிடம் உன் விருப்பம்போல் பேசு. —போலந்து

கன்னிப் பெண்ணிடம் உன் விருப்பம் போல் நடக்கலாம். விதவையிடம் அவள் விருப்பம் போலவே நீ நடக்க வேண்டும். —போலந்து

பெண்ணின் யோசனையால் பயனில்லை யென்றாலும், அதை ஏற்றுக்கொள்ளாதவன் பாடு அஃவலம்தான். —வேல்ஸ்

நீண்ட தலைக்காரிக்கு ஆழமில்லாத உள்ளம். —பல்கேரியா

செல்லமாக வளர்ந்த பெண் நூல் நூற்க மாட்டாள்.
—பல்கேரியா

[மேலை நாடுகளில் கம்பள நூல் நூற்றல் கன்னியர் செய்யவேண்டிய தொழில்.]

பெண்கள் சீட்டியடித்தால், சயித்தானுக்குச் சிரிப்பு அடங்காது.
—ஜெர்ஸீ

அத்தையிடம் ஒரு விஷயம் சொன்னால் போதும், அகிலமெல்லாம் பரவிவிடும்.
—ஸெக்

பன்னிரண்டு வயதுவரை உன் மகளுக்குத் தலை வாரிவிடு, பதினாறு வயதுவரை பாதுகாத்து வை; பின்னர் எவன் மணந்துகொள்ள வந்தாலும், அவளைக் கொடுத்து, நன்றியும் சொல்லு.
—ஸெக்

நாய்க்கு மேலாக நாம் குரைக்க முடியாது, காகத்திற்கு மேலாகக் கரைய முடியாது, ஒரு பெண்ணுக்கு மேலாகச் சண்டை போட முடியாது.
—ஸெக்

ஒரு பெண் சீட்டியடித்தால், ஏழு ஆலயங்கள் அதிரும். —ஸெக்

பெண்ணுக்கு மௌனத்தைப் போன்ற ஆபரணம் வேறில்லை, ஆனால் அவள் அதை அணிவது அபூர்வம். —டென்மார்க்

வயிரம் போன்ற மகள் மனைவியாகும்போது கண்ணாடியாக மாறுகிறாள்.
—ஹாலந்து

பெண்களைப் பெற்றவன் எப்பொழுதுமே மேய்க்கவேண்டிய ஆயன்.
—ஹாலந்து

புதர்களெல்லாம் பெண் இனம். —எஸ்டோனியா

[பெருகக் கூடியவை.]

ஒரு பெண் மற்றொருத்தியைப் புகழ்ந்து ஒரு போதும் பேச மாட்டாள்.
—எஸ்டோனியா

ஒரு பெண்ணின் பாவு ஒன்பது பெண்களின் ஊடு. ( ,, )

மனிதன் வேலை காரணமாக வெளியே போகிறான். பெண் தன்னைப் பிறர் பார்ப்பதற்காகப் போகிறாள். —பின்லாந்து

பெண்ணை அவள் இறந்த பிறகும் நம்பவேண்டாம். —கிரீஸ்

கடல், தீ, பெண்கள், மூன்றும் தீமைகள். —கிரீஸ்

பெண்ணின் ஆயுதங்கள் கண்ணீர்த் துளிகள். —ஜியார்ஜியா

அதிக வயதாகியும் கன்னியா யிருப்பவள் அஞ்சலில் சேராத கடிதம் போன்றவள். —ஹங்கேரி

கோபம் வந்த பெண் கரையில்லாத கடல். —லத்தீன்

கன்னியின் இதயம் இருண்ட கானகம். —ரஷ்யா

இரண்டு பெண்கள் சேர்ந்தால் ஒரு கடை, மூவர் சேர்ந்தால் ஒரு சந்தை. —ரஷ்யா

சிரிக்கிற பெண்ணையும், அழுகிற மனிதனையும் நம்ப வேண்டாம். —ரஷ்யா

எந்தப் பெண்களைப்பற்றி அதிகமாய்ப் பேச்சில்லையோ, அவர்கள் மிகவும் நல்லவர்கள். —சைலீஷியா

அழகுக்கும் கற்புக்கும் இடைவிடாத போர் இருந்தே வரும். —ஸ்பெயின்

மூன்று பெண்களும், ஒரு — தாயும் ஆகத் தந்தைக்கு நான்கு சயித்தான்கள். —ஸ்பெயின்

கற்புடைய கன்னியும், நொண்டியும் வீட்டிலேயே யிருப்பது மேல். —ஸ்பெயின்

கெட்ட ஸ்திரீகளைக் காவல் காப்பது வீண் வேலை. —ஸ்பெயின்

தன்னையே அதிகமாய்ப் பார்த்துக் கொண்டிருக்கும் பெண் வீட்டை நாசமாக்குவாள். —ஸ்பெயின்

கடலில் உப்பைத்தான் பெறலாம், பெண்ணிடம் தீமையைத் தான் பெறலாம். —ஸ்பெயின்

கூவுகிற கோழியும், லத்தீன் படித்த பெண்ணும் நல்ல முடிவை அடைய மாட்டார்கள். —ஸ்பெயின்

பெண்கள் கிடைத்ததை மதிக்கமாட்டார்கள், மறுத்ததையே விரும்பி வாடுவார்கள். —ஸ்பெயின்

கெட்ட பெண்களிடமிருந்து உன்னைக் காப்பாற்றும்படி ஆண்டவனை வேண்டு; நல்ல பெண்களிடமிருந்து நீயே உன்னைக் காத்துக்கொள். —யூதர்

நாயைப் போன்றவள் பெண்! எலும்பைக் காட்டினால் நாய் ஏமாந்து பின்னால் வரும். —ஆப்பிரிக்கா

மனிதரைத் தவிர, மற்ற விலங்குகள் அனைத்திலும் பெண் இனமே மேலானது. —அரேபியா

தந்தைக்கு அடங்கி நடத்தல், கணவனுக்கு அடங்கி நடத்தல், மகனுக்கு அடங்கி நடத்தல்—இம்மூன்றுமே ஒரு பெண்ணுக்குரிய மூன்று பண்புகள். —சீனா

அன்பான சில வார்த்தைகளே பெண்ணுக்கு அணிகலன். —டென்மார்க்

பெண்கள் மூடர்களாயிருக்கிறார்கள் என்பதை நான் மறுக்கவில்லை. மனிதர்களுக்குப் பொருத்தமாயிருப்பதற்காகவே சர்வ வல்லமையுள்ள கடவுள் அப்படிப் படைத்திருக்கிறார். —ஜியார்ஜ் எலியட்

பெண்களும் யானைகளும் மறப்பதேயில்லை. —பார்க்கர்

பெண்கள் அதிக வளர்ச்சியடைந்த குழந்தைகளைத் தவிர, வேறில்லை. —செஸ்டர்ஃபீல்டு

ஆடவர்களால்தான் பெண்கள் தங்களுக்குள் ஒருவரையொருவர் வெறுக்கின்றனர். —ஃபிரான்ஸ்

எந்தக் கண்ணாடியும் ஒரு பெண் அழகியில்லை யென்று சொல்லியதில்லை. —ஃபிரான்ஸ்

அழகிய பெண் செய்வதெல்லாம் சரிதான். —ஜெர்மனி

கண்ணாடிக்குள் இருக்கும் பெண்ணையே ஒவ்வொரு பெண்ணும் நேசிக்கிறாள். —ஜெர்மனி

நித்தியமான பெண்மை இயல்பு நம்மை உயர்ந்த நிலைக்கு அழைத்துச் செல்கின்றது. —கதே

மௌனம் பெண்ணுக்குப் பெருந்தன்மை யளிக்கிறது. —ஸாபா கிளீஸ்

மனிதனுக்கு உயர்ந்த தன்மையும், பெரிய நோயும் பெண்ணாலேயே கிடைக்கின்றன. —கிரீஸ்

ஒரு பெண்ணுக்குப் பின்னால் செல்வதைவிட, ஒரு மனிதன் சிங்கத்தின் பின்னால் செல்வது மேல். —யூதர்

பெண், விருப்போ வெறுப்போ அடையும்பொழுது, எதையும் செய்யத் துணிகிறாள். —லத்தீன்

செல்வமுள்ள ஸ்திரீயைப்போல் சகிக்க முடியாதது வேறில்லை. —லத்தீன்

தீய யோசனை சொல்வதில் பெண்கள் ஆடவர்களை வென்று விடுவார்கள். —லத்தீன்

தன் முகத்தைப் பற்றியே பெருமைப்படும் பெண்ணால் வீடு பாழாகும். —ஸ்பெயின்

ஒரு பெண் அழகாயிருப்பதாக நாம் ஒருமுறை சொன்னால், அதையே சயித்தான் அவளிடம் பத்துமுறை சொல்வான். —ஸ்பெயின்

நன்றாக உடையணியும் ஒரு பெண் தன் கணவன் வேறு பெண்ணை நாடாமல் காத்துக் கொள்ளமுடியும். —( ” )

நல்ல திராட்சை மதுவைப்போல், பெண்ணும் இனிமையான விஷம். —துருக்கி

ஊசியில்லாத பெண் நகமில்லாத பூனை. —எஸ்டோனியா
[தையல் வேலை பெண்ணுக்கு அவசியம்]

ஒரு பெண்ணைப் பற்றி அவதூறு சொல்வதைப் பார்க்கினும், ஓர் ஆலயத்தை எரிப்பது குறைந்த பாவம். —செர்பியா

கெட்ட பெண்ணையும் புகழ்ந்து பேசு; நல்லவளைப் பற்றி எப்படியும் பேசலாம். —செர்பியா

## காதல்

நான்கு கண்கள் சந்தித்ததும், இதயத்தில் காதல் தோன்றிற்று. —இந்தியா

காமம், நெருப்பு, இருமல் இம்மூன்றும் மறைக்க முடியாதவை. —இந்தியா

இளம் காதலர்கள் விரும்புகிறார்கள், விவாகமான மனிதர்கள் வருந்துகிறார்கள். —இந்தியா

காதல் சாதி வேற்றுமைகளைக் கண்டு சிரிக்கின்றது. —இந்தியா

ஒரு மனிதன் பெண்ணின் பின்னால் ஓடினால் திருமணம்; ஒரு பெண் மனிதன் பின்னால் ஓடினால் அவளுக்கு அழிவு.
—இந்தியா

காதல், கஸ்தூரி, இருமல் மூன்றையும் அடக்கவும் முடியாது, மறைக்கவும் முடியாது. —இந்தியா

காதலன் கண்ணுக்கு அம்மைத் தழும்புகளும் அதிருஷ்டக் குறிகளாகும். —ஜப்பான்

காதலுக்கும் தொழு நோய்க்கும் தப்புவோர் சிலரே. —சீனா

அதிருஷ்டமுள்ளவன் ஒரு நண்பனைச் சந்திக்கிறான், அதிருஷ்டம் கெட்டவன் ஓர் அழகியைச் சந்திக்கிறான். —சீனா

காதலையும் கர்ப்பத்தையும் மறைத்து வைக்க முடியாது.
—அரேபியா

காதல் ஏழு விநாடி, துக்கம் வாழ்க்கை முழுதும். —அரேபியா

உன் காதலுக்கு ஒரு மணி நேரம், உன் இறைவனுக்கு ஒரு மணி நேரம் செலவிடு. —அரேபியா

தூக்கம் வந்துவிட்டால், தலையணை தேவையில்லை; காதல் வந்துவிட்டால், அழகு தேவையில்லை. —ஆப்கானிஸ்தானம்

காதலும் பேராசையும் போட்டியைச் சகிக்கமாட்டா.
—ஃபிரான்ஸ்

காதலுடனும் நெருப்புடனும் மனிதன் பழகிப் போகிறான்.
—ஃபிரான்ஸ்

பெண்கள், காடைகள், வேட்டை நாய்கள், ஆயுதங்கள்—இவைகளில் ஓர் இன்பத்திற்காக ஆயிரம் வேதனைகள்
—ஃபிரான்ஸ்

காதலைத் தடுத்தல் அதைத் தூண்டி விடுவது போன்றது.
—பிரான்ஸ்

காதல் வந்துவிட்டால், கழுதைகளும் நடனமாடும். —( ” )

அதிகக் காதலுள்ளவர்கள் மிகக் குறைவாகப் பேசவேண்டும்.
—ஸ்காட்லந்து

காதலுக்கும் செல்வத்திற்கும் துணை வேண்டியதில்லை.
—செர்பியா

பெண்ணின் காதல் சைத்தானின் வலை. —செர்பியா

திருமண இரவுதான் காதலின் கடைசி இரவு. —சைலீஷியா

காதல் இனிமையான சிறைவாசம். —ஸ்லாவேகியா

கெட்டிக்காரப் பெண், தான் காதலிப்பவனை விட்டு, தன்னைக் காதலிப்பவனை மணப்பாள். —ஸ்லாவேகியா

செயல்களே காதல், இனிமையான சொற்களல்ல. —ஸ்பெயின்

காதல் வெட்கப்பட்டால், அது உண்மையானதன்று. —( " )

ஒரு காதல் மற்றொன்றை வெளியேற்றிவிடும். —ஸ்பெயின்

காதல் சுளுக்குப் போன்றது. இரண்டாம் தடவை அது எளிதில் வந்துவிடும். —ஸ்பெயின்

ஒரு பெண்ணின் காதல் கூடையிலுள்ள தண்ணீர் போன்றது.
—ஸ்பெயின்

காதலின் பார்வையில் செம்பு தங்கமாயிருக்கும், ஏழைமை செல்வமாகும். —ஸ்பெயின்

'சூப்'பிலும் காதலிலும் முதலாவதுதான் சிறந்தது. ( " )

தேர்ந்தெடுப்பது என்பது காதலில் இல்லை. —ஸ்பெயின்

நெருப்புக்குக் காற்று எப்படியோ, அப்படிக் காதலுக்குப் பிரிவு. —ஸ்பெயின்

சாளரக் கம்பிகளின் இடைவழியாகவே காதலுக்கு உயிர் வருகிறது. —ஸ்பெயின்

காதலர் மற்றவர் கண்களெல்லாம் அவிந்துவிட்டது போல எண்ணுவர். —ஸ்பெயின்

காதலர்களுக்குத் தக்க நேரம் தெரியும். —ஜெர்மனி

காப்பியும் காதலும் சூடாயிருந்தால்தான் உருசி. —ஜெர்மனி

காதல்தான் காதலை வெல்ல முடியும் —ஜெர்மனி

காதல் அணைந்தபின் கரித்துண்டுகளே மிஞ்சும். —ஜெர்மனி

காதல் அகழெலி, கல்யாணம் காட்டுப் பூனே. —ஜெர்மனி

காதலின் உச்சத்தில் பேச்சுக் குறைந்துவிடும். —ஜெர்மனி

காதல் குருடன்று, ஆனுல் அது பார்ப்பதில்லே. —ஜெர்மனி

காதலுக்குக் காலம் கிடையாது. —ஜெர்மனி

காதலர்களுக்கு காதவழி ஓர் அடியாகத் தோன்றும். —( " )

காதலின் கண்ணுக்கு ரோஜா மலர்தான் தெரியும், முட்கள் தெரியமாட்டா. —ஜெர்மனி

அழகைக் காதலித்தல் என்பதில்லே. காதலித்ததே அழகாகும். —ஜெர்மனி

காதற் கடிதங்களுக்குத் தேதி தேவையில்லே. —ஜெர்மனி

வேட்டையிலும் காதலிலும் ஒருவருக்குத் தொடங்கத் தெரியும், எங்கு முடிப்பது என்பது தெரியாது. —ஜெர்மனி

காவலர்கள் பேச வேண்டிய விஷயம் அதிகம், ஆனுல் அது ஒரே பழைய விஷயம்தான். —ஜெர்மனி

காதலர்கள் நேரத்தை ஆசையைக் கொண்டு அளக்கின்றனர். —ஜெர்மனி

சிறு ஊடல் காதலேப் புதுப்பிக்கும். —ஜெர்மனி

எல்லா இடங்களிலும் கண்களின் பாஷை ஒன்றுதான். —இங்கிலாந்து

முத்தங்கள் திறவுகோல்கள். —இங்கிலாந்து

ஒரு பெண்ணேயும் காதலிக்காதவன் பன்றியிடம் பால் குடித்திருப்பான். —இங்கிலாந்து

காதலுக்கு மருந்தில்லே, மருத்துவனுமில்லே. —அயர்லாந்து

காதல் ஒன்றுதான் பங்காளிகளே அனுமதிக்காது. —பல்கேரியா

ஒருவன் சகோதரனேத் தேடிக் கடல் வரை போவான்; காதலியைத் தேடிக் கடலுக்குள்ளேயும் போவான். —பல்கேரியா

உருளேக் கிழங்கையும், காதலனேயுமே ஒரு பெண் தானுகத் தேர்ந்தெடுக்கிறுள். —ஹாலந்து

காதற் கடிதங்களை எழுதுவோர் மெலிகின்றனர், கொண்டு கொடுப்பவர்கள் கொழுக்கிறார்கள். —ஹாலந்து
[காதலரின் தூதர்களுக்கு இருபக்கங்களிலும் வெகுமதிகள் நிறையக் கிடைக்கும்.]

வானத்தில் பறவையின் பாதையைக் காணமுடியாது. கன்னிகையை நாடும் காதலன் பாதையையும் காண முடியாது. —எஸ்டோனியா

காதலில் துரு ஏறாது. —எஸ்டோனியா

காதல் என்பது மலர், கலியாணத்தில் அது கனியாகும். —ஃபின்லந்து

காதல் நந்தவனம், கலியாணம் முட்புதர். —ஃபின்லந்து

காதல் உண்டாக்கும் புண்ணை அதுவே ஆற்றிவிடும். —கிரீஸ்

காதல் மடமை இரண்டுக்கும் பெயரில்தான் வேற்றுமை. —ஹங்கேரி

கனவிலும் காதலிலும் இயலாத காரியமே இல்லை. —ஹங்கேரி

அடிக்கடி முத்தமிட்டால் குழந்தையை எதிர்பார்க்க வேண்டியதுதான். —ஐஸ்லந்து

கலியாணத்திற்குப் பின்னால் காதல் வளரும். —ஐஸ்லந்து

காதல் கொண்டவர்களின் கோபம் சிலந்தி வலை போன்றது. —இத்தாலி

ஒரே பெண்ணையோ, ஒரே 'பஸ்'ஸையோ தொடர்ந்து ஓட வேண்டாம், பின்னால் வேறு கிடைக்கும். —இத்தாலி

காதலிக்கும் காலத்தில் ஜூபிடரும் கழுதையாவார். —லத்தீன்
[ஜூபிடர்—தேவர்களின் அதிபதியான கடவுள்; கிரீஸில் இவரை 'சீயஸ்' என்பர்.]

பழைய காதல் ஒரு சிறைச்சாலை. —லத்தீன்

காதலின் தூதுவர்கள் கண்கள். —லத்தீன்

காதலிலே தோன்றும் கோபம் போலியானது. —லத்தீன்

காதலர் கோபம் காதலுக்குப் புத்துயிர். —கிரீஸ்

இருவரைக் காதலிக்கும் ஒரு பெண் இருவரையும் ஏமாற்று வாள். —போர்ச்சுக்கல்

செம்பு நாணயம் துருப்பிடித்த காதலுக்குத்தான் சரி. —ரஷ்யா

காதல் ஒரு வளையம், வளையத்திற்கு முடிவே கிடையாது. —ரஷ்யா

ஒருவன் மீது காதல் தோன்றி விட்டால், அவன் குளிக்காம லிருக்கும் பொழுதே, வெண்மையாகத் தோன்றுவான். —ரஷ்யா

ஒருத்தி இனிமையா யிருக்கிறுள் என்பதற்காகக் காதலிக்க வேண்டாம், வயதாகிவிட்டது என்பதற்காக அவளைத் தள்ளவும் வேண்டாம். —ரஷ்யா

பஞ்சை நேசிப்பதுபோல் என்னை நேசி; நூல் அதிக மென்மை யாகும் பொழுது அதிகப் பஞ்சைசவிட்டும், நூல் அறுந்த வுடன் ஒட்டியும் ஆதரவு காட்டுவது போல, என்னை வைத்துக் கொள்ளவும். —ஆப்பிரிக்கா

அவசரக் காதல் சீக்கிரம் சூடாகி, சீக்கிரம் குளிர்ந்து விடும். —இங்கிலாந்து

அரசர், கெய்ஸர், பிரபு, சட்டங்கள் ஆகிய அனைத்திற்கும் மேற்போனது காதல். —இங்கிலாந்து

காதல்தான் காதலுக்குப் பரிசு. —இங்கிலாந்து

காதலுக்குக் கற்றுக் கொடுக்க வேண்டியதில்லை. —இங்கிலாந்து

காதலின் இனிமைகளில் கண்ணீர் கலந்திருக்கும். —( ” )

காதலுக்காக உயிரை விடுபவர்கள் அளவுக்கு அதிகமாகக் காதலிப்பவர்கள். —இங்கிலாந்து

காதல் ஒருவகைப் போர் முறையாகும். —லத்தீன்

காதலிலும் மரணத்திலும் நம் வலிமை பயனில்லை. —ஸ்பெயின்

காதலே கள்வர்களைத் தயாரிக்கிறது; காதலை எந்தக் கள்வரும் கவர்வதில்லை. —சுவீடன்

காதல் தான் புக முடியாத இடத்தில் ஊர்ந்து சென்றுவிடும். —சுவீடன்

காதலால் வீரரானோர் பலர்; ஆனால் மூடரானோர் அவர்களை விட அதிகம். —சுவீடன்

நெருப்பு அருகிலிருந்து சுடும், அழகு தூரத்திலிருந்து சுடும். —சுவிட்சர்லந்து

காதலித்தால் சந்திரனைக் காதலி, திருடினால் ஒட்டகத்தைத் திருடு. —எகிப்து

காதல் கட்டுப்பாடற்ற கழுதை. —ஆப்பிரிக்கா

ரொட்டியும் உப்பும் இல்லாவிட்டால், காதல் இருக்க முடியாது. —போலந்து

காதல் முதலில் ஆடவனின் கண் வழியாகவும், பெண்ணின் காது வழியாகவும் நுழைகிறது. —போலந்து

முதன்மையான அன்பு தாயன்பு, அடுத்தது நாயன்பு; அதற்கும் அடுத்தது காதலியின் அன்பு. —போலந்து

## பெண் பார்த்தல்

தாயைப் பார்த்து மகளைக் கொள்ளு. —தமிழ்நாடு

வலுவில் வந்தவள் கிழவி. —தமிழ்நாடு

கரையைப் பார்த்துச் சேலை எடு, தாயைப் பார்த்து மகளை எடு. —துருக்கி

மனைவியைத் தேர்ந்தெடுக்கும்பொழுது கிழவனின் பார்வை வேண்டும்; குதிரையைத் தேர்ந்தெடுக்கையில் இளைஞனின் பார்வை வேண்டும். —ஆர்மீனியா

அதிக அழகுள்ளவர்களைக் காட்டிலும் குருட்டுப் பெண் தேவலை. —பர்மா

ஒரு பெண்ணைப் பற்றித் தெரிந்து கொள்ள அவள் தாயை அறியவேண்டும்; மேலும் தெளிவாகத் தெரிந்து கொள்ள அவள் தாய்வழிப் பாட்டியைப் பற்றியும் விசாரித்து அறிய வேண்டும். —சயாம்

காதைக் கொண்டு பெண்ணைப் பார், கண்ணைக்கொண்டு பார்க்க வேண்டாம். —போலந்து

கலியாணத்திற்குப் பெண் தேடி நெடுந்தூரம் செல்பவன் யாரையோ ஏமாற்றப் போகிறான், அல்லது தான் ஏமாறுவான். —இங்கிலாந்து

பெண் எடுத்தல் பக்கத்திலும், களவாடுதல் தூரத்திலும் இருக்கவேண்டும். —ஸெக்

செழிப்பான பண்ணையிலிருந்து குதிரையை வாங்கு; ஏழைப் பண்ணையிலிருந்து பெண்ணை வாங்கு. —எஸ்டோனியா

மாதா கோயிலுக்குச் செல்லும் பாதையிலிருந்துகொண்டு உனக்கு மனைவியைத் தேர்ந்தெடுக்காதே. —( " )

ஒரு மனைவியைத் தேர்ந்தெடுக்க மனிதனுக்குப் போதிய நேரம் இருக்கிறது. —ஃபின்லந்து

ஏழை வீட்டில் பெண் எடு, செல்வர் வீட்டில் குதிரை வாங்கு. —ஃபின்லாந்து

எல்லாப் பெண்களிலும் உனக்கு மிகவும் அருகிலுள்ள பெண்ணையே மணந்துகொள். —கிரீஸ்

குதிரைகள் வாங்கும்போதும், பெண் எடுக்கும்போதும், உன் கண்களை இறுக மூடிக்கொண்டு, கடவுளின் பொறுப்பில் விட்டுவிடவும். —லத்தீன்

முதலில் உணவுக்கு வழிசெய், பிறகு மனைவியைத் தேடிக் கொள்ளலாம். —நார்வே

மணப் பெண் தொட்டிலிலிருக்கும் பொழுது, மணமகன் குதிரையேறப் பழகவேண்டும். —ரஷ்யா

உபதேசியாரிடம் குதிரை வாங்காதே, விதவையிடம் பெண் கொள்ளாதே. —ரஷ்யா

உனக்கு நல்ல மனைவி வேண்டுமானால், அவளை ஞாயிற்றுக் கிழமையில் தேர்ந்தெடுக்காதே. —ஸ்பெயின்

பெரிய இடத்துப் பெண்ணை விவாகம் செய்து கொண்டு, பாயில் படுத்துறங்கு. —ஆப்பிரிக்கா

குட்டையான பெண்ணை மணந்து கொண்டால், துணி அதிகம் தேவையிராது. —ஆப்பிரிக்கா

அத்தை மகளை விட்டுவிட்டு, வெளியில் பெண்ணெடுப்பவன் மூடன். —ஆப்பிரிக்கா

திருமணத்திற்கு முன்னால் கண்களைத் திறந்து வைத்துக்கொள், பின்னால் பாதிக் கண்ணை மூடிக்கொள். —ஆப்பிரிக்கா

பிறர் புகழும் குதிரையை வாங்கு, பிறர் குறை பேசும் பெண்ணை மணந்துகொள். —எஸ்டோனியா

## திருமணம்

ஒன்று இளமையிலேயே திருமணம் செய்துகொள், அல்லது துறவியாகிவிடு. —பல்கேரியா

குழந்தைக்குச் சோறு கொடுத்தால், தாய்ப்பாலை மறக்கும்; பெண்ணுக்கு கணவன் வந்தால், தாயை மறப்பாள். —இந்தியா

வீட்டைக் கட்டிப் பார், கலியாணத்தைச் செய்து பார். —தமிழ்நாடு

பணக்காரர்கள் சீதனம் கொடுத்துப் பெண்களுக்கு மணம் செய்கிறார்கள்; மத்திய வகுப்பினர் பெண்களைக் கொடுத்துப் பணம் சம்பாதிக்கிறார்கள். —சீனா

பதினைந்து ரூபாயில் ஒருவன் மனைவியைப் பெறலாம்; ஆனால் ஒரு கோவேறு கழுதை வாங்க ஐம்பது ரூபாய் வேண்டும். —சீனா

விவாகமாகாத பெண்ணுக்கு ஒரு சிறகில் ஊனம். —அரேபியா

ஒரு பெண், பிறந்த வீட்டில் குடியிருப்பதைவிட, மரக் கட்டையையாவது மணந்து கொள்ளல் நலம். —அரேபியா

நிலம் வாங்குவதற்கு என்றால், வேகமாக ஓடு; விவாகம் செய்து கொள்வதற்கு என்றால், மெதுவாக நட. —யூதர்

இளமையில் மணம் செய்துகொள், நீ இளமையா யிருக்கும் போதே பெரிய குழந்தைகளை அடைய முடியும்.
—குர்திஸ்தானம்

உடனிருந்து உண்பதும், குடிப்பதும், உறங்குவதுமே விவாகம் என்று நான் கருதுகிறேன். —ஃபிரான்ஸ்

ஆகக் கழிவான செருப்புக்கும் ஜோடி சேர்ந்துவிடும். —( ” )

ஓநாயை அடக்கிவைக்க அதற்கு விவாகம் செய்துவை.
[முரடனுயுள்ள மைந்தன், மனைவி வந்தால் அடங்கி விடுவான்.] —ஃபிரான்ஸ்

இளமைத் திருமணம் நீண்டகால அன்பு. —ஜெர்மனி

அழகுக்காக கலியாணம் செய்து கொள்பவன் இரவுநேரங்களில் இன்பமாயும், பகல் நேரங்களில் துக்கமாயும் இருப்பான்.
—ஜெர்மனி

ஓராண்டு இன்பம் வேண்டுவோர் திருமணம் செய்து கொள்வது நலம்; இரண்டாண்டுகள் இன்பம் வேண்டுமானுல், திருமணம் செய்யவேண்டாம். —ஜெர்மனி

திருமணம் என்பது காதல் நோய்க்கு வைத்தியசாலை.
—ஜெர்மனி

போருக்குப் போகும்போது ஒரு முறை தொழவும்; கடலுக்குப் போகும் போது இருமுறை தொழவும்; திருமணம் செய்யும் போது மும்முறை தொழவும். —ஜெர்மனி

ஒவ்வோர் ஆதாமுக்கும் ஓர் ஏவாள் இருப்பாள். —போலந்து

ஒரு மதுக்கிண்ணமும் பெண்ணும் அருகிலிருந்தால், ஒருவனுக்குப் பொழுதுபோவது தெரியாது. —போலந்து

மூன்று சகோதரர்களில் இருவர் மூளையுள்ளவர், ஒருவன் விவாகமானவன். —போலந்து

ஒருவன் மணந்து கொள்வது நல்லதுதான், ஆனுல் மணமில்லாதிருப்பது அதைவிட நல்லது. —போலந்து

திருமணம் செய்வதற்கு முன்பு மூன்று வருடம் இஷ்டம் போல் வாழ்க்கை நடத்திக்கொள். —போலந்து

பெண்பிள்ளை விவாகத்திற்கு முன்னால் அழுவாள், ஆடவன் பின்னால் அழுவான். —போலந்து

கம்பளியை இரட்டையாக மடித்துப் போர்த்துக்கொண்டால், மேலும் குளிருக்கு அடக்கம்தான். —அயர்லாந்து

[உறவினருக்குள் விவாகம் செய்து கொள்ளல் மிகவும் நல்லது]

முதல் ஆண்டு முத்தமிடும் ஆண்டு, இரண்டாம் ஆண்டு முட்டிப் பாயும் ஆண்டு. —அயர்லாந்து

நீ உன் மனைவியை மணந்து கொள்ளும்போதே உன் குழந்தைகளையும் மணந்து கொண்டு விட்டாய். —அயர்லாந்து

[விவாகமானால், குழந்தைகளின் பாரத்தையும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.]

மனிதன் காதலிக்கும் பொழுது வசந்தம், கலியாண சமயத்தில் பனிக்காலம். —ஸ்காட்லாந்து

பணத்திற்காகத் திருமணம் செய்து கொள்ள வேண்டாம்; பணம் குறைந்த வட்டிக்கு வெளியே கிடைக்கும். —ஸ்காட்லந்து

பானையாக உருண்டு சென்று மூடியைக் கண்டுபிடிக்கும்.
[திருமணத்திற்கு ஜோடி சேரும்.] —பல்கேரியா

கல்யாணம் ஒரு நாள், இரு நாள்தான், அதன் பலனோ நெடுநாள் இருக்கும். —ஸெக்

ஒரு முறை விவாகம் கடமை; இருமுறை தவறு; மும்முறை பைத்தியம். —ஹாலந்து

நாலு மரக்கால் நிலக்கரி கொடுத்தால், ஒரு நாயகன் கிடைப்பான்; ஆனால் ஒரு 'டைன்' கோதுமை கொடுத்தால்தான் ஒரு பெண் கிடைப்பாள். —எஸ்டோனியா

சமையல் மோசமானால், ஒரு நாள் நஷ்டம்; அறுவடை மோசமானால், ஒரு வருடம் நஷ்டம், விவாகம் மோசமானால் ஆயுள் முழுவதும் நஷ்டம். —எஸ்டோனியா

அதிகாலையில் எழுந்தவனும், இளமையில் மணந்தவனும் வருந்தியதில்லை. —எஸ்டோனியா

கணவன் தலை, மனைவி இதயம்—இப்படியுள்ள திருமணம் இன்பமானது. —எஸ்டோனியா

மனிதர் தாமாக வரவேற்றுக் கொள்ளும் தீமை திருமணம். —கிரீஸ்

ஒவ்வொரு ஜாடிக்கும் ஒரு மூடி கிடைக்கும். [திருமணம்.] —இத்தாலி

'அம்மா! விவாகம் என்பது என்ன?'

'மாவரைத்தல், நூல் நூற்றல், குழந்தைகள் பெறுதல், அழுதல். —மான்டினீக்ரோ

காதல் சிறகுகளைக் கொண்டு பறக்கும். திருமணம் இரண்டு கழிகளின் உதவியால் நடந்து வரும். —ரஷ்யா

கலியாணத்தால் குளிர்ந்து போகாத காதல் நெருப்பு இல்லை. —ரஷ்யா

திருமணம் என்றுதான் உண்டு, ஆனால் 'பிரிமணம்' என்று கிடையாது. —ரஷ்யா

ஆடவனே, என்னை இரண்டாவது கலியாணத்திலிருந்தும் மூன்றுவிட்ட தாயாதிகளிடமிருந்தும் காப்பாயாக. —ரஷ்யா

ஒரு சகோதரிக்குக் கலியணமானால், அடுத்தவளுக்கும் ஆகும். ஒரு தொட்டி விற்றால், அடுத்ததும் விலையாகும். —செர்பியா

உன் மகளுக்குத் தக்க வரன் வந்தால், வெளியே போயிருக்கும் அவளுடைய தந்தையின் வரவைக்கூட எதிர் பார்க்க வேண்டாம். —ஸ்பெயின்

திருமணம் என்ற 'கோணியில் தொண்ணூற்றொன்பது பாம்புகளும், ஒரு விலாங்கும் இருக்கும். —ஸ்பெயின்

காதலுக்காகக் கலியாணம் செய்து கொள்பவன் துக்கத்தோடு வாழ வேண்டும். —ஸ்பெயின்

திருமணம் செய்துகொண்டு அடங்கிக்கிட. —ஸ்பெயின்

திருமணம் செய்துகொள்ள உறுதி கொண்டவன் அண்டை அயலார்களைப் பார்த்துக் கொள்வது நல்லது. —ஸ்பெயின்

வீட்டைக் கட்டுபவனுக்கும் திருமணம் செய்துகொள்பவனுக்கும் எந்த நேரத்திலும் அபாயம் வரும். —சுவீடன்

கிழவன் ஒரு குமரியை மணந்து கொண்டால், அவன் இளைஞனாகி விடுவான், குமரி கிழவியாவாள். —யூதர்

உனக்கு உறவினர் இல்லாவிட்டால், திருமணம் செய்து கொள். —எகிப்து

கடவுள் ஒருவனைத் தண்டிக்க விரும்பினால், அவனுக்குத் திருமணம் பற்றிய நினைவை உண்டாக்குவார். —ஜெர்மனி

முதலாவது மனைவி இறைவனிடமிருந்து வருகிறாள்; இரண்டாது மனைவி மனிதரிடமிருந்து வருகிறாள்; மூன்றாவது மனைவி சயித்தானிடமிருந்து வருகிறாள். —ஹங்கேரி

ஓர் ஏழை பணக்காரியை மணந்து கொண்டால், அவள் மனைவியல்லள் - யஜமானி. —கிரீஸ்

நான் விவாகம் செய்து கொள்ளவில்லை, என் தந்தையும் விவாகமில்லாது இருந்திருந்தால் எவ்வளவு நலமாயிருந்திருக்கும்.

சமுதாயத்தின் முதற் கட்டுப்பாடு திருமணம். —லத்தீன்

திருமணத்தைப் புனிதமாக்குவது காதல் ஒன்றுதான். —டால்ஸ்டாய்

'என்ன' இவ்வளவு ஆத்திரம்?'

'நான் திருமணம் செய்து கொள்ளப் போகிறேன்!'

'என்ன, முகம் வெளுத்திருக்கிறது?'

நான் திருமணம் செய்துகொண்டுவிட்டேன்!' —ரஷ்யா

# கணவன்

கணவனின் அன்பே மனைவியின் வாழ்க்கை. —ஜெர்மனி

தோட்டத்தின் நன்மை வேலி; வீட்டின் நன்மை குடியிருப்பு; பெண்ணின் நன்மை கணவன். —மலாய்

மனையாளின் குற்றங்களுக்கு மணவாளனே பொறுப்பு; குரங்கு வளர்ப்பவன் அதன் சேட்டைகளுக்குப் பொறுப்பாளி. —இங்கிலாந்து

ஒடுக்கமான வீட்டில் விகாரமான மனைவியை உடையவனுக்கு கவலையேயில்லை. —இங்கிலாந்து

அதிருஷ்டமுள்ளவன் மனைவியை இழக்கிறான்; அதிருஷ்டமில்லாதவன் குதிரையை இழக்கிறான். —ஜியார்ஜியா

மனைவி செய்யும் பாவங்களுக்குக் கணவனும் உடந்தைதான். —லத்தீன்

கணவன் என்பவன் தன் மனைவியின் தந்தை. —ரஷ்யா

ஊர் முழுவதும் தெரிந்த விஷயம் கணவனுக்கு மட்டும் தெரியாது. —ருமேனியா

ஏழு வருடங்கள் கழியுமுன்னால் உன் மனைவியைப் புகழாதே. —ரஷ்யா

அதிருஷ்டத்தில் உயர்ந்தது நல்ல கணவன் வாய்ப்பது; அடுத்தது நல்ல வேலைக்காரன் வாய்ப்பது. —செர்பியா

மனிதனுக்குச் சந்தோஷம் இரு தடவைகள் வரும்; ஒன்று மனைவியை அடையும் பொழுது; மற்றது அவளைப் புதைக்கும் பொழுது. —செர்பியா

அடுப்படியிலே அடைகாக்கும் கணவன் விலாப்பக்கத்து வலி போன்றவன். —ஸ்பெயின்

உன் மனைவி உன்னை ஒரு கூரையிலிருந்து குதிக்கச் சொன்னால், 'கடவுளே, அது தணிந்த கூரையாயிருக்கட்டும்!' என்று பிரார்த்தனை செய்து கொள். —ஸ்பெயின்

மனிதனின் தலை, பெண் தொப்பி. —சுவீடன்

பெண்டாட்டியை அடிப்பவன், அவளுக்கு மூன்று நாள் ஒய்வு கொடுத்து, தானும் மூன்று நாள் பட்டினியிருப்பான். —சுவிட்சர்லந்து

உலகம் மெச்சும் நல்லவனை, அவன் மனைவி மட்டும் மோசமானவனாகக் கருதுவாள். —யூதர்

மனைவிக்குச் சேலைகள் வாங்கிக் கொடுத்தால், கணவனுக்கு அமைதி கிடைக்கும். —ஆப்பிரிக்கா

கணவர்களே, உங்கள் மனைவியரை நேசியுங்கள், அவர்களுக்கு எதிராகக் கொடுமையாக இருக்கவேண்டாம். —புதிய ஏற்பாடு

நல்ல கணவனானால், மனைவியும் நல்லவளாயிருப்பாள். —இங்கிலாந்து

நல்ல மனைவியால் கணவனும் நல்லவனாவான். —இங்கிலாந்து

செவிட்டுக் கணவன், குருட்டு மனைவி—இந்தத் தம்பதிகள் இன்பமாயிருப்பார்கள். —இங்கிலாந்து

கணவன் வானுலகம் சென்ற பிறகே மனைவியின் ஏச்சு நிற்கும். —இங்கிலாந்து

கணவனுக்கு வேண்டியது அறிவு, மனைவிக்கு வேண்டியது அடக்கம். —இங்கிலாந்து

கணவர்கள் அடங்கிப் போவதால்தான், மனைவியர் வெறி அதிகமாகின்றது —இங்கிலாந்து

புருடன் இறந்ததும், அண்டை வீட்டுக்காரர்கள் அவனுக்கு எத்தனை குழந்தைகள் என்பதை அறிகிறார்கள். ( '' )

சக்கரவர்த்திகளும் தங்கள் மனைவியருக்கு வெறும் கணவர்களாகவே தோன்றுவர். —பைரன்

ஒரு மகனோடு இருப்பதைவிட, ஒற்றைக் கண்ணுடைய கணவனுடன் வாழ்வதே மேல். —ஸ்பெயின்

கணவனைத் தெரிந்துகொள்ள மனைவியின் முகத்தைப் பாருங்கள். —ஸ்பெயின்

கணவன் விதிக்கும் தளைகளால் தழும்பு உண்டாகாது. —ரஷ்யா

அன்பில்லாத கணவன் பொறுமையுள்ள கணவனைவிட மேலானவன். —இத்தாலி

தன் குடும்பத்திற்கு நேரும் அவமானத்தைக் கடைசியாகத் தெரிந்து கொள்பவன் கணவன். —லத்தீன்

## மனைவி

இனிப்புக்குத் தேன், அன்புக்கு மனைவி. —இந்தியா

இல்லாள் இல்லாத வீட்டில் பேய்கள் குடியிருக்கும். —இந்தியா

விவாகமான பெண்கள் அனைவரும் மனைவியர் ஆகமாட்டார். —ஜப்பான்

தீய மனைவி அறுபது வருடமாய்த் தீய்ந்துப் போகும் பயிருக்குச் சமானம். —ஜப்பான்

இளம் மனைவி தன் வீட்டில் நிழலாகவும், எதிரொலியாகவுமே இருக்க வேண்டும். —ஜப்பான்

மனைவியின் மூன்று அங்குல நீலமுள்ள நாக்கு ஆறு அடி உயரமுள்ள மனிதனைக் கொல்ல மூடியும். —ஜப்பான்

மனைவியரும் பாய்களும் வந்த புதிதில் சிறப்பா யிருப்பவை. —ஜப்பான்

உன்னிடம் ஏழு பிள்ளைகள் பெற்றிருந்தாலும், அந்தப் பெண்ணை நம்ப வேண்டாம். —ஜப்பான்

உன் தாயின் கண்கள் அவளைக் கவனிக்கும்வரை நீ ஒரு பெண்ணை நம்பலாம். —ஜப்பான்

சேவலுக்கு வாழ்க்கைப்பட்டால், அதன் பின்னேதான் செல்ல வேண்டும். —சீனா

ஒற்றைத் திறவுக்கோல் கிலுகிலுக்காது. —சீனா

ஒரே மனைவியிருந்தால், வீட்டில் சண்டை இராது —சீனா

அழகில்லாத மனைவியரும், அறிவில்லாத வேலைக்காரிகளும் விலைமதிக்க முடியாத பொக்கிஷங்கள். —சீனா

மனைவியால் அவதிப்படுவோன். அந்தோ பரிதாபம்! —அரேபியா

மனிதன் தன் மனைவியைத் தவிர, மற்ற எதைப்பற்றிப் பேசினாலும், பொறுத்துக் கொண்டிருப்பான். —பாரசீகம்

ஊமையான மனைவி கணவனிடம் அடிபடுவதே யில்லை. —ஃபிரான்ஸ்

தேனீரை மனைவியாக உடையவன் சந்தோஷமாக யிருப்பான். [சுறுசுறுப்புள்ள மனைவியால் ஆக்கம் பெருகும்.] —ஜெர்மனி

ஃபிடிலைப் போல் பெண்ணை மீட்டிவிட்டு உயரே தூக்கி வைத்துவிட முடியாது. —ஜெர்மனி

குடியானவன் தன் மனைவியை அடிக்காவிட்டால், அவளுடைய ஈரல் அழுகிப் போகும். —போலந்து

வயோதிகனுக்கு வாய்த்த இளம் மனைவி அவன் நரகத்திற்கு ஏறிச் செல்லும் குதிரை. —போலந்து

மனைவியர் இளைஞருக்கு நாயகிகள், வயோதிகருக்குத் தாதிகள். —இங்கிலாந்து

உண்மையான வீட்டுக்காரி அடிமையாகவும் இருப்பாள்; வீட்டு அதிகாரியாகவும் இருப்பாள். —போஸ்னியா

ஒழுகும் கூரையும், புகையடையும் கூண்டும், ஓயாமல் சண்டையிடும் மனைவியும், ஒருவனை வீட்டை விட்டுக் கிளப்பிவிட முடியும். —வேல்ஸ்

ஒரு குற்றமுள்ள மனைவி வேண்டாமென்றால், இரு குற்றமுள்ளவள் வந்து சேருவாள். —வேல்ஸ்

என் முதல் மனைவி மனைவியா யிருந்தாள்; இரண்டாமவள் என் எசமானியா யிருந்தாள்; மூன்றாமவளை நான் சிலுவை போல் வைத்துக் கும்பிடுகிறேன். —பல்கேரியா

அடங்காப்பிடாரி ஒருத்தி இருந்தால் போதும்—சுற்றிலும் பத்து வீடுகளுக்குக் காவல் நாய் தேவையில்லை, —செக்

தாடி ஒரு மனிதனுக்குக் கௌரவம்; மனைவி அவன் கருவி. —எஸ்டோனியா

குருட்டுக் கோழிக்கும் ஒரு தானியம் கிடைக்கின்றது; குடிகாரனுக்கும் ஒரு மனைவி கிடைக்கிறாள். —எஸ்டோனியா

குதிரையையும் மனைவியையும் இலகானில்லாமல் உபயோகிக்க வேண்டாம். —எஸ்டோனியா

உலகத்திற்கெல்லாம் தெரிய வேண்டிய விஷயத்தை உன் மனைவியிடம் சொன்னால் போதும். —எஸ்டோனியா

கன்னியாயிருக்கும் பொழுது மாடப் புறுவாயிருந்தவள், மனைவி யானபின் தண்டாயுதமாகி விட்டாள். —எஸ்டோனியா

மனிதனுக்கு மனைவி வாய்த்தே தீருவாள். —எஸ்டோனியா

கப்பல், குதிரை, அல்லது மனைவியை மற்றவரை நம்பி ஒப்படைக்காதே. —எஸ்டோனியா

மனிதனின் பூட்டு மனைவி. —எஸ்டோனியா

மனைவி ஒரு முழம் தள்ளி யிருந்தாலும், அந்த அளவுக்கு மனிதன் சுதந்திரமுள்ளவன். —எஸ்டோனியா

மனிதன் வாழ்க்கையை மனைவியே பாழாக்குகிறாள். —( ” )

எல்லாப் பெண்களும் நல்லவர்களாயிருக்கும் பொழுது, கெட்ட மனைவியர் எங்கிருந்து வருகின்றனர்? —எஸ்டோனியா

அழகான பெண் கண்ணுக்குத்தான் சுவர்க்கம்; ஆனால் பணப் பைக்குச் சனியன், ஆன்மாவுக்கு நரகம். —எஸ்டோனியா

ஏழை மனைவிக்கு எத்தனையோ இன்னல்கள்; அழுகின்ற குழந்தைகள், ஈர விறகு, ஓட்டைப் பானை, கோபமுள்ள கணவன். —ஃபின்லந்து

என் கணவன் என்னை அடிப்பதில்லை, காரணம் அவனுக்கு என்மீது அன்பில்லை. —கிரீஸ்

மனைவியர் நல்லவராயிருந்தால், கடவுளும் ஒருத்தியை மணந் திருப்பார். —ஜியார்ஜியா

அழகான பெண்ணின் புன்னகை பணப்பையின் கண்ணீராகும். —லத்தீன்

மனைவியில்லாத கூடாரம் தந்தியில்லாத வீணை. —ருமேனியா

பெண்ணைவிட நாய் அறிவுள்ளது; அது தன் யசமானரைப் பார்த்துக் குரைப்பதில்லை. —ரஷ்யா

பெண்ணின் யாத்திரை சமையலறையிலிருந்து வாயிற்படி வரை. —ரஷ்யா

மனைவிக்குக் கணவனே சட்டம்.
—ரஷ்யா

சில சமயங்களில் அறிவுள்ள மனைவியின் சொல்லையும் கேட்டு நடக்கலாம்.
—செர்பியா

மனைவி இன்றியமையாத ஒரு தீமை.
—செர்பியா

உன் கணவனை ஒரு நண்பனைப் போல நேசி. ஆனால் பகைவனைப் போல எண்ணி அவனுக்கு அஞ்சி நட. —ஸ்பெயின்

ஒரு மனிதனின் அதிருஷ்டமோ துரதிருஷ்டமோ அவன் மனைவிதான்.
—ஸ்பெயின்

பெண்டாட்டியென்றால், புடவை, துணிமணிகள் என்று பொருள்.
—ஆப்பிரிக்கா

உன் மனைவியிடம் ஆலோசனை கேள்; ஆனால் அவள் சொல்வதற்கு மாறாகச் செய்.
—ஆப்பிரிக்கா

பெண்ணுக்குப் பணிவது நரகத்திற்குப் பாதை —ஆப்பிரிகா

உத்தமமான மனைவி கணவனுக்கு ஒரு கிரீடம்.
—பழைய ஏற்பாடு

புதிதாகக் கலியாணமானவனே தன் மனைவியிடம் செய்திகள் கூறுவான்.
—இங்கிலாந்து

இங்கே புதைத்திருக்கிறது என் மனைவியை; அவள் இங்கேயேயிருக்கட்டும்! இப்போது அவளுக்கு ஓய்வு; எனக்கும் ஓய்வு.
—டிரைடன்

பலர், தாம் சிக்கனமில்லாமல் வாழ்ந்துவிட்டு, மனைவியைக் குறை சொல்லுவர்.
—இங்கிலாந்து

மிகவும் சாந்தமான கணவர்களுக்கும் புயல் போல் சீறும் மனைவியர் அமைகின்றனர்.
—இங்கிலாந்து

அழகிய மனைவியை உடையவனுக்கு இரண்டு கண்களுக்கு மேல் தேவை.
—இங்கிலாந்து

அறைகள் காலியாக யிருந்தால், மனைவியர்க்கு தலை கிறுகிறுக்கும்.
—இங்கிலாந்து

மனிதன் எல்லா விஷ ஜந்துக்களுக்கும் மருந்து கண்டுபிடித்திருக்கிறான், ஆனால் தீய மனைவிக்கு மட்டும் இன்னும் மருந்து காணவில்லை. —ராபலே

கெட்ட மனைவியால் கணவனின் கப்பல் உடையும். —ஜெர்மனி

இறந்து போன மனைவியும், உயிருள்ள ஆடுகளும் ஒரு மனிதனைச் செல்வனாக்கும். —ஜெர்மனி

கெட்ட மனைவியை உடையவன் செல்வங்களின் நடுவில் வறுமையில் வாடுபவன். —ஜெர்மனி

உன் மனைவி குள்ளமா யிருந்தால், நீ குனிய வேண்டும். —யூதர்

மனைவி உறங்கும்பொழுது, (சாமான்) கூடையும் உறங்குகின்றது. —யூதர்

மருமகள் வேண்டுமென்று தேர்ந்தெடுப்பதுபோல், மனைவியைத் தேர்ந்தெடுக்க வேண்டும், —இத்தாலி

இறந்த மனைவியின் துக்கம் வாயிற் கதவோடு சரி. —இத்தாலி

ஸீஸரின் மனைவி சந்தேகத்திற்கு இடம் கொடுக்கக் கூடாது. —லத்தீன்

[ரோமா புரியில் ஆண்டு வந்த தலைவர்கள் ஸீஸர்கள், ஸீஸரின் மனைவி, எவரும் சந்தேகம்கொள்ள இடமில்லாமல், அப்பழுக்கற்றவளாக இருக்கவேண்டும்.]

பிறர் மனைவியரிடம் ஒரு போதும் சம்பந்தம் வைத்துக்கொள்ள வேண்டாம். —லத்தீன்

மனைவி உள்ள கட்டிலில் சண்டையில்லாமல் இராது. —லத்தீன்

விவாகமான மனிதன் ஒவ்வொருவனும் தன் மனைவி ஒருத்திதான் உலகிலே நல்லவள் என்று எண்ணிக் கொள்ள வேண்டும். —ஸ்பெயின்

மனைவியைக் கௌரவிக்காதவன் தன்னையே குறைவு படுத்திக் கொள்ளுகிறான். —ஸ்பெயின்

ஊமை மனைவி வாயால் ஏச மாட்டாள், கைகளை நெரித்து ஏசுவாள். —யூதர்

மனைவியைப் பற்றிக் குறை சொல்பவன் தன்னையே இழிவு செய்து கொள்கிறான். —ஸ்காட்லந்து

மனைவி விட்டுப் பிடித்தால்தான், ஒருவன் முன்னிலைக்கு வரமுடியும். —ஸ்காட்லந்து

வெள்ளாட்டின் வெண்ணெயும் பெண்டாட்டி சொத்தும் வீட்டுக்கு வேண்டாம். —ஃபின்லந்து

## கற்பு

சோதனைக்கு உள்ளாகாத பெண் தன் கற்பைப் பற்றிப் பெருமை பேச முடியாது. —மான்டெயின்

கற்பை இழக்கத் துணிந்தவள் எதையும் இழக்கத் துணிவாள். —டாஸிடஸ்

ஒருமுறை இழந்த கற்பை ஒட்டவைக்க முடியாது. —இங்கிலாந்து

மிகவும் எச்சரிக்கையோடு நடப்பவர்கள் கற்பில் உயர்ந்தவர்களாகக் கருதப்படுகிறார்கள். —ஸ்பெயின்

## வீடு

ஒவ்வொரு வீடும் ஓர் உலகம். —ஸ்பெயின்

சின்ன வீடானாலும், சொந்த வீடு வேண்டும். —லிதுவேனியா

நாயில்லாத வீடு குருடு, சேவலில்லாத வீடு ஊமை. —( ” )

உயரே ஏறிப் பார்; எல்லா வீடுகளும் ஒரே மாதிரியாவே தோன்றுகின்றன. —இந்தியா

யானை அசைந்து கொண்டே தின்னும், வீடு நின்று கொண்டே தின்னும். —தமிழ்நாடு

தொலைவிலே தங்க மழை பெய்தாலும், வீட்டைச் சுற்றி ஆலங்கட்டியே மழையாகப் பெய்தாலும், வீடுதான் சிறந்தது. —மலாய்

ஏழுமுறை இருக்கையை மாற்றுவோன் ஆண்டியாவான். —மலாய்

கட்டிடம் கட்டுதல் இனிமையாக எளிமையடையும் வழி. —இங்கிலாந்து

வீட்டைக் கட்டிப் பாராதவன் மண்ணிலிருந்து சுவர்கள் முளைத்திருப்பதாக எண்ணுவான். —எஸ்டோனியா

வீடு இல்லாளின் உலகம், உலகம் மனிதனின் வீடு. —( '' )

நிலைப்படியிலே அமர்ந்திருப்பவன் எல்லோருக்கும் தடையாயிருப்பான். —நார்வே

வீட்டுக்குக் கேடு வருவது பின்கதவினால்தான். —ரஷ்யா

நம் வீடு இறைவனுடையது. —செர்பியா

வீட்டை விட்டு ஓடுபவன் வீட்டுக்கே திரும்பி வருவான். —ஸ்பெயின்

ஒரு வீட்டை வாங்குமுன், அக்கம் பக்கத்தில் வசிப்பவர்களைப் பற்றித் தெரிந்து கொள்ளவேண்டும். —யூதர்

ஒவ்வொரு விலங்கும் தன் குகையில் உறுமும்—ஆப்பிரிக்கா

வீட்டைப் பெருக்குவோன் துடைப்பத்தின்மீது அமரக்கூடாது. —ஆப்பிரிக்கா

தன் வீட்டுக்குத் திரும்பிவரும் மனிதன் தீய சகுனங்களை பொருட்படுத்த மாட்டான். —ஆப்பிரிக்கா

பாழடைந்த வீட்டிலெல்லாம் ஒரு பேய் இருக்கும் —எகிப்து

வீடு அன்பு நிறைந்த இடம். —ஆப்பிரிக்கா

பாதி வீட்டில் குடியிருந்தால் பாதி நரகம். —ஜெர்மனி

பழைய வீடுகளில் எலிகள் அதிகம், பழைய துணிகளில் பேன்கள் அதிகம். —ஜெர்மனி

ஒரு கழியைக் கொண்டு எப்படி வீடு கட்ட முடியும்? —சீனு

கட்டிய வீடு கிடைக்கும், ஆனால் மனைவியை நாம்தான் கட்டிக் கொள்ள வேண்டும். —இங்கிலாந்து

மனிதனுக்குத் தன் வீடுதான் மாளிகை. —இங்கிலாந்து

முறையில்லாத வாடகைக்காரனைவிட, காலி வீடே மேலானது. —இங்கிலாந்து

சத்திரத்தின் பக்கத்திலும், முக்குமுனையிலும் உள்ள வீட்டைத் தேர்ந்தெடுக்க வேண்டாம். —இங்கிலாந்து

வீட்டைப் பார்க்கிலும் கதவு பெரிதாயிருக்கக் கூடாது. —( " )

வீட்டைப் பார்த்தே உடையவனை அறிந்து கொள்ளலாம் —இங்கிலாந்து

வாழ்க்கையின் இன்பத்திற்குப் பலவகை இன்பங்கள் தேவை; ஆதலால் அடிக்கடி உன் வீட்டை மாற்றிக்கொள்ளவும். —அரேபியா

வெளியே விளக்கு வேண்டும், வீட்டிலே அனல் வேண்டும். [விளக்கு—வழி காண்பதற்காக; அனல்—குளிர் காய்வதற்காக.] —ஆர்மீனியா

வெறும் கையோடு வீடு திரும்பினால், உன்னை வீட்டுக்கு உடையவனாக எண்ணிக் கொள்ள வேண்டாம். [வீட்டில் அனைவரும் அலட்சியமாக எண்ணுவர்.] —பல்கேரியா

வீடில்லாத மனிதன் கூடில்லாத பறவை. —ஃபிரான்ஸ்

இதயம் எங்கே தங்கியுள்ளதோ அதுவே வீடு. —லத்தீன்

என் வீட்டில் நானே அரசன். —ஸ்பெயின்

தன் வீட்டில் அமைதி கிடைக்காதவன் பூலோக நரகில் இருக்கிறான். —துருக்கி

## அண்டை வீட்டுக்காரர்

அண்டை வீட்டுக்காரரை நேசி, ஆனால் குறுக்குச் சுவரை இடித்துவிடாதே. —இந்தியா

உன் தலைக்குச் சேராத தொப்பியை அடுத்த வீட்டுக்காரர் தலையில் கட்டாதே. —இந்தியா

அண்டை அயலார் அனுமதித்தால்தான், நீ அமைதியோடு வாழலாம். —இந்தியா

அம்மா சொல்வது போல் உண்மை இராது, அயலார் சொல்வதே உண்மை. —இந்தியா

பக்கத்து வீட்டுக்காரன் உன் பந்துவைவிட நெருங்கினவன்.
—அல்பேனியா

துருக்கியரைப் பற்றியும், போப்பாண்டவரைப் பற்றியும் பேச்சு வருகிறது; ஆனால் எனக்குத் தொந்தரவு கொடுப்பவன் என் அண்டை வீட்டுக்காரன். —இங்கிலாந்து

உன் அண்டை வீட்டுக்காரன் நல்லவனு யிருந்தால், உன் வீடு கூடுதலாக நூறு பவுன் பெறும். —ஸெக்

அண்டை அயலான் தயவில்லாமல் எவனும் வாழ முடியாது.
—டென்மார்க்

மூன்று பேர்களின் பக்கத்தில் குடியிருக்க வேண்டாம்; பெரிய நதிகள், பெரிய பிரபுக்கள், பெரிய சாலைகள். —( " )

நரிகளைவிட அதிகமாக நம் அக்கம் பக்கத்திலுள்ளவர்களே நம்மைக் கவனிப்பார்கள். —கிரீஸ்

நல்லவர்களின் நடுவில் வசித்தல் வெகுதூரத்தில் புகழப் படுவதை விட மேலாகும். —நார்வே

அண்டை வீட்டை விலைக்கு வாங்குவதைப் பார்க்கினும் அண்டை வீட்டானையே விலைக்கு வாங்கு. —ரஷ்யா

மனிதன் நண்பர்களில்லாமல் இருக்க முடியும்; ஆனால் அக்கம் பக்கத்து வீட்டார்கள் இல்லாமல் முடியாது. —ரஷ்யா

அண்டை வீட்டுக்காரருக்கு நஷ்டமில்லாமல் நாம் அடையும் இலாபமே இலாபம். —ஜெர்மனி

பக்கத்து வீட்டுக்காரரே நாம் முகம் பார்த்துக் கொள்ளும் கண்ணாடி. —இங்கிலாந்து

நண்பர்கள் இல்லாமல் நாம் வாழலாம், அண்டை அயலார் இல்லாமல் வாழ முடியாது. —இங்கிலாந்து

# இல்வாழ்க்கை

பழைய வீட்டைச் சீர்ப்படுத்து, பழைய மனைவியைப் போற்று. —இந்தியா

வீட்டுக் குப்பையை வீட்டிலேயே அள. —இந்தியா

ஏழு திரைகளைத் தாண்டியும் வேலைக்காரியின் குறையைக் கண்டு விடுவாய்; யசமானி அம்மாளின் குறை ஒரே திரையில் மறைந்துவிடும். —இந்தியா

கட்டிலிலே கணவனும் மனைவியும், வெளியிலே அவர்கள் விருந்தினர்கள். —சீனு

கணவன், மனைவி சண்டை ஓர் இரவோடு சரி. —சீனு

இல்வாழ்வு முற்றுகைக்கு உட்பட்ட கோட்டை போன்றது; வெளியே யிருப்பவர்கள் உள்ளே செல்ல விரும்புகின்றனர், உள்ளே யிருப்பவர்கள் வெளியேற விரும்புகின்றனர். —அரேபியா

ஒரே வீட்டில் இரண்டு சக்களத்திகள் இருப்பதைவிட இரண்டு பெண் புலிகள் இருப்பது நலம். —பாரசீகம்

கணவன் கரண்டியால் சேகரித்து வருவதை, நீ மண் வெட்டியால் வெளியே வாரி வாரி இறைக்க வேண்டாம் —இங்கிலாந்து

பெண் இல்லையென்றால், வீடில்லை. —பல்கேரியா

நீ வெளியில் எங்கே சுற்றினாலும், இன்பமயமான உன் வீட்டுக்கு வந்துவிடு. —பல்கேரியா

உன் வீடு—உனது ராஜ்யம். —பல்கேரியா

அழகான மனைவியும் அருமையான பழைய மதுவும் இருந்தால், நண்பர்கள் பலர் வருவார்கள். —பல்கேரியா

பெண் இல்லாத வீடு வாளியில்லாத கிணறு. —பல்கேரியா

திருமணப் பெண்ணுக்கு இசையும் அழகும்; விவாகமான பின் பசியும் தாகமும் —எஸ்டோனியா

தொடக்கத்தில் இருவரும் ஒரே சட்டைக்குள் ஒண்டியிருக்க முடிந்தது; பின்னுல் அவர்கள் ஒரே குடிசையில் சேர்ந்திருக்க முடியவில்லே. —எஸ்டோனியா

வீட்டுக்குத் தேவையானவை நான்கு: தானியம், சேவல், பூனே, மனேவி. —இத்தாலி

கணவன் குடித்தால் பாதி வீடு எரியும், மனேவியும் குடித்தால் முழு வீடும் எரியும். —ரஷ்யா

தன் வீட்டுக்கு வெளியிலே இன்பத்தை நாடுவோன் தனது நிழலேயே துரத்திக்கொண்டு திரிகிருன். —( ” )

உன் சொந்த வீட்டில் சுவர்கள்கூட உனக்கு உதவியாயிருக்கும். —ரஷ்யா

என்னே என் குடும்பத்திலிருந்து காப்பாற்றுங்கள்; என் எதிரிகளே நானே பார்த்துக் கொள்கிறேன். —செர்பியா

தரையை வைத்து வீடு கட்டப் பெறுவதில்லே, ஒரு பெண்ணே வைத்தே கட்டப் பெறுகின்றது. —செர்பியா

வீட்டில் கடிகாரமே யசமானரா யிருக்க வேண்டும். —சுவீடன்

வீட்டுத் தலேவன்மீது வீட்டிலுள்ள எல்லோருடைய குப்பைகளும் கொட்டப்படும். —ஆப்பிரிக்கா

பெண்தான் இல்லம். —ஆப்பிரிக்கா

பெண்பிள்ளேகள் இரண்டு வார்த்தைகள் சொன்னுல், ஒன்றை எடுத்துக்கொண்டு, மற்றதை விட்டுவிடு. —ஆப்பிரிக்கா

சந்தோஷமான குடும்பங்கள் எல்லாம் ஒரே மாதிரியாக இருக்கின்றன; துக்ககரமான குடும்பம் ஒவ்வொன்றும் வெவ்வேறு மாதிரியாக இருக்கின்றது. —டால்ஸ்டாய்

கடவுள் நமக்கு உறவினரைக் கொடுத்திருக்கிருர்; ஆனுல் அன்பர்களே மட்டும் நாமே தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும். —இங்கிலாந்து

அவசியமான பொருள்கள் நிறைந்த ஒரு வீடு, நன்ருக உழுத ஒரு சிறு நிலம், நல்ல சிந்தனேயுள்ள ஒரு மனேவி—மூன்றுமே இன்ப வாழ்வளிக்கும். —இங்கிலாந்து

வெளியே கிடைக்கும் வெந்த இறைச்சியைக் காட்டினும். வீட்டிலே யிருக்கும் உலர்ந்த ரொட்டிமேல். —இங்கிலாந்து

வீட்டில் மகிழ்ச்சியுடன் இருக்க வேண்டும் என்பதே எல்லா ஆசைகளின் முடிவான நோக்கம். —இங்கிலாந்து

நான் என் தொப்பியை மாட்டும் இடமே என் வீடு. —( " )

இதயம் எங்கு தங்கியுளதோ அதுவே வீடு. —இங்கிலாந்து

தன் குடும்பத்தை விட்டு ஓடுபவனுக்கு முடிவான இடம் இல்லை. —லத்தீன்

நம் சொந்த வீடே மற்ற வீடுகளைவிட மேலானது. —( " )

என் வீட்டுக்கு நானே ராஜா. —ஸ்பெயின்

தன் வீட்டில் அமைதி யில்லாதவன் பூலோக நரகில் இருக்கிறான். —துருக்கி

வீடில்லாத மனிதன் கூடில்லாத பறவை. —ஃபிரான்ஸ்

சேவல் தன் குப்பை மேட்டிலிருந்தே கூவும். —ஃபிரான்ஸ்

வீட்டை விட்டு வெகு தூரத்திலிருப்பவன் அபாயத்திற்கு அருகிலிருக்கிறான். —ஹாலந்து

## குழந்தைகள்

தகப்பனாவதில் சிரமம் ஒன்றுமில்லை. —துருக்கி

மூன்று பெண்களுக்கு அப்பால் பிறந்த பையன் பிச்சை யெடுப்பான்; மூன்று பையன்களுக்கு அப்பால் பிறந்த பெண் இராஜ்யத்தை ஆள்வாள். —இந்தியா

உன் மகன் நல்லவனானால், நீ ஏன் சேமிக்க வேண்டும்? உன் மகன் தீயவனானால், (அவனுக்காக) நீ ஏன் சேமித்து வைக்க வேண்டும்? —இந்தியா

இருண்ட வீட்டின் ஒளி மகன். —இந்தியா

குழந்தையின் ஓட்டம் தாய் வரைக்கும் —இந்தியா

பதினாறு வயது வரை மகன், அதற்குமேல் தோழன்.—இந்தியா

குழந்தைகள் இல்லாத வீடு சுடுகாடு —இந்தியா

பிரியமுள்ள தந்தையரும் தாயருமே உண்டு; பிரியமுள்ள பிள்ளைகளும் பெண்களும் இல்லை. —சீனா

பெண் பிறக்கும் பொழுது வெளியே பார்த்துக்கொண்டு வருகிறாள், பையன் பிறக்கும் பொழுது உள்ளே பார்த்துக் கொண்டு வருகிறான். —சீனா

வானத்திற்கு மணி சூரியன், வீட்டுக்கு மணி குழந்தை. —சீனா

குழந்தையில்லாத செல்வன் சீமானல்லன்; செல்வமில்லாது குழந்தைகளை மட்டும் பெற்றவன் ஏழையுமல்லன். —சீனா

உங்கள் குழந்தைகளுக்கு அமைதியான வாழ்க்கை வேண்டுமென்று நீங்கள் விரும்பினால், அவர்களுக்கு எப்பொழுதும் கொஞ்சம் குளிரும் பசியும் இருக்கும்படி செய்யுங்கள். —சீனா

விளையும் பயிர் முளையில் தெரியும். —தமிழ்நாடு

ஆணை அடித்து வளர்க்க, பெண்ணைத் தட்டி வளர்க்க. —தமிழ்நாடு

ஐந்துக்கு மேலே அரசனும் ஆண்டி. —தமிழ்நாடு
[ஐந்து பெண்களுக்கு மேல் பிறந்து விட்டால், பெற்றோரின் செல்வம் காலியாகும்.]

உன் பையனிடம் உனக்கு அன்பிருந்தால், அவனை அடித்து வளர்க்கவும்; வெறுப்பிருந்தால், தின்பண்டங்களை வாங்கி (அவன் வாயில்) திணிக்கவும். —சீனா

ஐந்து பெண் குழந்தைகளுள்ள குடும்பத்திற்குத் திருடன் வேறு தேவையில்லை. [குடும்பத்தின் சொத்து விரைவிலே தீர்ந்து விடும்.] —சீனா

கெட்டிக்காரச் சேவல் முட்டைக்குள்ளிருந்தே கூவும். —சீனா

பெண் பிறந்தால், வீட்டுக் கதவுநிலை நாற்பது நாள் அழும். —அரேபியா

என் இதயம் என் மகனை நோக்கிச் செல்கின்றது. அவனுடைய இதயமோ ஒரு கல்லை நோக்கிச் செல்கின்றது.
—அரேபியா

மகள் இருந்தால், தாய்க்குச் செலவு இருந்து கொண்டேயிருக்கும்.
—ஆர்மீனியா

உன் பிள்ளைகளையும் பெண்களையும் நம்பியிருந்தால், உனக்கு இரு கண்ணும் இல்லை. [நம்பியிருத்தல் வீண்.]
—பர்மா

தானாகத் தடுக்கி விழுந்த குழந்தை அழுவதில்லை.
—கால்மிக்

குழந்தைகள் நிறைந்த வீட்டில் சயித்தான் ஆள்வதில்லை.
—குதிர்ஸ்தானம்

வீடு என்றால், மூன்று குழந்தைகளாவது இருக்கவேண்டும்.
—குதிர்ஸ்தானம்

இளமையிலே குழந்தைகள் நம் கைகளுக்கு வலியளிக்கும்; முதுமையிலே மனத்திற்கு வேதனையளிக்கும்.
—ஐரோப்பிய நாடோடிகள்

வைசூரி விளையாடிய பிறகுதான், பெற்றோர்கள் குழந்தையைத் தங்கள் குழந்தையாகக் கணக்கிட வேண்டும்.
—ஆப்கானிஸ்தானம்

நன்றியற்ற மகன் தந்தையின் முகத்திலுள்ள பரு; அதை அப்படியே விட்டிருந்தால் விகாரம், கிள்ளியெறிந்தால் வலி.
—ஆப்கானிஸ்தானம்

தந்தை அழ நேருவதைவிட, குழந்தை அழுதால் அழட்டும்.
—ஜெர்மனி

குழந்தைகளில்லாமல் வாழ்பவன் தொந்தரவுகளை அறியான். குழந்தைகளில்லாமல் மரிப்பவன் மகிழ்ச்சியை அறியான்.
—ஜெர்மனி

தாய் தன் குழந்தையைத் தழுவினால், அநாதைக் குழந்தையை ஆண்டவர் தழுவிக் கொள்கிறார்.
—போலந்து

குடியானவனுடைய குழந்தைகள் அவன் செல்வங்கள்; கனவானுடைய குழந்தைகள் அவன் கடன்கள்; பிரபுவின் குழந்தைகள் திருடர்கள். —போலந்து

[முற்காலத்தில் பிரபுக்கள் குடியானவர்களைத் துன்புறுத்தி, நில புலன்களைத் தாங்களே கைப்பற்றி வந்ததால், இப்பழமொழி அவர்களுக்கு எதிராக எழுந்த துவேஷத்தைக் காட்டுகின்றது.]

அதிகக் குழந்தைகள் இருந்தால், வீட்டுக் கூரை பிய்ந்து போய் விடாது. —பெல்ஜியம்

ஒரு குழந்தையுடன் நீ நடக்கலாம்; இரு குழந்தைகளுடன் சவாரி செய்யலாம்; மூன்றுகிவிட்டால், நீ வீட்டோடு இருக்க வேண்டியதுதான். —இங்கிலாந்து

வளர்ப்பதற்குச் சொந்தக் குழந்தையில்லாதவன் அதிருஷ்டமில்லாதவன். —அயர்லந்து

குழந்தையில்லாதவன் சும்மா குந்தியிருப்பது வீண்.

—அயர்லந்து

சண்டையிட இருவர், சமாதானத்திற்கு ஒருவர்.

—ஸ்காட்லந்து

[குடும்பத்திற்கு மூன்று குழந்தைகள் போதும்.]

கிழவர்களும் குழந்தைகளும் இல்லாத வீட்டில் வேடிக்கையும் கலகலப்பும் இருக்கமாட்டா. —ஸ்காட்லந்து

குழந்தை தன்னைத் தூக்கிவைத்துக் கொஞ்சுகிறவரை அறியும்; தன்னிடம் உண்மையான அன்பு செலுத்துவோரை அறியாது. —வேல்ஸ்

குழந்தையும் தெய்வமும் கொண்டாடும் இடத்தில்.

—தமிழ்நாடு

உன் குழந்தைகள் தீயோரா யிருந்தால், அவர்களுக்குச் சொத்து வைக்க வேண்டாம்; அவர்கள் நல்லோரா யிருந்தால், உன் சொத்து அவர்களுக்குத் தேவையில்லை.

—பல்கேரியா

குழந்தையின் வயிற்றுக்குக் கண் இல்லை. —டென்மார்க்

அருமையான குழந்தைக்குப் பிரம்பு தேவை.

—எஸ்டோனியா

பயமில்லாமல் வளரும் குழந்தை பெருமையில்லாமல் மரிக்கும். —எஸ்டோனியா

வசந்த காலம் வந்து குழந்தையை முத்தமிடுகிறது, மாரிக் காலம் வந்து அதை வதைக்கிறது. —எஸ்டோனியா

குழந்தையின் அருமை அடுத்த குழந்தை வரும்வரை. —எஸ்டோனியா

குழந்தையின் ரொட்டியில் மணல் கலந்திருக்கும். —( ” )

பெண் குழந்தை வீட்டிலிருப்பதைக் கொண்டு செல்லும், ஆண் குழந்தை (வெளியிலிருந்து) கொண்டுவரும். —எஸ்டோனியா

மகள் உன் முட்டளவு வளர்ந்து விட்டால், அவளுடைய சீதனப்பெட்டி அவள் மார்பளவு உயரம் இருக்க வேண்டும். —எஸ்டோனியா

பெண் குழந்தைகள் வீட்டுக்கு அலங்காரம், அவர்கள் விற்பனைக்குரிய பொருள்கள். —எஸ்டோனியா

குழந்தையும் உதவிதான் செய்கிறது, ஒரு மீனைக் கழுவுவதற்குள், இரண்டு மீன்களைத் தின்னுகின்றது. —பின்லந்து

மூடன் தன் குதிரையைப் புகழ்வான், பயித்தியக்காரன் தன் மருமகளைப் புகழ்வான், அறியாதவன் தன் மகளைப் புகழ்வான். —பின்லந்து

ஒற்றைக் குழந்தை கடவுளின் தண்டனை. —ஹங்கேரி

ஆந்தையும் தன் மகனை இராஜாளி என்றே கருதுகின்றது. —ஹங்கேரி

தூங்கும் பொழுது சிரிக்கும் குழந்தை தேவர்களுடன் விளையாடுகின்றது. —இத்தாலி

குழந்தைகள் இல்லாதவனுக்கு அன்பு புரியாது. —இத்தாலி

அதிருஷ்டமுள்ளவர்கள் மணமாகி மூன்றும் மாதம் குழந்தையை அடைகிறார்கள். —லத்தீன்

அதிருஷ்டமுள்ளவனுக்கு முதற் குழந்தை பெண்ணாயிருக்கும். —போர்ச்சுகல்

மகளின் குழந்தைகள் தன் குழந்தைகளைவிட அருமையானவை.
—ரஷ்யா

நீ தகப்பனுகாமலே வாழ்ந்தால், நீ மனிதனுக இல்லாமலே மரிப்பாய்.
—ரஷ்யா

பெண்பிள்ளை கலியாணப் பருவமடையும் பொழுதுதான் பிறந்தவளாகிருள்.
—ரஷ்யா

குழந்தைகளை இதயத்தால் நேசிக்கவும்; ஆனுல் கைகளால் பயிற்சி அளிக்கவும்.
—ரஷ்யா

விவாகமான பெண் குழந்தை பக்கத்து வீட்டுக்காரரைப் போலத்தான்.
—ரஷ்யா

குழந்தையின் கையும் பன்றித்தொட்டியும் நிறைந்தேயிருக்க வேண்டும்
—சுவிட்சர்லந்து

உலகிலே ஒரு குழந்தையை விட்டுச் செல்பவன் நித்தியமாக வாழ்கிருன்.
—ஆப்பிரிக்கா

முதற் குழந்தை தந்தைக்குத் தோழன். —ஆப்பிரிக்கா

குழந்தைகள் தெய்வத்தோடு பேசுகின்றன. —ஆப்பிரிக்கா

கேள்விகள் கேட்கும் குழந்தை மூடக் குழந்தையன்று.
—ஆப்பிரிக்கா

பெரிய நகருக்குச் சென்றிராத குழந்தை தன் தாய்தான் தலை சிறந்த சமையற்காரி என்று சொல்லும். —ஆப்பிரிக்கா

முதலாவது செல்வம் குழந்தைகள், இரண்டாவதுதான் பணம்.
—ஆப்பிரிக்கா

குழந்தை, ஒட்டகக் கழுத்து மாதிரி, எங்கு வேண்டுமானுலும் நுழையும்.
—ஆப்பிரிக்கா

குழந்தைகளில்லாத எலி ஆற்ருேரம் வீடு கட்டிக் கொள்ளும்.
—ஆப்பிரிக்கா

மனிதக் குஞ்சுகள் பறக்க நாளாகும். —ஆப்பிரிக்கா

குழந்தைகளே ஏழைகளின் செல்வங்கள். —இங்கிலாந்து

குழந்தைகளுக்குச் செவிகள் அகலமானவை; நாவுகள் நீள மானவை. —இங்கிலாந்து

புறுக்கள் கடலைகளைக் கொத்துவது போல், குழந்தைகள் வார்த்தைகளைக் கொத்தி யெடுத்துக் கொள்ளும். —( ” )

குழந்தைகள் இளமையில் தாயிடம் பால் குடிக்கின்றன; முதுமையில் தந்தையிடம் (அறிவுப்) பால் குடிக்கின்றன. —இங்கிலாந்து

குழந்தை யில்லாதவனுக்கு அன்பு என்ன என்று தெரியாது. —இங்கிலாந்து

குழந்தையைக் கொண்டாடினால், தாயின் அன்பைப் பெறலாம்.

இரண்டு தொட்டில்களை ஆட்டுவதைவிட, ஒரு கலப்பையால் உழுவது மேல். —இங்கிலாந்து

குழந்தைக்கு முதற்பாடம் பணிவு. —இங்கிலாந்து

தீப்பட்ட குழந்தை நெருப்புக்கு அஞ்சும். —இங்கிலாந்து

நாவை அடக்கப் பழக்கிய குழந்தை விரைவிலே பேசக் கற்றுக் கொள்ளும். —இங்கிலாந்து

குழந்தை பேசுவதெல்லாம் அடுப்பங்கறையிலே கற்றவை. —இங்கிலாந்து

தந்தை அழுவதைவிட, குழந்தை அழுவது மேல். —இங்கிலாந்து

குழந்தைகளும் கோழிக் குஞ்சுகளும் எப்பொழுதும் தின்று கொண்டே யிருக்கவேண்டும். —இங்கிலாந்து

பகுத்தறிவு உறங்கும் காலம் குழந்தைப் பருவம். —ரூஸோ

செல்லக் குழந்தைக்குப் பல பெயர்கள் இருக்கும். —டென்மார்க்

குழந்தைகளும் குடிகாரர்களும் உண்மையே பேசுவர். —டென்மார்க்

அடுத்த வீட்டுக்காரர் குழந்தைகளே எப்பொழுதும் மோசமான குழந்தைகள். —ஜெர்மனி

பெற்றோர்கள் நூற்பதைக் குழந்தைகள் கழியில் சுற்ற வேண்டும். —ஜெர்மனி

குழந்தைகளோடு சேர்ந்து விளையாடினால், அவர்களை எப்படியும் திருப்பலாம். —ஜெர்மனி

குழந்தை அழாவிட்டால், தாய்க்கு ஒன்றும் புரிவதில்லை. —ரஷ்யா

குழந்தையை அடித்து வளர்க்காதவன், பின்னால் தன் மார்பிலே அடித்துக் கொள்ள நேரும். —துருக்கி

## தாய் தந்தையர்

அன்னையின் அன்புக்கு வயதே கிடையாது. —ஜெர்மனி

கோழி மிதித்தால், குஞ்சுக்கு சேதமில்லை. —தமிழ்நாடு

தாய்வார்த்தை கேளாப் பிள்ளை நாய்வாய்ச் சீலை. —தமிழ்நாடு

பசு உள்ள இடத்தில் கன்றும் இருக்கும். —இந்தியா

செல்வமுள்ள போது தந்தை, வறுமையிலே தாய். —இந்தியா

தாய்க்கு உதவி செய்யாதவன் வேறு யாருக்கு உதவி செய்வான்? —இந்தியா

புத்திசாலியான மகன் தந்தைக்கு மகிழ்ச்சி யளிப்பான், —பழைய ஏற்பாடு

தந்தையின் கோபத்தைக் கண்டு மகன் அஞ்சுவதில்லை; அவனுடைய மௌனத்திற்கே அஞ்சுகிறான். —சீனா

மகனைப் புகழும் தந்தை தன்னையே புகழ்ந்து கொள்கிறான். —சீனா

ஒரு தந்தை பத்துக் குழந்தைகளைப் பேணி வளர்க்கலாம்; பத்துக் குழந்தைகள் ஒரு தந்தையைப் பேணுவது அரிது. —சீனா

ஒரு தந்தை நூறு ஆசிரியர்களுக்கு மேலாவார். —இங்கிலாந்து

தந்தை தோட்டத்திற்குப் போனால், மகன் உழுவதற்குப் போவான். —இங்கிலாந்து

குழந்தைகளின் குற்றங்களை வெறுக்கும் தந்தையே அவர்களை நேசிப்பவன். —ஃபிரான்ஸ்

தந்தையின் வாழ்த்து நீருள் அழியாது, நெருப்பிலும் அழியாது
—ரஷ்யா

குதிரைகளும் மனிதர்களும் தாய் வழியைக் கொள்வார்கள்.
—இந்தியா

அன்னை அவன் வயிற்றைப் பார்ப்பாள், மனைவி முதுகைப் பார்ப்பாள்.
—இந்தியா

பசுவின் பின்னால் எப்பொழுதும் ஒரு கன்று இருந்து வரும்; சில சமயங்களில் அது சொந்தக் கன்றாயிருக்கும்; சில சமயங்களில் வேறு பசுவின் கன்றாயிருக்கும்,
...கீழை நாடுகள்

தாயும் தந்தையும் செல்லாத பாதையில் நீ செல்ல வேண்டாம்.
—ஆப்பிரிக்கா

குழந்தைகளின் இதயத்திலும் வாயிலும் வரும் கடவுளின் பெயர் தாய்.
—தாக்கரே

தாய் எப்படி வளர்க்கிறாளோ, அப்படி உருவாகிறார்கள் மனிதர்கள்.
—இங்கிலாந்து

தயாரின் செல்லப்பிள்ளைகள் வெண்ணெய் வெட்டும் வீரர்களாகவே வருவார்கள்.
—இங்கிலாந்து

குழந்தையைப் பெற்றவளெல்லாம் தாயாகிவிடமாட்டாள்.
—இங்கிலாந்து

தாயில்லாத வீடு வீடாகுமா?
—இங்கிலாந்து

நடனத்தின் இசை நடுவிலும், தாய்க்குத் தன் குழந்தைகளின் அழுகுரலே கேட்கும்.
—ஜெர்மனி

தாய்ப் பாலுடன் பருகியது சாகும்வரை உடலில் இருக்கும்.
—ஸ்பெயின்

தாயிலே கெட்டவளுமில்லை, சாவிலே நல்லதுமில்லை. —யூதர்

உங்களுடைய தந்தையையும் தாயையும் கௌரவியுங்கள்.
—பழைய ஏற்பாடு

என் மகனே, உன் தந்தையின் போதனையைக் கேட்டுக் கொள்; உன் தாயின் சட்டத்தையும் புறக்கணிக்க வேண்டாம்.
—பழைய ஏற்பாடு.

எந்தத் தாயரும் தந்தையரும் தங்கள் குழந்தைகளை விகாரமானவர்களாகக் கருதுவதில்லை. —ஸ்பெயின்

புத்திசாலியான மகனால் தந்தை மகிழ்ச்சியடைகிறான்; ஆனால் மூட மகனால் தாயின் உள்ளம் வருந்துகின்றது.
—பழைய ஏற்பாடு

தந்தையின் கடன்களை மகன் செலுத்துகிறான். —சீனா

தந்தையைக் குறை சொல்லும் பொழுது, மகன் தானே சிறுமையடைகிறான். —சீனா

நல்ல கருவிலும் தீய பிள்ளைகள் உண்டாகி யிருக்கிறார்கள்.
—ஷேக்ஸ்பியர்

ஒருவனுக்குக் கடவுள் சொந்தப் பிள்ளைகளைக் கொடுக்காவிட்டால், சயித்தான் அவனுக்கு அவனுடைய சகோதரர் பிள்ளைகளைக் கொடுக்கிறான். —ஸ்பெயின்

கலியாணம் செய்து கொள்ளும் மகன் தாயை விட்டுத் தாரத்தைப் பிடித்துக் கொள்கிறான். —யூதர்

தாய் உன்னைப் பல மாதங்கள் சுமந்து கொண்டிருந்தாள்; மூன்று ஆண்டுகள் பால்கொடுத்து வளர்த்தாள். பள்ளிக்கு உனக்குச் சோறு சுமந்து கொண்டு வந்தாள்...அவள் உன்னைப் பற்றி ஆண்டவனிடம் முறையிடும்படி வைத்துக் கொள்ளாதே. —எகிப்து

தந்தையின் ஆசியால் வீடு உண்டாகும்; தாயின் சாபத்தால் வீடு சாய்ந்துவிடும். —ஸ்காட்லாந்து

தந்தைதான் வீட்டுக்கு விருந்தாளி. —பல்கேரியா

தந்தையின் அன்பு கல்லறைவரை; தாயின் அன்பு உலகுள்ள வரை. —எஸ்டோனியா

தாய்ப்பாலோடு பருகியதெல்லாம் ஆன்மா பிரிந்து செல்லும் போதுதான் அதனுடன் வெளியே செல்லும்.
—ரஷ்யா

குழந்தையின் விரலில் வலியிருந்தால், தாயின் இதயத்தில் வலியுண்டாகும். —ரஷ்யா

கடவுள் உயரே யிருக்கிறார், பூமியில் தந்தை யிருக்கிறார்.
—ரஷ்யா

(ஒரு தந்தை) ஒரு மகனை விட்டு ஒரு மகனிடம் போய் யாசிப்பதைவிட, வீடு வீடாக யாசித்தல் மேல்.
—ரஷ்யா

நல்ல மாற்றாந்தாய்க்குச் சுவர்க்கத்தில் தங்க நாற்காலி காத்திருக்கிறது.
—யூதர்
[அப்படி ஒருத்தி கிடைக்க மாட்டாள்.]

முட்டை கோழிக்கு அடைகாக்கச் சொல்லிக் கொடுக்கிறது!
—ஆப்பிரிக்கா

அன்புக்கு உற்பத்திஸ்தானம் அன்னை.
—ஆப்பிரிக்கா

அன்னையை எவரோடும் ஒப்பிடக்கூடாது.—அவள் ஈடற்றவள்.
—ஆப்பிரிக்கா

குழந்தை தாய்க்கு நங்கூரம்; அவள் இருக்கிற இடத்தைவிட்டு அசைய முடியாது.
—அமெரிக்கா

## குலம்

ஒவ்வொரு பிச்சைக்காரனும் எவனோ ஓர் அரசனின் வழி வந்தவன், ஒவ்வோர் அரசனும் ஒரு பிச்சைக்காரனின் வழி வந்தவன்.
—இங்கிலாந்து

குலப்பெருமை பேசுபவன் உருளைக் கிழங்கு போன்றவன்; கிழங்கைப் போலவே, அவன் பெருமையும் மண்ணுக்குள் மறைந்திருக்கும்.
—இங்கிலாந்து

தாய் வெங்காயம், தந்தை உள்ளிப்பூடு, அவன் மட்டும் ரோஜா அத்தர்!
—துருக்கி

ஆயன் மகன் ஆயன்.
—ரஷ்யா

## இனம்

வௌவால் தன் விருந்தாளியிடம், 'நான் தொங்குகிறேன்' நீயும் தொங்கு!' என்று என்று சொல்லும். —இந்தியா

பாம்பைவிடப் பிராமணனை நம்பு, வேசியைவிடப் பாம்பை நம்பு, பட்டாணியைவிட வேசியை நம்பு. —இந்தியா
[பட்டாணி—கடன் கொடுத்து வாங்கும் ஆப்கானிய வகுப்பைச் சேர்ந்தவன்.]

ஆந்தைக்குத்தான் தெரியும் ஆந்தையின் அருமை. —இந்தியா

ஊசி வாளைப் பார்த்தால், 'அண்ணா' என்று அழைக்கும். —ரஷ்யா

## குடும்பம்

சிறு குடும்பத்திற்கு வேண்டியவை விரைவிலேயே கிடைக்கும். —இங்கிலாந்து

உன் பாட்டனுக்கும் ஓர் அத்திப்பழம் கொடுத்து ஆதரித்து வா. —இங்கிலாந்து

உறவினரைக் கடவுளே கொடுத்து விடுகிறார், நண்பர்களை மட்டும் நாமே தேர்ந்து கொள்ளலாம். —இங்கிலாந்து

உறவினர் குறைந்திருத்தல் அதிர்ஷ்டம்தான். —கிரீஸ்

தன் குடும்பத்தை விட்டு ஓடுபவன் நெடுந்தூரம் சென்று கொண்டேயிருக்க வேண்டும். —லத்தீன்

## சகோதரர்

சகோதரனைப் போன்ற நண்பனில்லை. சகோதரனைப் போன்ற பகைவனுமில்லை. —இந்தியா

கைகளும் கால்களும் போன்றவர்கள் சகோதரர்கள். —சீனா

உடன்பிறந்தார்கள் ஒத்து வேலை செய்தால், மலைகளெல்லாம் பொன்னாகும். —சீனா

சகோதரர்களாயிருங்கள், ஆனால் கணக்கு வைத்துக் கொள்ளுங்கள். —அரேபியா

சொந்தச் சகோதரர்கள் கவனமாகக் கணக்கு வைத்திருப்பார்கள். —சீனு

இளைய சகோதரனுக்குப் புத்தி அதிகம். —இங்கிலாந்து

சகோதரன் என்பவன் இயற்கையாக நமக்கு அளித்துள்ள நண்பன். —ஃபிரான்ஸ்

அவர்கள் சகோதரர்களானாலும், அவர்களுடைய பைகள் சகோதரிகளில்லை. —துருக்கி

தாயும் பிள்ளையும் ஒன்றானாலும், வாயும் வயிறும் வேறு. —தமிழ்நாடு

மூன்று சகோதரர்கள் மூன்று கோட்டைகள். —போர்ச்சுகல்

## மாமியார்

மாமியாருக்கு மரியாதை காட்டினால் தினமும் மூன்று முறை உன் வீட்டுக்கு வருவாள். —ஜப்பான்

கணவனின் தாய் அவன் மனைவிக்குச் சயித்தான். —ஜெர்மனி

ஒரே வீட்டிலுள்ள மாமியாரும் மருமகளும் ஒரே பைக்குள் கிடக்கும் இரண்டு பூனைகள் போன்றவர். —யூதர்

## மருமகன்

நல்ல மாப்பிள்ளை கிடைத்தவன் ஒரு மகனை அடைந்தவன்; தீய மாப்பிள்ளை கிடைத்தவன் தன் மகளை இழந்தவன். —ஃபிரான்ஸ்

# சுற்றம்

அன்புள்ள அந்நியனும் நமக்கு உறவுதான். —இந்தியா

உறவுள்ள இடத்தில் பகையும் இருக்கும். —இந்தியா

உதிர்ந்த இறகைப் பசை வைத்துத்தான் ஒட்டவேண்டும்! ...ஆப்பிரிக்கா

நம் உறவினர்கள் செழிப்பாயிருப்பார்களாக; நாம் அவர்களிடம் செல்லாமல் இருப்போமாக! —போலந்து

அத்தையோடு நீ உண்ணலாம், ஆனால் தினமும் போய் உட்காரக் கூடாது. —இங்கிலாந்து

அதிக உறவினர், அதிகத் துன்பம். —ஃபிரான்ஸ்

நமக்குக் காசு நிறைய இருந்தால், அத்தை பிள்ளைகளும், அம்மான் பிள்ளைகளும் கிடைப்பார்கள். —இத்தாலி

நீ உன் மனைவியை நேசித்தால், அவளுடைய உறவினரையும் நேசிக்கவேண்டும். —யூதர்

உறவினர் செல்வமடையும் பொழுதுதான் நாம் அவர்களை மதிக்கிறோம். —யூதர்

உதிரம் நீரைவிடச் சூடுள்ளது. —எஸ்டோனியா

மிக நெருங்கிய பந்துக்களின் துவேஷமே அதிகமாயிருக்கும். —லத்தீன்

உறவினரைப் போய்ப் பார்த்து வரலாம்; அவர்களுடனே வசித்திருக்க முடியாது. —அமெரிக்கா

சிறு புண்களையும் ஏழை உறவினரையும் ஒருபோதும் அலட்சியம் செய்யக் கூடாது. —சுவீடன்

உன் உறவினரே உன்னைக் கொட்டும் தேள்கள், —எகிப்து

# கைம்பெண்

விதவை துடுப்பில்லாத மரக்கலம். —சீனு

நிலம் மழையில்லாமல் அழும். விதவை கணவனில்லாமல் அழுவாள். —இந்தியா

கைம்பெண் வளர்த்த பிள்ளை மூக்குச் சரடு இல்லாத காளை. —இந்தியா

பணக்காரியான விதவையின் கண்ணீர் விரைவில் உலர்ந்து விடும். —டென்மார்க்

விதவையை மணப்பவன் விரைவிலே முடிக்க வேண்டும். —இங்கிலாந்து

விதவை துக்கம் காக்கும் பொழுதே, விவாகம் செய்து கொள். —இங்கிலாந்து

விதவைகள் எப்போதும் பணக்காரிகள். —இங்கிலாந்து

பெருமையோடு ஒருத்தி ஒருமுறைதான் மனைவியாக யிருக்க முடியும், ஒரு முறைதான் கைம்பெண்ணு யிருக்க முடியும். —ஃபிரான்ஸ்

செல்வமுள்ள கைம்பெண் ஒரு கண்ணுல் அழுவாள், ஒரு கண்ணுல் சிரிப்பாள். —போர்ச்சுகல்

அழகுள்ள விதவையை (விரைவில்) விவாகம் செய்து வைக்க வேண்டும்; அல்லது புதைக்க வேண்டும்; அல்லது கன்னிகா மடத்தில் அடைத்து வைக்க வேண்டும். —ஸ்பெயின்

விதவையின் வீட்டில் கொழுத்த சுண்டெலி இராது. —துருக்கி

வயதான கன்னியைவிட இளமையான விதவை மேல். —யூதர்

கைம்பெண் கூரையில்லாத கட்டடம். [மனைவியில்லாதவனுக்கும் இது பொருந்தும்.] —எஸ்டோனியா

# விருந்து

வீட்டிலிருக்கும் விருந்தாளி கடவுளுக்கு நிகரானவர். —ஸெக்

வருகிற விருந்தினரை வரவேற்று, போகிறவரை விரைவில் வழியனுப்பு. —போப்

விருந்தும் மருந்தும் மூன்று நாள். —தமிழ்நாடு

மருந்தே யாயினும் விருந்தோடு உண். —தமிழ்நாடு

முதல் நாள் விருந்தாளி, மறுநாள் தொந்தரவு. —இந்தியா

அம்மான் வீடானாலும், ஏழு நாட்களுக்குத்தான் வசதியாயிருக்கும். —இந்தியா

விருந்தென்றால், வீடு நிறையக் கூட்டம்; உபவாசமென்றால், உலகமே திரும்பிப் பார்ப்பதில்லை. —சீனா

விருந்தினன் நாத்திகனாயினும், அவனைக் கௌரவிக்க வேண்டும். —அரேபியா

அழைத்து வந்தவனைவிட, அழையாமல் வந்தவன் மேல். —கால்மிக்

விருந்துச் சாப்பாடு கடனாக அளிக்கப்படுவது. [நாமும் திரும்ப விருந்தளிக்க வேண்டும்.] —ஆப்காளிஸ்தானம்

நேரம் கெட்ட நேரத்தில் வீட்டுக்கு வரும் விருந்தாளி, துருக்கியனைவிட மோசமானவன் —பல்கேரியா

வீட்டு அம்மாளின் விருந்தாளி பாக்கியசாலி, வீட்டுக்காரனின் விருந்தாளி பாக்கியமற்றவன். —ஃபின்லந்து

விருந்தாளியின் பார்வை கூர்மையானது. —ஐஸ்லந்து

முன் நகவலோடு வரவும், அன்புடன் வழியனுப்பும்படி போய் விடவும்.—இதுதான் நல்ல விருந்தாளிக்கு அடையாளம். —லிதுவேனியா

விருந்தாளி அதிகாலையில் எழுந்திருந்தால், இரவில் அவன் நம்முடன் தங்க விரும்புகிறான் என்று தெரிந்து கொள்ள வேண்டும். —ரஷ்யா

விருந்தினரின் முதுகுப்புறம்தான் அழகு. —ஸ்பெயின்

விருந்தினர்கள் தங்கள் வீடுகளுக்குத் திரும்புவதை மறந்து விடக்கூடாது. —சுவீடன்

புது விருந்தை வீட்டினுள் அழையாமலிருத்தல் கேவலம், வந்த விருந்தை வெளியேற்றுவது அதைவிட மோசம். —லத்தீன

அதிக உபாசாரம் அபசாரத்திற்கு அறிகுறி. —சீனு

கடன் வாங்கி விருந்துகள் நடத்தி ஆண்டியாக வேண்டாம். —அபாகிரைஃபா

மற்றொருவர் மாளிகையில் விருந்து 'நன்றாகத்தான் இருக்கும். —ஹாலந்து

விருந்து முடிந்த பிறகு மனிதன் தலையைச் சொறிகிறான். —ஃபிரான்ஸ்

விருந்து நடத்திக் கொள்ளக் காலம் இருக்கிறது. —ஃபிரான்ஸ்

மூடர்கள் விருந்து நடத்துகிறார்கள்; அறிவாளிகள் அதை அநுபவிக்கிறார்கள். —இத்தாலி

இன்று விருந்து, நாளை உபவாசம். —லத்தீன்

பெரிய விருந்தும், சிறிது நேரம்தான். —யூதர்

விருந்தினால் வைத்தியர்களுக்கு வேட்டை. —இங்கிலாந்து

விருந்து நடத்தினால் நண்பர்கள் கிடைத்துவிட மாட்டார்கள். —இங்கிலாந்து

## இளமை

உலகம் இளையோருக்காக உள்ளது. —ஸ்லாவேகியா

அறிவாளி எவனும் இளமையை விரும்ப மாட்டான். —இங்கிலாந்து

கழுதையும் இளமையிலே அழகுதான். —இந்தியா

பத்து வயதில் விசித்திரக் குழந்தை, பதினைந்தில் கெட்டிக்கார இளைஞன், இருபதில் சாதாரண மனிதன். —ஜப்பான்

இளைஞன் வேலைக்கு வருகிறான், கிழவன் உணவுக்கு வருகிறான்.
—துருக்கிஸ்தானம்

புதிதாய்ப் பிறந்த கன்றுகள் புலிகளுக்கு அஞ்சமாட்டா.
—சீனா

இளங் கன்று பயமறியாது. —தமிழ்நாடு

வாலிபம் என்பது பைத்தியம். —கீழ் நாடுகள்

கூர்மையான முள் இளமையிலிருந்தே அப்படி யிருப்பது.
—ஆப்கானிஸ்தானம்

இளைஞர்களைக் கேட்டுப் பாருங்கள்: அவர்களுக்கு எல்லாம் தெரியும்! —ஃபிரான்ஸ்

இளமையில் சூதாடிகள், முதுமையில் பிச்சைக்காரர்கள்.
—ஜெர்மனி

இளமையில் ரோஜா மலர்களின் மீது படுத்திருந்தால், முதுமையில் நீ முட்களின்மீது படுத்திருப்பாய். —இங்கிலாந்து

வாலிபத்திற்கு அடிக்கடி தோல் உரிந்து, புதுத் தோல் உண்டாகும். —அயர்லந்து

வாலிபத்தைப் பாராட்டிப் பேசினால், அது மேன்மையடையும்.
—அயர்லந்து

மென்மையான களியை எந்த உருவமாகவும் பிடிக்கலாம்.
—லத்தீன்

இளமையில் முகம் அழகு, முதுமையில் ஆன்மா அழகு.
—சுவிடன்

இளைஞர்கள் கூட்டமாய்ச் செல்வார்கள், நடுவயதினர் ஜோடியாகச் செல்வர், வயோதிகர் தனியாகச் செல்வர்.
—சுவீடன்

ஒருவர் இளமையா யிருத்தல் ஒரு சமயம்தான். —ஃபிரான்ஸ்

வாலிபம் இடைவிடாத ஒரு வெறி, அது அறிவின் காய்ச்சல்.
—ஃபிரான்ஸ்

மது இல்லாமலே வெறி கொள்வது வாலிபம். —கதே

வாலிபப் பருவத்தை அநுபவிக்க வேண்டும். —கிரீஸ்

அடங்காமல் துள்ளும் குட்டிகளே பின்னல் சிறந்த குதிரைகளாக ஆகின்றன. —கிரீஸ்

தெய்வங்களுக்குப் பிரீதியானவர்கள் இளமையிலே இறக்கிறார்கள். —கிரீஸ்

வாலிபம் துக்கத்துடன் தொடர்பு கொள்வதில்லை. —அரிஸ்டாட்டல்

குஞ்சுகளே வாத்துக்களைப் புல்வெளிக்கு அழைத்துச் செல்கின்றன. —இத்தாலி

வாலிபம் பறந்து செல்கின்றது. —லத்தீன்

காலை நேரம் இருக்கும் பொழுதே, மலர்களைப் பறியுங்கள். —லத்தீன்

பெருமையுள்ள செயல்கள் அனைத்தும் அநேகமாக இளைஞர்களாலேயே செய்யப் பெற்றிருக்கின்றன. —டிஸ்ரேலி

இறைவன் (படைத்த) ஆட்டுக் குட்டிகள் துள்ளி விளையாடும். —இங்கிலாந்து

வாலிபத்தில் கவனமின்றித் துள்ளினல், வயது காலத்தில் வருந்த வேண்டும். —இங்கிலாந்து

இளமையைத்தான் அடக்கிக்கொண்டு வரவேண்டும். முதுமை தானே தன்னை அடக்கிக் கொள்ளும். —இங்கிலாந்து

இளமையான தோள்களில் முதுமையான தலைகளை வைக்க முடியாது. —இங்கிலாந்து

வாலிபத்திலும் வெள்ளைத் தாளிலும் எதை எழுதினலும் பதிந்துவிடும். —இங்கிலாந்து

வாலிபம் நம்பிக்கைக்குரிய பருவம். —இங்கிலாந்து

வயோதிகர் குளிர்காய்ந்து கொண்டிருக்கையில், வாலிபர்கள் நடனமாடுவார்கள். —இங்கிலாந்து

# முதுமை

வீடு, 'போ, போ' என்கிறது. 'காடு வா, வா' என்கிறது.
—தமிழ்நாடு

வயது முதிர்ந்த மனிதன் எலும்புகள் நிறைந்த மெத்தை போன்றவன். —இங்கிலாந்து

வயது ஆக ஆக அறிவும் பெருகும், மடமையும் பெருகும்.
—இங்கிலாந்து

ஆலோசனைக்கு முதியோர், போருக்கு இளைஞர். —இங்கிலாந்து

முதுமையில் யோசிக்கவேண்டும், இளமையில் செயல் புரிய வேண்டும். —இங்கிலாந்து

காதலைப்போல, வயதையும் மறைக்க முடியாது. —இங்கிலாந்து

மனிதனையும் விலங்கையும் அடக்கி விடுபவை வயதும், விவாகமும். —இங்கிலாந்து

வயது கூடக் கூட, கல்லறை நெருங்கி வருகிறது. —இங்கிலாந்து

முதுமையில் இளமையை விரும்புவோர் இளமையில் முதியவராயிருக்க வேண்டும். —இங்கிலாந்து

முதுமையே ஒரு நோய். —இங்கிலாந்து

வயோதிகம் நோய்கள் சேரும் துறைமுகம். —இங்கிலாந்து

மரணத்தைவிட அஞ்சத்தக்கது முதுமை. —இங்கிலாந்து

முதுமை உள்ளே வந்தால், புத்தி வெளியே போய்விடும்.
—ஷேக்ஸ்பியர்

ஆகக் கூடிய வயதுடையவனும் இறந்துதான் போனான்.
—அயர்லந்து

வழித்துணைக்கு முதுமை ஏற்றதன்று. —டென்மார்க்

இதயம் எவ்வளவு முதுமையோ, அவ்வளவே ஒருவனுடைய முதுமை. —ஃபிரான்ஸ்

பெண்டிர்க்கு நரகம் முதுமை. —ஃபிரான்ஸ்

முதுமையால், முகத்தைக் காட்டிலும், மனத்திலே அதிகச் சுருக்கங்கள் விழும். —மான்டெயின்

வயதானவர்களுக்குத் தூரத்துப் பார்வை அதிகம். —ஜெர்மனி

இளேயோர் அறிய மாட்டார், முதியோர் மறந்துவிடுவர்.
—ஜெர்மனி

வயோதிகனேப் போல வாழ்வில் பற்றுடையவர் இல்லே.
—ஸாஃபாகிளிஸ்

கிழவர்கள் இரண்டாவது முறையாகக் குழந்தைகள்.
—கிரீஸ்

புறுவின் இளமையினும் கழுகின் முதுமை மேலானது.
—கிரீஸ்

இளமை ரோஜா மாலே, முதுமை முள் மகுடம். —லூதர்

இளமையில் தேவன், முதுமையில் சயித்தான். —எராஸ்மஸ்

முதுமையும் மகிழ்ச்சியும் சேர்ந்திருத்தல் அரிது. —ஸெனீகா

கிழவனுக்குத் தண்ணீர் இறங்கவில்லேயானுல், சமாதியைத் தயாரிக்கலாம். —ஸ்பெயின்

குழவிப் பருவத்தில் அழுகை அதிகம், வயது காலத்தில் பேச்சு அதிகம். —இந்தியா

வயதான பின்பு உன் குழந்தைகளுக்குப் பணிந்து நட.
—ஜப்பான்

யார் தலேமயிர்தான் நிறம் மாருமலிருக்கும்? —சீன

பற்கள் விழுந்த பிறகு, நாவு மட்டும் ஆடிக்கொண்டேயிருக்கும். —சீன

ஆகாத காலத்தில் கிழவர்களுக்கெல்லாம் பற்கள் விழாமலிருக்கும். —அரேபியா

இளமையின் நினைவு வந்தால் நெட்டுயிர்ப்புத்தான். —( ,, )

கரடிக்கு வயதானுல், அது குட்டிகளுக்கு விளேயாட்டுக் கருவியாகும். —குர்திஸ்தானம்

கிழவிகளே நீ ஏமாற்ற முடிந்தால், சயித்தானேயே நீ பிடித்து விடலாம். —ஐ. நாடோடிகள்

நாற்பது வயது இளமையின் முதுமை; ஐம்பது வயது முதுமையின் இளமை. —ஃபிரான்ஸ்

சயித்தான் தான் சாதிக்க முடியாத வேலைக்கு ஒரு கிழவியை அனுப்புவான். —போலந்து

வயது முதிர்ந்தவரைப் பார்த்து, 'உடம்பு எப்படி?', என்று கேட்க வேண்டாம், 'இப்போது என்ன நோய்?' என்று கேட்கவும். —போலந்து

முதியோரை மதித்தல் ஆண்டவனை மதிப்பதாகும். —பல்கேரியா

மனிதன் இருமுறை குழந்தை. —எஸ்டோனியா

கிழவருக்கு மரணம் கண் முன்னால் நிற்கும், இளைஞருக்குப் பின்புறம் நிற்கும். —எஸ்டோனியா

மனிதன் முதுமையடைகிறான், ஆனால் பிணி இளமை யடைகின்றது. —எஸ்டோனியா

தொட்டிலைத் தாங்குபவள் கிழவி, அவளே குழந்தையின் கைதி. —எஸ்டோனியா

கிழட்டுப் பசுவுக்குத் தான் கன்றாயிருந்தது நினைவிராது. —எஸ்டோனியா

கிழவிகளையும், ஓநாய்களையும் படைத்து, இறைவன் உலகைப் பாழாக்கி விட்டான். —எஸ்டோனியா

வயது முதிர்ந்தவன் நெடுநாளைக்குக் குழந்தையாயிருப்பான். —ஐஸ்லந்து

தாடியில்லாதவர்களுக்குச் சுவர்க்கத்தில் இடமில்லை. —ரஷ்யா

கிழவியும் சயித்தானும் எப்பொழுதும் கூடியேயிருப்பார்கள். —செர்பியா

வயதானவருக்கு அவர் கேட்குமுன்னால் கொடு. —ஆப்பிரிக்கா

தாடியுள்ள வாய் பொய் சொல்லாது. —ஆப்பிரிக்கா

முதுமைக்கு அஞ்சுங்கள், அது தனியாக வருவதில்லை. —கிரீஸ்

# உடற்குறைகள்

முடவன் ஒவ்வோர் அடியிலும் தடுக்கி விழுவான். —இந்தியா

குருடனை விருந்துக்கு அழைத்தால், இரண்டு விருந்தினர்கள் வருவார்கள். —இந்தியா

ஒடிந்த கையைச் சட்டைக்குள் மறைத்துக்கொள். —சீனு

குருட்டுப் பூனை செத்த எலியைத்தான் பிடிக்கும். —சீனு

குருடன் பார்க்க முடியவில்லை என்பதால், வானத்தின் நீல நிறம் குறைந்து விடுவதில்லை. —டென்மார்க்

குருடனும் சில சமயங்களில் தானிபத்தைக் கண்டுபிடிக்கிறுன். —ஃபிரான்ஸ்

குருடன் கொடிபிடித்துச் சென்றுல், அவன் பின்னுல் செல்பவர்களுக்கு ஆபத்துத்தான். —ஃபிரான்ஸ்

சூரியனையே பார்க்க முடியாதவன் குருடன்தான். —இத்தாலி

மனம் வேறிடத்தில் இருந்தால் (எல்லோருக்குமே) கண்கள் குருடுதான். —லத்தீன்

குருடர்களின் நடுவில் நீங்களும் கண்களை மூடிக்கொள்ளுங்கள். —துருக்கி

தீமையைப் பார்ப்பதைவிட, குருடாயிருப்பது மேல். —இங்கிலாந்து

கல்லும் வயிரமும் குருடனுக்கு ஒன்றுதான். —இங்கிலாந்து

கூனனுக்குத் தன் கூனல் தெரியாது, பக்கத்திலிருப்பவன் கூனலையே பார்ப்பான். —இங்கிலாந்து

திகைத்து நிற்பவனைவிட நொண்டி விரைவாக வந்து விடுவான். —இங்கிலாந்து

கூனன் தன் கூனலையும் சுமக்க வேண்டியிருக்கிறது. —யூதர்

நொண்டி வரும்வரை நாமும் காத்திருக்க வேண்டும். —ஃபிரான்ஸ்

# ஆரோக்கியம்

நல்ல காற்று ஆயிரம் அவுன்ஸ் மருந்துக்குச் சமானம்.
—ஜப்பான்

ஆரோக்கியமுள்ளவனுக்குத் தினசரி திருமணம் தான்.
—துருக்கி

முகமலர்ச்சி, நிதானமான வாழ்க்கை, அமைதி—இவை உள்ள இடத்தில் வைத்தியருக்கு வேலையில்லை. —ஜெர்மனி

மக்கள் ஆரோக்கியமாயிருந்தால், வைத்தியர்களுக்கு நோய் வரும். —ஜெர்மனி

இரவில் ஓர் ஆப்பிளை உண்டு வந்தால், பல் வைத்தியருக்கு நம்மிடம் வேலையில்லை. —இங்கிலாந்து

சூரியன் போகாத இடத்திற்கு வைத்தியர் போகிறார்.
—இத்தாலி

செல்வமில்லாமல் ஆரோக்கியம் மட்டும் இருந்தால், அதுவே பாதி நோயாகும். —இத்தாலி

உடல் நலமுள்ளவனுக்கு ஒவ்வொரு நாளும் விருந்துதான்.
—துருக்கி

ஒரு வேளை உணவை இழத்தல் நூறு வைத்தியர்களை அழைப்பதைவிட மேலானது. ஸ்பெயின்

இரவுச் சாப்பாட்டிற்கு முன்னும் பின்னும் சிறிது உலாவுதல் நலம். —லத்தீன்

நன்றாயிருக்கும் உடலிலேயே நல்ல மனம் தங்கியிருக்கும்.
—ஜெர்மனி

உடல் நலமாயிருக்கும் பொழுதே நோயைப்பற்றி ஆராய்ந்து தெரிந்துகொள். —ஜெர்மனி

ஐந்துக்கு எழுந்திரு, ஒன்பதுக்கு உணவருந்து, ஐந்துக்குச் சாப்பிடு, ஒன்பதுக்கு உறங்கு. —ஃபின்லந்து

ஒருவனுக்கு உடல் நலம் குறைவு என்றால், எல்லாமும் குறைவு என்று பொருள். —ஃபின்லந்து

உணவு, அமைதி, முகமலர்ச்சி ஆகிய மூவருமே உலகில் தலைசிறந்த மருத்துவர்கள். —இங்கிலாந்து

தாகத்தோடு படுக்கச் செல்பவன் உடல் நலத்தோடு விழித்தெழுவான் —இங்கிலாந்து

நல்ல மனைவியும் உடல் நலமும் மனிதனின் சிறந்த செல்வம். —இங்கிலாந்து

முன்னிரவில் தூங்கி, அதிகாலையில் எழுந்திருப்பவனுக்கு உடல் நலமும், செல்வமும் அறிவும் பெருகும். —இங்கிலாந்து

வைத்தியர்களைவிட உணவுமுறை அதிகக் குணமுண்டாக்கும். —இங்கிலாந்து

நீண்ட நாள் வாழ்வதற்குக் கதகதப்பான உடையணியவும், மிதமாக உண்ணவும், நிறைய நீர் பருகவும். —( ” )

மதிய உணவுக்குப் பின் சிறிது நேரம் அமர்ந்திரு, இரவு உணவுக்குப்பின் ஒரு மைல் நட. —இங்கிலாந்து

குளிர்ச்சியான தலையும், சூடான பாதங்களும் நீண்ட வாழ்வுக்கு உகந்தவை. —இங்கிலாந்து

ஆரோக்கியமுள்ள உடல் ஆன்மாவுக்கு விருந்து மண்டபம்; நோயுள்ள உடல் அதன் சிறைக்கூடம். —பேக்கன்

## நோய்

கோழிக்கு ஊசிப்புண் போதும். —இந்தியா

எப்பொழுதும் நோயுள்ளவனுக்குப் பெயர் ஆரோக்கியசாமி. —இந்தியா

முதல் சாமத்தில் எல்லோரும் விழித்திருப்பர்; இரண்டாவதில் போகி விழித்திருப்பான்; மூன்றாவதில் திருடன் விழித்திருப்பான்; நான்காவதில் நோயாளி விழித்திருப்பான். —இந்தியா

நோய் வந்து விட்டால் எந்த வைத்தியரையாவது அழை. —சீனா

வெளிச்சம் வருகிற சாளரத்தை அடைத்தல் வைத்தியர் வருவதற்குக் கதவைத் திறத்தலாகும். —சீனு

வயிற்றுப் பக்கம் நோயில்லையானல் நோயாளி இறக்க மாட்டான். —சீனு

கால் வலியை மறக்கலாம், தலைவலியை மறக்க முடியாது. —ஆர்மீனியா

நோய் குணமாகாது என்று தெரிந்தால் இருக்கிற மருந்தை ஒருவன் வீணுக்கமாட்டான். —ஜெர்மனி

நோயே ஒரு வைத்தியன். —ஜெர்மனி

நோயைப் போற்றி வைப்பவனிடம் அது உறவு கொண்டாடும். —ஜெர்மனி

நோயாளியிடம் பணம் இருப்பதற்குந் தக்கபடி பிணி நீடிக்கும். —ஜெர்மனி

உடலுக்கு நோய் வந்தால், மனத்திற்கு வந்துவிடும். —போஸ்னியா

நோயின் தந்தை எவனுயிருந்தாலும், தாய் உணவுக் கோளாறு தான். —இங்கிலாந்து

'ஆஸ்துமா' வந்தவர் நெடுநாள் வாழ்வர். —அயர்லந்து

முகத்தில் ஒரு பரு வந்துவிட்டால் உடலுக்குள் சயித்தான் புகுந்த மாதிரி. —அயர்லந்து

ஒவ்வொரு பிணியும் ஒரு வைத்தியன். —அயர்லந்து

நீடித்த நோய்களுக்குப் பொறுமைதான் மருந்து. —அயர்லந்து

வரட்சியான இருமல் வந்துவிட்டால், எல்லா நோய்களும் தீர்ந்துவிடும். [மரணம் வந்துவிடும்.] —வேல்ஸ்

மூக்கின்மேல் பரு வந்தால் அது ஆளை மறைத்துவிட்டுத் தானே முன்னல் தெரியும். —பல்கேரியா

ஆரோக்கியத்தின் அருமையை நோயில்தான் அறியலாம்.
—ஹங்கேரி

ஈக்கும் இருமலுண்டு. —இத்தாலி

நோய் வந்தவுடனேயே அதைக் கவனிக்க வேண்டும்.
—லத்தீன்

நோயின் கசப்பிலிருந்துதான் மனிதன் ஆரோக்கியத்தின் இனிமையை அறிகிறான். —கடலோனியா

நோயாளியின் நண்பன் அவனுடைய கட்டில்தான்.
—ஆப்பிரிக்கா

நோயை மறைத்தல் அபாயம். —லத்தீன்

நோயைக் கண்டுபிடித்தலே ஆரோக்கியத்திற்கு ஆரம்பம்.
—ஸ்பெயின்

வரும்போது நோய் குதிரைமேல் வரும், நீங்கும்போது நடந்து செல்லும் —இங்கிலாந்து

காலந்தோறும் நோயும் மாறுகின்றது. —இங்கிலாந்து

தடுமலுக்கு உணவு, காய்ச்சலுக்கு பட்டினி. —இங்கிலாந்து

புண்ணும் கட்டியும் எங்கு வேண்டுமானாலும் உண்டாகும்.
—ஜப்பான்

பிணி ஒவ்வொரு மனிதனுக்கும் யஜமானன். —டென்மார்க்

பிணியே வராதவன் முதல்வகுப்பிலேயே இறந்து போவான்.
—இங்கிலாந்து

நோயாளியின் அறை பிரார்த்தனைக் கூடம். —இங்கிலாந்து

நோயாளி எதுவும் பேசலாம். —இத்தாலி

நோயுற்ற காலங்களில் ஆன்மா தன் வலிமையைச் சேர்த்துக் கொள்கின்றது. —லத்தீன்

நோய் நாம் யார் என்பதைக் காட்டுகின்றது. —லத்தீன்

நோயாளிக்கு தேனும் கசக்கும். —ரஷ்யா

# வைத்தியம்

காலம்தான் தலை சிறந்த வைத்தியர். —யூதர்

ஆயிரம் பேரைக் கொன்றவன் அரை வைத்தியன்.
—தமிழ்நாடு

வைத்தியரின் மரங்களுக்கு நம் கண்ணீர்தான் தண்ணீர்.
—இந்தியா

வைத்தியருக்கு மூக்கிலே படர்தாமரை. —இந்தியா

அரைகுறை வைத்தியனால் உயிருக்கு ஆபத்து, அரைகுறை முல்லாவால் சமயத்திற்கே ஆபத்து. [முல்லா—முஸ்லிம்களின் குரு]
—இந்தியா

நீதிபதி, வைத்தியர் இருவரிடமிருந்தும் இறைவன் என்னைக் காப்பானாக.
—துருக்கி

உடலைக் குணப்படுத்தலாம், மனதைக் குணப்படுத்த முடியாது.
—சீனா

வைத்தியர் தூரத்திலிருந்து கொண்டே மருந்து அனுப்புதல், குருட்டுக் கண்ணால் பார்ப்பது போலாகும். —யூதர்

இலவச வைத்தியம்—பயனற்ற மருந்தாயிருக்கும். —யூதர்

நோயைச் சொன்னால்தான், குணமாக மருந்து கிடைக்கும்.
—ஃபிரான்ஸ்

வைத்தியர் வந்தாலே, நோய் குணமாகத் தொடங்கிவிடும்.
—ஃபிரான்ஸ்

வைத்தியர்கள் மட்டும் பொய் சொல்ல அனுமதியுண்டு.
—ஃபிரான்ஸ்

மெத்தப் படித்த வைத்தியரைவிட, ஆக்கமுள்ள வைத்தியர் மேல்.
—ஜெர்மனி

வைத்தியர் இளமையா யிருந்தால், எப்பொழுதும் மூன்று சவக்குழிகள் தயாரா யிருக்கவேண்டும். —ஜெர்மனி

வைத்தியனுக்கு மூன்று விஷயங்கள் தேவை: சிங்கத்தின் இதயம், பெண்ணின் கரம், கழுகின் பார்வை. —ஜெர்மனி

நோயைக் கொன்றாலும், ஆளைக் கொன்றாலும், வைத்தியருக்கு 'ஃபீஸ்' உண்டு. —போலந்து

பிச்சைக்காரர்களுக்குள் அவ்வளவு துவேஷம் கிடையாது; வைத்தியர்களுக்குள்ளே அதிக வெறுப்பு உண்டு —( " )

தனக்குத் தானே வைத்தியம் செய்துகொள்பவனுடைய நோயாளி மூடன். —இங்கிலாந்து

பல வைத்தியர்கள் பார்த்தால், மரணம் நிச்சயம்தான். —ஸெக்

தண்டனை யடையாமல் கொல்லக்கூடியவர் வைத்தியர் ஒருவரே. —ஹங்கேரி

எல்லோரும் ஆரோக்கியமா யிருந்தால், வைத்தியர் பாடு திண்டாட்டம். ஹங்கேரி

கடுமையான நோய்க்குக் கடவுளே வைத்தியர். —ஹங்கேரி

ஒரு தொழிலும் தெரியாதவன் வைத்தியனாகிறான். —இத்தாலி

வைத்தியர்கள் அதிகமானால், நோய்கள் பெருகும். —போர்ச்சுகல்

வைத்தியர்களும் நீதிபதிகளும் பயமில்லாமல் கொலை செய்கிறார்கள். —ரஷ்யா

ஒவ்வொரு பிணிக்கும் வைத்தியரை நாடவேண்டாம்; ஒவ்வொரு வழக்குக்கும் வக்கீலை நாடவேண்டாம். —ஸ்பெயின்

மரணம்தான் கடைசி வைத்தியர். —ஸ்பெயின்

நீ வைத்தியரை வெறுத்தால், பிணியையும் வெறுக்கவேண்டும். —ஆப்பிரிக்கா

அநுபவமில்லாதவன் வைத்தியரைக் குணப்படுத்திவிடுவான். —ஆப்பிரிக்கா

நீயோ வைத்தியரை ஏமாற்றிவிட்டாய்; அடுத்த நோய்க்குச் சொந்த வைத்தியம் செய்துகொள். —ஆப்பிரிக்கா

வைத்தியர்களில் வயதானவர், வக்கீல்களில் வாலிபர். —இங்கிலாந்து

குணப்படுத்துவது கடவுள், சன்மானம் பெறுவது வைத்தியர்.
—இங்கிலாந்து

தேவை வருமுன்பே வைத்தியருக்கு மரியதை செய்யவேண்டும்.
—இங்கிலாந்து

வைத்தியரிடத்திலும் வக்கீலிடத்திலும் உண்மையை மறைக்காதே.
—இத்தாலி

வைத்தியனுக்குக் கொடுப்பதை வாணியனுக்குக் கொடு.
—தமிழ்நாடு

ஒன்றும் தெரியாத வைத்தியன் கொலைகாரனைத் தவிர வேறில்லை.
—சீனு

வாலிப நாவிதன், வாலிப வைத்தியன் இருவரிடமும் எச்சரிக்கையா யிருக்க வேண்டும்.
—இங்கிலாந்து

வைத்தியர் குணமாக்கினல் சூரியனுக்குத் தெரியும்; வைத்தியர் கொன்றுவிட்டால் பூமிக்குத் தெரியும்.
—இங்கிலாந்து

வைத்தியர்கள் கலந்து ஆலோசிப்பதற்குள், நோயாளி இறந்து விடுகிறான்.
—இங்கிலாந்து

வைத்தியருக்குக் கொடுப்பதை ரொட்டிக்காரனுக்குக் கொடு.
—ஃபிரான்ஸ்

வைத்தியருக்குக் கொடுப்பதை இறைச்சிக்காரனுக்குக் கொடு.
—ஃபிரான்ஸ்

நோயைக் காட்டிலும் வைத்தியருக்கு அஞ்ச வேண்டும். ( ” )

ஒவ்வொரு வைத்தியரும் தம் மாத்திரைகளே உயர்ந்தவை என்று எண்ணுகிருர்.
—ஜெர்மனி

புது வைத்தியர் புதிதாகச் சவக்குழி தோண்டுபவர் —ஜெர்மனி

நல்ல வைத்தியர் எவரும் தாம் மருந்து உண்பதில்லை.—இத்தாலி

வைத்தியர் மனத்திற்கு ஆறுதலளிப்பவரைத் தவிர வேறில்லை.
—லத்தீன்

நோய்களுக்கு அஞ்சி ஓடும் பொழுது, நீங்கள் வைத்தியர் கைகளில் சிக்குகிறீர்கள்.
—லத்தீன்

சூரியன் ஒருபோதும் வராத இடத்திற்கு வைத்தியர் அடிக்கடி வருவார்.
—ஸெக்

# மருந்து

சுத்தமான தண்ணீரே உலகின் முதன்மையான மருந்து.
—ஸ்லாவேகியா

இனிப்பான மருந்துகளும், இன்பமான நோய்களும் உண்டா?
—இந்தியா

சாவைத் தடுக்க மருந்தில்லை. —இந்தியா

ஒற்றடம் போடுதல் பாதி வைத்தியம். —இந்தியா

பூண்டு தின்ற பின்னும் நோய் தீரவில்லை. —இந்தியா
[உள்ளிப்பூண்டு அவ்வளவு விசேஷமாகக் கருதப் படுகின்றது.]

பட்டினி யிருத்தல் பரம ஔடதம். —இந்தியா

விடத்திற்கு மருந்து விடம்தான். —இந்தியா

மருந்து கால் பாகம், மதி முக்கால் பாகம். —இந்தியா

குரங்குப் புண்ணுக்கு மருந்தில்லை. —இந்தியா

மருந்தை உண்டு பத்தியம் காவாதவன் வைத்தியரின் திறமையை வீணாக்குகிறான். —சீனா

மருந்து கொல்லுவதில்லை, வைத்தியரே கொல்லுகிறார். —சீனா

பல மனிதர்கள் நோய்களால் மடிவதில்லை, தாம் உண்ட மருந்துகளாலேயே மடிகின்றனர். —ஃபிரான்ஸ்

அளவில்லாவிட்டால், மருந்தும் விஷமாகும். —போலந்து

கடவுள் ஒவ்வொரு பிணிக்கும் ஒரு பச்சிலை அளித்திருக்கிறார்.
—பல்கேரியா

வாழவேண்டியவனுக்குப் மருந்துக்குப் பஞ்சமில்லை. —( ,, )

பச்சிலைகளில் சிறந்தவை பசி, உழைப்பு, வியர்வை.
—குரோஷியா

நாள்தோறும் ஆப்பிள் உண்பவன் வைத்தியர் பிழைப்பைக் கெடுக்கிறான். —ஸெக்

நாய்க்கடிக்கு நாயின் ரோமம் மருந்தாகும். —ஹங்கேரி

வெந்நீரும், 'எனிமா'வும் கொண்டே எல்லாப் பிணிகளையும் குணமாக்கலாம். [குடலில் நீரேற்றும் குழாய் 'எனிமா.'] —இத்தாலி

பூண்டு ஏழு பிணிகளைத் தீர்க்கும். —ரஷ்யா

தலையில் வலியெடுத்தால், முட்டில் தைலம் தடவு. —ஸ்பெயின்

உணவோடு சேர்த்து மருந்தைக் கொடுத்தால், நோய் குணமாகாவிட்டாலும், பசியாவது ஆறும். —ஆப்பிரிக்கா

## மரணம்

மரணத்தின் காரணம் பிறப்பு. —பௌத்தம்

மனிதன் பிறந்தவுடன் மரிக்கத் தொடங்குகிறான். —இங்கிலாந்து

இறந்தவனுக்குக் குளிரில்லை. —இங்கிலாந்து

திடீர் மரணம் திடீர் இன்பம் —இங்கிலாந்து

வைத்தியருக்கும் மரணம் உண்டு. —இங்கிலாந்து

மரணத்திற்கு அஞ்சுபவன் வாழ்பவனுகான். —இங்கிலாந்து

பிறப்பது போலவே, இறப்பதும் இயற்கை —இங்கிலாந்து

முற்றும் கனிந்த கனி முதலில் விழும். —இங்கிலாந்து

பிறக்கும் பொழுதுதான் நாம் அழுகிறோம்; மரிக்கும் பொழுதன்று. —இங்கிலாந்து

எல்லா மனிதரும் சிரஞ்சீவிகளா யிருக்கவே விரும்புகின்றனர். —இங்கிலாந்து

வாழ்வில் (நன்கு) வாழாதவன் மரணத்திற்குப் பின்னும் வாழ மாட்டான். —இங்கிலாந்து

மறு வாழ்க்கையை அலட்சியம் செய்பவன் இந்த வாழ்க்கைக்குத் தீங்கிழைக்கிறான் —யங்

நித்தியமான வாழ்க்கையைத் தவிர வேறில்லை என்றே நான் நினைக்கிறேன் என்பதைச் சத்தியமாய்ச் சொல்லுகிறேன்.
—விட்மன்

நித்தியமான வாழ்க்கையை விரும்புதல் ஒரு பெரிய தவறுதலை நிரந்தரமாக நிலைக்கும்படி செய்வதாகும். —ஷேக்ஸ்பியர்

நீயோ புழுதி, புழுதிக்கே நீ திரும்பவேண்டும்—பழையஏற்பாடு

இலை வாடுவதுபோல், நாம் அனைவரும் வாடி விடுவோம்.
—ஷேக்ஸ்பியர்

மரணம் கொம்பு ஊதிக்கொண்டு வருவதில்லை. —டென்மார்க்

அதிருஷ்டம் சிலருக்கே உண்டு, மரணம் எல்லோர்க்கும் உண்டு.
—டென்மார்க்

ஒருவருக்காக மற்றொருவர் உயிர் துறக்க முடியாது.
—ஃபிரான்ஸ்

பாம்பு சாகும்பொழுதே அதன் விடமும் செத்துவிடும். —( ” )

மரணம் என்பது புனிதமான உறக்கம். —கிரீஸ்

பகலை இரவில் புகழுங்கள், வாழ்வை முடிவில் புகழுங்கள்.
—கிரீஸ்

புகழ் பெற்ற மனிதர்க்கு உலகு அனைத்துமே சமாதி. —கிரீஸ்

மரணம் ஆண்டிக்கும் உண்டு, போப்பாண்டவருக்கும் உண்டு.
—இத்தாலி

இறந்தவன் ஒருவனைத் தூக்க நாலு பேர் வேண்டும். —( ”

ஆறடி நிலம் அனைவரையும் சமானமாக்குகின்றது. —இத்தாலி

மரணம் மருத்துவருக்கு அஞ்சாது. —லத்தீன்

ஓடுகிறவனுக்கு முன்னால் மரணம் ஓடி நிற்கும். —லத்தீன்

மரணம்—வாழ்க்கையின் வாயில். —லத்தீன்

இறந்தவனுக்கு மரியாதை நம் நினைவு, கண்ணீர் அன்று.
—லத்தீன்

மரணத்தின் நினைவோடு வாழ்வாயாக. —லத்தீன்

செத்தவனைத் தொடர்ந்து கொன்றவனும் விரைந்து செல்கிறான்.
—லத்தீன்

தன் காலம் முடியாமல் எவனும் இறப்பதில்லை. —யூதர்

இளைஞர் இறக்கக்கூடும். முதியோர் இறந்தே ஆக வேண்டும்.
—யூதர்

வீட்டிலே மருந்து இருக்கிறது, ஆனாலும் நாம் மரிக்க வேண்டியவர்களே.
—இந்தியா

பிறப்பதற்கு ஒரு நாளுண்டு, இறப்பதற்கும் ஒரு நேரமுண்டு.
—சீனா

பிறத்தல் என்பது வெளியே வருதல், இறத்தல் என்பது திரும்பிச் செல்லல்.
—சீனா

மரணம் நமது விருந்தாளி. —குர்திஸ்தானம்

மனிதன் பிறக்கும் பொழுது, அவன் அழுகிறான், மற்றவர்கள் சிரிக்கிறார்கள்; அவன் இறக்கும் பொழுது, அவன் சிரிக்கிறான், மற்றவர்கள் அழுகிறார்கள்.
—ஜெர்மனி

சவப் பெட்டி தொட்டிலின் சகோதரன். —ஜெர்மனி

(நாள் பார்த்துவர) மரணத்திடம் பஞ்சாங்கம் கிடையாது.
—இங்கிலாந்து

செத்த மீன்கள் வெள்ளத்தோடு போய்விடும். —இங்கிலாந்து

மரணமே உலகின் யசமானன் —அயர்லந்து

மரணம் உண்மையே பேசும். —பல்கேரியா

மரணமில்லாவிட்டால், வாழ்க்கை அற்புதமானதுதான்.
—பல்கேரியா

அவன் பாயைச் சுருட்டும் நேரம் வந்துவிட்டது. —ஜெர்ஸீ
[மரணத் தருவாய்]

மனிதன் மரணத்தின் குழந்தை —எஸ்டோனியா

சட்டை உடம்போடு ஒட்டியிருக்கும், அதைவிட ஒட்டியுள்ளது மரணம்.
—எஸ்டோனியா

பிறப்பைத் தப்ப முடியாதவன் இறப்பையும் தப்ப முடியாது.
—பின்லந்து

உலகத்தைவிட்டு வெளியேறுவதற்குப் பல வழிகள் இருக்கின்றன; ஆனால் இங்கு வருவதற்கு ஒரே வழிதான் உண்டு.
—போர்ச்சுகல்

மரணத்திற்கு விலை உண்டு; வாழ்வைக் கொடுத்து மரணத்தை வாங்க வேண்டியிருக்கிறது.
—ரஷ்யா

மரணம் வீட்டுக்கு வந்துவிட்டால், மரண அவஸ்தை தீர்ந்தது
—ரஷ்யா

கண்ணீர் உயிரைப் பிடித்து வைக்க முடியாது. —ஆப்பிரிக்கா

செத்தவற்றிலும் உயிருள்ளவை இருக்கும், உயிருள்ளவைகளிலும் இறந்தவை இருக்கும். —ஆப்பிரிக்கா

மரணம் வீட்டின் உடைமைக்காரன், அந்நியனல்லன். —( ,, )

தொடர்ந்து நடுங்கிக் கொண்டிருப்பதைவிட, ஒரேயடியாக மரித்தல் மேலானது.
—கிரீஸ்

மனிதர் நியாயமற்ற முறையில் மரணத்தை வெறுக்கின்றனர்; அவர்களுடைய பல துயரங்களுக்கும் அதுவே காப்பாயிருக்கின்றது.
—கிரீஸ்

மரணத்தில் பயங்கரம் ஒன்றுமில்லை; கேவலமான மரணமே அத்தகையது.
—கிரீஸ்

நல்ல மரணம் வாழ்வு முழுவதும் பெருமை யளிப்பது.
—இத்தாலி

உழைப்பு, கவலைகளிலிருந்து ஓய்வு பெறுவது மரணம்.
—லத்தீன்

மரணம் எல்லாப் பொருள்களையும் சமமாக்குகின்றது —( ,, )

மரணம் உனக்காக எங்கே காத்திருக்கும் என்பது நிச்சயமில்லை; ஆதலால் அதை எங்குமே எதிர்பார்க்க வேண்டும்.
—லத்தீன்

போய்விட்டான் என்று நீங்கள் சொல்பவன் (நமக்கு) முன்னால் போய் நிற்கிறான்.
—லத்தீன்

உன் கடைசி நாளை எண்ணி அஞ்சவும் வேண்டாம், அதை விரும்பவும் வேண்டாம். —லத்தீன்

இறந்தோரைப் பற்றிப் பெருமையாக மட்டும் பேசு. —லத்தீன்

மரணத்திற்கு மருந்தில்லை. —லத்தீன்

மரணம் வயது முதிர்ந்ததைக் கொண்டு போவதில்லை; பழுத்ததையே கொண்டு போகின்றது. —ரஷ்யா

மரணம் குட்டிகளையும், ஆடுகளையும் சேர்த்து விழுங்குகின்றது —ஸ்பெயின்

மரணம் உண்மையைப் புலப்படுத்துகின்றது. —யூதர்

## கல்லறை

புதைப்பதற்கு எந்த நிலமும் நல்லதுதான். —ஜப்பான்

வாழ்க்கையில் முதன்மையான விஷயம் நல்ல முறையில் அடக்கம் செய்யப்படுதல். —சீனு

இடுகாடுதான் குடிக்கூலி குறைவான விடுதி. —நீகிரோ

பூமிதான் தக்க புகலிடம். —இங்கிலாந்து

கல்லறையுள் அரசன் யார்? ஆண்டி யார்? —இங்கிலாந்து

தங்க முலாம் பூசிய கல்லறைகளினுள்ளும் புழுக்களே உள்ளன. —ஷேக்ஸ்பியர்

நம்முடைய வாழ்வு சமாதியை நோக்கிச் செல்லும் யாத்திரையாகத்தான் இருக்கிறது. —இங்கிலாந்து

பொதுவாக எல்லோரும் சந்திக்குமிடம் சமாதிதான். —(" )

வயது கூடக்கூட, நாம் கல்லறையை நெருங்கிக் கொண்டேயிருக்கிறோம். —இங்கிலாந்து

கல்லறையிலேதான் ஓய்வுண்டு. —யூதர்

நாம் வாங்குகிற ஒவ்வொரு மூச்சும் நம் சமாதியை நோக்கி எடுத்து வைக்கும் ஒவ்வோர் அடியாகும். —அரேபியா

# நன்மையும் தீமையும்

ஒவ்வொரு நன்மையிலும் ஒரு தீமையும் உண்டு. —லத்தீன்

நல்லது நத்தை வேகத்தில் பரவும்; தீயது சிறகடித்துப் பறக்கும். —இந்தியா

நன்மைகள் ஜோடி ஜோடியாக வருவதில்லை, சோகங்கள் தனித்தும் வருவதில்லை. —சீனு

விளக்கை ஏற்றுவதைவிட அணைப்பது எளிது. —ஜெர்மனி

வாரந்தோறும் ஞாயிறு உண்டு, அத்துடன் வெள்ளியும் உண்டு. [ஞாயிறு ஓய்வு நாள், வெள்ளி உபவாச நாள்.]—போலந்து

நன்மை செய்வதில் நோக்கத்தைவிடச் செயல்தான் முக்கியம்; தீமையில் செயலைவிட நோக்கமே முக்கியம். —ஸ்பெயின்

நல்லது செழிப்பா யிராது. —ஸ்பெயின்

நல்லதை உள்ளே வைத்தால், நல்லதை வெளியே எடுக்கலாம். —யூதர்

உலகத்திலுள்ள எல்லாத் தலைகளையும்விட, ஒரு நல்ல இதயம் மேலானது. —இங்கிலாந்து

உறுதியா யில்லாவிட்டால், நீ நல்லவனுயிருக்க முடியாது. —இங்கிலாந்து

தீமைக்கு உதவி செய்பவன் நன்மைக்குக் கேடு செய்கிருன். —கிரீஸ்

நல்லவர்கள் ஒவ்வொருவரிடத்திலும் ஒரு தெய்வம் தங்கியிருக்கின்றது. —லத்தீன்

அதிருஷ்டமுள்ளவன் என்பதைக் காட்டிலும், நல்லவன் என்று பெயரெடு. —லத்தீன்

நன்மை செய்வதில் நாம் சலிப்படையாமல் இருப்போமாக. —புதிய ஏற்பாடு

நீ நல்லவனுயிருந்தால், தனிமையாயிருப்பாய். —மார்க் ட்வெயின்

தீமை வெளியே போயிருந்தால்தான், நன்மை விட்டுக்குள் வர முடியும். —ஸெக்

# உலக அநுபவம்

வீடுதோறும் மண் அடுப்பு உண்டு. —இந்தியா

மனிதன் நனைந்தாலொழியக் குடிசை கட்ட மாட்டான்; தலையில் தட்டி வீங்கினா லொழியக் குனிய மாட்டான். —இந்தியா

மரத்திலே பானை செய்தால், ஒரு முறைதான் சமைக்கலாம். —இந்தியா

உலகம் யானைக்கே உதவி செய்யும், எறும்பை மிதித்து நசுக்கி விடும். —இந்தியா

ஒவ்வொரு நிமிடமும் உலகை உற்றுப் பார்த்தால், எவர்களைப் பாராட்டுவது, எவர்களிடம் துக்கம் விசாரிப்பது. —இந்தியா

நீ ரொட்டியுடன் சர்க்கரை சேர்த்து உண்ண வேண்டுமானால் உலகைப் புகழ்ந்து பேசு. —இந்தியா

பாதிக் கோழியை கறிவைத்து, பாதியை முட்டையிட வைத்துக் கொள்ள முடியாது. —இந்தியா

நண்பனை வறுமையில் அறியலாம், வீரனைப் போரில் அறியலாம், யோக்கியனைக் கடனில் அறியலாம், மனைவியைச் செல்வமிழந்த நிலையில் அறியலாம், பந்துவை இடுக்கண் வருங்கால் அறிலாம். —இந்தியா

நாவிதரில் பழையவன், வண்ணாரில் புதியவன். —இந்தியா

பத்து மனிதர்—பத்து நிறம். —ஜப்பான்

மூடு பனியை விசிறியால் விரட்ட முடியாது. —ஜப்பான்

கற்கள் மிதக்கும்பொழுது, இலைகள் அழிந்துவிடும். —ஜப்பான்

திறமையுள்ள நீச்சல்காரர்கள் நீரிலே மடிவார்கள்; திறமை யுடன் சவாரி செய்பவர்கள் வேட்டையிலே மடிவார்கள். —ஜப்பான்

பத்து நாளில் சூடாக்கியது ஒரே நாளில் குளிர்ந்து விடும். —ஜப்பான்

பண்டைக்காலம் முதல் மாருமல் இருப்பவை, நீரின் ஓட்டமும் காதலின் போக்கும். —ஜப்பான்

ஆயிரம் உபதேசங்களைவிட ஓர் அநுபவம் பாடம் கற்பிக்கும். —துருக்கி

(கோவேறு) கழுதை மேலுள்ள பாரத்தில் சேணத்தைச் சேர்த்துக் கணக்கிடுவதில்லை. —துருக்கி

உலகிலே ஆதாயம், புகழ் என்ற இரண்டு பேர்கள் மட்டுமே ஓடிச் சாடித் திரிகிருர்கள். —சீன

வீட்டுக்குள்ளே வண்டி செய்யலாம், ஆனல் அதைப் பாதையிலேதான் ஓட்டவேண்டும். —சீன

உலகம் முழுவதும் காகம் கருமைதான். —சீன

நாயின் வாயில் தந்தம் இராது. —சீன

சேற்றில் ஓர் அடி வைப்பதை விட, பத்தடி சுற்றிச் செல்வது மேல். —சீன

வல்லவர்களை அடக்க வல்லவர்கள் உண்டு; திறமைசாலிகளைத் தொடர்ந்து திறமைசாலிகள் வருவார்கள். —சீன

வீட்டுக்கு வெளியே மனிதருக்கு மதிப்பு குறையும்; சரக்குகளுக்கு மதிப்புக் கூடும். —சீன

நீர் கப்பலைத் தாங்கும், அதுவே கப்பலைக் கவிழ்க்கவும் செய்யும். —சீன

வண்டி வந்தால், வழி உண்டாகும். —சீன

வழியை அடைத்து வேலி போட்டால், ஜனங்கள் அதில் ஏறிக் குதிப்பார்கள்; வழியைத் திறந்து வைத்தால், வேலியை உடைப்பதற்கு வேறிடம் பார்ப்பார்கள். —சீன

ஒட்டகத்தின் மேலிருப்பவன் திட்டங்கள் போடுகிருன்; ஒட்டகத்திற்கும் திட்டங்கள் உண்டு. —அரேபியா

ஈச்ச மரத்திற்கு வேர் தண்ணீரிலும், உச்சி வெய்யிலிலும் இருக்க வேண்டும், —அரேபியா

செத்தது நாய்தான், ஆனால் சவ ஊர்வலம் மிக நீளம்.
—அரேபியா

யூதனுடன் சாப்பிடு, ஆனால் கிறிஸ்தவன் வீட்டில் படுத்துறங்கு.
—அரேபியா

நீதிபதியின் குதிரை (கோவேறு கழுதை) இறந்தால், எல்லோரும் சென்று துக்கம் விசாரிப்பர்; நீதிபதியே இறந்து போனால், ஒருவரும் போகமாட்டார். —( " )

நீ மிகவும் மென்மையாயிருந்தால், உன்னைக் கசக்கிப் பிழிந்து விடுவார்கள்; நீ விறைப்பாயிருந்தால், உன்னைத் தகர்த்து விடுவார்கள். —அரேபியா

கிணற்றைப் பனி நீரால் நிரப்ப முடியாது. —அரேபியா

ஒட்டகை மேல் உள்ளவனுக்கு முதுகு கூனலில்லை.
—ஆர்மீனியா

ஒரு மேட்டை வெட்டினால்தான் ஒரு பள்ளம் நிரம்பும். —( " )

எங்கோ உள்ள ஃபீனிக்ஸ் பறவையைவிட உள் நாட்டுக் காகம் மேலானது. [ஃபீனிக்ஸ் பறவை இறந்தபின்னும் உயிர் பெறுமாம். இது கவிஞர்களின் கற்பனை.] —கீழ்நாடுகள்

வாள், பெண், பெட்டைக் குதிரை, தண்ணீர்—இவைகளில் நம்பிக்கை வைக்க வேண்டாம். —ஆப்கானிஸ்தானம்

நல்ல கனியிலிருந்து கசக்காமலே சாறு வரும். —பாரசீகம்

மாவுத்தன் யானைகளாலேயே சாவான், முதலைகளை வளர்ப்பவன் அவைகளாலேயே சாவான், பாம்பாட்டி பாம்புகள் கடித்தே சாவான். —சயாம்

போகும்பாது பாதை கரடுமுரடு, திரும்புபோது மென்மையாகி விடும். —தாய்லாந்து

தெரிந்த மனிதனின் குணத்தை நாம் பேற்றுவோம், தெரியாத மனிதனின் அங்கியைப் போற்றுவோம். —தாய்லாந்து

தேசத்தைப் போல மொழி, அரசனைப் போலப் பிரஜைகள், தாயைப் போல மகள், விதையைப் போல முளை. —பார்சி

சேற்றிலிருப்பவன் கரையிலிருப்பவனையும் சேர்த்து இழுத்துக் கொள்வான். —ஃபிரான்ஸ்

இரண்டு சனிக்கிழமைகளுக்கு இடையிலே எத்தனையோ அற்புதங்கள் நிகழ்கின்றன. —ஃபிரான்ஸ்

ஒரு பையிலுள்ள அரிவாள், பூட்சுக்குள் இருக்கும் துரும்பு, சாளரத்தின் அடியிலுள்ள பெண்—இவைகள் தாம் இருப்பதை அறிவுறுத்திக் கொண்டேயிருக்கும்.
—ஜெர்மனி

இந்தக் காலத்தில் சுவர்க்கத்திற்குப் போனால்தான் நாம் தேவர்களைச் சந்திக்க முடியும். —போலந்து

பூட்ஸ் தேய்வைவிடப் பாதங்கள் தேய்வது நலமென்றே செல்வர்களும் ஏழைகளும் சேர்ந்து சொல்லுகிறார்கள்
—போலந்து

பெரிய மரம் சாய்ந்தவுடன், ஒவ்வொருவரும் வந்து அதை வெட்டிக் கொண்டு போவர். —போலந்து

நீ இனிமையா யிருந்தால், உன்னை விழுங்கி விடுவார்கள்; கசப்பா யிருந்தால் உன்னை வெளியே துப்பிவிடுவார்கள்.
—போலந்து

தாடியுள்ள பெண்களையும், தாடி வளராத ஆண்களையும் நம்ப வேண்டாம். —பாஸ்க்

கேள்வி, கவனம், மௌனம், பொறுமை—இவை நீ கேளாமலே எல்லாவற்றையும் உனக்குக் கற்பிக்கும். —பெல்ஜியம்

தானாக ஓடுகிற வண்டியைத் தள்ளிவிட ஆள் சேரும்.
—ஸ்காட்லந்து

ஓர் அறையிலே மரணம்; அடுத்த அறையிலே வாரிசுரிமை.
—ஸ்காட்லந்து

பாட்டன் வாங்குகிறான், தந்தை கட்டுகிறான், மகன் விற்கிறான், பேரன் பிச்சையெடுக்கிறான். —ஸ்காட்லந்து

நெட்டையா யிருந்தால் இராட்சசன் என்பார்கள், குட்டையா யிருந்தால் குள்ளன் என்பார்கள். —வேல்ஸ்

தந்தையும் தாயும் நமக்குப் பேசக் கற்பித்துள்ளனர்; உலகம் வாயை மூடிக் கொண்டிருக்கக் கற்பித்துள்ளது. —ஸெக்

இருபதில் அழகன், முப்பதில் பலசாலி, நாற்பதில் செல்வந்தன், ஐம்பதில் அறிவாளி என்றில்லாதவன், பின்னால் அவ்வாறு ஆக முடியாது. —ஸெக்

எல்லாவற்றையும் தராசில் நிறுக்க முடியாது. —டென்மார்க்

இறக்கிறவர்கள் உள்ள இடத்திலேயே வாரிசுகளும் இருக்கிறார்கள். —எஸ்டோனியா

உனக்கு மேலானவரிடமிருந்து ஒதுங்கியிரு. —கிரீஸ்

வைத்தியர்கள், மூடர்கள், உபதேசம் செய்பவர்கள்; இந்தத் தொழில் பார்ப்பவர்களே அதிகம். —ஹங்கேரி

முன்னேறாதவன் பின்னேறுகிறான். —லத்தீன்

வயிறு நிறைந்தவனும் பட்டினி கிடப்பவனும் ஒரே பாட்டைத்தான் பாடுகிறார்கள். —நார்வே

வானம் என்னைப் படைத்தது, பூமி என்னைத் தாங்குகின்றது. —ரஷ்யா

தெரிந்ததை யெல்லாம் சொல்லாதே, கேட்டதையெல்லாம் நம்பாதே, முடிந்ததை யெல்லாம் செய்யாதே. —போர்ச்சுகல்

பாதி உலகம் துள்ளுகின்றது, பாதி அழுகின்றது. —ரஷ்யா

வீடுதோறும் புகைக் கூண்டு கறுப்பாய்த்தான் இருக்கும். —செர்பியா

ஒவ்வொரு கிராமமும் தன் பாட்டையே பாடுகின்றது. —( " )

உலகத்தின் இயல்பு இப்படி யிருக்கிறது; பணம் ஒருவன் கையில், பை மற்றொருவன் கையில். —சைலீஷியா

வக்கீலிடம் பற்று அதிகமானால் செல்வம் குறைந்துவிடும்; வைத்தியரிடம் பற்று அதிகமானால் ஆரோக்கியம் குறைந்துவிடும்; பாதிரியாரிடம் பற்று அதிகமானால் கௌரவம் குறைந்துவிடும். —ஸ்பெயின்

வெய்யிலும், துக்கங்களும், விருந்துகளும் சவக்குழிகளை நிரப்புகின்றன. —ஸ்பெயின்

பலர் முகர்ந்த ரோஜாவில் மணம் இராது. —ஸ்பெயின்

அநுபவத்தை ஆண்டுகளைக் கொண்டு கணக்கிட முடியாது; ஏனெனில் ஒரு மணி நேரத்தில் பல ஆண்டுகளைக் கடத்தி விடலாம். —ஸ்விட்சர்லந்து

ஒருவன் யாத்திரை போய்ப் போய்க் கடைசியில் தன் வீட்டுக்கே வருகிறான்; ஒருவன் வாழ்ந்து வாழ்ந்து கடைசியில் பூமிக்கே திரும்புகிறான். —ஆப்பிரிக்கா

எதிலும் அநுபவமில்லாதவர்களுக்கு அழுகுரலும் பாட்டாகத் தோன்றும். —ஆப்பிரிக்கா

இந்த உலகத்தில் மூன்று நண்பர்கள் இருக்கிறார்கள்; தைரியம், புத்தி, நுண்ணறிவு. —ஆப்பிரிக்கா

உன்னை நேசிப்பவன் களைப்படையச் செய்கிறான், துவேஷிப்பவன் கொன்றுவிடுகிறான். —ஆப்பிரிக்கா

நீரிலே ஆழ்பவர்களைக் காட்டிலும், நிலத்திலே ஆழ்பவர்கள் அதிகம். —ரஷ்யா

## உலகத்தோடு ஒழுகல்

மனிதர்களைச் சந்தித்தாலும், பேய்களைச் சந்தித்தாலும், அவர்கள் பேசுவது போலவே பேசவும். —சீனா

நீ விரும்பியதெல்லாம் உண்ணலாம், ஆனால் உடை மட்டும் மற்றவர்களைப் போலவே அணிந்துகொள்ள வேண்டும். —அரேபியா

நண்பகலில் அரசன் அது நிசி என்றால், நீயும் நட்சத்திரங்களைப் பார். —அரேபியா

ஒருவன் உன்னைக் கழுதை என்றால், கவனிக்க வேண்டாம்; இருவர் சொன்னால், உன் முதுகில் பொதியை ஏற்றிக் கொள்ள வேண்டியதுதான். —யூதர்

பலர் செய்வதைப்போல நீயும் செய்; உன்னை மக்கள் பெருமையாய்ப் பேசுவர். —யூதர்

மற்றவர்கள் உரக்கக் கூவினால் ஊளையிடு. —ரஷ்யா

குருடர்கள் நடுவில் நீயும் கண்களை மூடிக்கொள். —துருக்கி

எந்த நாட்டிற்குப் போனாலும், அங்கே செய்யத் தகாதவை எவை என்று முதலில் தெரிந்துகொள்ளவும். —சீனா

ஒரு நகரத்தில் எல்லோரும் ஒரு கன்றைக் கும்பிடுவதைக் கண்டால், நீயும் அதற்குப் புல்லறுத்துப் போடு. —எகிப்து

## உலக நாடுகளும் மக்களும்

சீனவிலே படிப்பவர்களைக் காட்டிலும் ஆசிரியர்கள் அதிகம்; நோயாளரைக் காட்டிலும் வைத்தியர்கள் அதிகம். —சீன

ஆங்கிலேயர் (அரபு) சுல்தானுக்கு அம்மான்மார்கள். —அரேபியா

அரபு ஒரு மொழி, பாரசீக மொழி ஒரு மிட்டாய், துருக்கி மொழி ஒரு கலை. —பாரசீகம்

அரபு மொழி மனிதரைப் புகழ்ந்து பேச நல்லது; துருக்கி அவர்களைக் கண்டிக்க நல்லது, பாரசீகம் அவர்களுக்கு உண்மையை உணர்த்த நல்லது. —பாரசீகம்

எதியோபியன் வெள்ளையனுல், ஃபிரெஞ்சுக்காரர் ஆங்கிலேயரை நேசிப்பார்கள். —இங்கிலாந்து

ஸ்காச்சுக்காரன் தன் இனத்தைக் காணும்வரை சண்டைக்குக் கிளம்பமாட்டான். —இங்கிலாந்து

மாட்டின் கொம்புகள், குதிரையின் குளம்புகள், ஆங்கிலேயனின் புன்னகை ·இவைகளில் உஷாரா யிருக்கவேண்டும். —அயர்லந்து

மன்ஸ்டர்காரன் 'உருளைக் கிழங்கு' என்று வாயால் சொல்வதற்குள்ளே, அல்ஸ்டர்காரன் உருளைக்கிழங்கை மண்ணிலிருந்து தோண்டியெடுத்து, கழுவி, வேகவைத்து, உண்டு விடுவான். —அயர்லாந்து

நல்லவரோ, கெட்டவரோ—எல்லோரும் பல்கேரியர். —பல்கேரியா

கடவுள் பூமியைப் படைத்தார்; ஆனல் டச்சுக்காரர்களே ஹாலந்தைப் படைத்தனர். —பல்கேரியா

கிரேக்கன் வெறும் கிழவன யிருந்ததில்லை, —கிரீஸ்

உலகம் முழுவதையும் எதிர்த்துச் சண்டையிட்டாலும், இங்கிலாந்துடன் சமாதானமாகப் போகவேண்டும்.
—இத்தாலி

இங்கிலாந்து ஆடவர்களுக்குச் சிறைச்சாலை, பெண்களுக்குப் பேரின்பம்.
—இத்தாலி

இத்தாலியர் ஒரு காரியத்தைச் செய்யுமுன் புத்திசாலிகள்; ஜெர்மானியர் செய்யும்பொழுது புத்திசாலிகள்; பிரெஞ்சுக் காரர்கள் செய்த பின்பு புத்திசாலிகள்.
—இத்தாலி

கிரேக்கர்கள் ஆண்டுக்கு ஒரு முறைதான் உண்மை பேசு வார்கள்.
—இத்தாலி

யூதனை ஏமாற்றினுல் அவன் உன்னை முத்தமிடுவான்; யூதனை முத்தமிட்டால் அவன் உன்னை ஏமாற்றுவான்.
—இத்தாலி

கயிறு சும்மா கிடைக்கிறது என்றுல், யூதன் தன்னைத் தூக்கி லிடச் சம்மதித்து விடுவான்.
—இத்தாலி

ரஷ்யாவுக்கும் கோடைக்கும் உறவே கிடையாது. [வருடத் தில் பாதிக்குமேல் பனி உறைந்திருக்கும் நாடு.]
—ரஷ்யா

ஜார் இல்லாமல் ரஷ்யாஇருக்க முடியாது. [1917-க்கு முன்னுல்.]
—ரஷ்யா

ஜாருக்கு ஜலதோஷம் வந்தால், ரஷ்யா முழுவதும் இருமும்.
—ரஷ்யா

ஜார் உனக்கு ஒரு முட்டை பரிசளித்தால், அதற்கு ஈடாக அவர் ஒரு கோழியை உன்னிடமிருந்து எடுத்துக்கொள் வார்.
—ரஷ்யா

ஜாரின் பாவத்திற்கு நாடு முழுதும் பாவமன்னிப்புத் தேட வேண்டும்.
—ரஷ்யா

நமது மொழி இனிய தேன் குழம்பு.
—ரஷ்யா

ஒரு யூதனைக் கொன்றுல், பழைய பாவங்கள் நாற்பது உன்னை விட்டு நீங்கும்.
—ரஷ்யா

ஜெர்மானியன் நம்மைப் பேனுவைக் கொண்டு விரட்டுவதை விட, துருக்கியன் வாளைக் கொண்டு விரட்டுவது மேல்.
—ரஷ்யா

ஃபின்லந்து சயித்தானின் நாடு. —ரஷ்யா
[வளமற்ற, பாறைகள் நிறைந்த நாடு.]

ஒருவன் நல்லவனாயினும், ஜெர்மனியனா யிருந்தால், அவனைத் தூக்கிலிட வேண்டியதுதான். —ரஷ்யா

சந்திரன்தான் கோஸாக்கியருக்குச் சூரியன். —ரஷ்யா

மாஸ்கோவில் இரக்கம் கிடையாது. [மிகப் பெரிய நகரம்.] —ரஷ்யா

ஸ்பெயின் நாட்டான் ஒருவன் பாடுகிறான் என்றால், அவனுக்குப் பயித்தியம், அல்லது அவனிடம் காசில்லை என்று அர்த்தம். —ஸ்பெயின்

பிறந்தால் இத்தாலியில் பிறக்கவேண்டும், ஃபிரான்ஸில் வாழவேண்டும், ஸ்பெயினில் மடியவேண்டும். —ஸ்பெயின்

எகிப்தின் செல்வங்கள் அங்குள்ள அந்நியர்களுக்கு. —அரேபியா

வெள்ளையர்களை மரணம் ஒன்றுதான் வெல்கின்றது. ( ” )

கிரேக்கனோடு கை குலுக்கினால் உன் விரல்களை எண்ணிப் பார்த்துக் கொள். —அல்பேனியா

ஜெர்மனியில் கழுதையா யிருப்பது, ரோமாபுரியில் பேராசிரியராயிருக்கும். —ஜெர்மனி

யூதனை ஏமாற்றுபவன் யூதனாய்த்தான் இருப்பான். ( ” )

வாணிபம் யூதர்களைக் கெடுத்துவிட்டது; யூதர்கள் வாணிபத்தைக் கெடுத்துவிட்டார்கள். —ஜெர்மனி

ரோமாபுரி பணம் கொடுப்பவனுக்கு மட்டும் சுவர்க்கத்தைத் திறந்து விடுகின்றது. —ஜெர்மனி

ஸெக்கோஸ்லேவேகியாவில் ஒவ்வொரு மனிதனும் ஓர் இசைவாணன். —போலந்து

போலந்துக்காரனை ஜெர்மானியன் ஏமாற்றுகிறான், ஜெர்மானியனை இத்தாலியனும், இத்தாலியனை ஸ்பெயின் நாட்டானும், ஸ்பானியனை யூதனும், யூதனைச் சயித்தானும் ஏமாற்றுகின்றனர். —போலந்து

இத்தாலியில் படிக்கவேண்டும்; ஜெர்மனியில் உடைகள் வாங்கி அணியவேண்டும்; ஃபிரான்ஸில் விருந்து உண்ண வேண்டும். —போலந்து

போலந்து குடியானவனின் நகரம், யூதனின் சுவர்க்கம்.— ( ” )

போலந்தில் ஆண்களைவிடப் பெண்களே பலசாலிகள் —( ” )

ஒவ்வொரு இத்தாலியனும் ஒரு வைத்தியன்; ஒவ்வொரு ஜெர்மானியனும் ஒரு வணிகன். —போலந்து

போப்பாண்டவர் உள்ள இடம்தான் ரோமாபுரி. —போலந்து

பெண்களின் செருக்கும், பாதிரிகளின் செருக்கும் அயர்லந்தை அழித்துவிடக் கூடியவை. அயர்லந்து குதிரை யில்லாவிட்டால், கோஸாக்கியன் இல்லை. —ரஷ்யா

கோஸாக்கியன் தான் பட்டினி கிடந்தாலும், தன் குதிரைக்கு இரையளிப்பான். —ரஷ்யா

குதிரை மேலுள்ள கோஸாக்கியனைவிட, மேலானவர் கடவுள் ஒருவர் தான். —ரஷ்யா

ரஷ்யாவின் இன்பம் குடி —ரஷ்யா

உக்ரேனியாவுக்கு வெளியே சுதந்திரம் கிடையாது. —ரஷ்யா

## செல்வம்

உன் சொத்து உன்னிடமுள்ள அடைக்கலப் பொருள் என்று கருது. —அரேபியா

செல்வமுள்ள இடத்தில் சோகம் சேர்ந்திருக்கும். —இந்தியா

ஏழை பணக்காரனுனால், நடுப்பகலில் நட்சத்திரங்களைப் பார்ப்பான். —இந்தியா

வயிறு நிறைந்திருந்தால், பையும் நிறைந்திருக்கும். —( ” )

தங்கத்தின் ஒளியில் மூடனும் அறிவாளியாய்த் தோன்று கிறான். —ஜப்பான்

செல்வம் குற்றங்கள் அனைத்தையும் மறைக்கும். —யூத

தங்கப் பாத்திரத்தில் யார்தான் பிச்சையிட மறுப்பர்?
—கீழ்நாடுகள்

அளவற்ற செல்வமுடையவர்களுக்கு அளவற்ற தேவைகளுண்டு.
—பாரசீகம்

வறுமை மனிதர்களை உண்டாக்கும், செழிப்பு அரக்கர்களை உண்டாக்கும்.
—ஃபிரான்ஸ்

செல்வனுக்குத் தன் நண்பர்கள் எவர்கள் என்று தெரியாது.
—ஃபிரான்ஸ்

தங்க நங்கூரம் இருந்தால், எந்தத் துறையிலும் தங்கலாம்.
—ஜெர்மனி

வெள்ளிக் கட்டிலில் சயனிப்பவன், தங்கக் கனவுகள் காண்பான்.
—ஜெர்மனி

தங்கக் குவியல் கவலையின் குவியல்.
—ஜெர்மனி

யசமானருக்கு ஜலதோஷம், வேலைக்காரர் அனைவரும் தும்முகிறார்கள்.
—போலந்து

அரண்மனை வாயிற்படி அதிகமாக வழுக்கும்.
—போலந்து

என் கையில் பணமிருந்தவரை நான் எல்லோருக்கும் சகோதரனாக இருந்தேன்.
—போலந்து

பணக்காரனாக வேண்டுமானால், ஒருவன் பன்றியாகிவிட வேண்டும்.
—போலந்து

செல்வம் நீரிழிவை உண்டாக்கும்; பேராசை காய்ச்சலையும், சுதந்திரம் கிறுகிறுப்பையும், வறுமை திமிர்வாதத்தையும் உண்டாக்கும்.
—ஸ்காட்லந்து

வெள்ளத்தோடு வந்ததெல்லாம் வடியும்போது போய் விடும்.
—அமெரிக்கா

செல்வத்தை அடிக்கடி குறை சொல்கிறார்கள்; ஆனால் அதை வேண்டாமென்று வெறுப்பாரில்லை.
—டென்மார்க்

தங்கத்தையே குறிப்பாகப் பார்த்துக் கொண்டிருப்பவன் கண் பார்வையை இழந்து விடுவான்.
—ஹாலந்து

பாதிப் பணக்காரனாகி விட்டால், முழுப் பணக்காரனாவது எளிது.
—எஸ்டோனியா

தங்கத் திறவுக்கோல் எல்லாப் பூட்டுகளுக்கும் சேரும்.
—ஹங்கேரி

ஒருவன் பணக்காரன் என்றால், அவன் நீதியற்றவனாயிருப்பான், அல்லது நீதியற்றவனின் வாரீசாக இருப்பான்.
—லத்தீன்

வானத்திலிருந்து பால் மழையாகப் பொழிந்தாலும், ஏந்தி வைத்துக்கொள்ளப் பாத்திரங்கள் பணக்காரரிடமே இருக்கின்றன.
—ரஷ்யா

எவன் செல்வன் என்றால், தன்னிடம் இருப்பதும் தெரியாமல், இல்லாததும் தெரியாமலிருப்பவனே.
—ரஷ்யா

தங்கச் செருப்புடன் உலகின் கடைசிவரை செல்லமுடியும்.
—ஆப்பிரிக்கா

செல்வம் மூடுபனி போன்றது, நிமிடத்தில் சிதறிப்போகும்.
—ஆப்பிரிக்கா

ஒருவனுடைய வயிறு நிறைந்திருந்தால், அவன் பையும் நிறைந்திருக்கும்
—இந்தியா

ஒரு பணக்கார மனிதன் சுவர்க்கத்தில் நுழைவதைக் காட்டிலும், ஓர் ஒட்டகம் ஊசித் துவாரத்தில் நுழைவது எளிது.
—புதிய ஏற்பாடு

பெருஞ் செல்வம் என்பதில் பெரும் நஷ்டமும் அடங்கியிருக்கின்றது.
—லாவோ த்ஸே

[எத்தனை அரிய குணங்களைப் பாழாக்கிச் செல்வம் சேர்க்கிறோம் என்பதைக் கவனிக்க வெண்டும்.]

ஒரு மனிதன் எத்தனை பொருள்களைத் தேவையில்லை என்று தள்ளுகிறானோ, அந்த அளவுக்குத்தான் அவன் செல்வனாவான்.
—தோரோ

அதிகச் செல்வம் பேராசைக்குக் காரணம்.
—இங்கிலாந்து

கடவுள் பணக்காரருக்கு உதவி புரியட்டும், ஏழைகள் பிச்சையெடுத்துக் கொள்வார்கள்.
—இங்கிலாந்து

பெருஞ் செல்வமும் மனநிறைவும் சேர்ந்திருப்பதில்லை. —( " )

(பிறரிடம்) இச்சகம் பேசவோ, கடன் வாங்கவோ அவசியமில்லாதவன் பணக்காரன்தான்.
—இங்கிலாந்து

நமது செல்வம் நம்மை அதிகாரம் செய்யத் தொடங்கினுல், நாம் ஏழைகளே. —இங்கிலாந்து

செல்வம் குவிந்து, மனிதர்கள் தாழ்ந்து போகும் நாட்டில், பிணிகள் மலிந்து, பீடையே பெருகும்.—கோல்ட்ஸ்மித்

தேவைக்கு மேலுள்ள பொருள் தேவையில்லாதவைகளை வாங்கவே பயன்படும். —தோரோ

செல்வர்களின் இன்பங்கள் ஏழைகளின் கண்ணீரை விலையாகக் கொடுத்து வாங்கப் பெறுகின்றன. —இங்கிலாந்து

மௌனமாயுள்ள ஒரு பணக்காரனை நான் கண்டதேயில்லை —ஃபிரான்ஸ்

ஆகப் பெரிய பணக்காரனும் முடிவில் ஒற்றைத் துணியோடு தான் போகிருன். —ஃபிரான்ஸ்

கடவுள் பொதுவாக மூடக்கழுதைகளுக்குச் செல்வங்களைக் கொடுக்கிருர்; அவர்களுக்கு அவர்.வேறு நல்லது எதையும் கொடுப்பதில்லை. —லூதர்

செல்வர்களுக்கு எல்லா இடங்களும் சொந்த இடம் போன்றது. —ஜெர்மனி

செல்வர்களும் ஒரே வாயால்தான் உண்ண முடியும். —ஜெர்மனி

செல்வம் எண்ணிலடங்காத துயரங்களை மூடி மறைக்கின்றன. —கிரீஸ்

செல்வத்தால் தெவிட்டுதல் வளரும், தெவிட்டுதலால் அக்கிரமம் வளரும் —கிரீஸ்

செல்வம் மிகுந்த மனிதர்களிடையே தினசரி வாழ்வுக்குத் தேவையான அறிவு குறைவு. —லத்தீன்

செல்வங்களை வணங்குதலால் ஒழுக்க விதிகள் பாழாகின்றன. —லத்தீன்

வீடே வெள்ளியாலுல் சிரிக்கின்றது. —லத்தீன்

நாம் அனைவரும், அவன் பணக்காரனு என்றே கேட்கிறோம். அவன் நல்லவனு என்று ஒருவரும் கேட்பதில்லை. —லத்தீன்

செல்வம், மனிதனின் கவலையைக் குறைத்து, மனத்தின் பாரத்தை நீக்குவதில்லை. —லத்தீன்

செல்வம்—ஆண்டவர் முன்பு பாவம்; வறுமை—மனிதர் முன்பு பாவம். —ரஷ்யா

செல்வர்களுடைய மூடத்தனமான வாக்கியங்கள் உயர்ந்த நீதி வாக்கியங்களைப் போல வழங்கி வருகின்றன. —ரஷ்யா

உனக்குப் பணக்காரனாக விருப்பமா? ஏழு வருடம் பன்றியாயிரு —யூதர்

நீதியான எந்த மனிதனும் திடீரென்று பணக்காரனாக ஆகிய தில்லை. —கிரீஸ்

செல்வங்கள் கஷ்டப்பட்டுத் தேடப் பெறுகின்றன, கவலை யோடு காக்கப் பெறுகின்றன, துக்கத்தோடு இழக்கப் பெறுகின்றன. —இங்கிலாந்து

செல்வமான இதயம் இல்லாவிட்டால், செல்வம் விகாரமான ஒரு பிச்சைக்காரனைப் போன்றதுதான். —எமர்ஸன்

செல்வங்கள் பெருகினால், உன் இதயத்தை அவைகளின் பால் செலுத்த வேண்டாம். —பழைய ஏற்பாடு

கழுகு வானத்தை நோக்கிச் செல்வதுபோல், செல்வங்கள் பறந்து போய் விடுகின்றன. —பழைய ஏற்பாடு

பொன்னைவிட வல்லமையுள்ள பகைவன் இல்லை. —ஸெர்பியா

## சொத்து

ஆன்மா கடவுளுக்கு, உடல் பூமிக்கு, சொத்து உரிமையுள்ளவர் களுக்கு. —இத்தாலி

நடுக்கடலில் கப்பல் மாலுமிக்குத்தான் சொந்தம். —அமெரிக்கா

# பணம்

இறைவன் வானத்தை ஆள்கிறான், பணம் உலகத்தை ஆள்கின்றது. —ஜெர்மனி

வெறும் கை முழம் போடாது. —தமிழ்நாடு

பணம் இருந்தால், இரும்பும் மிதக்கும். —இந்தியா

சந்தை பணம் கொடுப்பவனுக்குச் சொந்தம். —இந்தியா

பணமில்லாதவன் பாய்களில்லாத கப்பல் போன்றவன். —ஜப்பான்

பணம் சேர்த்தல் ஊசியால் குழிதோண்டுவது போன்றது. —ஜப்பான்

பணத்தைக் காட்டினால், குருடர்களும் கண்ணைத் திறந்து விடுவர். —சீனா

உன்னிடம் பணம் இருந்தால், நீ சொல்வதெல்லாம் வேத உண்மை. —சீனா

பணமிருந்தால் நீ பாம்பு, இல்லாவிட்டால் புழு. —சீனா

பத்துப் பவுன் இருந்தால், தெய்வங்களை வசமாக்கலாம்; நூறு இருந்தால், சுவர்க்கத்தையே வசமாக்கலாம். —சீனா

கையில் பணமில்லையானால், ஏலக் கடைகளுக்குச் செல்ல வேண்டாம். —யூதர்

பணமுள்ளவனுக்குப் பயம், இல்லாதவனுக்கு வருத்தம். —பாரசீகம்

ஏழையின் பணம் சூரியனைக் கண்ட பனிபோல் தீர்ந்து விடுகின்றது. —ஃபிரான்ஸ்

பணமில்லாதவன் பற்களில்லாத ஓநாய் போன்றவன். ( ” )

பணம் அறிவாளர்களுக்கு அடங்கித் தொண்டு செய்யும்; ஆனால் மூடர்களை ஆட்சி செய்யும். —பிரான்ஸ்

பணம் பேசும். —அயர்லாந்து

பணம், புத்தி, யோக்கியதை மூன்றைப் பற்றியும், கேள்விப் பட்டதில் கால் பாகத்தை மட்டும் நம்பு. —இங்கிலாந்து

பணமில்லாதவன் சந்தையில் வேகமாய்ச் சுற்றுவான். —(" )

புழக்கத்திலுள்ள பணம் பெருகிவரும். —ஜெர்ஸீ

பணமில்லாமல் ஒருவன் எங்கும் செல்ல முடியாது, கோயிலுக்குக்கூடச் செல்ல முடியாது. —அமெரிக்கா

பைக்குள் கிடக்கும் பணம் சலசலக்கும். —எஸ்டோனியா

பணம் உருண்டு ஓடுவது. —எஸ்டோனியா

பணம் பேசத் தொடங்கினுல், உலகம் வாயை மூடிக் கொள்ளும். —எஸ்டோனியா

நாய்கள் குரைக்கும், பணம் பேசும். —ஹங்கேரி

பணமில்லாத பைக்குத் தோல் என்றுதான் பெயர். —இத்தாலி

பணத்திற்கு வாசனையில்லை. [எங்கிருந்து வந்தாலும் ஒன்றுதான்.] —ரஷ்யா

நாய் விற்ற காசு குரைக்குமா —தமிழ்நாடு

பணமுள்ள இடத்திற்கே பணம் போய்ச் சேரும். —ரஷ்யா

எவன் பணக்காரனே அவன் என் சகோதரன். —ரஷ்யா

ரூபாயின் பெருமை அணுவிலிருக்கிறது. —ரஷ்யா

பணம் வரும்போது இரண்டு கால்களுடன் வரும்; போகும் போது பல கால்களுடன் போகும். —ரஷ்யா

ரொக்கப் பணம் ஒரு மந்திரவாதி. —ரஷ்யா

உலகின் சிறந்த அடிப்படையாக விளங்குவது பணம். —ஸ்பெயின்

பணம் இருந்தால் உன்னையே உனக்குத் தெரியாது; பணம் இல்லாவிட்டால் ஒருவருக்கும் உன்னைத் தெரியாது. —ஸ்பெயின்

எந்த முட்டாளும் பணம் சம்பாதிக்க முடியும், அறிவாளிதான் அதை வைத்திருக்க முடியும். —அமெரிக்கா

எல்லாத் தீமைக்கும் வேர் பண ஆசை. —புதிய ஏற்பாடு

பணமில்லாதவன் அரிசித் தொட்டிக்குள் வாயைத் தைத்துக் கொண்டு கிடப்பது போலத்தான். —சீனு

ரொக்கப் பணமிருந்தால், எதையும் வாங்கி அடுக்கலாம். ( " )

இரண்டு கைப்பிடி உண்மையைக் காட்டிலும் ஒரு பிடி பணம் வல்லமையுள்ளது. —டென்மார்க்

பணமில்லாத மனிதன் அம்பில்லாத வில். —இங்கிலாந்து

தங்கத் திறவுகோல் எல்லாப் பூட்டுக்களையும் திறக்கும். ( " )

கடவுள் உனக்கு அதிகப் புத்தியைக் கொடுக்கட்டும்; எனக்கு அதிகப் பணத்தைக் கொடுக்கட்டும். —( " )

பை நிறையப் பணமுள்ளவனுக்கு நண்பர்களுக்குப் பஞ்சமில்லை. —இங்கிலாந்து

பணமில்லாதவனுக்குப் பையே தேவையில்லை. — இங்கிலாந்து

பணத்திற்காகக் கடவுளுக்கு ஊழியம் செய்பவன், அதிகப் பணம் கிடைத்தால், சயித்தானுக்கு ஊழியம் செய்வான். — இங்கிலாந்து

பணம் தேவையானவனுக்கு எல்லாமும் தேவைதான். —( " )

பணம் பணத்தைக் கொண்டு வரும். —இங்கிலாந்து

மனிதனைப் பிடிப்பதற்குச் சிறந்த தூண்டில் பணம்தான். —இங்கிலாந்து

பணம் பானையை அடுப்பில் ஏற்றுகின்றது. —இங்கிலாந்து

பண ஆசையும் கல்வி ஆசையும் சந்திப்பது அரிது. —( " )

சுதந்தரத்தை விலையாகக் கொடுத்துத்தான் நாம் பணத்தைப் பெற வேண்டும். —இங்கிலாந்து

பணம் இருந்தால் பயம், பணம் இல்லாவிட்டால் துக்கம். —இங்கிலாந்து

தீய வழியில் வந்த செல்வம் செழிப்பதில்லை. —ஃபிரான்ஸ்

பெரிய மனிதனுக்கு உன் பணத்தைக் கடனுகக் கொடுக்க வேண்டாம்.
—ஃபிரான்ஸ்

பணத்திற்குச் சிறகுகள் உண்டு. —ஃபிரான்ஸ்

பண விஷயத்தில் எல்லோரும் ஒரே மதம்தான். —வால்டேர்

எனக்குப் பணம் வேண்டும், உபதேசம் வேண்டாம்.
—போர்ச்சுகல்

பணம் பேசும்பொழுது, உண்மை வாயடங்கிக் கிடக்கும்.
—ரஷ்யா

பணத்தை முன்னுல் கொடுத்துவிட்டால், வேலை சுணக்கமாகும்.
—ஸ்பெயின்

பணம் வெண்மையா யிருந்தால் போதும், ஆளின் முகம் கறுப்பா யிருக்கலாம்.
—துருக்கி

பணம் பெருகும்பொழுது, பணத்தின் ஆசையும் பெருகும்.
—லத்தீன்

## வறுமை

ஏழைகளே, நீங்கள் ஆசீர்வதிக்கப் பெற்றவர்கள்; ஏனெனில் இறைவனுடைய பரம ராஜ்யம் உங்களுடையது.
—புதிய ஏற்பாடு

தரித்திரம் நெருப்பால் நெய்த ஆடை. —இந்தியா

சிலர் எதை உண்ணலாம் என்று கேட்கின்றனர்; சிலர் எதனுல் (எடுத்து) உண்ணலாம் என்று கேட்கின்றனர்.
—ஆப்கானிஸ்தானம்

வறுமையை வதக்குவதற்கு வெண்ணெய் வேண்டியதில்லை.
—ஃபிரான்ஸ்

காலிப் பெட்டிகளைப் பூட்ட வேண்டியதில்லை. —ஜெர்மனி

முன்னுல் பணக்காரனு யில்லாதிருந்தவனைத் தரித்திரம் பாதிக்காது.
—ஜெர்மனி

ரொட்டியில்லாதவனுக்குக் குழந்தைகளும் இருக்கக் கூடாது.
—போலந்து

வறுமை திருடத் தூண்டுவதில்லை, செல்வம் அதைத் தடுப்பதுமில்லை. —ஃபின்லாந்து

செல்வத்தை மறைக்கலாம், வறுமையை மறைக்க முடியாது. —ஃபின்லாந்து

வறுமை பாவமன்று, அதைவிட மோசமான ஒன்று. —ரஷ்யா

வெறும் கரண்டி வாயைப் புண்ணாக்கும். —ரஷ்யா

வறுமை உண்மைக்கு முதல் வழி. —இங்கிலாந்து

வறுமை அறிவாளியாக்கும், செல்வந் தனுக்காது. —( " )

வறுமையைப் போன்ற கல்வி வேறில்லை. —இங்கிலாந்து

வறுமையின் பயன்கள் இனியவை. —ஷேக்ஸ்பியர்

வறுமை நட்புக்கு உரைகல். —ஃபிரான்ஸ்

வறுமை தைரியத்திற்குச் சோதனை. —ஃபிரான்ஸ்

வறுமையில் மனிதனைக் காப்பது நம்பிக்கை. —மினுண்டர்

வறுமைக்கு நண்பர்களில்லை. —டாஸிடஸ்

ஏழைகளிடத்தில் இரக்கமுள்ளவன் இறைவனுக்குக் கடன் கொடுக்கிறான். —பழைய ஏற்பாடு

வறுமையைத் தாங்குவதைவிட அதை புகழ்வது எளிது. —இங்கிலாந்து

பையில் கனம் குறைந்தால், நெஞ்சில் கனம் அதிகமாகும். —இங்கிலாந்து

வறுமையிலே பொறுமைதான் ஏழைக்குப் பரிகாரம். —இங்கிலாந்து

வறுமை சண்டையை வளர்க்கும். —இங்கிலாந்து

வறுமைதான் கலைகளுக்கெல்லாம் தாய். —இங்கிலாந்து

செல்வத்திற்குப்பின் வறுமை வருவதைப் பார்க்கிலும், வறுமைக்குப் பின் செல்வம் வருவதே மேல். ( " )

வறுமை எல்லாப் பண்புகளையும் அழித்துவிடும். ( " )

வறுமை ஒரு வகையான குஷ்ட நோய். —ஃபிரான்ஸ்

ஏழை மனிதன் ஒருபோதும் சுதந்திரமா யிருப்பதில்லை; ஒவ்வொரு நாட்டிலும் அவன் ஊழியமே செய்கிறான்.
—வால்டேர்

வறுமை சோம்பலின் மகள். —ஜெர்மனி

ஏழை உண்மையைச் சொன்னாலும் நம்பமாட்டார்கள். —கிரீஸ்

செல்வர்கள் இறுமாப்பைவிட வறுமையைத் தாங்குதல் மேல். —கிரீஸ்

ஏழை மனிதன் தன் ஆடுகளை எண்ணிப் பார்ப்பது இயற்கை.
—லத்தீன்

வறுமையுள்ள இடத்திற்குப் பணம் மிகவும் நிதானமாகத் தான் வரும். —லத்தீன்

வறுமை வெறுக்கத்தகுந்த ஒரு நன்மையாகும். —லத்தீன்

வறுமையே குற்றங்களுக்குத் தாய். —லத்தீன்

உடல் சரியாயிருக்கிறது, பைதான் நோயுற்றிருக்கின்றது.
—லத்தீன்

பணப்பையை இழந்தவன் உன் விருப்பப்படி எங்கு வேண்டு மானாலும் போகத் தயாரா யிருப்பான். —லத்தீன்

ஏழையை எங்கும் வெறுக்கின்றனர். —லத்தீன்

நாம் வறுமையைப் புகழவில்லை; ஆனால் வறுமைக்கும் வளைந்து கொடுக்காதவனையே புகழ்கிறோம். —லத்தீன்

ஏழைகள் பாடுகிறார்கள், செல்வர்கள் கேட்கிறார்கள். —ரஷ்யா

ஏழை மனிதனுக்காக நாம் எதையும் செய்வோம்—ஆனால் அவன் முதுகைவிட்டுக் கீழே இறங்கமாட்டோம்.
—டால்ஸ்டாய்

உலகில் இரண்டு குடும்பங்களே யிருக்கின்றன; உடையவர்கள். இல்லாதவர்கள். —ஸெர்வான்டிஸ்

வறுமையும் மடிமையும் சகோதரர்கள். —யூதர்

வறுமை கேவலமில்லை—ஆனால் பெருமையுமில்லை. —யூதர்

வறுமை முதலில் வெளித்தோன்றும் இடம் முகம். —யூதர்

நீ ஏழையா யிருந்தால், உன் சகோதரனும் உன்னை வெறுக்கிறான். —சாஸர்

வறுமை தன்னைத்தானே தாங்கிக் கொள்ளும், செல்வத்தைத் தாங்குவதே கடினம். —இங்கிலாந்து

வெளியே வந்துவிடு! வறுமை பிடிக்க வருகிறது! —( ” )

## ஏழைமை

ஏழைமை ஏழைகளைத் தொடர்ந்து ஓடுகிறது; செல்வம் செல்வரைத் தொடர்ந்து ஓடுகிறது. —யூதர்

ஓலைக் குடிசையில் அமைதி காண்பதே இன்பம். —சீனா

உண்பதற்குச் சாதாரண உணவு, குடிக்கத் தண்ணீர், தலையணைக்குக் கை—இந்த நிலையிலும் இன்பம் இருக்க முடியும். —சீனா

நீ பணக்காரனாக முடியா விட்டால், ஒரு பணக்காரன் வீட்டுக்குப் பக்கத்தில் குடியிரு. —ஆர்மீனியா

செல்வம் அடக்கமான பண்பைச் சிதைக்கும், ஏழைமை அறிவைச் சிதைக்கும். —மலாய்

நாடு முழுதும் கூழானாலும், ஏழைக்குக் கரண்டியளவு தான். —ஆப்கானிஸ்தானம்

ஏழைக்குரிய வைத்தியன் மரணம். —ஜெர்மனி

சுவர்க்கத்தில் ஏழைகள் முதல் வகுப்பு ஆசனங்களில் அமர்ந்திருப்பார்கள். —ஜெர்மனி

ஏழைக்கு வேண்டியது பிச்சையெடுக்கும் சுதந்திரம். ( ,, )

ஏழையா யிருந்தும், பாடிக்கொண்டிருப்பவன் செல்வந்தனே. —ஜெர்மனி

ஏழைகளுக்கு எப்பொழுதும் இருள்தான், எப்பொழுதும் மாரிக்காலம்தான். —போலந்து

தேவைக்குமேல் இருப்பதும் ஏழைமைதான். —இங்கிலாந்து

பரியைத் தேடி அலைவதைவிட உணவைத்தேடி அலைவது மேல். —அயர்லந்து

பறவைக்குத் தான் எவ்வளவு ஏழை என்பது தெரிந்தால், அது இனிமையாகப் பாடாது. —டென்மார்க்

செம்புதான் ஏழைகளின் தங்கம். —எஸ்டோனியா

ஏழைகளே செல்வர்களுக்கு உணவளிக்கிறார்கள். —( " )

வெறும் பாதங்களுக்கு எந்தச் செருப்பும் சேரும். —( " )

உணவு வேகும்வரை ஏழைகளுக்குப் பொறுமை யிருக்கும்; வெந்தது ஆறும்வரை இராது. —ஃபின்லந்து

பணக்காரன் பிணி ஊரெல்லாம் தெரியும், ஏழை இறந்தாலும் எவருக்கும் தெரியாது. —ஃபின்லந்து

சொத்தை இழந்துவிட்ட யூதன் பழங் கணக்கைப் பார்ப்பான். —கிரீஸ்

சிறைச்சாலையும், 'லென்ட்' நோன்பும் ஏழைகளுக்காக ஏற்பட்டவை. —ஸ்பெயின்

[லென்ட் நோன்பு நாட்களில் கிறிஸ்தவர்கள் உபவாச மிருந்து, பிரார்த்தனை செய்வது வழக்கம்.]

ஏழைக்குத் தான் பணக்காரனாகலாம் என்ற நம்பிக்கை இருந்து கொண்டே யிருக்கும்; செல்வனுக்குத் தான் ஏழையாகி விடக்கூடும் என்ற அச்சம் இருந்துகொண்டே யிருக்கும். —அமெரிக்கா

பணக்காரனுக்கு ஐந்து புலன்கள், ஏழைக்கு ஆறு. —சுவீடன்

பணமில்லாவிட்டால் உறவில்லை. —யூதர்

## பிச்சை

பிச்சை யெடுப்பதைவிட நஞ்சுண்பது எளிது. —கீழ் நாடு

பிச்சைக்காரன் பை நிறைவதே யில்லை. —துருக்கி

பசியோடுள்ள ஒருவன் பசியோடுள்ள ஒருத்தியுடன் சேர்ந்தால் உலகத்திலே ஒரு பிச்சைக்காரன் பிறக்கிறான். —துருக்கி

பிச்சைக்காரனிடம் பிச்சை கேட்கும்படி நேர்ந்தவனுக்கு ஆண்டவன்தான் இரங்கவேண்டும். —கீழை நாடு

பிச்சையளித்தலே சுவர்க்க வாயில்களைத் திறக்கும் தங்கத் திறவுகோல். —இங்கிலாந்து

செல்வத்தின் அழகு ஐயமிடுதல். —ஃபிரான்ஸ்

பிச்சையளித்தலால் எவரும் ஏழையாவதில்லை. —இத்தாலி

கடவுள் பெயரால் பிச்சை கேட்பவன் இருவருக்காகப் பிச்சை கேட்கிறான். —ஸ்காட்லந்து

பிச்சையெடுக்கத் தெரிந்தவன், வெளியே செல்லும் பொழுது, தன் பணத்தை வீட்டில் வைத்துவிட்டே செல்லலாம். —ஸெக்

பிச்சைக்காரர் சமூகத்தைப் போன்ற பெரிய சமூகம் வேறில்லை. —ஸெக்

பிச்சைக்காரன் கூச்சப்பட்டால், பை காலியாகவே இருக்கும். —ரஷ்யா

பிச்சைக்காரன் சொத்து அவனுக்குத்தான் தெரியும். —ரஷ்யா

## நல்வினை

நல்லது அரிதாய்த்தான் இருக்கும். —ஸ்பெயின்

நல்ல மனிதன் மற்றவர்களையும் நல்லவராக்குகிறான். —கிரீஸ்

இன்னா செய்வதைப் பார்க்கினும், அதை ஏற்றுக்கொள்வதே மேல். —லத்தீன்

இன்னா செய்யவே தெரியாதிருத்தல் நல்ல மனிதனுக்கு அடையாளம். —லத்தீன்

இரண்டு பேர்களே நல்லவர்கள்; ஒருவன் இறந்து போய் விட்டான், மற்றவன் பிறக்கவேயில்லை. —இந்தியா

நல்ல செயல்களைச் செய்பவனைவிட (பலர்) அவைகளைச் செய்யக் காரணமா யிருப்பவன் மேலானவன். —யூதர்

தண்ணீர் பள்ளத்திற்குப் பாய்வதுபோல், மனிதனின் இயற்கை நன்மை செய்தல். —கன்ஃபூஷியஸ்

தன் குழந்தை உள்ளத்தை இழக்காதவனே நல்ல மனிதன். —கன்ஃபூஷியஸ்

மற்ற மக்களுக்கு நன்மை செய்வதே ஒருவன் சமுதாயத்திற்குச் செலுத்தவேண்டிய கடன். —ஹிந்து தர்மம்

பலர் மிகவும் நல்லவர்; ஏனென்றால் அவர்களால் தீமை செய்ய இயலாது. —ஃபிரான்ஸ்

தீமைக்குப் பூட்டுக்களாயும், நன்மைக்குத் திறவுகோல்களாயும் உள்ள மனிதர்கள் இருக்கிறார்கள். —எகிப்து

பாலிலிருந்து வெண்ணெய் வருவதுபோல, நல்லதிலிருந்து நல்லதே விளையும். —ஆப்பிரிக்கா

கோயிலில் மூன்று நாள் உபவாசம் இருப்பதைவிட ஒரு நல்ல செயல் மேல். —ஜப்பான்

அந்தச் சிறு மெழுகு திரி எவ்வளவு தூரம் ஒளி வீசுகின்றது! அவ்வாறே இந்த வம்பு நிறைந்த உலகில் ஒரு நல்ல செயல் பிரகாசிக்கின்றது. —ஷேக்ஸ்பியர்

நல்ல வினைக்கு வெகுமதி அதைச் செய்து முடித்ததுதான். —இங்கிலாந்து

நாம் நம் செயல்களைத் தீர்மானிப்பது போலவே அவைகளும் நம்மைப்பற்றித் தீர்மானிக்கின்றன. —இங்கிலாந்து

செய்வோம் அல்லது செத்து மடிவோம். —பர்ன்ஸ்

செயல்தான் மிகச் சுருக்கமான பதில். —இங்கிலாந்து

நாம் செயல்களில் வாழ்கிறோம், ஆண்டுகளில் அல்ல. —( ,,

வாழ்க்கையில் வாழ்வதைக் காட்டிலும் செயல்தான் அவசியம். —ஃபிரான்ஸ்

செயல்களே வாழ்க்கைக்கு வலிமை யளிக்கின்றன. —ஜெர்மனி

செயல்கள் ஆண்கள், சொற்கள் பெண்கள். —இத்தாலி

ஒரு நல்ல செயலுக்கு வெகுமதி கிடைத்தால்தான் மனிதர் அதை மதிக்கின்றனர். —லத்தீன்

ஒவ்வொரு மனிதனும் தன் செயல்களின் மைந்தன். —ஸ்பெயின்

நேர்மையாளரின் செயல்களைத் தேவர்கள் கவனிக்கின்றனர். —லத்தீன்

## தீவினை

தவறான வழியில் எவ்வளவு தூரம் போய்விட்டாலும், திரும்பி விடு. —துருக்கி

பாவங்களிலே அழுந்தியிருப்பவன் உயிருடன் புதைக்கப் பட்டிருக்கிறான். —பல்கேரியா

திடீரென எவனும் முற்றிலும் தீயோனாவதில்லை. —லத்தீன்

தீய வழியில் வந்தது தீய வழியிலேயே போய்விடும். —இங்கிலாந்து

ஒருவனுக்குத் தீங்கு செய்பவன் நூறு பேர்களை அச்சுறுத்து கிறான். — இங்கிலாந்து

மனிதர் செய்யும் தீமை அவர்களுக்குப் பின்னாலும் நிலைத் திருக்கும், நன்மை அவர்களுடைய எலும்புகளோடு புதைக்கப்படும். —ஷேக்ஸ்பியர்

தீங்குகளை மணலில் எழுது, நன்மைகளை சலவைக் கல்லில் எழுது. —ஃபிரான்ஸ்

நல்ல மனிதன் பழைய தீங்குகளை மறந்து விடுகிறான். —கிரீஸ்

நாம் இழைக்கும் தீங்குகளும், நமக்கு இழைக்கப்படும் தீங்கு களும், ஒரே தராசில் நிறுக்கப்படுவதில்லை. —கிரீஸ்

தீங்குகளுக்கு மாற்று அவைகளை மறத்தல். —லத்தீன்

தானியத்தை விற்பவன் வியாபாரி, தானியத்தைப் பதுக்கிச் சேர்த்து வைப்பவன் மக்களை வதைக்கும் கொலைகாரன்.
—இந்தியா

தீயதைச் சிந்தித்தலும் தீயதே. —அரேபியா

பொய்யன், திருடன், தூக்கு—மூவரும் சகோதரர்கள். —ஸெக்

கொஞ்சம் திருடியும், கொஞ்சம் பொய் சொல்லியும் வருபவனும் வாழ்க்கை நடத்தி வருகிறான். —எஸ்டோனியா

ஒரு சமயம் தீயவனாயிருந்தவன் எப்பொழுதும் அப்படியே கருதப்படுகிறான். —இத்தாலி

விலக்கப்பட்டவை யெல்லாம் (ஹராமானவை) இனிமையானவைகளாகவே தோன்றும். —அரேபியா

இரு முறை பாவம் செய்தவனுக்குப் பாவம் பாவமாய்த் தோன்றாது. —யூதர்

பாவியின் ஓடம் மூழ்கவே செய்யும். —கீழை நாடு

நம் கனவுகளிலிருந்தும் பாவங்கள் வரும். —எகிப்து

பாவங்களிலிருந்து பாவங்கள் முளைக்கின்றன. —சீக்கியர்

ஆதாம் தின்ற ஆப்பிள் பழத்தால் நமக்கு இன்னும் காய்ச்சல் அடிக்கின்றது. —ஜெர்மனி

பாவமும் தண்டனையும் ஒரே சங்கிலியில் கட்டப்பெற்றவை.
—ஜெர்மனி

பாவம் செய்யாமையே பெரிய தவம். —ஜெர்மனி

எந்த மனிதனுக்கும் தீமைக்குப் பதிலாகத் தீமையைச் செய்யாதே. —புதிய ஏற்பாடு

தீய ஒழுக்கமே துயரத்திற்கு மூலம். —சீனா

ஒரு தீமையிலிருந்து பல விளைகின்றன. —இங்கிலாந்து

இரண்டு தீமைகளில் குறைந்ததை எடுத்துக்கொள். —( ” )

அநித்தியமான மனிதனுக்கு எந்தத் தீமையும் நித்தியமானதன்று. —இங்கிலாந்து

தீமை நினைப்பவனுக்குத் தீங்கே உண்டாகும். —இங்கிலாந்து

ஒரு தீமையை விலக்குவதற்கு வேறு ஒரு தீமையைச் செய்தல் நன்மையாகாது. —ஜெர்மனி

தீமையைத் தண்டிக்காதவன் அதை வரவேற்பவனுகிருன். —ஜெர்மனி

தீமையிலிருந்து நன்மை வருமென்று அதை ஒருபோதும் செய்ய வேண்டாம். —இத்தாலி

தீய வாழ்க்கையே ஒருவகை மரணமாகும். —ஸ்பெயின்

மனிதர்கள் ஒளியைவிட இருளையே விரும்பினுர்கள், ஏனெனில் அவர்களுடைய செயல்கள் தீயவைகளாக இருந்தன. —புதிய ஏற்பாடு

செய்த பிறகு அழவேண்டிய வினையைச் செய்யாமலிருத்தல் நலம். —இங்கிலாந்து

தன் பாவங்களைப் பற்றிப் பெருமையாகப் பேசுபவன், இரண்டு முறை பாவம் செய்கிருன். —ஸெர்பியா

தீய வினைகளோடு தீய சொற்களும் சேர்ந்தால், தீமை இரு மடங்காகின்றது. —இங்கிலாந்து

இயற்கைக்கு மாருன செயல்கள், இயற்கைக்கு மாருன துயரங்களைப் பெருக்குகின்றன. —ஷேக்ஸ்பியர்

செய்த வினையை அழிக்க முடியாது. —இங்கிலாந்து

தீமைக்கு வழிகாட்டும் எந்தச் செயலும் செய்பவனுக்கு இன்பமளிப்பதில்லை. —லத்தீன்

செயல் மறக்கப்படுகிறது, ஆனுல் அதன் பயன்கள் நிலைத்திருக்கின்றன. —லத்தீன்

மக்களின் செயல்கள் தெய்வங்களை ஒருபோதும் ஏமாற்றுவதில்லை. —லத்தீன்

மற்றவனுக்காகக் குழி தோண்டுபவன், குழியின் அளவுக்குத் தன்னையே பார்த்துக் கொள்ளவேண்டும். —எஸ்டோனியா

காற்றை விதைத்தால், புயலை அறுக்கலாம். —எஸ்டோனியா

கேடு சட்டென்று முடியும்; புண்ணில் நெடுநாள் வலிக்கும். —ஃபின்லந்து

## கழுவாய்

குற்றத்தை ஒப்புக்கொள்ளல் பாதி பரிகாரம். —இங்கிலாந்து

வெளிப்படையாகக் குற்றத்தை ஏற்றல் ஆன்மாவுக்கு நன்மை. —ஃபின்லந்து

குற்றமே செய்யாமல் இருப்பதற்கு அடுத்தபடி, செய்த குற்றத்தை ஒப்புக்கொள்ளல். —ஃபின்லந்து

இரத்தத்தில் கைகளை நனைத்தவன் கண்ணீரால்தான் அவைகளைக் கழுவ வேண்டும். —ஜெர்மனி

## கழிவிரக்கம்

அம்பு எய்தல் வேகம், அதைவிட வேகம் பழி வாங்கல், எல்லாவற்றிலும் வேகம் செய்ததற்கு வருந்துதல். —பாரசீகம்

## இன்பம்

இன்று நாம் செய்யும் நன்மை நாளைய இன்பம். —இந்தியா

இன்பமாயிருக்க விரும்புபவன் செவிடனாயும், குருடனாயும், ஊமையனாயும் இருக்கவேண்டும். —துருக்கி

இன்பத்தின் மூன்று இரகசியங்கள் இவை. தீமையைப் பாராதே, தீமையைக் கேளாதே, தீமையைச் செய்யாதே. —சீனா

அருகிலுள்ளவர்களுக்கு இன்பமளித்தால், தொலைவிலுள்ளவர்களும் தேடி வருவார்கள். —சீனா

இன்பம் என்பது அன்பின் மகன், ஆனால் தந்தையாகிய அன்பையே கொல்லும் இன்பம் இயற்கையான மகனல்ல. —அரேபியா

எறும்புகள் சர்க்கரையிலேயே சாகின்றன. [இன்பங்களிலேயே நிலைத்துக் கொண்டிருத்தல் மரணத்தில் முடியும்.]
—மலாய்

இரண்டு இன்பமான நாட்கள் சகோதரர்களாயிருக்க முடியாது.
—பல்கேரியா

மகிழ்ச்சியுள்ளவனுக்குக் களையெல்லாம் மலராகத் தோன்றும்; துக்கமுள்ளவனுக்கு மலரெல்லாம் களையாகத் தோன்றும்.
—ஃபின்லந்து

இனிமையுள்ளதைத் திரும்பத் திரும்பச் செய்தால், அதன் இனிமை போய்விடும்.
—கிரீஸ்

இன்பமும் துன்பமும் அண்டை வீட்டுக்காரர்கள்.
—ஜெர்மனி

ஒவ்வோர் இன்பமும் தன் முதுகிலே துன்பத்தைத் தாங்கிக் கொண்டிருக்கும்.
—கிரீஸ்

இன்பமான வாழ்க்கைக்கு மூன்று விஷயங்கள் தேவை; பழையதை மறத்தல், நிகழ்வதைக் கவனமாய் நடத்துதல், வரப்போவதை நன்கு சிந்தித்தல்.
—கிரீஸ்

துன்பத்திற்குப் பின்னால் இன்பம்.
—லத்தீன்

இன்பம் தெவிட்டினால் துன்பமாகும்.
—லத்தீன்

இன்பம் நிலைத்திருப்பதில்லை, சிறகு முளைத்துப் பறந்துவிடும்.
—லத்தீன்

துன்பம் சுருக்கமானது, இன்பத்திற்கு எல்லையில்லை.
—ஷில்லர்

உனக்கு இன்பத்தில் தேட்டமிருந்தால், நீ கடுமையாக உழைக்கவேண்டும்.
—சீனா

இன்பமாகச் சொறிந்த பிறகு துன்பமாயிருக்கும்.
—டென்மார்க்

இன்பத்தைத் தொடர்ந்து சென்றால் அது ஓடிவிடும்; அதை விட்டு விலகிச் சென்றால், அது நம்மைத் தொடர்ந்து வரும்.
—இங்கிலாந்து

ஓர் இன்பத்திற்காக மனிதர் ஆயிரம் துன்பங்களை அநுபவிக்கின்றனர்.
—இங்கிலாந்து

துன்பமில்லாமல் இன்பமில்லை. —இங்கிலாந்து

இன்பத்தில் நேரம் போவதே தெரியாது. —இங்கிலாந்து

சொற்ப இன்பம், நீண்ட துயரம். —ஃபிரான்ஸ்

அறிவாளி இன்பங்களுக்கு இடம் கொடுப்பதில்லை, மூடன் அவைகளுக்கு அடிமையாகி விடுகிறான். —கிரீஸ்

இன்பங்கள் வரும்பொழுது கவனிக்க வேண்டாம், அவை போகும் பொழுது கவனிக்கவும். —கிரீஸ்

இன்பம்தான் தீமைக்குப் பெரிய தூண்டுதல். —கிரீஸ்

இன்பங்கள் நிலையற்றவை, பெருமைகளே நிலையானவை. —கிரீஸ்

இன்பம் பனித்துளி போன்றது; அது சிரிக்கும் பொழுதே உலர்ந்து போய்விடும். —தாகூர்

மனித உள்ளம், உழைப்பிலிருந்து இன்பத்தை நாடி, மலையிலிருந்து சரிவதுபோலப் பாய்ந்து செல்லும். —லத்தீன்

நிதானமாக இன்பம் துய்த்தல் உடலுக்கு ஒய்வு போன்றது. —லத்தீன்

கலப்பில்லாத தனி இன்பம் கிடையாது. —லத்தீன்

அரிதாக வரும் இன்பத்திற்கு அருமை அதிகம். —லத்தீன்

மனைவியை அடித்தவன், 'என் இன்பத்திற்காக அடித்தேன்' என்றானாம். —இங்கிலாந்து

பின்னால் வருந்த நேராத இன்பமே யில்லை. —இங்கிலாந்து

இன்பம் ஒரு பாவம், சில சமயங்களில் பாவமும் இன்பமாயிருக்கிறது. —பைரன்

துன்பத்திற்குப் பின் இன்பம் இனிமையானது. —டிரைடன்

# துன்பம்

ஓநாயும் பள்ளத்தில் விழுந்துவிட்டால் அழும். —ஜெர்மனி

எந்த விரலைக் கடித்தாலும் வலியிருக்கும். —ரஷ்யா

உன்னையே கிள்ளிக்கொண்டு பார், மற்றவர்களுக்கு எப்படியிருக்குமென்று தெரியும். —ஜப்பான்

கண்ணீரைவிட விரைவில் காய்வது எதுவுமில்லை. —லத்தீன்

வாழ்க்கையின் மூன்று பெரிய துயரங்கள். இவை; இளமையிலேயே தந்தையை இழத்தல், நடு வயதில் மனைவியை இழத்தல், வயது காலத்தில் மைந்தர்கள் இல்லாதிருத்தல். —சீனு

உனக்கு கடன்கள் இல்லையானால், ஒரு நண்பனுக்குப் பிணையாக (ஜாமீனாக) இரு; உனக்குத் துன்பம் இல்லையானால், ஒரு பழைய குதிரையை விலைக்கு வாங்கு. —திபேத்து
[துன்பத்தை ஒருவன் தானாகத் தேடிகொள்ளும் வழிகள்.]

வாழ்வது கஷ்டமா யிருக்கிறது, சாவது அதைவிடக் கஷ்டமா யிருக்கிறது. —அல்பேனியா

எல்லோருக்கும் பொதுவான துன்பத்தைத் தாங்குதல் எளிது. —ஐ. நா.

இன்பம் ஏகாங்கி, துன்பத்திற்குத்தான் பரிவாரங்கள் அதிகம். —இத்தாலி

கஷ்டத்தோடு போராடாதவனுக்கு நன்மை எது என்று தெரியாது. —ஸெர்பியா

பூவில்லாமல் கலியாணமில்லை, கண்ணீரில்லாமல் இழவில்லை. —அமெரிக்கா

வலியுள்ள இடத்தில் மனிதன் கைவைத்துப் பார்க்கிறான். —ஹாலந்து

ஒரு நாள் முழுதும் இன்பம் அநுபவித்தலைப் போன்றது ஒருமணி நேரத் துன்பம் —இங்கிலாந்து

பெருந் துன்பமும் சிறு லாபமும் மனிதனைக் களைப்படையச் செய்கின்றன. —இங்கிலாந்து

தீய இன்பங்களுக்குச் செலுத்தும் கூலியே துன்பம். —( ” )

பெரிய துன்பங்கள் சிறு துன்பங்களை மறக்கச் செய்கின்றன.
—ஜெர்மனி

எல்லாத் துயரங்களையும் நீக்குதலே இன்பத்தின் எல்லை.
—எபிக்யூரஸ்

## மகிழ்ச்சி

மலர்ந்த முகம் சாதாரண உணவையே விருந்தாக்கி விடும்.
—இங்கிலாந்து

இன்பமா யிருக்கப் பழகிக்கொள்ள வேண்டும். —இங்கிலாந்து

தன் குழந்தைகளுடன் இன்பமாயிருப்பவனே இன்ப முள்ளவன்.
—இங்கிலாந்து

மனிதன் மகிழ்ச்சிக்காகப் பிறந்தவனில்லை. —இங்கிலாந்து

அறிவின் அறிகுறி இடைவிடாத முகமலர்ச்சி. —ஃபிரான்ஸ்

இன்பம் என்பது பிறருடன் பகிர்ந்துகொள்ள வேண்டியது.
—ஃபிரான்ஸ்

ஒருவன் இறக்கும்வரை அவன் இன்பமா யிருந்ததாகச் சொல்ல வேண்டாம்.
—ஃபிரான்ஸ்

மகிழ்ச்சியுள்ள வழித்துணையால் வழியின் தூரம் குறையும்.
—ஜெர்மனி

தன் நல்லதிருஷ்டத்தைத் தெரிந்திருப்பவன் மகிழ்ச்சியுடன் இருப்பான்.
—சீனு

மனிதனுக்குரிய உண்மையான வேலையைச் செய்வதே அவனுக்கு இன்பம்.
—கிரீஸ்

இன்பம் பொறுமையை வளர்க்கும். —லத்தீன்

இன்பமாயிருக்க இயற்கை எல்லோர்க்கும் வாய்ப்பளிக்கிறது; ஆனுல் மக்களுக்கு அதைப் பயன்படுத்திக் கொள்ளத் தெரிய வேண்டும்.
—லத்தீன்

அமைதியே இன்ப வாழ்வு. —லத்தீன்

மகிழ்ச்சியான இதயமுள்ளவன் இடைவிடாத விருந்தைப் பெற்றவனுவான். —பழைய ஏற்பாடு

அழுகை ஓர் இரவு நிலைத்திருக்கும், காலையில் இன்பம் வரும். —பழைய ஏற்பாடு

எல்லோரும் இன்புற்றிருந்தாலன்றி, ஒருவன் முற்றிலும் இனபமாயிருக்க இயலாது. —ஸ்பென்ஸர்

செல்வத்தை உண்டாக்காமல் அதை அநுபவிக்கவும், (பிறருக்கு) இன்பத்தை உண்டாக்காமல் இன்பம் துய்க்கவும் நமக்கு உரிமையில்லை. —பெர்ஞர்டு ஷா

சுகம் வந்தால் உடல் பருத்துவிடுகின்றது. —இந்தியா

சிரித்துக்கொண்டே வேலையை முடிக்கலாம், அழுது கொண்டிருந்தால், அழுகையின் பலன்தான் கிடைக்கும். —இந்தியா

ஆட்டு மந்தையின் அடித்தூசு ஓநாயின் கண்ணுக்கு இனிமையாகும். —பாரசீகம்

தான் இன்பமாயிருப்பதாக எண்ணுபவனே மகிழ்ச்சியுள்ளவன். —ஃபிரான்ஸ்

மகிழ்ச்சியும் வீரமும் முகத்திற்கு அழகு. —ஃபிரான்ஸ்

சிரிக்காத நாள் வீணுய்ப்போன நாள். —ஃபிரான்ஸ்

மகிழ்ச்சியால் மாள்பவர் இல்லை. —எஸ்டோனியா

ஒருவன் சிரிக்கும் போதெல்லாம் மரணம் ஒத்திப்போடப் பெறுகின்றது. —இத்தாலி

கொடுப்பதானல் கஷ்டமில்லாமல் கொடுத்துவிடு; பெறுவதானல் சந்தோஷத்துடன் பெற்றுக்கொள். —ஹங்கேரி

பேராசை தீர்ந்ததும் மகிழ்ச்சி தொடங்கும். —ஹங்கேரி

பொறுமை யில்லாமல் மகிழ்ச்சியில்லை. —ரஷ்யா

வெங்காயம் கிடைத்ததற்கு ஒருவன் துள்ளிக் குதித்தால், வெல்லம் கிடைத்தால் என்ன செய்வானே? —அரேபியா

[illegible] இனிட்டு மகிழ்ச்சியோடிருத்தல். —ஜெர்மனி

நல்ல செய்தி கொண்டு வருகிறவன் கதவைப் போட்டுத் தட்டுவான். —இங்கிலாந்து

இறந்தவனைத் தவிர எவனும் சுகமாயில்லை. —வேல்ஸ்

## கவலை

நான் ரொட்டியை எண்ணவில்லை, என் ரொட்டிதான் என்னை உண்ணுகின்றது. [உணவுக்கு ரொட்டி வேண்டுமே என்ற கவலை ஆளை அரித்து விடுகின்றது. —இந்தியா

பசுவும் கன்றும் இல்லாதவன் நன்றாகத் தூங்குவான். —( ” )

உனக்கு ஒரு தொந்தரவும் இல்லையா? அப்படியானால், ஒரு வெள்ளாட்டை வாங்கிக் கட்டு. —இந்தியா

கவலை வாழ்வின் எதிரி. —ஷேக்ஸ்பியர்

கவலை அழகை அபகரிக்கும். —இங்கிலாந்து

கவலைகளால் தலைமயிர் நரைக்கும். —இங்கிலாந்து

சொற்பக் கவலை பேசும். பெருங்கவலை மௌனமாயிருக்கும். —ஸெனீகா

கவலையால் மனிதன் மரிப்பதில்லை, உலர்ந்து சருகாவான். —ரஷ்யா

வைக்கோல் இருக்கிறதா என்று பசுவுக்கு என்ன கவலை? —செர்பியா

கவலையோடு உறங்கச் செல்வது முதுகிலே சுமையைக் கட்டிக் கொண்டு தூங்குவதாகும். —அமெரிக்கா

படுக்கப் போகுமுன் கவலைகளைச் செருப்போடு கழற்றி வைக்க வேண்டும். —ஜெர்மனி

கவலை நூறு வண்டி யிருந்தாலும், அது ஒரு கடனையும் அடைக்காது. —இங்கிலாந்து

மானிடரின் விஷயங்களில் பெருங் கவலைக்குரியது எதுவுமில்லை. —பிளேட்டோ

எனக்குத் தெரியாத விஷயம் எதுவும் என்னைத் தொல்லைப் படுத்துவதில்லை. —யூதர்

கவலைகளால் துடிதுடித்தால், தலைதான் நரைக்கும். —இங்கிலாந்து

கவலை பரிகாரமன்று. —இங்கிலாந்து

பின்னால் வரப்போகும் துன்பத்திற்கு இப்பொழுது நாம் செலுத்தும் வட்டி கவலை. —இங்கிலாந்து

பிறர் கவலை உன் தூக்கத்தைக் கெடுக்காது. —யூதர்

## துக்கம்

பிறருக்குக் காட்டிக் கொள்ளாமல் வருந்துவோனே உண்மையாகத் துக்கப்படுபவன். —லத்தீன்

துக்கத்தைக் கண்ணீர் கரைக்கின்றது. —லத்தீன்

சாதாரணத் துக்கங்களை வெளியிட முடியும்; பெருந் துக்கங் களால் வாயடைத்துப் போகும். —லத்தீன்

அடக்கிய துக்கம் மூச்சை யடைக்கும். —லத்தீன்

காலத்தால் குறையாத துக்கம் எதுவுமில்லை. —லத்தீன்

ஒருவன் தன் துக்கத்தை மறைத்துக் கொண்டால், அதற்குப் பரிகாரம் கிடையாமற் போகும். —துருக்கி

வயிறு காயாமலிருந்தால், எந்தத் துக்கமும் குறைவாகத் தோன்றும். —இங்கிலாந்து

துக்கத்தை வெளியே சொன்னால், சிறிது குறையும். —( " )

புதிய துக்கம் பழையதை நினைவுக்குக் கொண்டுவரும். —( " )

துக்கத்திற்கு ஒரே மருந்து வேலைதான். —இங்கிலாந்து

கணவன் இல்லையே என்று விதவை அழுகிறாள், கணவன் இருக்கிறானே என்று சுமங்கிலி அழுகிறாள், இருவரோடும் சேர்ந்து கன்னியும் அழுகிறாள். —இந்தியா

ஏக்கம் முதலில் மனத்தை முடமாக்கி, பிறகு உடலை வதைக் கின்றது. —இந்தியா

அழுத கண்களை உடையவனுக்கே கண்ணீரின் பாஷை புரியும். —இந்தியா

துக்கமெல்லாம் முட்டளவுக்கு மேல் ஏருமல் பார்த்துக் கொள்ளவேண்டும். —ஸ்வீடன்

சோகம் ஒரு மேகம் போன்றது; கனமாளுல் விழுந்து விடும். —ஆப்பிரிக்கா

சோகம் ஒரு பொக்கிஷம் போன்றது: நண்பர்களுக்கே அதைக் காட்டுவார்கள். —ஆப்பிரிக்கா

நம் வேதனையை எவர் காதிலாவது போட்டு வைக்கா விட்டால், அது கூடுதலாகும். —போலந்து

ஒருமாத இன்பத்தைவிட ஒரு நாள் துக்கம் நெடியது. —சீஞ

ஒரு துக்கத்தை இரண்டாக்கிக் கொள்ள வேண்டாம். —இங்கிலாந்து

துக்கம் பாவத்தின் முதற் குழந்தை. —இங்கிலாந்து

இப்பொழுதுள்ள இன்பத்தில் பழைய துக்கங்களை நினைத்துக் கொண்டால் இன்பமாயிருக்கும். —இங்கிலாந்து

சுறுசுறுப்பான தேனீக்குத் துக்கப்பட நேரமில்லை —( ” )

துக்கப்படுவோர் இருவர் சேர்ந்தால் துக்கம் குறையும். —( ” )

துக்கத்தை இழந்தவன் நிறைந்த லாபத்தை அடைந்தவன். —ஃபிரான்ஸ்

விதியால் வந்த துக்கத்தை வார்த்தைகளால் குறைத்துக் கொள்ளலாம். —லத்தீன்

துக்கமில்லாத நாளேயில்லை. —லத்தீ ஊ

அற்பமான துக்கங்கள் வாய்விட்டுப் பேசும்; பெருந்துக்கங்கள் மௌனமாயிருக்கும். —லத்தீன்

துக்கத்தைப் பாடித் தள்ளுங்கள். —ஸ்பெயின்

மற்ஞெருவன் துயரத்தில் நீ மகிழ வேண்டாம். —துருக்கி

சிலருடைய சிரிப்பில் கண்ணீரின் மணம் கலந்திருக்கும். —ரஷ்யா

தூங்குகின்ற சோகத்தை எழுப்பவேண்டாம். —இங்கிலாந்து

சோகங்கள் வந்தால், ஒற்றர்களைப் போல் தனித்து வருவதில்லை; படைகளாகத் திரண்டு வரும். —இங்கிலாந்து

சோகம் உரக்கக் கூவாது. —எஸ்டோனியா

சோகமுள்ளவர் பேச முடியாவிட்டால், ஆவி துறக்க நேரும். —ஸெர்பியா

## அன்பு

அன்பு என்னும் ஓடம் மலைமீது ஏறும். —இந்தியா

அன்பிருந்தால், புளிய மரத்தின் இலையில் இருவர் படுக்கலாம். —இந்தியா

பருத்தியைப்போல் அன்பு செலுத்து; வாழ்க்கையில் அது ஆடையாக உன்னைக் காத்து, மரணத்திலும் உன்னுடனேயே வருகின்றது. —இந்தியா

வாலில்லாத நாய் தன் அன்பை காட்ட முடியாது. —இலங்கை

உன்னைச் சுமந்து செல்லும் குதிரையிடத்தும், உன்னைப் பாலூட்டி வளர்க்கும் பசுவினிடத்தும், உன் உடைமைகளைக் காக்கும் நாயினிடத்தும் அன்பாயிரு. —துருக்கிஸ்தானம்

உலர்ந்த காற்றில் பனி இராது, வயது காலத்தில் அன்பு இராது. —சீனா

மனிதர்கள் நேசமாயுள்ள இடத்தில் தண்ணீர்கூட இனிப்பாயிருக்கும். —சீனா

ஒருவனுடைய உள்ளத்திலுள்ள அன்பை அவன் கொடுக்கும் தொகையை வைத்து மதிப்பிட முடியாது. —சீனா

இதயத்தை விரிவாக்குவோன் வாயைச் சுருக்குவான். —( " )

பயன் கருதி அன்பு காட்டுவதைவிட, காட்டாமலிருப்பது மேல். —சீனா

அன்பை விதைத்தவன் நன்றியை அறுப்பான். —அரேபியா

அன்புள்ள இதயம் எப்பொழுதும் இளமையோடிருக்கும். —யூதர்

ஓநாயிடம் அன்பு செலுத்தல் ஆட்டுக்குக் கொடுமை செய்வதாகும். —பாரசீகம்

பாலும் முட்டையும் வேண்டுமென்ருல், பசுவையும் கோழியையும் பயமுறுத்தக் கூடாது. —திபேத்து

அன்பு என்பது என்ன? மனித சமூகத்தை நேசித்தல். அறிவு என்பது என்ன? மனித சமூகத்தை அறிதல். —கன்பூஷியஸ்

வேண்டியவர்களுக்குக் கதவு விரைவில் திறக்கும். —வேல்ஸ்

அன்பு குறைந்துவிட்டால், குறைகள் பெரிதாகத் தெரியும். —வேல்ஸ்

அன்பிருந்தால், சமாதானப் படுத்துவது எளிது. —வேல்ஸ்

அன்புக்குரியவரை எளிதில் வசப்படுத்தலாம். —வேல்ஸ்

பேரன் பேத்தி எடுத்த பிறகுதான் பூரணமான அன்பு மலரும். —வேல்ஸ்

அன்பு அச்சத்தை விரட்டி விடும். —ஸெக்

அன்பு குடிசைகளை மாளிகைகளாக்கும், நார்களைப் பட்டு நாடாக்களாக்கும். —எஸ்டோனியா

உனக்கு அன்பு வேண்டுமானுல், நீ அன்பு காட்டு. —( " )

அன்புச் சோலைகள் வாடுவதே யில்லை. —கிரீஸ்

உலகம் அன்பிலும் சமரசத்திலும் நிற்கின்றது. —ரஷ்யா

உன் அன்புக்கும் ஓர் அளவிருக்கட்டும். —ஸ்வீடன்

வெறும் கையோடு வருதல் வெறுக்கத் தகுந்ததாகும். —ஆப்பிரிக்கா

வீடு சிறிதானுலும், நூறு நண்பர்களைக் கொள்ளும். —எகிப்து

அன்பு வீணுகப் போயிற்று என்று சொல்லவேண்டாம்; அன்பு வீணுனதேயில்லை. —அமெரிக்கா

இரண்டு மனங்கள் ஒன்ருனுல், வைக்கோல் தொட்டியும் அரண்மனையாகும். —கீழை நாடு

அன்பின் உடன் பிறந்தவள் விசுவாசம். —ஜெர்மனி

கண்ணீரோடு வழியனுப்புபவன் ஆனந்தத்தோடு வரவேற்பான். —போலந்து

## இரக்கம்

இரக்கம் அன்போடு ஒத்தது. —இங்கிலாந்து

நொந்த புண்ணில் வேல் கொண்டு குத்தலாமா? —தமிழ்நாடு

வயிற்றை நிரப்பிவிட்டு முதுகில் பாரத்தை ஏற்று. —இந்தியா

குருடர் பாலத்தை தாண்டுவதற்கு வழி காட்டுங்கள். —சீனு

அநாதைக் குழந்தைகளுக்கு இரங்குங்கள்; விதவைகளுக்கு உதவி புரியுங்கள்; முதியோரைப் பேணுங்கள்; குழந்தைகளிடம் அன்பு காட்டுங்கள்; அல்லற்படுவோருக்கு உதவி செய்யுங்கள்; அபாயத்திலுள்ளவர்களைக் காப்பாற்றுங்கள். —டாவோ

இரக்கமும் அவசியமும் உயிர்களை ஒன்றுசேர்க்கின்றன. —இங்கிலாந்து

அல்லற்படும் இடங்களிலெல்லாம் இரக்கம் காட்டுதல் நம் கடன். —இகிங்லாந்து

ஒருவனுக்கு மற்றவர் இரக்கம் காட்ட வேண்டுமானல் அவன் மற்றவர்களுக்கு இரங்கவேண்டும். —இங்கிலாந்து

அழகு சிதறிப்போகும், இரக்கம் நிலைத்திருக்கும். —இங்கிலாந்து

கருணை கடவுள் அளிக்கும் பரிசு. —இங்கிலாந்து

கல்லைவிடக் கடினமானது மனிதன் இதயம். —பல்கேரியா

கோயிலுக்கு ஒரு ராத்தல் தங்கம் அளிப்பதைவிட, ஒரு துளி இரக்கம் மேலானது. —பல்கேரியா

பயமில்லாத இடத்தில் இரக்கம் இராது. —எஸ்டோனியா

சில சமயங்களில் இரக்கம் காட்டுவது கொடுமையாகும், கொடுமை இரக்கமாகும். —இத்தாலி

## அறம்

இந்த உலகை விலையாகக் கொடுத்து, மறு உலகை வாங்கு; இரண்டும் உனக்கு உரிமையாகும். —அரேபியா

## ஈகை

பாத்திரமறிந்து பிச்சையிடு. —தமிழ்நாடு

தானம் கொடுத்த மாட்டைப் பல்லைப் பிடித்துப் பாராதே. —தமிழ்நாடு

சோற்றுப் பருக்கையை விட்டெறிந்தால் ஆயிரம் காக்காய். —தமிழ்நாடு

ஈயாத கை சுவர்க்கத்தைப் பூட்டிவிடுகின்றது. —இந்தியா

இவ்வுலகில் கொடுப்பது மறு உலகில் கிடைக்கும். —இந்தியா

ஒரு கையால் இறைத்து இருகையால் வாரவேண்டும். —இந்தியா

உலோபியின் கணக்கும் தர்மம் செய்பவன் கணக்கும் வருடக் கடைசியில் ஒன்று போலிருக்கும். —இந்தியா

நீ அளிக்கும் தானமே உன் கேடயம். —இந்தியா

நீ செய்யும் தானம் உன் வழிச்செலவுக்கான கட்டுச்சோறு —இந்தியா

தானம் கொடுத்தது ஒன்று ஆயிரமாக விளையும். —துருக்கி

ஏழைகள் அடக்கத்தோடு தானம் செய்கிறார்கள்; செல்வர்கள் வெறுப்புடன் விட்டெறிகிறார்கள்; பெரிய மனிதர்கள் ஏசிக்கொண்டே கொடுக்கிறார்கள். —சீனா

நீ தாராளமா யிருந்தால் பணக்காரனாக முடியாது; பணக்காரனா யிருந்தால் தாராளமாயிருக்க முடியாது. —சீனா

ஔதாரியம் என்பது கேட்குமுன் நன்மை செய்தல். —அரேபியா

ஈகையின் குறை ஈந்தவனே அதை எடுத்துச் சொல்லல்.
—அரேபியா

கொடையாளன் ஈசனின் அருகிலுள்ளான்; மக்களின் அருகிலுள்ளான்; துறக்கத்தின் அருகிலுள்ளான்; நரகத்திற்கும் அவனுக்கும் வெகு தூரம்.
—சீனு

குதிரைமீது பரிசுகள் அனுப்புவோனுக்கு, ஒட்டகத்தின்மீது பரிசுகள் வரும்.
—சீனு

சொற்பமாகத் தானமளித்தல் கேவலமில்லை, ஒன்றும் கொடாமலிருப்பதற்கு அது மேலாகும்.
—சீனு

'கொடு' என்ற சொல்லை ஒரு முறை கேட்பதைவிட, 'எடுத்துக் கொள்' என்ற சொல்லை ஆயிரம் முறை கேட்டல் இனிது.
—சீனு

நல்லோர் தேடுவதெல்லாம், மேகங்களைப்போல், பிறருக்குக் கொடுப்பதற்கே.
—பர்மா

செல்வத்திற்கு அழகு ஈகை.
—யூதர்

திடகாத்திரமாயிருக்கும் பொழுது அளிக்கும் பொருள் தங்கம், நோயில் அளிப்பது வெள்ளி, செத்தபின் அளிப்பது ஈயம்.
—யூதர்

ஏழைகளுக்குத் திறவாத வீடு வைத்தியனுக்குத் திறக்கும்.
—யூதர்

உன் பணப்பையை அவிழ்த்துவிடு; (பிறகு) கோணியைத் திற. [சிறு கொடை அளித்தாலும் அது பெருஞ் செல்வமாக வரும்.]
—யூதர்

கரிய மேகம் அச்சுறுத்தும், வெள்ளை மேகம் மழை பொழியும்.
—கீழை நாடுகள்

உடனே இல்லையென்னும் உலோபி காலம் கடத்திக் கொடுக்கும் தயாளனைவிட மேலானவன்.
—( " )

வெங்காயமானாலும் பெருந்தன்மையுடன் கொடு.
—ஆப்கானிஸ்தானம்

சொற்பமாய்க் கொடுப்பவன் இதயத்திலிருந்து கொடுக்கிறான், அதிகம் கொடுப்பவன் தன் செல்வத்திலிருந்து கொடுக்கிறான். —பாரசீகம்

தாராளமுள்ள மனிதன் இறைவனின் நண்பன். —பாரசீகம்

பறவைகளில்லாத மரம் மலட்டு மரம். —சயாம்

தானம் கொடுத்துவிட்டு, எதையும் திரும்பப் பெறாதவன் மனிதன்; கொடுத்தும் வாங்கியும் வருபவன் அரை மனிதன்; பெறுவதைத் தவிரக் கொடுத்தறியாதவன் மனிதப் பிறவியே அல்லன். —சூஃபி

சிறு கொடைகளே சிறந்த கொடைகள். —ஃபிரான்ஸ்

தானம் கொடுங்கள், உங்கள் குழந்தைகள் பிச்சையெடுக்க நேராது. —ஜெர்மனி

கொடுப்பவன் வந்தால், கதவு தானாகத் திறக்கிறது. —( " )

இறைக்கிற கிணறுகளில் நீர் வற்றாது. —இங்கிலாந்து

ஒவ்வொன்றுக்கும் அளவுண்டு, தானத்திற்கு மட்டும் அளவு கிடையாது. —வேல்ஸ்

நாளைக்கும் தானம் செய்யும் நிலையிலிருப்பதற்காக இன்று தானம் செய்யுங்கள். —டென்மார்க்

எனக்குக் கொடையளிப்பவன் நானும் பிறருக்கு அளிக்க வேண்டும் என்பதைக் கற்பிக்கிறான். —வேல்ஸ்

அடுப்பு புகையுமிடத்தில் பிச்சைக்காரனுக்குரிய ஒரு பங்கு இருக்கிறது. —எஸ்டோனியா

எனக்குக் கொடுப்பதற்காகவே கடவுள் உனக்குக் கொடுத்திருக்கிறார். —ஆப்பிரிக்கா

மனிதர்களுக்குச் செய்யும் உதவிகள் கடனாகக் கொடுப்பவை; வம்பர்களுக்குக் கொடுப்பதுதான் தர்மம். —ஆப்பிரிக்கா

சுவர்க்க வாயிலைத் திறக்கும் திறவுகோல் ஈகை. —இங்கிலாந்து

ஈகை இதயத்தின் பண்பு, கைகளின் பண்பன்று. —இங்கிலாந்து

உலகம் முழுவதும் ஈகை நிலைத்தால், பூமியே சுவர்க்கமாகும்; நரகம் என்பது கட்டுக்கதையாகும். —இங்கிலாந்து

உண்டியலில் ஓர் அணுவைப் போட்டுவிட்டு, ஒரு ரூபாயை எடுத்துக் கொள்பவனும் உண்டு. —இங்கிலாந்து

இதயத்தையே கொடுப்பவன் பணம் இல்லையென்று சொல்ல மாட்டான். —இங்கிலாந்து

அழகான வார்த்தைகளை அள்ளிக் கொடுப்பவன் வெறும் கரண்டியால் ஊட்டப் பார்ப்பவன். —இங்கிலாந்து

கொடுக்கும் கையே சேகரிக்கும். —இங்கிலாந்து

நாம் கொடுத்ததுதான் நம்மிடம் இருப்பது; நாம் செலவழித்தது நம்மிடம் இருந்தது; நாம் விட்டுச் சென்றது நாம் இழந்தது. —இங்கிலாந்து

கொடுப்பதுதான் செல்வரின் கடமை. —கதே

ஏழைகளுக்கு அளியுங்கள், வானுலகில் நீங்கள் பெருநிதியை அடைவீர்கள். —புதிய ஏற்பாடு

ஏழைகளிடம் இரக்கம் காட்டுவோன் கர்த்தருக்குக் கடன் கொடுப்பவன். —புதிய ஏற்பாடு

சந்தோஷமாய்த் தானமளிப்பவனைக் கர்த்தர் நேசிக்கிறார். —புதிய ஏற்பாடு

தானம் செய்தல் பல பாவங்களை மறைத்துவிடும். —( ” )

பெறுவதைவிடக் கொடுப்பதே புண்ணியமானது. —( ” )

அறிவாளி செல்வத்தைப் புதைத்து வைப்பதில்லை; அவன் கொடுக்க கொடுக்கச் செல்வம் கூடிவரும். —சீனா

பின்னால் இரண்டு கொடுப்பதாகச் சொல்வதைவிட ஒன்றைக் கொடுத்தனுப்புதல் மேல். —ஃபிரான்ஸ்

பிச்சை ஏற்று வாழ்வதைக் காட்டிலும், வாழாமையே இனிது. —சீனா

சீக்கிரமாகக் கொடுப்பவன் இரட்டிப்பாகக் கொடுத்தவனாகிறான். —லத்தீன்

நன்மையைச் செய்; யாருக்கென்று கேளாதே. —யூதர்

உணவுக்கு உப்பைப் போல், செல்வத்திற்கு ஈகை. —யூதர்

அன்பில்லாமல் ஈந்தால், பெரிய பரிசுகளும் அற்பமாகிவிடும். —யூதர்

பெரிதாக வாக்களிப்பதைவிட, சிறிதளவு ஈவது மேல். —ஜெர்மனி

பரிசுகள் தெய்வங்களையும் அனுகூலமாக்கும். —கிரீஸ்

பரிசு மலிவானதுதான், ஆனால் அன்பு அரிதானது. —ரஷ்யா

பரிசுகள் பாறைகளை உடைக்கும். —ஸ்பெயின்

வாங்கியே பழகிய கைக்குக் கொடுப்பதென்றால் கடினம்தான். —அரேபியா

ஈகையால் ஏழையானவர் இல்லை. —இத்தாலி

கொடுக்கிற கை ஏந்துகிற கைக்கு மேலே இருக்கும். —துருக்கி

கொடுக்கக் கூடியவனுக்கு நண்பர்கள் அதிகம். —ஃபிரான்ஸ்

கொடுப்பது செல்வர்களின் கடமை. —கதே

நீ கொடுப்பது மணலில் எழுதப்படும், நீ பெறுவது இரும்புக் கையால் எழுதப்படும், —ஜெர்மனி

எவருக்கு அளிக்கிறோம் என்பதில் கவனமாயிருக்கவும். —லத்தீன்

ஈகைக்கு எல்லையில்லை. —லத்தீன்

நான் கொடுத்ததெல்லாம் இன்னும் என்னிடத்திலேயே இருக்கின்றன. —லத்தீன்

கொடுப்பதற்கும் சேமிப்பதற்கும் அறிவு வேண்டும். —ஸ்பெயின்

பொது மக்களுக்கு அளிப்பவன் எவருக்கும் கொடுத்ததாகாது, —ஸ்பெயின்

நாமாக அளித்தல் பெருமை, இழத்தல் துக்கம். —ஸ்பெயின்

ஒருவன் ஏழையாயிருந்தால்தான் ஈகையின் இன்பம் தெரியும். —இங்கிலாந்து

கொடுப்பதில் நேரம் கடத்துபவன், கொடுக்கும் முறையை அறியாதவன். —இங்கிலாந்து

ஒரு கணத்தில் கொடுப்பவன் இரட்டிப்பாகக் கொடுத்தவனுவான் —இங்கிலாந்து

எனக்கு வெந்த இறைச்சியைக் கொடுத்துவிட்டு, பிறகு கம்பியால் அடித்தாலும் பட்டுக் கொள்கிறேன். —( " )

கொடுத்துச் செலவழித்ததைக் கடவுள் நிரப்பிவிடுவார். —இங்கிலாந்து

## தயாளம்

கனிந்த பழங்களுள்ள மரத்தை அதிகமாக உலுப்ப வேண்டாம். —ஸ்விட்சர்லாந்து

கனி மரத்தை எல்லோரும் உலுப்புவர் —இந்தியா

காய்த்த மரம் கல்லெறி படும். —தமிழ்நாடு

பசுமையான மரத்தில் நிறையக் கிளிகள் இருக்கும். —இந்தியா

தயாள குணத்தின் கதவைத் திறப்பது கஷ்டம், (திறந்தபின்) அடைப்பது கஷ்டம். —சீனு

வீரமுள்ள மனிதர்களுக்குத் தயாளமுள்ள இதயங்கள் உண்டு. —அமெரிக்க நாடோடிகள்

குடிசையின் கதவு விசாலமானது. —அயர்லாந்து

ஓ விருந்தினர்களே, வாருங்கள், நாம் உணவருந்தத் தொடங்குவோம். —ஆப்பிரிக்கா

இனிய நீருள்ள கிணறு காலியாகவே இருக்கும். —எகிப்து

## உலோபம்

வெறும் கையை நக்குவாரில்லை. —ஆப்பிரிக்கா

எச்சில் கையால் காக்கை விரட்டமாட்டான். —தமிழ்நாடு

உலோபியின் சேமிப்பு மண்ணுக்குத்தான் ஆதாயம். —இந்தியா

ஒருவன் உலோபியா யிருந்தால், அவன் மகன் ஊதாரியா யிருப்பது நிச்சயம். —சீனு

தங்கம் உலுத்தனுக்குச் சொந்தமில்லை; உலுத்தனே தங்கத்திற்குச் சொந்தம். —அரேபியா

மூடிய கையே சுவர்க்கத்தின் பூட்டு, திறந்த கையே அருளின் திறவுகோல். —பாரசீகம்

உலோபியைப் புதைத்த பின்புதான் அவன் புதைத்துவைத்த வெள்ளி வெளியே வரும். —பாரசீகம்

அடைத்த கதவைக் கண்டு, சயித்தான்கூடப் போய்விடுவான். —ஃபிரான்ஸ்

உலோபி எதிர்காலப் பிச்சைக்காரன், அற்பன் எப்பொழுதும் இரப்பாளி. —போலந்து

காய்ந்த எலும்பை நக்குவாரில்லை. —அல்பேனியா

பழைய சட்டையை இனமாக அளிக்கும்போது, பொத்தான்களைக் கழற்றிக்கொள்ளாதே. —அயர்லாந்து

ஓர் உருளைக்கிழங்கும், ஒரு மீனும் சேர்ந்துவிட்டால், உலோபிக்குக் கலியாணச் சாப்பாடு. —அயர்லாந்து

நாய்கூடக் காய்ந்த எலும்பை மறுக்கிறது. —அமெரிக்கா

உலோபி பெண் பன்றியைப் போன்றவன், செத்த பிறகே பயன்படுவான். —ஸெக்

உலோபி தன் நாய்க்கு வைக்கோலை வைத்து, கழுதைக்கு எலும்பைப் போடுவான். —இங்கிலாந்து

உலோபியின் இரும்புப் பெட்டியில் சயித்தான் படுத்து ஆலோசனை செய்துகொண்டிருப்பான். —இங்கிலாந்து

சொற்பத் துணியை மிச்சப்படுத்துவதற்காக உலோபி தன் சட்டையைக் கெடுத்து விடுவான். —ஷேக்ஸ்பியர்

தந்தை உலுத்தன், மகன் ஊதாரி. —ஃபிரான்ஸ்

உலோபி என்றுமே ஏழை. —ஜெர்மனி

ஓநாய்க்காவது சில சமயங்களில் திருப்தியுண்டு, உலோபிக்கு அதுவுமில்லை. —ஜெர்மனி

உலோபிக்கு இல்லாததாலும் பயனில்லை, இருந்தாலும் பயனில்லை. —லத்தீன்

உலோபிக்கு இரட்டைச் செலவு. —தமிழ்நாடு

உலோபியிடம் யாசித்தல் கடலில் அகழி வெட்டுவது போன்றது. —துருக்கி

செல்வம் மிகுந்த உலோபியும், கொழுத்து வளர்ந்த ஆடும் இறந்த பிறகே நல்லவை. —யூதர்

## உ த வி

தினந்தோறும் எனக்கு வேண்டிய உணவைத் தேடிக்கொள்ள வாய்ப்பளித்தவனே என் தந்தையும் சகோதரனுமாவான். —வேல்ஸ்

படிக்கட்டைக் கடப்பதற்கு நொண்டி நாய்க்கு உதவி செய். —இங்கிலாந்து

காலம் தாழ்த்துச் செய்யும் உதவி உதவியன்று. —இங்கிலாந்து

வண்டிக்கு மை போடுவோன் தன் எருதுக்கு உதவி செய்கிறான். —இத்தாலி

ஒவ்வொருவருக்கும் உதவி செய்பவன் எவருக்கும் உதவி செய்தவனாகான். —ஸ்பெயின்

நீ உன் நண்பனுக்குப் பணத்தால் உதவி செய்ய முடியா விட்டால், ஒரு நெட்டுயிர்ப்பாலாவது (அனுதாபம் காட்டி) உதவி செய். —யூதர்

பிறர்க்கு உதவி செய்தலே உண்மையான சமயம். —இந்தியா

ஒரு கை மறு கையைக் கழுவுகின்றது; இரு கைகளும் முகத்தைக் கழுவுகின்றன. —குர்திஸ்தான்

நான் (கனிகள்) உண்பதற்காக மற்றவர்கள் மரங்களை நட்டார்கள்; மற்றவர் உண்பதற்காக நானும் நடுகிறேன். —பாரசீகம்

நீ அனுபவித்தல் அறிவு, பிறரையும் அனுபவிக்கச் செய்தல் நற்பண்பு. —பாரசீகம்

காகத்தை வளர்த்தால், அது உன் கண்களைக் கொத்தும். —ஃபிரான்ஸ்

ஒரு மனிதனுக்கு உதவி செய்பவன் ஒரு தேவன். —இங்கிலாந்து

மரம் நட்டவன் அதன் கனியைப் புசித்தல் அரிது. —ஹாலந்து

கூடை முழுவதையும் கவிழ்க்காமல், விதைகளைக் கையால் எடுத்து விதைக்கவும். [கவனித்து உதவிகள் செய்யவும்.]

வாலில்லாத காளை மற்றக் காளைகளின் ஈக்களை விரட்டும். —ஜியார்ஜியா

கிணறு வெட்டுபவன் ஒருவன்தான். ஆனால், அதில் நீர் குடிப்பவர் பலர். —ஆப்பிரிக்கா

மனிதர்கள் குதிரைகளால் சுமந்து செல்லப்படுகின்றனர், கால் நடைகளால் உணவு பெறுகின்றனர், ஆடுகளிடம் உடை பெறுகின்றனர், நாய்களால் காக்கப் பெறுகின்றனர், குரங்குகளால் பின்பற்றப்பெறுகின்றனர், புழுக்களால் உண்ணப் பெறுகின்றனர். —ஹங்கேரி

செருப்புள்ள காலுக்குப் பூமியெல்லாம் தோல் விரிப்பு. —இந்தியா

தோட்டக்காரனுக்கு வேண்டியது மழை; வண்ணானுக்கு வேண்டியது வெய்யில்; வங்கிக்காரருக்கு வேண்டியது ஒரே பேச்சு, திருடனுக்கு வேண்டியது நிசப்தம். —இந்தியா [வங்கிக்காரர்—பாங்குக்காரர். ]

எப்பொழுதெல்லாம் ஓர் ஏழை மற்றோர் ஏழைக்கு உதவி செய்கிறானோ, அப்பொழுதெல்லாம் ஆண்டவர் புன்னகை செய்கிறார். —இங்கிலாந்து

மற்றொருவன் உயிரைக் காப்பாற்றியவனுக்குப் பத்து ஆண்டுகள் ஆயுள் கூடும். —சீனா

நூறு முறை பிறருக்கு உதவி செய்பவன், ஒருமுறை தவறி விட்டால், வசைதான் கிடைக்கும். —ஜெர்மனி

சிறு உதவியும் பெரும் பயனாகும். —இங்கிலாந்து

ஒரு தானியம் பையை நிரப்பாது, ஆனால் அதுவும் மற்றைத் தானியங்களுக்கு உதவியாகச் சேர்கின்றது. —ஸ்பெயின்

தாழ்த்தப்பட்டவர்களுக்கு உதவி செய்தல் இரக்கமுள்ள செயலாகும். —லத்தீன்

சொன்ன புத்தியைக் கேளாதவனுக்கு உதவிசெய்ய முடியாது. —இத்தாலி

தங்களுக்குத் தாங்களே உதவி செய்து கொள்பவர்களுக்கு இறைவனும் உதவி செய்கிறான். —இங்கிலாந்து

## நன்றி

உப்பிட்டவரை உள்ளளவும் நினை. —தமிழ்நாடு

உண்ட வீட்டுக்கு இரண்டகம் செய்யாதே. —தமிழ்நாடு

வேலை முடிந்த பிறகு விளக்குமாறு சப்பட்டை. —இந்தியா

வாயிலே சோறுள்ளவரை வார்த்தைகள் இனிமையாயிருக்கும்.
—இந்தியா

ஆறு கடக்கும் வரை அண்ணன் தம்பி, ஆறு கடந்த பின், 'நீயார்? நான் யார்?' —தமிழ்நாடு.

மூன்று நாள் நன்றியை நாய் மூன்று ஆண்டுகளுக்கு மறக்காது; மூன்று வருடம் நன்றியைப் பூனை மூன்று நாட்களில் மறந்து விடும். —ஜப்பான்

நன்றி மூன்று வகை: இதயத்தில் உணர்தல், சொல்லால் கூறுதல், பதிலுக்கு உதவி செய்தல். —அரேபியா

உன் தோட்டத்திலே செடியை நட்டால், அது பலன் கொடுக்கும்; ஒரு மனிதனை அங்கே நட்டால், அவன் உன்னை விரட்டி விடுவான். —அரேபியா

மனிதனுக்கு நன்றி செலுத்தாதவன், இறைவனுக்கும் செலுத்த மாட்டான். —அரேபியா

கொடுப்பவன் ஒருபோதும் நினைவில் வைக்கக்கூடாது. பெறுபவன் ஒருபோதும் மறக்கக்கூடாது. —யூதர்

ஒரு வீட்டினுள் நுழையும் பொழுது முன்னே பார்; வெளியே செல்லும் பொழுது பின்னே பார். —மலாய்

மனிதன் தனக்கு நன்மை செய்தவனின் அடிமை. —பாரசீகம்

தூக்கிலிருப்பவனைக் கயிற்றிலிருந்து விடுவித்து விட்டால், அவன் உன்னை அதில் மாட்டிவிடுவான். —ஃபிரான்ஸ்

உபகாரம் செய்பவன் நன்றியற்றவர்களை உண்டாக்குகிறான்.
—ஃபிரான்ஸ்

எனக்கு உணவளித்தவனுடைய பாட்டை நான் பாடுகிறேன்.
—ஜெர்மனி

நன்றியும் கோதுமையும் நல்ல நிலத்தில்தான் விளையும்.
—ஜெர்மனி

நன்றி என்பது வானுலகம் போய்விட்டது, போகும்போது ஏணியையும் எடுத்துவிட்டது. —போலந்து

வெள்ளாடு தான் தின்பதற்கு மேலாக லாபமளிக்கிறது.
—அல்பேனியா

எவனுக்கு அளவற்ற உதவி செய்தாயோ, அவனிடம் எச்சரிக்கையாயிரு. —போஸ்னியா

ஒருவன் தன் துணியை நெய்தபிறகு, தறியை எற்றித் தள்ளி விட்டான். —பல்கேரியா

நன்றியோடு இரு, கடவுள் உன்னைக் காப்பார்.
—எஸ்டோனியா

கடவுள், பெற்றோர், குரு—இவர்களுடைய உதவிக்கு எவ்வளவு நன்றி செலுத்தினாலும் போதாது. —எஸ்டோனியா

வாலை ஆட்டினால் நாய்க்குக்கூட ரொட்டி கிடைக்கிறது.
—இத்தாலி

நன்றி மறத்தலே அன்பின் கல்லறை. —போர்ச்சுகல்

நன்றியுள்ள மனிதன் எது சொன்னாலும் நம்பலாம்.
—ஸ்பெயின்

மனிதன் தான் அடையும் நன்மைகளுக்கு அடிமையாகிறான்.
—ஆப்பிரிக்கா

உனக்கு நிழலளிக்கும் மரத்தை வெட்டிச் சாய்க்க வேண்டாம்.
—அரேபியா

நன்றி என்பது இதயத்தின் இசை. —இங்கிலாந்து

சொற்கள் வெறுமையான வந்தனங்கள். —இங்கிலாந்து

நரகத்தில் நன்றி கெட்டவர்கள் நிறைந்திருப்பார்கள்.
—இங்கிலாந்து

உனக்கு நீந்தக் கற்றுக் கொடுத்தவன் நான், என்னை நீ மூழ்கடிக்க விரும்புகிறாய்! —இங்கிலாந்து

நன்றி மறத்தல் என்ற களை எல்லாப் பிரதேசங்களிலும் உண்டு.
—இங்கிலாந்து

பழைய உதவிகள் விரைவில் மறந்துபோம். —இங்கிலாந்து

நன்றி மறத்தலே மற்றைத் தீமைகளுக்கெல்லாம் தாய்.
—ஃபிரான்ஸ்

பெரும்பாலான மனிதர்கள் மேலும் நம் உதவிகளைப் பெறுவதற்காகவே நன்றி காட்டுகின்றனர். —ஃபிரான்ஸ்

நீ என் முதுகைச் சொறிந்தால் நான் உன் முதுகைச் சொறிவேன். —லத்தீன்

நன்றி மறப்பவன் சுற்றிலும் துவாரங்களுள்ள தொட்டி. —லத்தீன்

பூமியில் தோன்றுபவைகளில் ஆகக் கழிவானது நன்றி கெட்டவன். —லத்தீன்

உன் பழைய நண்பர்களிடம் நன்றிகெட்டு நடக்க வேண்டாம். —யூதர்

நன்றி கெட்ட மனிதர் நன்றிக்குரிய செயலே செய்யமாட்டார். —டென்மார்க்

செருக்கின் மகள் நன்றி மறத்தல். —ஸ்பெயின்

தீயோர் எப்பொழுதும் நன்றி மறப்பவர்கள். —ஸ்பெயின்

வீடு கட்டி முடிந்துவிட்டால், தச்சரை மறந்து விடுவோம். —இந்தியா

உண்ட உணவு உடனே மறந்து போகும். —ஸ்பெயின்

நான் உதவி செய்தவர்களே எனக்கு அதிகக் கேடு செய்கிறார்கள். —ஸாஃபோ

நன்றி கெட்ட குழந்தைகளைப் பெற்றிருத்தல் நாகத்தின் பல்லைவிட எவ்வளவு கூர்மையா யிருக்கிறது! —ஷேக்ஸ்பியர்

நன்றி கொன்றவன் நன்றிக்குரிய செயலே செய்தறியான். —டென்மார்க்

ஒருவன் வளர்த்துவந்த பறவையே அவனுடைய கண்களைக் கொத்துகின்றது. —இங்கிலாந்து

உதவிகள் செய்துகொண்டே யிருப்பவர்களிடம் நன்றி கெட்டவர்கள் அதிகமாயிருக்க மாட்டார்கள். —ஃபிரான்ஸ்

# நம்பிக்கை

நம்பினால் தெய்வம், நம்பாவிட்டால் கல். —தமிழ்நாடு

நீதிமான்கள் நம்பிக்கையால் வாழ்வார்கள். —புதிய ஏற்பாடு

நம்பிக்கையால் பார்க்க வேண்டும் என்றால், பகுத்தறிவுக் கண்ணை மூடிக்கொள்ள வேண்டும். —பிராங்க்லின்

நம்பிக்கையே ஏழை மனிதனின் வருமானம். —டென்மார்க்

உயிருள்ளவரை நம்பிக்கை யுண்டு. —இங்கிலாந்து

நம்பிக்கையாலேயே உயிர் வாழ்பவன் 'ஃபிடில்' இல்லாமலே நடனமாடுவான். —இங்கிலாந்து

நம்பிக்கையும் இல்லாதிருப்பவனைப் போன்ற தரித்திரன் வேறில்லை. —இங்கிலாந்து

துக்கத்தின் சிறந்த இசை நம்பிக்கை. —இங்கிலாந்து

நம்பிக்கையும் இல்லாவிட்டால், உள்ளம் உடைந்துவிடும். —இங்கிலாந்து

மனிதனிடமுள்ள நம்பிக்கையைப் பறித்துவிட்டால், அவன் விலங்காகி விடுவான். —இங்கிலாந்து

நம் நம்பிக்கையே சிதறிப்போகும் பொழுது, பொறுமை நிலைத்திருக்க வேண்டும். —இங்கிலாந்து

நம்பிக்கையில்லாத பொழுது முயற்சியும் இராது. —( ,, )

நம்பிக்கையாலேயே வாழ்பவன் பசியால் மடிவான். —( ,, )

நம்பிக்கை மூடனைச் செல்வனுக்கும். —ஜெர்மனி

விழித்துக்கொண்டே கனவு காண்பதுதான் நம்பிக்கை. —கிரீஸ்

பெரும்பாலான மனிதரை நம்பிக்கைதான் காத்து நிற்கின்றது. —கிரீஸ்

வீணான ஒரு நம்பிக்கையை இழப்பவன், அதிக நன்மையை அடைகிறான். —இத்தாலி

நம்பிக்கை கொள்வதை நிறுத்தினால், உன் பயமும் நின்று விடும். —லத்தீன்

உயிருள்ளவரை நம்பிக்கையும் உண்டு. —லத்தீன்

நம்பிக்கையே உலகை இயக்கி வருகின்றது. —இந்தியா

நான் நம்புகிறவர்களிடமிருந்து கடவுள் என்னைக் காப்பாற்றட்டும். —ஃபிரான்ஸ்

நாம் எச்சரிக்கையுடன் இருப்பதால் நம்பிக்கை பெறுகிறோம். —கிரீஸ்

நம்பிக்கையே நம்பிக்கையை உண்டாக்கும். —லத்தீன்

ஒருவரையும் நம்பாதவனை மற்றவர்களும் நம்பமாட்டார்கள். —சீனு

வெறும் கல்லானாலும், நீ அதை (உறுதியாக) நம்பினால், நீ குணமடைவாய். —அரேபியா

பிறவிக் குருடன் ஒளியை நம்பமாட்டான். —ஜெர்மனி

நம்பிக்கை இழுத்துச் செல்லும் வண்டிக்கு வறுமைதான் சாரதி. —போலந்து

உயிரோடிருப்பவருக்குத்தான் நம்பிக்கை, இறந்தவர்களுக்கு எதுவுமில்லை. —கிரீஸ்

வேறொன்றும் இல்லாதவர்களிடம் நம்பிக்கை மட்டும் இருக்கும். —கிரீஸ்

துயரப்படுவோருக்கு நம்பிக்கையைத் தவிர வேறு மருந்தில்லை. —ஷேக்ஸ்பியர்

சுரங்கத்தில் விலங்கிடப்பட்டு வேலை செய்யும் உழைப்பாளியும் நம்பிக்கையாலேயே உயிர் வாழ்கிறான். —ஒவிட்

பயனற்றதைப் பற்றிக்கொண்டிருப்பதைவிட, நல்ல நம்பிக்கை மேலானது. —லத்தீன்

உயிருள்ளவரை மனிதன் எதையும் எதிர்பார்க்கலாம். —லத்தீன்

நீண்ட கால நம்பிக்கையால் ஆன்மாவும் சோர்ந்துவிடும். —இங்கிலாந்து

தெய்வங்கள் அன்புடையவை, மனிதருக்கு அவை நம்பிக்கையை அளிக்கின்றன. —வில்லியம் மாரிஸ்

பெரிய நம்பிக்கைகளால் பெரிய மனிதர்கள் உருவாகின்றனர். —இங்கிலாந்து

நல்லதில் நம்பிக்கை கொள்ளாதவன் தீயதற்கும் அஞ்ச மாட்டான். —இங்கிலாந்து

இறுதிவரை நம்புங்கள். —புதிய ஏற்பாடு

நத்தை, பக்கத்து வீட்டுக்காரரை நம்பாததால், போகுமிடமெல்லாம் தன் வீட்டைச் சுமந்துகொண்டு செல்கின்றது. —டென்மார்க்

நாடு துறந்தவர்கள் நம்பிக்கையினாலேயே வாழ்கின்றனர். —கிரீஸ்

ஒருவன் கடைசியாக இழக்கும் பொருள் நம்பிக்கை. —இத்தாலி

சொல்வதை யெல்லாம் நம்புவதானால், பிறகு ஒருவன் தன்னையே நம்பமாட்டான். —அமெரிக்கா

நம்பிக்கைக் குதிரைகள் பாய்ந்து செல்லும்; ஆனால் அநுபவக் கழுதைகள் மெதுவாகச் செல்லும். —ரஷ்யா

நம்பிக்கை யென்னும் இராஜ்யத்தில் மாரிக்காலமே கிடையாது. —ரஷ்யா

ஆற்றை நம்பலாம், ஓடையை நம்பக் கூடாது. —ரஷ்யா

## சுத்தம்

சுத்தம் பிரார்த்தனைக்குத் திறவுகோல். —அரேபியா

சுத்தம் ஆயுளை நீடிக்கச் செய்யும். —இங்கிலாந்து

கைகளோடு மனமும் சுத்தமா யிருக்கவேண்டும். —கிரீஸ்

வறுமைதான் கடவுளிடமிருந்து வரும், அசுத்தமன்று. —யூதர்

தெய்வத்தன்மைக்கு அடுத்தது பரிசுத்தம். —லத்தீன்

பாண்டம் சுத்தமா யில்லாவிட்டால், அதில் ஊற்றுபவை எல்லாம் கெட்டுவிடும். —லத்தீன்

நாற்றம் பிடித்த பறவை தன் கூட்டையே அசுத்தமாக்கும். —லத்தீன்

தொட்டி நிறையவுள்ள பன்னீரைச் செத்த நாய் நாறவைத்துவிடும். —பாரசீகம்

ஓடுகிற நீரில் அசுத்தம் இராது. —இந்தியா

தங்கம் சுத்தமா யிருந்தால், அது நெருப்புக்கு அஞ்சு வானேன்?
—ஆப்பிரிக்கா

இதயத்தில் சுத்தமாயிருப்பவர்கள் பாக்கியசாலிகள்; ஏனெனில் அவர்கள் இறைவனைப் பார்க்க முடியும்.
—புதிய ஏற்பாடு

பரிசுத்தவான்களுக்கு எல்லாப் பொருள்களும் பரிசுத்தமே.
—புதிய ஏற்பாடு

எத்தனையோ அசுத்தங்களைத் தாண்டிச் செல்லும் சூரியன் தான் பரிசுத்தமாகவே இருக்கிறது.
—பேக்கன்

பத்து முறை சுத்தம் செய்வதைவிட, சுத்தமாகவே வைத்திருத்தல் மேலானது.
—இங்கிலாந்து

கடவுள் நிறைந்த கைகளை வேண்டவில்லை; சுத்தமான கைகளையே வேண்டுகிறார்.
—இங்கிலாந்து

வாரியுள்ள தலை மற்றக் குறைகளை மறைக்கிறது.
—அயர்லந்து

கடவுள் ஏழையை நேசிப்பார், ஆனால் அசுத்தமானவனை நேசிக்க மாட்டார்.
—ஸ்பெயின்

ஒவ்வொருவரும் தம் வீட்டு வாசலைச் சுத்தம் செய்தால், தெரு சுத்தமாகிவிடும்.
—யூதர்

## அழகு

அழகுள்ள பொருள் அழிவில்லாத இன்பம். —கீட்ஸ்

அழகே உண்மை, உண்மையே அழகு. —கீட்ஸ்

இயற்கையின் நாணம் அழகு. —மில்டன்

தங்கத்தைவிட அழகை நாடித் திருடர்கள் விரைவிலே வருவர்.
—ஷேக்ஸ்பியர்

அழகு இறைவனின் அன்பளிப்பு. —அரிஸ்டாட்டில்

தீபங்கள் அணைந்த பின்பு, எல்லாப் பெண்டிரும் அழகுள்ளவர்கள்.
—புளூடார்க்

தேவையில்லாதவைகளை நீக்கிவிடுதலே (கலையின்) அழகு.
—மைக்கேல் ஏஞ்சலோ

அழகும் அடக்கமும் சேர்ந்திருத்தல் அரிது. —ஜுவீனஸ்

ஒவ்வொரு பொருளுக்கும் ஓர் அழகுண்டு. ஆனால் ஒவ்வொருவரும் அதைக் கண்டு கொள்வதில்லை. —கன்பூசியஸ்

அழகு வாடும் மலர். —பழைய ஏற்பாடு

அழகும் மடமையும் பழைய கூட்டாளிகள். —இங்கிலாந்து

அழகியின் முகமே அவளுடைய சீர் வரிசை. —இங்கிலாந்து

அழகு என்பது தோல் அளவுதான். —இங்கிலாந்து

அழகு என்பது பார்ப்பவர் கண்ணில் இருக்கிறது. —( " )

அழகு வல்லமையுள்ளது, ஆனால் பணம் சர்வ வல்லமையுள்ளது. —இங்கிலாந்து

பண்பில்லாத அழகு மணமில்லாத மலர். —ஃபிரான்ஸ்

அழகானதை நாம் பற்றிக் கொள்கிறோம்; பயனுள்ளதைத் தள்ளி விடுகிறோம். —ஃபிரான்ஸ்

அழகு அடைத்த கதவுகளைத் திறக்கும். —ஜெர்மனி

அழகிக்குக் கணவன் அவள் பிறக்கும் போதே அமைந்திருப்பான். —இத்தாலி

கிணற்றுக்கு அழகு தண்ணீர், பெண்ணுக்கு அழகு திலகம். —இந்தியா

அழகு என்பது தோலோடு சரி. —ஜப்பான்

அழகான பறவைதான் கூட்டில் அடைபடும். —சீனு

அழகு மௌனமாயிருந்தும் பேசும். —ஃபிரான்ஸ்

அழகுள்ள பெண்ணையும், கிழிந்த சீலையையும் யாராவது பிடித்து இழுப்பர். —ஃபிரான்ஸ்

அழகுள்ள கடைக்காரி புளித்த கள்ளையும் விற்க முடியும். —ஜெர்மனி

சுருக்கம் விழுந்த கழுத்தில் முத்துமாலை அழுதுகொண்டே தொங்கும்! —ஜெர்மனி

ஒவ்வொரு பெண்ணுக்கும் பண்பைவிட அழகே முக்கியமாய்த் தோன்றுகிறது. —ஜெர்மனி

கனவில் காண்பதைவிட, நனவில் பார்த்தால் அழகு குறைவுதான். —பெல்ஜியம்

அழகான பெண்ணுக்கு மூன்று கணவர்கள் தேவை; பணக்காரனு யிருந்து அவளை ஆதரிக்க, அழகனுயிருந்து அவளைக் காதலிக்க, முரடனுயிருந்து அவளை உதைக்க.
—பல்கேரியா

மூக்குப் பழுதானல், முகம் பழுதாகும். —ஹாலந்து

அழகு சரியாகச் சமைக்க உதவாது. —ஹாலந்து

ஒருத்தியை நீ அடையும் வரை அவள் கவர்ச்சியாகத்தான் இருப்பாள்.
—எஸ்டோனியா

அழகான பொருள்களால் தொந்தரவுண்டு. —ஃபின்லந்து

வானின் அழகு தாரகைகளில் உள்ளது, பெண்ணின் அழகு கூந்தலிலுள்ளது.
—இத்தாலி

அழகை ஒவ்வொருவனும் தன் கருத்துப்படி வருணிப்பான்.
—ரஷ்யா

அழகுக்கு அவசரம் அதிகம், விகாரம் மெல்ல நடக்கும்.
—செர்பியா

யாரும் அழகால் உயிர்வாழ முடியாது; அதற்காக உயிரை விடத்தான் முடியும்.
—அமெரிக்கா

இருட்டிலே எல்லாப் பெண்களும், பூனைகளும் கறுப்புத் தான்.
—அமெரிக்கா

அழகானது பிடித்தமாயிருக்கிறது என்பதைவிட, பிடித்தமானது அழகாகத் தெரிகிறது என்பது பொருத்தமாகும்.
—யூதர்

வீட்டு யஜமானி அழகாயிருந்தால், விருந்தில் அளித்த மதுவும் உயர்ந்ததா யிருக்கும்.
—ரஷ்யா

சீப்பும், க்ஷவரக் கத்தியும் ஒரு மனைவியை ஏமாறச் செய்கின்றன.
—டென்மார்க்

ரோஜா மலரின் சிரிப்புக் குயிலைத் தலை கிறங்கச் செய்கிறது.
—கிரீஸ்

அலங்காரமில்லாமல் அழகு இருப்பதில்லை. —அமெரிக்கா

## விகாரம்

விகாரமான பெண் கண்ணாடிக்கு அஞ்சுவாள். —ஜப்பான்

# கல்வி

கல்வியே மனிதனை உருவாக்குகின்றது. —இங்கிலாந்து

வயது வந்தவர்களுக்குச் சிறைச்சாலைகள் கட்டுவதைப் பார்க்கினும், குழந்தைகளுக்குப் பள்ளிகள் அமைப்பது நலம். —இங்கிலாந்து

தன் மகனைப் பயனற்றவனாகச் செய்பவன், ஒரு திருடனை வளர்க்கிறான். —இங்கிலாந்து

அதிகப் படிப்பும் மிகக் குறைந்த படிப்பும் மனவளர்ச்சிக்கு இடையூறுகள். —ஃபிரான்ஸ்

கல்வி செல்வத்திற்கு அணிகலன், வறுமைக்கு அடைக்கலம். —கிரீஸ்

கற்றவர்களே சுதந்திர முடையவர்கள். —கிரீஸ்

கல்வியின் வேர்கள் கசப்பானவை, கனி இனியது. —கிரீஸ்

மாணவனை மதிப்பதே கல்வியின் இரகசியம். —எமர்ஸன்

பொதுமக்களின் கல்வி அரசாங்கத்தின் முதற் கடமையா யிருக்க வேண்டும். —நெப்போலியன்

பெண்ணைப் படிக்க வைத்தல் குரங்கின் கையில் கத்தியை அளிப்பதாகும். —இந்தியா

மாணவர்களே பிற்கால ஆசிரியர்கள். —இந்தியா

கலியாணத்தால் கல்வி போம், மனைவி வீட்டுக்கு வந்தபின் எல்லாம் போம். —இந்தியா

முதல் பட்டத்திற்கு படிப்பதுதான் கஷ்டம்; அடுத்த பட்டம் தானாக வரும். —சீனா

படிப்பில்லாதவர்கள் உடையை அணிந்த கால்நடைகள். —சீனா

கவிழ்ந்துள்ள கிண்ணத்துள் கதிரொளி பிரகாசிக்காது. —சீனா

அறிவுக் கதிர்களை அறுவடை செய்யக் கண்ணீர் மழை அவசிய மாகும். —சீனா

சர்க்கரையின் தந்தை கரும்பு ஆலை. [இது கல்விக்காகச் சொல்லப் பெறுவது. கரும்பை ஆலையில் பிழிவது போன்றது கல்வியைக் கற்றல்.] —கீழ் நாடுகள்

வளைந்த கழியை நெருப்பில் வாட்டினால், நெகிழ்ந்துவிடும். —ஆப்பிரிக்கா

ஒரு பையனுக்குக் கல்வி கற்பிப்பவன் மூன்று பேர்களுக்கு கல்வி கற்பிக்கிறான்; ஓர் இளைஞர், மனிதன், கிழவன். —ஜெர்மனி

இளைஞர்களையும் முயல்களையும் செவிகளைப் பிடித்துத் தூக்க வேண்டும். —ஜெர்மனி

எழுதப் படிக்கத் தெரிந்தவருக்கு நாலு கண்கள் உண்டு. —அல்பேனியா

சாகும்வரை நாம் கற்றுக் கொண்டிருக்கிறோம். —ரஷ்யா

ரொட்டி இல்லாதபோதுதான் மனிதன் படிக்கத் தொடங்கினான். —ரஷ்யா

செல்வத்தை உபயோகித்தால் தீர்ந்துவிடும், கல்வியை உபயோகித்தால் அதிகரிக்கும். —ஆப்பிரிக்கா

## கேள்வி

உனக்கு நிறையத் தெரிந்திருந்தாலும், உன் தொப்பியிடமும் யோசனை கேள். —ஆர்மீனியா

பேசுவது விதைப்பு, கேட்பது அறுவடை. —பாரசீகம்

பேசுவோன் மூடனாயிருந்தாலும், கேட்பவன் அறிவாளியாயிருப்பான். —ஸ்பெயின்

கேள்வியிலிருந்து வருவது ஞானம்; பேச்சிலிருந்து வருவது துயரம். —இங்கிலாந்து

ஒரு முறை பேசுமுன்னால், இரு முறை கேட்டுக்கொள். —இங்கிலாந்து

இரு கட்சிகளையும் கேட்டுக்கொள். —லத்தீன்

முதலில் கேட்டுக்கொண்டு, பிறகு பேசு. —ஸ்பெயின்

## ஐயம்

ஒன்றும் அறியாதவனுக்கு ஐயமே இல்லே. —ஃபிரான்ஸ்

சந்தேகத்தில் தொடங்கித்தான் பின் உறுதியான நம்பிக்கை ஏற்படுகிறது. —போலந்து

அறிவாளர் ஐயம் கொள்வது இயற்கை. —இங்கிலாந்து

அறிவில் ஆனந்தம் கொள்வதுபோல, நான் ஐயத்திலும் கொள்கிறேன். —தாந்தே

சந்தேகத் திரையைக் கேள்விகளால் கிழித்தெறியுங்கள். —அரேபியா

நூறு சந்தேகங்களில் தொண்ணூற்றென்பது தவருனவை. —ஹங்கேரி

அறிவுப் பெருக்கத்திற்கு ஐயமே திறவுகோல். —பாரசீகம்

## அறிவு

அறிவும் ஒழுக்கமும் வண்டியின் இரு சக்கரங்கள். —ஜப்பான்

அறிவாளர் கூட்டம் உயிருள்ள நூல் நிலேயம். —அரேபியா

அறிவாளரைப் போல எழுது; மக்களேப் போலப் பேசு. —இந்தியா

அறிவாளிகள் எல்லோரும் ஒரே மாதிரிச் சிந்திக்கிருர்கள்; ஆனல் ஒவ்வொரு மூடனும் வெவ்வேறு அபிப்ராயம் கொள்கிருன். —இந்தியா

எந்த ஊசியும் இருபுறமும் கூராயிராது. —சீன

அறிந்தவர் பேசுவதில்லே; பேசுவோர் அறிவதில்லே. —சீன

வயிற்றுக்கு மட்டுமே உணவளிப்பதைச் சிந்திப்பவன் தலேயைப் பட்டினி போடுகிருன். —சீன

உனக்கு ஒரு நாள் மூத்தவன் உன்னேவிட ஓராண்டு அறிவு கூடுதலாகப் பெற்றவன். —அரேபியா

கேள்வி என்றிருந்தால், விடையும் இருக்கும். —பர்மா

அறிவாளிக்குக் கோபம் வந்தால், அவன் அறிவாளியில்லை.
—யூதர்

ஞானத்தைப் பெருவிட்டால், நீ பெற்றவைகளால் என்ன பயன்? ஞானத்தைப் பெற்றபின், பெற வேண்டியவை என்ன உண்டு?
—யூதர்

நன்மை தீமையை மட்டும் அறிந்தவன் ஞானியல்லன்; இரண்டு தீமைகளில் எது அதிகத் தீமையில்லாதது என்று தெளிபவனே ஞானி.
—யூதர்

செல்வம் விசுவாசமற்ற வேசி; ஞானமே நிலையாக நிற்கும்.
—மலாய்

அறிவாளி தன் விரிப்பிலுள்ள துவாரத்தின்மேல் (மறைத்து) அமர்ந்திருப்பான்.
—கீழ் நாடுகள்

நாளைத் துக்கத்தை இன்று உண்ணவேண்டாம். —கீழ் நாடுகள்

நாம் மற்றவர்களை முன்புறக் கண்களால் பார்க்கிறோம்; ஆனால் நம்மை பின்புறக் கண்களால் பார்த்துக் கொள்கிறோம்.
—சயாம்

ஒரு மனிதனை அறிய, அவன் பதில்களை விட்டுவிட்டு, அவன் கேள்விகளைக் கவனிக்கவும்.
—ஃபிரான்ஸ்

ஒரே ஒரு புத்தகம் படித்தவனிடமிருந்து கடவுள் நம்மைக் காப்பாராக.
—ஜெர்மனி

நான்கு செவிகளுள்ளவன் சொல்லைக் கவனமாகக் கேள்.
—ஜெர்மனி

அறிவாளிகள் கடிதத்தை அடியிலிருந்து மேலே படிப்பார்கள்.
—ஜெர்மனி

அறிவுக்கு அறிகுறி மலர்ந்த முகம். —இங்கிலாந்து

ஆகக் குறைந்த மடமையுள்ளவன் அறிவாளிதான். —( " )

ஞானத்தின் தந்தை நல்ல நினைவு, தாய் ஆழ்ந்த சிந்தனை.
—வேல்ஸ்

அறிவுள்ள மூளைக்கு நூறு கைகள் உண்டு. —பல்கேரியா

அறிவைச் சுமந்து செல்வது எளிது; ஆனால், தூக்கித் தலையில் வைத்துக் கொள்வதுதான் சிரமம்.
—ஸெக்

அதிக அறிவு மடமைக்கு நிகராகும். — நார்வே

தலை தெய்விகமா யிருக்கிறது; மற்ற உடல் பன்றி மயமா யிருக்கிறது. —ரஷ்யா

உனக்கு எவ்வளவு அதிக விஷயங்கள் தெரியுமோ, அவ் வளவுக்குத் தூக்கம் குறையும். —ரஷ்யா

மூடனாயும் புத்திசாலியாயும் இருக்க முடிந்தவனே அறிவாளி. —செர்பியா

கண்கள் மட்டும் இருப்பவர்கள் இருட்டில் குருடர்களாயிருக் கிறார்கள். —ஸ்பெயின்

மூடனுக்கும் காளை மாட்டுக்கும் வழிவிட்டு விலகவேண்டும். —ஸ்பெயின்

மனிதனின் அறிவை இழக்கச் செய்பவை நான்கு: பெண் பிள்ளை, பொடி, சீட்டுக்கட்டு, மது. —ஸ்பெயின்

தேவையில்லாத அறிவு இரட்டிப்பான மடமை. —ஸ்வீடன்

நரைத்த தலைகள் அதிகம், ஆனால் அறிவாளர் குறைவு. —ஸ்வீடன்

கெட்டிக்காரக் கோழிக்குஞ்சு முட்டைக்குள்ளிருந்தே கூவும். —ஆப்பிரிக்கா

சுதந்தரச் சூழ்நிலையிலே அறிவு விருப்பம்போல் வளர முடியும் —மில்

பேரறிவு என்பதில் நூற்றில் ஒரு பகுதிதான் உள்ளுணர்ச்சி; தொண்ணூற்றொன்பது பகுதி வியர்வை. —எடிஸன்

விவேகம் எந்த நாட்டுக்கும் தனியுரிமை யன்று. —இங்கிலாந்து

விவேகம் தானாகப் பிறக்க வேண்டும்; அதைப் புகட்ட முடியாது. —இங்கிலாந்து

பயன்படாத விவேகம் துருப்பிடிக்கும். —இங்கிலாந்து

பேரறிவுக்குப் பசிதான் பணிப் பெண்ணா யிருக்கும். —( ” )

விதிகளும், முன் மாதிரிகளும் விவேகத்தை (கட்டுப்படுத்தி) அழித்துவிடும். —இங்கிலாந்து

விவேகம் என்பது பொறுமை. —இங்கிலாந்து

சாதாரணப் புத்தியால் செய்ய முடியாததைச் செய்வதுதான் விவேகம். —ஃபிரான்ஸ்

விவேகிக்குத் தேவையான முதல் விஷயமும், முடிவான விஷயமும் உண்மையில் பற்று. —கதே

வறுமையில் விவேகம் துலங்கும், செழுமையில் மங்கியிருக்கும். —ஹொரேஸ்

விவேகத்தைத் தண்டித்தால், அதன் புகழ் உயரும். —டாஸிடஸ்

கல்வியில்லாத விவேகம் சுரங்கத்தில் (மண்ணோடு கலந்துள்ள) வெள்ளிக்கட்டி. —ஃப்ராங்க்லின்

பேரறிவுக்கும் பயித்தியத்திற்கும் நெருங்கிய உறவுண்டு. —டிரைடன்

இயற்கை ஒரு வேலையை முடிக்கவேண்டும் என்றால், ஒரு விவேகியைப் படைக்கின்றது. —எமர்ஸன்

மூடன் கடைசியாகச் செய்வதை ஞானி முதலில் செய்கிறான். —இந்தியா

செவிடாயிருந்து கேட்பவனையும், மௌனியாயிருந்து பேசுபவனையும் இருப்பவனோடு நீயும் இரு. —யூதர்

செருப்பில்லாமல் நடப்பவன் ஞானியாகிவிட மாட்டான். —ஜெர்மனி

ஒவ்வொருவனுக்கும் ஒரு காசு மதிப்புள்ள அறிவாவது இருக்கத்தான் செய்யும். —பல்கேரியா

அறிவாகிய மரம் கண்ணீரால் வளர்கின்றது. —ஸ்வீடன்

## மடமை

மூடர்களுக்குச் சிரைத்தே நாவிதன் தொழில் கற்கிறான். —இந்தியா

ஆடி மாதம் பிறந்த நரி ஆவணிமாத வெள்ளத்தைப் பார்த்து, 'என் ஆயுளில் இவ்வளவு வெள்ளத்தைக் கண்டதில்லை!' என்றது. —இந்தியா

தேள் கடிக்கே மந்திரிக்கத் தெரியாதவன் பாம்புப் புற்றில் கை விடுகிறான். —இந்தியா

மூடன் நெடுநேரம் தங்கியிருந்தால், அவனைக் கண்டுபிடித்து விடுவார்கள். —இந்தியா

வாயை மூடிக்கொண்டிருக்கிறவரை மூடனும் கனவான்தான்.
—இந்தியா

அன்னம் போல் நடைநடந்து, உள்ள நடையும் போச்சு.
—தமிழ்நாடு

புதரிலே கைவிட்டு (மூடர்கள்) பாம்புகளைக் கிளப்புகிறார்கள்.
—ஜப்பான்

அறியாமை உள்ளத்தின் இரவு, மதியும் நட்சத்திரங்களும் இல்லாத இரவு.
—சீனா

மூடன் வெற்றியடைவதும், அறிவாளி தோல்வியடைவதுமே இவ்வுலகில் நிகரற்ற ஆச்சரியங்கள்.
—அரேபியா

கையிலே மாற்று மருந்து இருக்கிறதென்று விஷத்தைப் பருக வேண்டாம்.
—அரேபியா

கெட்டிக்காரன் தன் நற்பண்புகளை உள்ளே மறைத்து வைத்துக் கொள்கிறான்; மூடன் அவைகளைத் தன் நாவிலே தொங்க விட்டுக் கொள்கிறான்.
—யூதர்

முகட்டுப் பூச்சிகளுக்கு அஞ்சிப் போர்வையை எறிந்து விடாதே.
—பாரசீகம்

மூடனுக்கு அவன் தந்தை சுல்தானின் மந்திரியாயிருந்தார் என்பதில் என்ன பயன்?
—பாரசீகம்

எலி தன் வளைக்குள் நுழைய முடியவில்லை; அது வாலில் ஒரு துடைப்பத்தையும் கட்டிக்கொண்டு சென்றதாம்.
—பாரசீகம்

குருவி, தன் கால்களை மேலே தூக்கி, வானம் தன்மேல் விழுந்து விடாமல் காத்துக் கொள்கின்றது!
—பாரசீகம்

யானை தன் தந்தங்களைத் தாங்குவதற்கு நீ போய் உதவி செய்ய வேண்டியதில்லை.
—சயாம்

தலை ரோமத்தைவிடப் பேன்களை அதிகமாக நேசிக்க வேண்டாம்.
—சயாம்

தேங்காய்க்கும் கனிக்கும் சண்டை போடுவதைவிட சிரட்டைக்கும் கொட்டைக்கும் ஒருவன் சண்டையிடுவான்.
—ஜெர்மனி

மூடர்களை உற்பத்தி செய்ய விதைவிதைக்க வேண்டியதில்லை; அவர்கள் தாமாகவே முளைக்கிறார்கள்.
—போலந்து

ஒரு தெள்ளுப் பூச்சிக்காக ஒருவன் கம்பளிகளை எரித்து விட்டான். —அல்பேனியா

நாம் ஒருவருக்கொருவர் மூடராயிருக்கிறோம். —இங்கிலாந்து

சேற்றிலுள்ள முள்ளும், வேட்டை நாயின் பல்லும், மூடனுடைய சொல்லும் அதிகமாய்க் குத்தும். —அயர்லந்து

மூடன் மேற்கொள்வது சிறு காரியமா யிராது. —ஸெக்

மூடர்கள் குடியேறி வந்தால், கிராமம் செழிப்பாயிருக்கும். —டென்மார்க்

காலியாயுள்ள தலைகள் எப்பொழுதும் நிமிர்ந்தேயிருக்கும். —எஸ்டோனியா

மூடன் சிதறுகிறான், அறிவாளி பொறுக்குகிறான். —ஜ்யார்ஜியா

வைக்கோலைக் கொண்டு நெருப்பை அணைக்க முடியாது. —போர்ச்சுகல்

கம்பளத்திற்காக ஆட்டைக் கொல்லாதே. —ரஷ்யா

குரங்கு உட்கார்ந்திருக்கும்வரை அதற்கு வாலில்லை என்பது தெரியாது. —சைலீஷியா

ஒவ்வொரு மூடனும் ஒரு கழியுடன் நடக்கத் தொடங்கினால் விறகுப் பஞ்சம் வந்துவிடும். —ஸ்பெயின்

அறியாமையைப்போல் வேறு எதற்கும் அவ்வளவு துணிவு கிடையாது. —ஸ்பெயின்

மூளையில்லாத தலைக்குத் தொப்பி தேவையில்லை. —ஸ்பெயின்

மூடன் கருங்காலி மரத்தை வெண்மையாக்க முடியாமல், தந்தத்தைச் கறுப்பாக்க முயலுவான். —ஆப்பிரிக்கா

பேதைமை நீர் ஊற்றாமலே வளரும். —இங்கிலாந்து

பேதைமை துக்கமானால், ஒவ்வொரு வீடும் அழும். —( ” )

தன் குறையைக் கண்டுபிடித்தல் அறிவின் சிகரமாகும் — ( ” )

காய்ந்த தரையில் மூழ்கிச் சாவது அறிவீனம். —இங்கிலாந்து

நாற்பது வயதிலும் மூடனாயிருப்பவன் உண்மையான மூடன் தான். —இங்கிலாந்து

முட்டாள் அமைதியா யிருக்க முடியாது. —இங்கிலாந்து

அறிவிலி ஒரு மணி நேரத்தில் கேட்கும் கேள்விகளுக்கு அறிவாளி ஏழு ஆண்டு பதில் சொன்னாலும் முடியாது.
—இங்கிலாந்து

மூடனுடைய சுவர்க்கம் அறிவாளியின் நரகம். —இங்கிலாந்து

புத்தியுள்ளவர்கள் வேடிக்கை பார்க்கவே மூடர்கள் இருக்கிறார்கள். —இங்கிலாந்து

எல்லா மூடர்களும் வெள்ளைத் தொப்பி அணிந்தால், நாம் அனைவரும் வாத்துக் கூட்டமாகக் காணப்படுவோம்.
—இங்கிலாந்து

மூடர்கள் சந்தைக்குப் போகாவிட்டால், கெட்ட சரக்குகளை விற்க முடியாது. —இங்கிலாந்து

வீட்டுக்கு ஒரு முட்டாள் போதும். —இங்கிலாந்து

உலகம் மூடர்களும் வஞ்சகர்களும் நிறைந்தது. —இங்கிலாந்து

ஒன்றும் தெரியாதவன் எதையும் சந்தேகிக்க மாட்டான்.
—இங்கிலாந்து

கொஞ்சம் தெரிந்தவன் அதையே திருப்பிச் சொல்லிக் கொண்டிருப்பான். —இங்கிலாந்து

அறியாமையால் நாம் வாழ்நாளைக் குறைத்துக் கொள்கிறோம்.
—இங்கிலாந்து

அறியாமையின் விபரீதம் என்னவென்றால், அதிலேயே திருப்தியடைதல். —இங்கிலாந்து

சிறு ஓடையைத் தவிர்ப்பதற்காக ஒருவன் ஆழமான ஆற்றில் குதிக்கிறான். —இங்கிலாந்து

அறியாமையைத் தவிர இருள் வேறில்லை. —ஷேக்ஸ்பியர்

பேதமையின் சிறகுகள் கழுகு போலிருக்கும்; ஆனால் கண்கள் ஆந்தை போலிருக்கும். —ஹாலந்து

மூடர்கள் வீடுகள் கட்டுகிறார்கள்; அறிவாளிகள் அவைகளை வாங்குகிறார்கள். —ஹாலந்து

முதியோர் மூடராயிருக்கையில், குழந்தை தவறு செய்யக் கற்றுக் கொள்கின்றது. —ஜெர்மனி

பேதைக்குப் புத்திதான் சொல்லலாம், தண்டித்தல் நலமன்று.
—லத்தீன்

அநேகமாக எல்லா மனிதர்களும் மூடர்களே. —லத்தீன்

பல விஷயங்களில் அறியாமை நலம். —லத்தீன்

நெருப்பிலே விழுந்த மூடன் வெளியே வந்து விழுதல் அபூர்வம். —அரேபியா

வாயை மூடிக் கொண்டிருக்கும்வரை மூடனும் மற்ற மனிதர்களைப் போலவே யிருப்பான். —டென்மார்க்

மூடனுக்கும் தன்னைப் போற்றும் பெரிய மூடன் கிடைத்து விடுகிறான். —ஃபிரான்ஸ்

எல்லோரும் மூடர்களானால், நீ மட்டும் அறிவாளியாயிராதே. —ஃபிரான்ஸ்

மூடர்கள் விஷயம் கடவுளுக்கு மட்டுமே புரியம். —( " )

ஆதாம் காலத்திலிருந்து மூடர்களே பெரும்பான்மையோர். —ஃபிரான்ஸ்

மழைக்கு அஞ்சி நீரிலே குதித்தல் மடமை. —ஃபிரான்ஸ்

அறியாமையும் செருக்கும் கைகோர்த்து உலாவும். —யூதர்

மூடனிடம் முத்தம் பெறுவதைக் காட்டிலும், அறிவாளியிடம் அடி வாங்குதல் மேல். —யூதர்

படிப்பில்லாதவன் இருளிலே நடப்பவன். —சீனா

அறிவின்மை கேவலம், அதைவிடக் கேவலம் அறிய மனமில்லாமை. —சீனா

இந்த உலகில் வெற்றிபெற ஒருவன் மூடனைப் போன்ற தோற்றத்துடன், அறிவாளியாயிருக்க வேண்டும். —மான்டெஸ்கியு

அறியாமையைத் தவிர அடிமைத்தனம் வேறில்லை. —இங்கர்ஸால்

கல்லாதிருத்தலைவிடப் பிறவாதிருத்தல் மேல். —பிளேட்டோ

கொதிக்கிற சட்டியிலிருந்து நெருப்பில் விழுதல். —டெர்டுல்லியன்

கரடிக்கு அஞ்சி ஒருவன் ஓநாய்களிடம் ஓடுகிறான். —ரஷ்யா

அறியாமை என்பது அந்தகாரம். —சீக்கியர்

# இசை

இசையில் இறைவன் வசிக்கிறான். —இந்தியா

சொல்வதற்குக்கூடப் பொருந்தாத விஷயங்கள் எல்லாம் இந்தக் காலத்தில் பாடப் பெறுகின்றன. —ஃபிரான்ஸ்

ஃபிடில்காரன் வீட்டில் எல்லோரும் ஃபிடில் வாசிப்பர். —இங்கிலாந்து

எட்டு வீடு தட்டியும் ஒச்சன் குடி பட்டினி. —தமிழ்நாடு

இசையின் அருமை தெரியாதவர்களுக்குப் புருவும் இனிமையாகப் பாடும். —கிரீஸ்

அநேகர் பாட முடியும், ஆனால் பாட்டுத்தான் தெரியாது. —கீழ் நாடுகள்

விருந்தை விருந்தாக்குவது இசை. —ஜெர்மனி

பாட முடியாதவன் பாடிக்கொண்டேயிருப்பான். —ஜெர்மனி

நல்ல பாட்டை மும்முறை பாடலாம். —ஸெக்

ஆனந்தமாய்ப் பாடிக் கொண்டிருப்பவன் தீமை செய்ய நினைக்கவில்லை. —செர்பியா

காதலும் இசையும் தவிர மற்றவையெல்லாம் அழிந்துவிடும். —ஸ்காட்லந்து

இசையுள்ள இடத்தில் கெடுதல் இராது. —ஸ்பெயின்

துக்கமுள்ள மனத்திற்குச் சோகமான இசை இன்பமாயிருக்கும். —இங்கிலாந்து

இசை காதின் கண். —இங்கிலாந்து

புலன் இன்பங்களில் குற்றமற்றது இசை ஒன்றுதான். —எஸ். ஜான்ஸன்

இசை தேவர்களின் மொழி. —கார்லைல்

இசை ஒன்றுதான் உலகப் பொது மொழி. —இங்கிலாந்து

இசை வயிற்றை நிரப்பாது. —ஃபிரான்ஸ்

வேதனையுள்ள உள்ளத்திற்கு இசை மருந்து. —லத்தீன்

இசையுள்ள இடத்தில் தீமை இராது. —ஸ்பெயின்

# கலைகள்

சிலைகள் செய்யும் சிற்பிக்குத் தன்னைச் சிலைசெய்து வைத்துக் கொள்ளும் அவசியமில்லை. —ஃபிரான்ஸ்

பெரும் கவிஞன் பிறவியிலேயே ஞானமுடையவனாக இருப்பான்; அல்லது நாடு கடத்தப்பட்டவனா யிருப்பான். —அமெரிக்கா

கலைஞன் எங்கும் வாழ்வான். —இங்கிலாந்து

பெற்றோர் விட்டுச்செல்லும் செல்வத்தைவிட ஒரு கலை மேலானது. —அயர்லந்து

குறை வேலையை மூடரிடம் காட்டாதே. —டென்மார்க்

ஒவ்வொரு நாடும் தன் கலையைப் பேணுகின்றது. —கிரீஸ்

கவிஞர்களையும் பன்றிகளையும் செத்தபிறகுதான் பாராட்டுவது வழக்கம். —இத்தாலி

கலையில் கலை சற்று மறைந்திருக்க வேண்டும். —லத்தீன்

உன் பாடல்களை ஒன்பது ஆண்டுகள் உன் பெட்டியிலேயே வைத்திரு. —லத்தீன்

கலைகளுக்கு உகந்தது வைகறை. —லத்தீன்

பொய்களின் தந்தையர் கவிஞர். —லத்தீன்

கலைகளுக்குத் தாய் வறுமை. —லத்தீன்

மத்தளத்தின் தாளத்தைத் தொடர்ந்து நடனம் செல்லும். —மலாய்

படைப்பவன் தன் வேலைக்காகச் செல்லும் பாதை கலை. —எமர்ஸன்

சூரியன் மலர்களுக்கு நிறங்களை அளிப்பதுபோல், கலை வாழ்க்கையை வர்ண மயமாகச் செய்கின்றது. —லப்பாக்

எல்லாக் கலைகளும் சகோதரர்கள்; ஒன்று மற்றவைகளுக்கு ஒளியாக விளங்குகின்றது. —வால்டேர்

கலை பெரிது, வாழ்வு சுருக்கம். —ஹிப்போகிரேடஸ்

தெய்விக நிறைவின் சாயல் கலை, —மைக்கேல் ஏஞ்சலோ

இயற்கை இறைவனின் கலை. —தாந்தே

கலைஞனைக் காப்பாற்ற முடியாத கலை அற்பமானதுதான்
—ஃபிரான்ஸ்

தந்தத்தை வர்ணத்தால் (மேலும்) வெண்மையாக்குவது இயற்கையைக் கலையால் கெடுப்பதாகும். —லத்தீன்

## சிந்தனை

சிந்தனை என்பது உள்ளத்தின் விளக்கு —மலாய்

மனிதன் சிரிப்பது மற்றவர்களைப் பார்த்து, அவன் அழுவது தன்னைப் பார்த்து. —இந்தியா

வாழ்க்கை என்னும் நூலில் ஆழ்ந்த சிந்தனைகள் என்ற மணிகள் கோத்த மாலையுடையவனுக்கு வேறு ஜபமாலை வேண்டியதில்லை. —பாரசீகம்

ஒன்றை மறுக்க விரும்பினால், அதுதான் நினைவிலிருக்கும்
—ஃபிரான்ஸ்

உன்னிடமே நீ கேட்டுக்கொள்வதுதான் தலைசிறந்த உபதேசம்.
—ஜெர்மனி

ஆரம்பிக்கும்போது—முடிவைச் சிந்தனை செய். —பல்கேரியா

இரவும் இருளும் சிந்தனைக்குத் தாய்மார்கள். —டென்மார்க்

தொடக்கத்தில் சிந்தனை செய்யாதவன் முடிவில் கொட்டாவி விடுகிறான். —இத்தாலி

நான் சிந்திக்கிறேன், ஆகவே நான் இருக்கிறேன். —லத்தீன்

சிந்தனைகளைச் சேர்த்துக் கட்டி வைக்கக்கூடிய கயிறு ஒருகாலும் தயாராகவில்லை. —லத்தீன்

இரண்டாம் முறை எண்ணிப் பார்ப்பது குற்றமில்லை.
—அயர்லாந்து

இழிவான சிந்தனைகளை நினைக்கவேண்டாம். —கன்ஃபூஷியஸ்

உயர்ந்த சிந்தனைகளை நடைமுறைக்குக் கொண்டு வந்தால் பெருஞ் செயல்களாகும். —இங்கிலாந்து

மனிதன் ஒரு நாணல் போன்றவன்தான். இயற்கையிலுள்ளவைகளில் மிகவும் பலவீனமானவன். ஆனால் அவன் சிந்திக்கும் நாணல். —பாஸ்கல்

நிறையச் சிந்தனை செய்யுங்கள், குறையப் பேசுங்கள். அதிலும் குறைய எழுதுங்கள். —ஃபிரான்ஸ்

ஆண்டவனே, நான் அகத்தில் அழகு பெற்று விளங்க அருளும்படி உன்னை வேண்டுகிறேன். —ஸாக்ரடீஸ்

வாழ்வு என்பது சிந்தனை. —கிரீஸ்

கையில் வலிமையைவிடச் சிந்தனைகளில் வலிமை அதிகம். —கிரீஸ்

ஒருவன் தனக்குள் தானே பேசிக்கொள்வது சிந்தனை. —ஸ்பெயின்

# முன் யோசனை

ஆபத்துக்களையும் அபாயங்களையும் பற்றி முன்கூட்டி ஆராய்ந்து கொண்டேயிருப்பவன் ஒருகாலும் கடல் யாத்திரை செல்லமாட்டான். —இங்கிலாந்து

கிழிப்பது எளிது, தைப்பது கஷ்டம். —இந்தியா

கோபுரத்தைத் திருடுகிறவன் அதை வைக்க இடம் தயாரிக்க வேண்டும். —துருக்கி

மந்தாரமாயிருக்கும் பொழுதே குடை எடுத்துச் செல்லவும்; பசி இல்லாதிருக்கும் பொழுதே உணவை எடுத்துச் செல்லவும். —சீனு

நாயோடு தாராளமாக நெருங்கிப் பழகலாம், ஆனால் கையிலுள்ள கழியை நழுவ விடாதே. —அரேபியா

வெளியே வருவதற்கு வழியைத் தெரிந்துகொண்டு உள்ளே நுழை. —அரேபியா

சம்பளமில்லாத மாதத்திற்கு நாட்கணக்குப் பார்க்க வேண்டாம். —அரேபியா

குழந்தையை ஒரு வேலைக்கு அனுப்பினால், நீயும் போக வேண்டியிருக்கும். —ஆர்மீனியா

ஒரு கயிறு பிரிந்திருந்தால், அது பல கயிறுகளைப் பிரியச் செய்யும். —யூதர்

ஒருநாள் பயணத்திற்கு இருநாள் உணவும், கோடை யாத்திரையில் மாரிக் காலத்து உடைகளையும் எடுத்துக்கொள்.
—மங்கோலியா

சர்க்கரையாலே சாகக் கூடியவனுக்கு நீ விஷம் கொடுப்பானேன்? —கீழ் நாடுகள்

ஓநாயுடன் நீ விருந்துண்ணும்போது, உன் நாயும் பக்கத்திலிருக்கட்டும். —கீழ் நாடுகள்

தண்ணீர் நாடிவரை வந்த பிறகுதான் நாய் நீஞ்சத் தொடங்கும். —கீழ் நாடுகள்

ஓடினால் மட்டும் போதாது; உரிய காலத்தில் புறப்படவும் வேண்டும். —ஃபிரான்ஸ்

எல்லா மடுக்களுக்கும் பாதுகாப்புச் சுவர் இராது. —ஜெர்மனி

துடைக்க முடியாதவைகளைத் தட்டவேண்டும். —ஜெர்மனி

சிறு ஆணிகளுக்குப் பெரிய சம்மட்டிகள் பயன்படா. —( ” )

கம்பளம் விற்றுக் கடனைக் கொடுக்கலாம் என்றால், கம்பளி ஆட்டை விற்கக் கூடாது. —ஜெர்மனி

முதுமையில் ஊன்றிக்கொள்ள இளமையிலேயே ஒருவன் ஒரு கழி தயாரித்துக் கொள்ளவேண்டும். —ஜெர்மனி

பருவைக் கிள்ளிப் பெரிய புண்ணாக்க வேண்டாம்.
—அமெரிக்கா

பூனைகளை வளர்க்காவிட்டால், எலிகளை வளர்ப்பதாகும்.
—வேல்ஸ்

அடுத்த வீட்டு வாசலில் குரங்காட்டி வந்துவிட்டால், நீயும் காசு எடுத்து வைத்துக்கொள். —ஸெர்பியா

# பழமொழிகள்

பழைய சொற்கள் அறிவுக் களஞ்சியம். —அமெரிக்கா

பழைய மொழிகள் பொய்களல்ல. —அமெரிக்கா

இருளில் தீவர்த்திகள் போன்றவை பேச்சில் பழமொழிகள். —அமெரிக்கா

நல்ல பழமொழி எந்த நேரமும் பயனளிக்கும். —அமெரிக்கா

உலகத்தில் நல்லறிவெல்லாம் பழமொழிகளுக்குள் அடக்கம். —இங்கிலாந்து

அனுபவத்தின் குழந்தைகள் பழமொழிகள். —இங்கிலாந்து

சிறு அறையில் அளவற்ற செல்வங்கள் குவிந்திருப்பது போன்றவை பழமொழிகள். —இங்கிலாந்து

படிப்பிலே அடிக்கடி பழமொழிகளையும் பார்க்க வேண்டும். —இங்கிலாந்து

ஒரு சமுதாயத்தின் மனப் போக்கைப் பழமொழிகளைவிட வேறு எதுவும் எடுத்துக் காட்டுவதில்லை. —இங்கிலாந்து

துக்கத்தைப் பழமொழிகளால் ஆற்றிக் கொள்ளவும். —ஷேக்ஸ்பியர்

சிறு வாக்கியங்களில் நம் முன்னோர்கள் வாழ்க்கையை அடைத்து வைத்திருக்கின்றனர். —இங்கிலாந்து

பழமொழிகள் மக்களின் குரலைத் தவிர வேறென்ன? —( " )

பழமொழி பலருடைய அறிவு, ஒருவருடைய சாதுரியம். —ஜான் ரஸ்ஸல்

பழமொழியை எதுவும் வெல்ல முடியாது. —அயர்லந்து

பழமொழிகளை (எவரும்) மறுக்க முடியாது. —அயர்லந்து

பழைய மொழிக்கு மேற்சொல் இல்லை. —அயர்லந்து

ஜனங்கள் எப்படி, பழமொழியும் அப்படி. —ஸ்காட்லந்து

உன் கப்பலைத் துறைமுகத்துள் கொண்டு வரும்வரை உன் பழமொழியைக் கூறாதே. —ஸ்காட்லந்து

ஒவ்வொரு பழமொழியும் உண்மை; ஒவ்வொரு செய்தியும் பொய். —ஸ்காட்லந்து

பழைய பழமொழிகள் உண்மையின் குழந்தைகள்.
—ஸ்காட்லந்து

தினசரி அநுபவத்தின் பெண்கள் பழமொழிகள். —ஹாலந்து

பழமொழியில் தங்கம் நிறைந்துள்ளது. —எஸ்டோனியா

பழமொழி சிந்தனையின் திறவுகோல். —எஸ்டோனியா

பழமொழியால் திருடனும் அறிவாளியாவான். —ஃபிரான்ஸ்

நல்ல நினைவிலிருப்பதற்காகவே பழமொழி அமைந்துள்ளது.
—ஃபிரான்ஸ்

பழமொழிகள் வண்ணாத்திப் பூச்சிகள்; சிலவற்றைப் பிடித்துக் கொள்கிறோம், சில பறந்தோடி விடுகின்றன. —ஜெர்மனி

அநுபவத்திலேயே பொருள் விளங்கும்படி அமைந்தவை பழமொழிகள். —ஜெர்மனி

பழமொழி எந்த மொழியில் எழுதப் பெற்றிருந்தாலும், அதன் ஒவ்வொரு வரியும், ஒவ்வொரு சொல்லும் வரவேற்கத் தக்கது. —மாக்ஸ் முல்லர்

சிதைந்து அழிந்துபோன பழைய தத்துவ ஞானத்தில் எஞ்சி நிற்பவை பழமொழிகள்; அவைகள் சுருக்கமாகவும் உண்மையாகவும் இருப்பதால் பாதுகாக்கப் பெற்றுள்ளன.
—அரிஸ்டாட்டல்

பழைய பழமொழிகள் வெளியே எங்கும் பரவியுள்ளன.
—ஐஸ்லந்து

பழமொழிகள் வீண் வார்த்தைகள் அல்ல. —போலந்து

பழமொழிகள் மக்கள் புழங்கும் நாணயங்கள். —ரஷ்யா

பழமொழிகள் மக்களின் அறிவு. —ரஷ்யா

பழமொழி அறிவிலிருந்து வருகிறது, அறிவு பழமொழியிலிருந்து வருகிறது. —ரஷ்யா

பழமொழிகள் குட்டிச் சுவிசேடங்கள். —ஸ்பெயின்

மனிதன் நினைப்பதைப் பழமொழி கூறுகின்றது. —ஸ்பெயின்

சிறு பழமொழியிலிருந்து பெரிய ஆறுதல் கிடைக்கும்.
—ஸ்விட்ஸர்லந்து

அழகான பழமொழி பையிலுள்ள தங்க நாணயம் போன்றது.
—ஸ்விட்ஸர்லந்து

அநுபவங்களின் எதிரொலிகள் பழமொழிகள். —ஸ்விட்சர்லந்து

பழமொழியில் உயர்ந்த கருத்து மலிவாய்க் கிடைக்கும். —( ” )

பழமொழிகள் பொது மக்களின் பேச்சு. —சீனு

ஒரு மனிதனுடைய வாழ்க்கை ஒரு பழமொழியின் மீதே அமைக்கப் பெற்றுள்ளதை அடிக்கடி காண்கிறோம்.
—யூதர்

காலம் கழிகின்றது, ஆனால் பழமொழிகள் நிலைத்திருக்கின்றன.
—இந்தியா

பழமொழியில் உமி கிடையாது. —இந்தியா

மூடனிடம் பழமொழியைச் சொன்னால், அதன் பொருளையும் அவனுக்கு விளக்கவேண்டும். —ஆப்பிரிக்கா

சந்தர்ப்பம் வந்ததும், பழமொழியும் வரும். —ஆப்பிரிக்கா

உங்கள் முன்னோர்களின் சொற்களை உறுதியாகப் பற்றிக் கொள்ளுங்கள் —ஆப்பிரிக்கா

ஹீ! அத்தனை பழைய மொழிகளையும் இந்த நூல் எங்கிருந்து பெற்றது? —நீக்ரோ

பால் புளிக்குமா?. பழமொழியில் தவறு இருக்குமா? —இந்தியா

உணவுக்கு உப்பு எப்படியோ, அப்படிப் பேச்சுக்குப் பழமொழி.
—அரேபியா

தோட்டங்களுக்குப் பூக்கள்; உணவுக்குத் தானியம்; உடைகளுக்கு மணிகள்; வானத்திற்குத் தாரகைகள் ஆகியவை எப்படியோ, அப்படியே பேச்சுக்குப் பழமொழிகள். —யூதர்

மிகவும் சத்தியமான வசனங்கள் முரண்பாடுள்ளவைகளாகத் தோன்றும். —டாவோ

வானம் இடிந்து வீழ்வதில்லை, பழமொழியும் பொய்ப்பதில்லை.
—ஜெர்மனி

தேசந்தோறும் ஒழுக்கம் வேறு, ஒழுக்கத்திற்கு ஏற்றவை பழமொழிகள். —ஜெர்மனி

தெருக்களில் பேசும் மக்களின் அறிவு பழமொழிகள். —( ” )

நினைவிலுள்ள நல்ல பழமொழி பெட்டியிலுள்ள தங்க நாணயம் போன்றது. —ஸ்வீடன்

பழமொழிகள் அநுபவங்களின் எதிரொலிகள். —ஸ்வீடன்

பழமொழி இறைவனின் குரல். —ஸ்பெயின்

## சரித்திரம்

(பலரும்) ஒப்புக்கொண்டுள்ள பொய்களே சரித்திரம்.
—இங்கிலாந்து

பழைய சரித்திர நிகழ்ச்சிகள் மீண்டும் ஏற்படுகின்றன. —( " )

பாவம் வரலாறுகளை எழுதுகின்றது, நன்மை அமைதியாயிருக்கின்றது. —கதே

## நூல்கள்

ஒரு நூலை முதலில் வாசித்தல் ஒரு புதிய நண்பனை அடைதலாகும்; அதை மறுமுறை வாசித்தல் பழைய நண்பனைச் சந்தித்தலாகும். —சீனு

புத்தகத்தைத் திறந்து பார்த்தாலே லாபமுண்டு. —சீனு

பழைய காலத்தையும், நிகழ் காலத்தையும் ஒருவன் புரிந்து கொள்ள வேண்டுமானால், அவன் ஐந்து வண்டிப் புத்தகங்களைப் படிக்கவேண்டும். —சீனு

பட்டதாரி நூல்களைப் பற்றி விவாதிப்பான், கசாப்புக்காரன் பன்றிகளைப் பற்றி விவாதிப்பான். —சீனு

நூல்களைப் பெற்றவன் மகிழ்ச்சியுள்ளவன்; ஆனால் அவைகளும் தேவையில்லாத நிலையில் (அவைகளை மனத்திலே வாங்கிக் கொண்டபின்) மேலும் மகிழ்ச்சியடைவான். —சீனு

நூல்கள் மனத்தோடு பேசுகின்றன, நண்பர்கள் இதயத்தோடு பேசுகின்றனர், இறைவன் ஆன்மாவுடன் பேசுகிறான், மற்றவர் அனைவரும் செவியுடன் பேசுகின்றனர். —சீனு

புத்தகம் சட்டைப்பைக்குள் கொண்டுசெல்லும் பூந்தோட்டம்.
—அரேபியா

புத்தகங்களைப் படித்தறிந்தவனுக்கு நான்கு கண்கள் உண்டு.
—வேல்ஷ்

நல்ல புத்தகம் நல்ல நண்பன். —இத்தாலி

கெட்ட புத்தகம் திருடனைவிட மோசம். —இத்தாலி

இலக்கியமில்லாத வாழ்க்கை மரணமாகும். —லத்தீன்

## ஆசிரியர்

ஒருநாள் எனக்கு ஆசிரியராயிருந்தவர் வாழ்வு முழுதும் என் தந்தையாவார். —சீனு

தந்தை என்ற பெயருக்குக் கல்வி கற்பிப்பவரே தந்தையைவிட அதிக உரிமையுள்ளவர். —யூதர்

பெற்ற அறிவைப் பேணி, புது அறிவைப் பெறுபவனே ஆசிரியன். —கன்ஃபூஷியஸ்

குழந்தைகளுக்குக் கற்பிக்கும் ஆசிரியன் அவர்களைவிட அதிகமாய்த் தெரிந்து கொள்கிறுன். —ஜெர்மனி

தெய்வங்கள் ஒருவனை வெறுத்தால், அவன் ஆசிரியனுவான். —லத்தீன்

சொல்லிக்கொடுப்பவன் அதனுல் தானும் கற்கிறுன். —( ” )

## கற்பனை

நீரிலே வானத்தைப் பார்ப்பவன் மரங்களிலே மீன்களைப் பார்ப்பான். —சீனு

## உரையாடல்

மனிதனின் உரையாடலே அவனுடைய சிந்தனைகளுக்குக் கண்ணுடி. —சீனு

பலர் விவாதம் செய்ய முடியும், சிலரே உரையாடமுடியும். —இங்கிலாந்து

உரையாடாதவனுக்கு ஒன்றுமே தெரியாது. —இங்கிலாந்து

## விவாதம்

6281

ஒவ்வொரு விஷயத்திற்கும் இரு புறங்கள் உண்டு. —கிரீஸ்

வாதாடி வழக்கமுள்ளவனுக்கு வார்த்தைகளில் பஞ்சமில்லை —இங்கிலாந்து

உரக்கப் பேசுவோன் பேச்சே எப்பொழுதும் நியாயம், —( " )

ஓங்கியடித்துப் பேசுவதால் ஒருவனைத் திருப்பிவிட முடியாது. —இங்கிலாந்து

விவாதம் வேலையைச் சுணக்கும். —இங்கிலாந்து

விவாதம் செய்வதற்கு ஏற்ற ஒவ்வொரு விஷயத்தையும் விவாதிப்பதானால், அதற்கு முடிவே இராது. —( " )

காரசாரமான விவாதத்தில் நாம் உண்மையை நழுவவிட்டு விடக்கூடும். —லத்தீன்

வாதங்களை வைத்து உண்மை நிகழ்ச்சிகளை ஆராயவேண்டாம்; நிகழ்ச்சிகளைக் கொண்டு வாதங்களைக் கவனிக்கவும். —கிரீஸ்

வல்லமையுள்ளவர்களின் வாதங்களுக்கே எப்பொழுதும் மதிப்பு அதிகம். —ஃபிரான்ஸ்

## மறதி

குதிரைமேல் அமர்ந்து கொண்டே நீ குதிரையைத் தேடுகிறாய். —ரஷ்யா

ஒருவன் ஒரு பொருளைப் பெற்ற பிறகே, அதை மறக்க முடியும். —இங்கிலாந்து

மனிதர் மனிதரே; மிகப் பெரியவர்களும் சில சமயங்களில் மறந்துவிடுவர். —ஷேக்ஸ்பியர்

விழுங்கிய பிறகு சூடு மறந்து போகும். —ஜப்பான்

ஒருவன் குதிரைமேல் செல்லும் பொழுது, இறைவனை மறக்கிறான்; குதிரையைவிட்டு இறங்கியவுடன், குதிரையையும் மறக்கிறான். —ஆர்மீனியா

## செயலறிவு

முன்னால் ஆற்றைக் கடந்தவனுக்கே நீரின் ஆழம் நன்றாய்த் தெரியும். —டென்மார்க்

கட்டிக் கொடுத்த சோறும், கற்றுக் கொடுத்த சொல்லும் நீடித்து நில்லா. —தமிழ்நாடு

அநுபவம் சிந்தனையின் குழந்தை; சிந்தனை செயலின் குழந்தை. —இங்கிலாந்து

அநுபவமும், நினைவும் அறிவுக்குத் தந்தையும் தாயும். —இங்கிலாந்து

இரண்டு முறை கப்பலுடைந்து கஷ்டப்பட்டவன் கடலிடம் கோபிப்பது வீணாகும். —இங்கிலாந்து

அநுபவத்தால் பெறும் அறிவுக்கு அதிக விலை. —இங்கிலாந்து

பழைய எலிக்குப் பழைய பூனையை விடு. —கிரீஸ்

ஒவ்வொருவனும் தன் அநுபவத்தைத் தவிர, மற்றதை நம்புதில்லை. —கிரீஸ்

கிணற்றுத் தவளைக்குப் பெரிய கடலைப் பற்றி ஒன்றும் தெரியாது. — ஜப்பான்

மூடர்களுக்கு அநுபவமே ஆசிரியன். —லத்தீன்

## கவனிப்பு

நல்ல இலாயங்களால் குதிரை நல்லதாகாது; கவனம் வேண்டும். —டென்மார்க்

தொட்டி நீரைக் கொட்டும் பொழுது, குழந்தையையும் எறிந்து விடாதே. —டென்மார்க்

கவனமில்லாத காவல் கவனமுள்ள பகைவனை அழைக்கும். —இங்கிலாந்து

முன்னால் பார்க்காதவன் பின்னால்தான் இருப்பான். —( ” )

குதிரை களவு போகும் முன்னால், இலாயத்தைப் பூட்டு. —( ” )

கவனமில்லாதவன் கதவை அடைக்கும்பொழுது ஓர் அங்குலம் திறந்தபடி விடுகிறான்; சோம்பேறி மூன்று அங்குலம் விடுகிறான்; மூடன் முழுதும் திறந்தபடி விடுகிறான்.

—ஜப்பான்

வீட்டின் தளத்தை உயர்த்தினால், கூரை தணிவாகிவிடும்.

—யூதர்

சுண்டெலி திருடனன்று, வளைதான் திருடன். [வளையை அடையாமல் வைத்திருந்தால், எலிகள் வரத்தான் செய்யும்.]

—யூதர்

கண்ணுள்ளவர்களைப் பார்க்கிலும் குருடன் குறைவாகவே தடுக்கி விழுவான்.

—ஜெர்மனி

இரும்புப் பெட்டி திறந்து கிடந்தால், துறவிக்கும் ஆசை உண்டாகும்.

—ஜெர்மனி

விளக்கை உயரே வைத்தால் காற்று அணைக்கும்; கீழே வைத்தால் குழந்தைகள் அணைக்கும்.

—ஜெர்மனி

மூடிய பாலில் ஈ விழாது. —அல்பேனியா

தொலைத்துவிட்டுத் தேடுவதைப் பார்க்கிலும், கவனமாய் வைத்திருப்பது எளிதாகும்.

—வேல்ஸ்

ஒவ்வொரு படுக்கையையும் நீயே அதில் படுத்துக்கொள்வது போல் எண்ணி விரிக்கவேண்டும்.

—பல்கேரியா

மரத்தைப் பார்த்துவிட்டு நிழலுக்கு ஒதுங்கு. —பல்கேரியா

வண்டியிலிருப்பவர்கள் பேசினாலும், வண்டிக்காரன் வண்டியை மட்டும் ஓட்டவேண்டும்.

—ஃபின்லந்து

உன்னிடம் ஒரு கயிறு இருந்தால், அதைக் சுருட்டி வைக்கவும்.

—கிரீஸ்

மாடு தொலைந்தவனுக்கு மணி ஓசை கேட்டுக்கொண்டேயிருக்கும்.

—ஸ்பெயின்

ஒன்பது தடவை அளந்து ஒருமுறை கத்தரி. —பல்கேரியா

மலரைப் பாதுகாத்தால் கனி கிடைக்கும். —பல்கேரியா

வேலியில்லாத தோட்டம் வேலியுள்ள பாலைவனம் போன்றது.

—பல்கேரியா

வேலி தணிந்திருந்தால் எவனும் தாண்டி வருவான்.
—எஸ்டோனியா

பூட்டு என்பது விலங்குகளைத் தடுக்கும் பாதுகாப்பு, ஆனால் மனிதனைத் தடுக்கும் பாதுகாப்பே யில்லை. —( ” )

ஒவ்வொரு சாலைக்கும் இரண்டு திசைகள் உண்டு. —ரஷ்யா

பூட்டு யோக்கியனைக் கருதியே செய்யப்பட்டது. [திருடர்களிடமிருந்து பூட்டு காக்க முடியாது.] —யூதர்

கதவைத் திறந்து போட்டுவிட்டால், திறந்த வெளியில் படுத்த மாதிரி. —ஆப்பிரிக்கா

நீ இறக்கும்பொழுது உனக்காக அழக்கூடியவர்களை, உயிருள்ள போதே நீ தேடி வைத்துக்கொள்ள வேண்டும்.
—எகிப்து

ஒரே மரத்தின் பக்கம் நீ இருமுறை வந்தால், நீ வழி தவறி விட்டாய். —ஆப்பிரிக்கா

இருட்டிலே ஜனங்கள் ஒருவர் துணியை ஒருவர் பிடித்துக் கொள்வார்கள். —ஆப்பிரிக்கா

## முக்கியம்

தலை இருந்தால், தலைப்பாகைக்கா பஞ்சம்? —இந்தியா

வேரைவிட எந்தக் கிளையும் முக்கியமில்லை. —ஜப்பான்

அவசியம் நேர்ந்தால் பன்றியும் மாமனாகும். —அல்பேனியா

பிடியில்லாத கோடரியைக் கண்டு காடு அஞ்சாது.
—பல்கேரியா

அவசியம் வந்தால், ஒருவன் புதிதாக வழி கண்டுபிடிப்பான்.
—ஸ்பெயின்

நிர்வாணமான பெண்களுக்கு, தேவை நூல் நூற்கக் கற்பிக்கும்.
—டென்மார்க்

ரொட்டியை மென்றபிறகு பற்கள் தேவையில்லை.
—எஸ்டோனியா

தடுமன் வரும்போது நிலக்கரியைத் திருடக் கற்பிக்கிறது.
—எஸ்டோனியா

# எச்சரிக்கை

சிங்கம் என்று சொன்னவுடன் ஒரு மரத்தில் ஏறிக்கொள்.
—எகிப்து

முதல் வண்டி குடை சாய்ந்துவிட்டால், அடுத்த வண்டி அதிக எச்சரிக்கையாயிருக்க வேண்டும்.
—சீனு

பணம் களவு போனபிறகு, காவல் நாயைத்தான் அடிக்க முடியும்.
—சீனு

போக்கிரி உன்னை முத்தமிட்டால், உன் பற்கள் சரியாயிருக்கின்றனவா என்று எண்ணிப் பார்.
—யூதர்

மனிதன் எந்தப் பக்கம் விழுவான் என்பது முன்னால் தெரிந்திருந்தால் அந்தப் பக்கம் வைக்கோலைப் பரத்தியிருப்பான்.
—ஃபின்லந்து

ஒவ்வொரு கல்லின் அடியிலும் ஒரு தேள் உறங்கிக் கொண்டிருக்கும்.
—கிரீஸ்

ஓர் அணு மெழுகுவத்தி பற்றி மாஸ்கோ நகரம் எரிந்தது. [1443-ல் அர்ச். நிகோலஸ் கோயிலிலிருந்த ஒரு மெழுகுவத்தியால் மாஸ்கோ தீக்கிரையாயிற்று. 1537ல் ஒருவர் வீட்டிலிருந்த மெழுகுவர்த்தியால் மீண்டும் எரிந்தது.]
—ரஷ்யா

கீழே விழுந்தவனைக் கண்டு சிரிக்கவேண்டாம்; உன் பாதையும் வழுக்கல் நிறைந்தது.
—ரஷ்யா

பாம்பைக் கண்டுபிடிக்க விளக்கை எடுப்பவன், முதலில் தன் காலடியைப் பார்த்துக் கொள்ளவேண்டும்.
—கிரீஸ்

# ஒழுக்கம்

சோதனைகள் மூலம் நல்லொழுக்கம் வளர்வதே ஆண்டவன் விருப்பம்.
—அரேபியா

பண்பில்லாத இடத்தில் சுதந்திரம் இருக்க முடியாது.
—அரேபியா

பெற்றோருக்கு மரியாதை குறையும்பொழுது, மற்ற ஒழுக்கங்களுக்கும் அபாயம்.
—சீனு

பண்பு பரம்பரையாக வருவதில்லை. —சீனு

பண்பு இருந்தால், பாரையே வெல்லலாம். —சீனு

சாம்ராஜ்யத்தின் மேன்மைக்குப் பண்புதான் அடிப்படை. —சீனு

கடுமையான பயிற்சியில்லாமல் ஒருவன் ஒழுக்கமாயிருக்க முடியாது. —இங்கிலாந்து

பண்பில்லாதவன் ஆடையில்லாதவன். —இங்கிலாந்து

ஒழுக்கத்தை விற்றுச் செல்வம் தேடவேண்டாம். —( ,, )

பண்பு ஒன்றுதான் (உண்மையான) சொத்து. —இங்கிலாந்து

பண்பும் இன்பமும் அன்னையும் மகளும். —இங்கிலாந்து

ஒழுக்கம் உள்ளத்தில் உறைவது, நாக்கிலன்று. —இங்கிலாந்து

ஒழுக்கமே உயர்குடிக்கு உரிமை யளிப்பது. —இங்கிலாந்து

ஒழுக்கத்திற்கு ஒருபோதும் மூப்பில்லை. —இங்கிலாந்து

பண்பின் பயன் பண்புதான். —இங்கிலாந்து

மதங்கள் பல, ஒழுக்கம் ஒன்றுதான். —இங்கிலாந்து

இழந்த பிறகு பெறுவதைப் பார்க்கினும், இருக்கும் ஒழுக்கத்தைக் காப்பது மிகவும் எளிது. —இங்கிலாந்து

நமக்குள்ளேயே நாம் ஆராய்ந்து பார்க்கவேண்டிய இடங்கள் நிறைய உள்ளன. —இங்கிலாந்து

நல்ல நடத்தைதான் வாழ்க்கையின் முக்கால் பகுதி, அதுவே முதன்மையானது. —இங்கிலாந்து

யோக்கியதையை இழந்தவன் எல்லாம் இழந்தவன். —( ,, )

இலாபத்திற்கும் நேர்மையே முதன்மையான வழி. —( ,, )

மக்களின் தீயொழுக்கங்கள் பித்தளையில் எழுதப்பெறும்; நல்லொழுக்கங்கள் நீரில் எழுதப்பெறும். —ஷேக்ஸ்பியர்

பண்பு எப்பொழுதும் சிறுபான்மைக் கட்சியாகவே இருக்கும். —ஃபிரான்ஸ்

துன்பத்தின் நடுவில் பண்பு செழித்து வளரும். —ஜெர்மனி

பண்பு என்ற நாணயம் உலகெங்கும் செலாவணியாகும். —கிரீஸ்

நேர்மையற்றதைச் செய்யவேண்டாம்; உண்மையற்றதைப் பேச வேண்டாம். —கிரீஸ்

ஒழுக்கமே [ஒருவனுடைய விதி] விதி. —கிரீஸ்

ஒழுக்கம் என்பது நெடுநாள் வழக்கம். —கிரீஸ்

நேர்மையாளன் ஓர் எலும்புத் துண்டுக்காகத் தன்னை நாயாக மாற்றிக் கொள்ளமாட்டான். —டென்மார்க்

நேர்மையாளன் உலகின் (பொதுப்) பிரஜையாவான். —டென்மார்க்

பண்புக்குப் பெரும் பகை செல்வம். —டென்மார்க்

எதிர்ப்பு இல்லாவிட்டால், பண்பு வாடி உதிர்ந்துவிடும். —லத்தீன்

தங்கத்தினும் மதிப்புக் குறைந்தது வெள்ளி; தங்கத்தினும் மதிப்பு உயர்ந்தது பண்பு. —லத்தீன்

ஒவ்வொரு மனிதனும் கேள்விக்கு முந்தவேண்டும், பேச்சுக்குப் பிந்தவேண்டும். —புதிய ஏற்பாடு

மனிதர்களைவிட அதிக மரங்கள் நேராக வளர்கின்றன. —சீனு

அறிவைத் தந்தையாகவும், திருப்தியைத் தாயாகவும், சத்தியத்தை சகோதரனாகவும் வைத்துக்கொள். —சீக்கியர்

மனிதனின் முதல் இலட்சியம் பரிசுத்தம். —பார்சி

மனிதன் தன் பையைப் பணத்தால் நிரப்புவதோடு, நேர்மையாலும் நிரப்பவேண்டும். —பார்சி

இரவுக்குத் தனிச் சட்டம். [ஒழுக்க விதிகள்] —போலந்து

முற்றிலும் யோக்கியமா யிருப்பவனுக்கு அணிவதற்குச் சட்டை இராது. —போலந்து

# பண்பு

குணம் அறிந்துதான் கடவுள் கொம்பு கொடுக்கிறார்.
—இந்தியா

தன் குறைகளைக் கவனிப்பவனுக்குப் பிறர் குறைகளைப் பார்க்க நேரம் இராது.
—அரேபியா

ஒரு மனிதனின் பண்பு மூன்று விஷயங்களில் அறியப் பெறுகின்றது. அவனுடைய மதுக் கிண்ணம், பணப்பை, கோப்பை.
—யூதர்

உலகம் செழிப்பாயிருப்பதற்கு இரக்கம், கருணை, நம்பிக்கை ஆகியவை காரணம்.
—ஆப்பிரிக்கா

நல்ல நடத்தையை இழந்து மறுபடி பெறுவது கடினம்.
—இங்கிலாந்து

நடை சுத்தமாயிருப்பதுடன், பிரகாசமாயும் இருக்க வேண்டும்.
—இங்கிலாந்து

நமக்குள்ளேயே நாம் தெரிந்து 'கொள்ளாத பிரதேசங்கள் அதிகமாயுள்ளன.
—இங்கிலாந்து

ஒருவன் சிரித்து உதாசீனம் செய்யும் பொருள்களிலிருந்து அவன் குணம் தெரியும்.
—ஜெர்மனி

உலகின் புயல்களின் நடுவே பண்பு வளர்க்கப் பெறுகின்றது.
—கதே

குணம்தான் விதி.
—கிரீஸ்

நமது நடத்தையின் பயன் பண்பாக அமையும்.
—கிரீஸ்

நீண்டகாலப் பழக்கமே பண்பாகிறது.
—கிரீஸ்

மனிதனின் நடத்தையே அவனுடைய அதிருஷ்டத்தைத் தீர்மானிக்கிறது.
—லத்தீன்

உன்னைப்பற்றி என்ன நினைக்கிறார்கள் என்பது முக்கியமில்லை; நீ எப்படியிருக்கிறாய் என்பதே முக்கியம்.
—லத்தீன்

# மனச்சான்று

தீமை செய்கையில் நெஞ்சிலே ஒரு சாட்சி இருக்கிறான்.
—டென்மார்க்

குற்றமுள்ள நெஞ்சுக்குத் தூக்குப் போட ஆள் வேண்டாம்.
—இங்கிலாந்து

தூய மனச்சான்று எந்தத் துன்பத்தையும் தாங்கும். —( " )

நல்ல மனச்சாட்சி இடைவிடாத விருந்தாகும். —( " )

நல்ல மனச்சாட்சியே மென்மையான தலையணை. —( " )

அமைதியான மனச்சான்று இடியிலும் உறங்கும். —( " )

மனச்சான்று ஆன்மாவிலுள்ள இறைவனின் குரல் —( " )

ஆலயத்தில் உமிழ்வது குற்றமென்று கருதும் சிலர், பலி பீடத்தையே திருடுகின்றனர். —இங்கிலாந்து

மனச்சாட்சிதான் நம் அனைவரையும் கோழைகளாக்குகின்றது.
—ஷேக்ஸ்பியர்

பகுத்தறிவின் நாடியே மனச்சான்று. —காலரிட்ஜ்

மாசுள்ள மனச்சான்றுக்குக் குற்றம் சாட்ட ஆள் வேண்டாம்.
—ஃபிரான்ஸ்

மனச்சாட்சி இல்லாதவன் ஒன்றுமில்லாதவன். —ஃபிரான்ஸ்

மனச்சாட்சி என்ற புழு ஆந்தையோடு உறவாடுகின்றது.
—ஷில்லர்

நரர்களுக்கு மனச்சான்று ஒரு தெய்வம். —கிரீஸ்

மாசற்ற மனச்சாட்சி பித்தளைச் சுவராகும். —லத்தீன்

மனச்சாட்சியில் பட்ட மறுவும் ஒரு புண்தான். —லத்தீன்

மாசற்ற மனச்சாட்சி இதயத்தில் உறையும் நாகமாகும்.
—லூதர்

முக்கியமான விஷயங்களில் முதன்மையானது மனச்சான்றை ஏமாற்றுதிருத்தல். —சீனு

மனச்சாட்சியைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தால், உண்பதற்கு ஒன்றும் இராது. —சீனு

பேராசை மனச்சாட்சியை இழத்தல் சாம்பலுக்காகப் படத்தை எரிப்பது போலாகும். —சீனு

மனச்சாட்சி ஒரு கூடு; அதில்தான் ஒவ்வொரு நன்மையும் குஞ்சு பொரிக்கும். —வேல்ஸ்

பரிசுத்தமான மனச்சாட்சிதான் வீட்டுக்குச் சிறந்த விருந்தாளி. —ஸெக்

மனச்சாட்சி ஆயிரம் சாட்சிகளுக்கு ஈடாகும். —ஸெக்

## மன நிறைவு

திருப்தியுள்ளவனை அழிக்கவே முடியாது. —சீனு

இறைச்சி கிடைக்காதவன் கீரையுடன் திருப்தியடைய வேண்டும். —டென்மார்க்

திருப்தியே வேண்டியதையெல்லாம் தங்கமாக்கும். —இங்கிலாந்து

மனநிறைவு அரண்மனைகளைப் பார்க்கிலும் குடிசைகளிலே அதிகம் தங்குகின்றது. —இங்கிலாந்து

பேறுகளில் சிறந்தது நிறைவுள்ள மனம். —லத்தீன்

உன்னிடம் இருப்பதைப் பற்றி எண்ணும் அளவுக்கு, இல்லாததைப் பற்றி எண்ணவேண்டாம். —கிரீஸ்

செல்வத்தினும் உயர்ந்தது திருப்தி. ஃபிரான்ஸ்

நாம் விரும்புவது கிடைக்காதபோது, எது கிடைத்ததோ அதை விரும்பவேண்டும். —ஃபிரான்ஸ

நாளைய கோழியைவிட இன்றைய முட்டை மேலானது. —துருக்கி

உனக்குக் கிடைத்த எலும்புத் துண்டைக் கருவிக் கொண்டிரு. —யூதர்

மனிதனுக்கு வேண்டியது ஏழடி நிலமே. —கீழைநாடுகள்

திருப்தியுடன் வாழ்ந்தால், நீயே அரசன். —பாரசீகம்

(வேண்டாம் என்று) தியாகம் செய்து தள்ளுவதில் ஒவ்வொன்றிலும் ஏதோ நன்மை யிருக்கிறது. —ஃபிரான்ஸ்

வில் ஒன்றிருந்தால், ஃபிடில் ஒன்று போதும் —ஜெர்மனி

மூடன் மேலும் மேலும் ஆசையுடன் தேடிக்கொண்டிருக் கட்டும், நீ உனக்குக் கிடைத்த சொற்பத்தை அநுப வித்துக் கோண்டிரு. —இங்கிலாந்து

வயிற்றைத் திருப்தி செய்தல் எளிது, கண்ணைத் திருப்தி செய்தல் கடினம். —வேல்ஸ்

## நடுநிலை

எந்த விஷயத்திலும் எல்லைக் கோடுகளுக்குச் செல்வது தவறு. —இங்கிலாந்து

உபவாசத்திற்கும் விருந்துண்பதற்கும் இடையில் நடுவானது ஒன்றில்லையா? —இங்கிலாந்து

நடு மாடியில் குடியிருப்பவனை மேலே யிருப்பவர்கள் அலட்சியம் செய்வார்கள், கீழே யிருப்பவர்கள் புகை மூட்டச் செய்வார்கள். —ஜெர்மனி

கடைசியாகப் போகிறவனை ஓநாய் தின்றுவிடும். —ஜெர்மனி

## மானம்

வயிறு காய்ந்தால், வெட்கம் போய்விடும். —இந்தியா

காயம்பட்ட விரலை உலகுக்குக் காட்டாதே. —ஸ்பெயின்

வெட்கம் விலகிவிட்டால், மனிதன் விலங்குதான். —இங்கிலாந்து

வெட்கத்தை விட்டால், கௌரவம் போய்விடும். —( ,, )

வெட்கமில்லாதவனுக்கு உலகமே சொந்தம். —இத்தாலி

வெட்கமிருந்தால், விமோசனம் வருமென்று நம்பலாம் — ( ,, )

நிர்வாண நாட்டில் மக்கள் உடைகளைக் கேவலமாக எண்ணு வார்கள். —ரஷ்யா

மனிதர்களின் முன்னால் கேவலத்தை உணராதவர்கள் தெய்வத்திற்கு அஞ்சமாட்டார்கள். —யூதர்

**கண்களே மானத்தின் உறைவிடம்.** —கிரீஸ்

நாணமுள்ள இடத்தில் அச்சமும் இருக்கும். —மில்டன்

## அவமானம்

கை நீட்டிக் கேட்பவனுக்கு ஒரு கேவலம், இல்லை யென்பவனுக்கு இரட்டிப்புக் கேவலம். —துருக்கி

மிகவும் மோசமான கேவலம் வறுமைதான். —லத்தீன்

நீ ஏற்றுக் கொண்டாலும், இல்லாவிட்டாலும், அவமானம் அவமானமே. —லத்தீன்

ஆறாத புண்களை மூடி வைப்பது போலி வெட்கம். —லத்தீன்

மானமற்றவனுக்கு மனச் சாட்சியே யில்லை. —இங்கிலாந்து

மனிதர்கள் தீயோரா யிருப்பதில் எனக்கு ஒரு போதும் வியப்பில்லை; ஆனால் அவர்கள் வெட்கமில்லாமலிருப் பதில்தான் ஆச்சரியப்படுகிறேன். —ஸ்விஃப்ட்

மானம் போனபின், பெருமையும் போயிற்று. —இங்கிலாந்து

## நாகரிகம்

நாகரிகம் என்பது மக்களை மரியாதையுள்ளவர்களாகச் செய்தல். —ரஸ்கின்

நாடுதோறும் நாகரிகம் வேறு. —இங்கிலாந்து

நீ நாகரிகத்தோடு ஒத்துப் போகாவிட்டால், உனக்கு மதிப்பே இல்லை. —இங்கிலாந்து

அரசன் பிரபுவை உண்டாக்கலாம், ஆனால் கனவானைக் கடவுளே படைக்க வேண்டும். —இங்கிலாந்து

திறமையில்லாத வெறும் கண்யம் அளவற்ற வறுமையை விட மோசமானது. —இங்கிலாந்து

கனவான்கள் கடைக்குப் போனால், ஒரு படி தானியம்கூட வாங்கிவர முடியாது. —இங்கிலாந்து

புணமும் பாவனைகளும் கனவானுக்குகின்றன. —இங்கிலாந்து

ஒருசமயம் கனவான், எப்பொழுதுமே கனவான்.—இங்கிலாந்து

கண்யமான செயல்களைச் செய்பவனே கனவான். —சாஸர்

நாட்டு நாகரிகத்தைப் பின்பற்று, அல்லது உலகத்தை விட்டுப் போய்விடு. —ஃபிரான்ஸ்

கனவான் முறைதவறி வாழ்ந்தால் இயற்கையில் ஓர் அரக்கனுவான். —மோலியர்

கனவானுக்கு விளக்கம்: யாருக்கும் ஒரு துயரும் விளைக்காதவன். —நியூமன்

அன்புக் கரத்தால் யானையையும் ஒரு மயிரிழையால் இழுத்துச் செல்லலாம். —பாரசீகம்

ஆடு அன்பாயிருந்தால், (கண்ட) குட்டிகள் எல்லாம் அதனிடம் பால் குடிக்கும். —இத்தாலி

ஆற்றலுள்ளவன், பலாத்காரத்தால் முடிக்க முடியாததை, அன்புவழியில் செய்து முடிக்கலாம். —லத்தீன்

முன்னால் நூறு கிண்ணம் அமுதம் அளித்தவன் கையால் ஒரு கிண்ணம் நஞ்சை அளித்தாலும் பெற்றுக்கொள்ள வேண்டும். —இந்தியா

நொண்டியைப் பாத்தவுடன் காலைப்பற்றியா பேசவேண்டும்? இனிமையான பேச்சுக்கு எண்ணற்ற விஷயங்கள் இருக்கின்றன. —சீனு

## உண்மை

உண்மை ஆண்டவனின் முத்திரை. —யூதர்

உண்மைக்குக் கிளைகள் இல்லை. —இந்தியா

உண்மைக்கும் பொய்க்கும் இடையில் நான்கு விரற்கடையே உண்டு. —இந்தியா

[நாம் செவிகளால் கேட்பதைவிட, நம் கண்களால் காண்பதே நம்பத்தக்கதாகும். நான்கு விரற்கடை என்பது கண்களுக்கும் காதுகளுக்கும் இடையிலுள்ள தூரம்.]

மனிதன் கண்களைப் பறித்தாலும் பறித்தெடுப்பான், ஆனால் உண்மையைச் சொல்லமாட்டான். —இந்தியா

பொய் சாலையிலே வந்துவிட்டால், உண்மை மறைந்து கொள்ளும். —இந்தியா

உண்மையாளனுக்குச் சாராயக் கடையிலும் இடம் கிடையாது. —இலங்கை

சத்தியத்திற்குக் கொம்புகள் உண்டு. —அரேபியா

உண்மை யென்ற பாணத்தை விடுமுன், அதன் முனையைத் தேனிலே தோய்த்துக் கொள். —அரேபியா

உண்மையைச் சொல்பவனுக்கு (அவன் தப்பி ஓடுவதற்கு) ஒரு குதிரையைக் கொடு. —ஆர்மீனியா

நாடோடிக் குறவன் தன் வாழ்க்கையில் ஒரு முறை உண்மையைச் சொல்விடுவான்; ஆனால் பிறகு, 'ஏன் சொன்னோம்'? என்று வருந்துவான். —ஆங்கில நாடோடிகள்

உண்மையானதாயும் இனிதாயுமுள்ளதைச் சொல்லு; உண்மையின்றி இனிமையாக மட்டும் இருப்பதைச் சொல்ல வேண்டாம்; இனிமையின்றி உண்மையாக மட்டும் இருப்பதையும் சொல்ல வேண்டாம். —கீழ்நாடுகள்

யோக்கியன் தப்பிப் பறப்பதற்குப் பொய்யே சிறகுகள். —ஆப்கானிஸ்தானம்

வல்லமையுள்ளவன் (கூசாமல்) உண்மையைச் சொல்லுவான்; மூடனும் அப்படியே. —ஆப்கானிஸ்தானம்

உண்மை பொன்னினும் மேலானது. —அரேபியா

நன்மை விளைவிக்கும் பொய் தீமை விளைவிக்கும் உண்மையை விட மேலானது. —பாரசீகம்

உண்மையான சொற்கள் நேர்த்தியா யிருக்கமாட்டா: நேர்த்தியான மொழிகள் உண்மையா யிருப்பதில்லை. —ஸாஃபி

உண்மைக்கு உடைகள் தேவையில்லை. —அயர்லாந்து

பல சமயங்களில் உண்மை அமைதியாகப் படுத்துக் கிடக்க வேண்டும். —அமெரிக்கா

உண்மையாளரின் பாஷை எப்போதும் எளிமையாகவே யிருக்கும். —செர்பியா

உண்மை (உலராமல்) பச்சையாகவே யிருக்கும். —ஸ்பெயின்

உண்மை ஆண்டவரின் மகள். —ஸ்பெயின்

உண்மை சோப்பைவிடக் கைகளைச் சுத்தமாக வைக்கும். —ஆப்பிரிக்கா

உண்மை கண்ணைக் குத்தும். —எஸ்டோனியா

உண்மையைச் சொல்ல வாயை எவ்வளவு திறக்கவேண்டுமோ, அவ்வளவுதான் பொய் சொல்லவும் திறக்கிறோம். —பெல்ஜியம்

உண்மைக்குத் தங்குமிடம் கிடைப்பது அரிது. —பெல்ஜியம்

பொய் சொல்லிப் பரிசு பெறுவதைவிட உண்மை சொல்லித் துன்பத்தை ஏற்பது மேல். —ஸ்வீடன்

உலகத்திலே மிகவும் கசப்பான பொருள் உண்மை. —யூதர்

கனிந்ததை உண்ணு, உண்மையை உரை. —எஸ்டோனியா

பொய்யால் செழிப்படைவதிலும், உண்மைக்காகத் துன்புறுவது மேல். —டென்மார்க்

உண்மை செருப்பணிந்து புறப்படுவதற்குள், பொய் உலகைச் சுற்றிவிட்டு வந்துவிடுகின்றது. —இங்கிலாந்து

ஒவ்வொரு மனிதனும் உண்மையையே நாடுகிறான்; ஆனால் எவன் கண்டான் என்பது ஆண்டவனுக்குத்தான் தெரியும். —செஸ்டர்ஃபீல்ட்

எண்ணெயும் உண்மையும் மேலே வந்துவிடும். —இங்கிலாந்து

விளக்கொளியில் உண்மையாகத் தோன்றியது சூரிய வெளிச்சத்தில் மாறவும் கூடும். —ஃபிரான்ஸ்

## பொய்

நீ பொய் சொல்லிவிட்டால், அதையே இருமுறை சொல்லு, மும்முறை சொல்லு; ஆனால் எல்லாம் ஒரே பொய்யாக இருக்கட்டும். —இந்தியா

பொய்க்குக் கால்களில்லை, சிறகுகள் உண்டு. —ஜப்பான்

சாட்டையை இழந்துவிட்டால், அதில் தங்கப் பிடி இருந்தது என்பார்கள். —சீனா

பொய் சொல்லுதல் மனித இயல்பு, அதை நம்புகிறவனுக்குத் தான் கேவலம். —அரேபியா

உளுத்துப்போன பொருள் மிதக்கும்; பொய் வதந்தி உடனே பரவும். —பர்மா

பொய்யனுக்குத் தண்டனை, அவன் உண்மையைச் சொல்லும் போதும், எவரும் நம்பாமலிருப்பதுதான். —யூதர்

பொய் ஒற்றைக் காலில் நிற்பது; உண்மை இரு கால்களில் நிற்பது. —யூதர்

பொய்யனுக்கு ஒரு முறைதான் இலாபம். —கீழ் நாடுகள்

பொய்யான உண்மைகளும், மெய்யான பொய்களும் உண்டு. —இங்கிலாந்து

உண்மை வெளியாகிவிட்டால், பொய்களின் நாடு பொசுக்கப் படும். —ஆப்பிரிக்கா

பொய்க்கும் மெய்க்கும் இடையில் ஒரு மயிரிழைதான் உண்டு. —பாரசீகம்

ஒரு பொய் ஆண்டவனின் ஒரு சாபமாகும். —பல்கேரியா

பொய்யன் நினைவோடு பொய்சொல்ல வேண்டும். —செக்

புண்படுத்தும் மெய்யைவிடப் புண்ணை ஆற்றும் பொய் மேல் —செக்

பொய்கள் அமர்வதற்கு ஒருவன் சிம்மாசனம் அமைத்தால். உண்மைக்குத் தூக்குமேடை அமைத்ததாகும். —ரஷ்யா

பொய்களாகிய குளத்தில் செத்த மீன்களே மிஞ்சும். —ரஷ்யா

பொய் சொல்லும் பொழுது நீயே அதை உண்மையென்று நம்பும்படி சொல்லு. —ரஷ்யா

அவசியமான காலத்தில் பொய்யும் மெய்போலவே பயன்படும். —ஸ்வீடன்

ஒரு பொய் ஈட்டியைவிட வேதனையளிக்கக் கூடும். —ஆப்பிரிக்கா

'அவர்கள் சொல்லுகிறார்கள்' என்பது பொய்யின் தம்பி. —ஆப்பிரிக்கா

பொய்யன் உலகத்தைச் சுற்றிப் போக முடியும், ஆனால் திரும்பி வர முடியாது. —போலந்து

உனக்காகப் பொய் சொல்லுபவன், உனக்கு எதிராகவும் சொல்லுவான். —அமெரிக்கா

அநேகமாக என்று சொன்னால் ஒரு பொய் குறைகின்றது. —அமெரிக்கா

நொண்டியைவிடப் பொய்யனைச் சீக்கிரம் பிடித்துவிடலாம். —இத்தாலி

பொய்யோடு சிறிது மெய் சேர்ந்துவிட்டால் நம்மை நம்பும்படி செய்கின்றது. —இத்தாலி

பொய் எப்பொழுதும் ஆயுதபாணியாயிருப்பினும், தோல்வி அதற்குத்தான். —ஸ்பெயின்

பொய்யும் ஒரு பெரிய இடத்துப் பெண். —ஸ்பெயின்

என்னிடம் எப்பொழுதும் பொய் சொல்லுபவன் என்னை ஒரு போதும் ஏமாற்றுவதில்லை. —ஸெக்

உண்மையை அறிய ஒரு பொய்யைச் சொல்லு. —ஸெக்

பொய்களைக் கற்பனை செய்பவன் விளங்கமாட்டான். —குர்ஆன்

பொய் சொல்லும் உதடுகள் இறைவனுக்கு வெறுப்பானவை. —பழைய ஏற்பாடு

கோழை கஷ்டத்திலிருந்து தப்புவதற்கு வழி பொய். —இங்கிலாந்து

முரட்டுத்தனமாய்ப் பேசுதல் முறையாகப் பொய் சொல்வதை விட மேலானது. —இங்கிலாந்து

பொய்க்கு வற்றாத ஊற்று இருக்கிறது. —இங்கிலாந்து

பாதி உண்மை பெரிய பொய்யாகும். —இங்கிலாந்து

ஆடவர்கள் பொய் சொல்லவும், பெண்கள் அவைகளை நம்பவும் பிறந்தவர்கள். —இங்கிலாந்து

பாவத்திற்கு பல கருவிகள் உண்டு, ஆனால் பொய் எல்லாக் கருவிகளுக்கும் ஏற்ற பிடி. —ஹோம்ஸ்

பொய்யைத் திரும்பத் திரும்பச் சொன்னால், அது பெரிய உருவாகிவிடும். —லத்தீன்

ஒரு பொய்யை மிதித்துக்கொண்டு அடுத்த பொய் வரும்.
—லத்தீன்

நொண்டி ஓடியதைக் குருடன் கண்டதாக ஊமையன் சொல்லச் செவிடன் கேட்டான். —யூதர்

## நேர்மை

'இல்லை' என்று (துணிந்து) சொன்னால், எழுபது கஷ்டங்களைத் தாண்டலாம். —இந்தியா

உண்மையை (ஒளிவில்லாமல்) பேசுவோனுக்கு ஒரு கால் குதிரைமீது இருக்க வேண்டும். —இந்தியா

நினைப்பதற்குக் கூச்சப்படாத விஷயங்களைப் பேசுவதற்கும் கூச்சப்பட வேண்டாம். —மான்டெயின்

உன் சிந்தனைகளை மறக்காதே, வெளிப்படையாகப் பேசு.
—ஹோமர்

என் குறைகளை என்னிடமே சொல்பவனை நான் வெறுக்கிறேன்.
—சாஸர்

வஞ்சனையில்லாமல் நேர்மையுடன் இருந்தால், நீ எந்தக் கடவுளை வணங்கி மன்னிப்புக் கோரவேண்டும்? —சீனு

எருமைக்குத் கயிறு வேண்டும், மனிதனுக்கு அவன் சொல்லே போதும். —மலாய்

## வாக்குறுதி

வாக்களித்த பொருள்கள் செலுத்த வேண்டிய கடன்கள்.ஸ்
—ஃபிரான்

வாக்குறுதிகள், முழுமதிகள் போன்றவை; உடனே நிறைவேற்று விட்டால், அவை நாளுக்குநாள் தேய்ந்துவிடும்.
—ஜெர்மனி

வாய் கொடுத்த வாக்குறுதியைக் கைகள் விரைவில் மறந்து விடுகின்றன. —ரஷ்யா

வாக்குறுதி ஒரு கடன். —ஆப்பிரிக்கா

# அடக்கம்

தானே தன்னை உயர்வாகப் பேசிக்கொள்பவன் தாழ்த்தப் படுவான்; தன்னைப் பணிவாக்கிக் கொள்பவன் உயர்த்தப் படுவான். —புதிய ஏற்பாடு

எவனும் உன்னை வலது கன்னத்தில் அறைந்தால், இடது கன்னத்தையும் அவனுக்குத் திருப்பிக்காட்டு. —புதிய ஏற்பாடு

அதிகமாய்க் காய்த்திருக்கும் கிளைகளே மிகவும் தாழ்ந்திருக்கும். —இங்கிலாந்து

அடக்கமான இதயம் அனைவருடைய அன்பையும் பெறும். —இங்கிலாந்து

உன்னை ஆட்டுக்குட்டியாக ஆக்கிக்கொண்டால், ஓநாய் உன்னைத் தின்றுவிடும். —ஃபிரான்ஸ்

அதிகப் பணிவு செருக்காகும். —ஜெர்மனி

செருக்கைவிடப் பணிவுக்கு லாபம் அதிகம். —லத்தீன்

உன்னிலும் மேலானவர்களுக்கு வழிவிடு. —லத்தீன்

முப்பது பற்களுக்கு நடுவில் ஒற்றை நாக்கு சுகமாயிருக்கிறது. —இலங்கை

நிலைப்படி தணிவாயிருந்தால், தலையைக் குனி. —சீனு

உன்னைப் பற்றி நீயே உயர்வாகவோ, குறைவாகவோ பேச வேண்டாம்; உயர்வாய்ப் பேசினுல், மக்கள் உன்னை நம்பமாட்டார்கள்; தாழ்வாய்ப் பேனுல், நீ சொல்வதை விட அதிகத் தாழ்வாக எண்ணுவார்கள். —கீழ் நாடுகள்

சிப்பி அடங்கிக் கிடந்த பின்னரே, அதில் முத்துக்கள் நிறைந்தன. —பாரசீகம்

நீ பின்னுல் இரு, முன்னுல் கொண்டுவந்து நிறுத்தப்படுவாய்; நீ வெளியே இரு, உள்ளே அழைத்துச் செல்லப்படுவாய். —டாவோ

பெஞ்சியின்மேல் அமர முடிந்தவர்கள் அதனடியிலும் அமரத் தெரியவேண்டும். —ஜெர்மனி

உடைந்தவாள் உறையிலேயே கிடக்கட்டும். —ஜெர்மனி

மணி ஓசை பெரிதாய்க் கேட்பதன் காரணம் மணி காலியாயிருப்பது. —போலந்து

தூக்கி யெறியும் குதிரையைவிட, நம்மைச் சுமந்து செல்லும் கோவேறு கழுதை மேலானது. —அயர்லந்து

உன்னால் முடிந்தது செய்யாதே; உன்னிடம் இருப்பது அனைத்தையும் செலவிடாதே; கேட்பது அனைத்தையும் நம்பாதே; உனக்குத் தெரிந்தது அனைத்தையும் சொல்லாதே. —அயர்லந்து

சாந்தமான குட்டி இரண்டு ஆடுகளிடம் பால் குடிக்கும். —பல்கேரியா

உயர்ந்த களிம்புகள் சிறு டப்பிகளில் இருக்கும். —அமெரிக்கா

ஓநாய் கடித்தாலும் பரவாயில்லை. ஆடு உன்னைக் கடிக்காமலிருந்தால் போதும். —டென்மார்க்

நீ ஆடுபோல் அடங்கிவிட்டால், ஓநாய் தயாராகயிருக்கும். —ரஷ்யா

## பணிவு

பெருமைக்குச் சுருக்கு வழி பணிவு. —இங்கிலாந்து

ஆட்டிக்குட்டி முழங்கால் டணிந்தே பால் குடிக்கின்றது. —ஜப்பான்

பணிவது என்று தீர்மானித்தால், நன்றாகக் குனிந்து வணங்கு. —சீனா

தலைக்கு அணி அறிவு, பாதகங்களுக்கு அணி அடக்கம். —யூதர்

அரசர்களும் நிலையடியில் குனிவார்கள். —ஸெக்

பணிந்தும் வெற்றி கொள்ளலாகும். —இத்தாலி

தன்னைத்தானே உயர்த்திக் கொள்பவன் தாழ்த்தப்படுவான். தன்னைத்தானே தாழ்த்திக் கொள்பவன் உயர்த்தப்படுவான். —புதிய ஏற்பாடு

பணிவுள்ள இதயம் எல்லோருடைய அன்பையும் பெறுகின்றது. —இங்கிலாந்து

அதிகப் பணிவு அகப்பாவமாகும். —ஜெர்மனி

செருக்கைவிடப் பணிவு அதிக ஆதாயமடைகின்றது. —லத்தீன்

உன்னிலும் மேலாயிருப்பவர்களுக்கு இடம்விடு. —லத்தீன்

நீ உன்னை ஆட்டுக்குட்டியாகச் செய்துகொண்டால், ஓநாய் உன்னை விழுங்கிவிடும். —ஃபிரான்ஸ்

## மரியாதை

மரியாதையைப் போல் மலிவான பொருள் வேறில்லை. —ஸ்பெயின்

மரியாதை செலுத்தித் தீமையடைந்தவர் இல்லை. —இத்தாலி

முடவர் முன்னால் நொண்டி நடக்காதே. —ஃபிரான்ஸ்

மரியாதையுள்ளவன் மரியாதை யற்றவர்களிட மிருந்தே மரியாதையைக் கற்கிறான். —துருக்கி

நல்லவரோ, தீயவரோ, மரியாதையுடன் சென்றால், கதவுகள் திறக்கப்படுகின்றன. —இங்கிலாந்து

எனக்கு ஒரு மரியாதை செய்தால், நான் பதிலுக்குப் பத்துச் செய்வேன். —சீனா

கழுதையின் வாலையும் மனிதன் முத்தமிடுகின்றனர் என்றால், காரியமாகத்தான். —பாரசீகம்

மரியாதை காட்டினால் பூனைக்கும் மகிழ்ச்சிதான். —ஸெக்

மரிதையாய்க் கேட்டால், கோட்டைகளும் உனக்கு வழி விடும். —ஸெக்

சட்டைப்பை காலியாயிருந்தாலும், தொப்பியை நிமிர்த்தி வைத்துக்கொள். —ஸ்பெயின்

தொப்பியை உடனே தூக்கவும், பையை மெதுவாகத் தூக்கவும். —ஸ்காட்லந்து

மரியாதையில் பெரும் பகுதி வழக்கத்தால் வருவது. —வேல்ஸ்

நரைத்த தலைக்கு மரியாதை செய்யவேண்டும்; வழுக்கைத் தலைக்கும் ஒரு வணக்கம் உரியது. —எஸ்டோனியா

# அவமதிப்பு

கொலையை மன்னிக்கலாம், அவமரியாதையை மன்னிக்க முடியாது. —சீனு

ஏழையென்று உறவினனை அவமதிக்க வேண்டாம், புண்ணைச் சிறியதென்று கருதவும் வேண்டாம். —ஃபின்லந்து

# செருக்கு

செருக்கு மூன்று திரைகளுக்கு அப்பால் அமர்ந்திருக்கும். —இந்தியா

கோழி கூவாவிட்டால், பொழுது விடியாதோ? —இந்தியா

ஏழைக்குச் செல்வம் சேர்ந்து விட்டால், உலகம் அவனுக்குத் துரும்புதான். —இந்தியா

காலிப் பீப்பாய்களே அதிக ஓசை யுண்டாக்கும். —இங்கிலாந்து

செருக்குடையவனும் பொய்யனும் ஒன்று போலிருப்பர். —இங்கிலாந்து

ஈயை அவன் யானையாக மாற்றுவான். —இங்கிலாந்து

தன் அறிவைப் பற்றிப் பெருமை பேசுபவன் தன் அறியாமையை விளம்பரம் செய்கிறான். —இங்கிலாந்து

செருக்கு அற்ப மனிதருக்கு ஆண்டவன் அளித்த பரிசு. —( ” )

செருக்கு மனிதனை ஊதவைக்கும், மேலே உயர்த்தாது. —( ” )

கர்வமுள்ளவன் தன் காசுகளெல்லாம் வெள்ளி நாணயங்கள் என்று எண்ணுகிறான். —இங்கிலாந்து

ஐந்து காசு வைத்திருப்பவனுக்குப் பத்துக்காசு படாடோபம். —இலங்கை

பிச்சைக்காரன் பிச்சையெடுத்ததைத் தான் காக்கமுடியாதாம்! —சீனு

மற்றைப் பொருள்கள் எல்லாம் மென்மையடைந்தால் ஒடிந்து விடும்; ஆனால் மனிதன் மட்டும், அதிக வலிமையடைந்தால், ஒடிகிறான். —குர்திஸ்தானம்

பிச்சைக்காரன் பணக்காரனானால் அவன் பெருமிதத்திற்கு அளவே யிராது. —பிரான்ஸ்

செருக்குடைய இருவர் ஒரே சேணத்தில் அமரமுடியாது. —( ” )

பணமில்லாதவனை ஒருவருக்கும் தெரியாது, பணமுள்ளவனுக்குத் தன்னையே தெரியாது. —ஜெர்மனி

உயரேயே பார்த்துக் கொண்டிருப்பவன் தரையிலிருந்து ஒரு காசுகூடப் பொறுக்க முடியாது. —ஜெர்மனி

பிச்சைக்காரன் குதிரைமேல் ஏறிவிட்டால், சயித்தான் கூட அவனை எட்டிப்பிடிக்க முடியாது. —ஸெக்

அழகின் சகோதரி கர்வம், மகள் ஆசை. —ஸெக்

ஓசைப்படும் இலாடத்திற்கு ஓர் ஆணி தேவை. [தம்மிடம் இல்லாத குணத்தைப்பற்றி மனிதர் பெருமையாய்ப் பேசுவர்.] —ஸ்பெயின்

அதிகப் பணிவு அரை அகம்பாவம். —யூதர்

வழுக்கைத் தலைக்குத் தங்கச் சீப்பு. —ஆர்மீனியா

மனிதரில் எவரையும் ஒதுக்கித் தள்ளாதே. —டாவோ

பூட்ஸ் அணிந்தவனுக்குச் செருப்பு அணிந்தவனைக் கண்டால் கண் தெரியாது. —இங்கிலாந்து

அகம்பாவம் தன் எஜமானனைக் கீழே ஒரு முறையாவது தள்ளாமல் விடாது. —ஸ்காட்லந்து

விருந்தில் பாதி செருக்கு. —ஸ்காட்லந்து

கட்டை மீது ஒரு நகையைப் போட்டால் அதுவும் விறைப்பாக நிற்கும். —எஸ்டோனியா

செருக்கைப் பற்றி அதிகச் செருக்கோடு நிந்திப்பவர்கள் இருக்கிறார்கள். —இத்தாலி

செருக்கினால், 'இல்லை' என்றும், பலவீனத்தால் 'சரி' என்றும் ஒருபோதும் சொல்லாதே. —ஸ்பெயின்

வெள்ளாட்டுக்கு வால் மேலும் நீளமா யிருந்தால், அதைக் கொண்டு அது நட்சத்திரங்களையே தட்டிவிடும். —ஸெக்

ஏழைகளின் செருக்கு நீடித்திருப்பதில்லை. —டென்மார்க்

செருக்கினால் பசி, தாகம், குளிர் ஆகியவற்றைவிட அதிக நஷ்டமுண்டாகும். —இங்கிலாந்து

செருக்கு முன்னால் செல்லும், அவமானம் பின்னால் செல்லும்.
—இங்கிலாந்து

அகம்பாவத்தினாலும் ஒருவர் அடக்கமா யிருக்கக்கூடும்.
—மாண்டெயின்

செருக்கும் தற்பெருமையும் மனிதனின் ஆதிப் பாவம்.
—ஃபிரான்ஸ்

மயிலே, உன் கால்களைப் பார்த்துக் கொள். —ஜெர்மனி

ஒருவருடைய குற்றங்களை மறைப்பது செருக்கு. —யூதர்

குதிரை மேல் இருப்பவனுக்குத் தன் தந்தையையே தெரியாமற் போகும். —ரஷ்யா

நேற்றுத்தான் முட்டையிலிருந்து வெளிவந்தது; இன்று அது முட்டையைப் பழிக்கிறது. —துருக்கி

## தற்புகழ்ச்சி

தற்புகழ்ச்சியின் வாடையைத் தாங்க முடியாது.
—எஸ்டோனியா

வீட்டில் எக்காளம் ஊதினால், செவிகளுக்கு வேதனை. [தற்பெருமை தவறாகும்.] —எஸ்டோனியா

## நாணம்

கேட்கும்பொழுதே சந்தேகப்பட்டால், இல்லை யென்றே பதில் வரும். —போலந்து

வெட்கம் நல்லொழுக்கத்தின் சின்னம். —ஹங்கேரி

உலகத்தின் முன்பு வெட்கமில்லாதவன் கடவுள் முன்பும் அஞ்ச மாட்டான். —சுவீடன்

கூச்சப்பட்டுக் கொண்டே யிருப்பவன் உலகை அனுபவிக்க முடியாது. —ஆப்பிரிக்கா

## வழக்கம்

ஒரு வழக்கம் அழிவதினும் ஒரு கிராமமே அழிவது மேல்.
—அல்பேனியா

வழக்கம் இரண்டாவது சட்டம். —இத்தாலி

வழக்கம் சட்டத்தைவிட வன்மையுள்ளது. —இத்தாலி

உணவிலும் உடையிலும் விதிகளின்படி நட. —சீனு

வழக்கம் ஒன்றிருந்தால், அதை மாற்ற முயலாதே; வழக்கமே இல்லாவிட்டால், புதிதாக ஒன்றைத் திணிக்கவேண்டாம்.
—சீனு

## பழக்கம்

ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா? —தமிழ்நாடு

குதிரையைப் பார்த்தவுடன் பிரயாணி நொண்டியாகி விடுகிருன்.
—இந்தியா

தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும். —தமிழ்நாடு

தேசம் தோறும் ஆசாரம் வேறு. —தமிழ்நாடு

பண்டத்தையும் பழக்கத்தையும் உடைக்க வேண்டும்.
—பிரான்ஸ்

ஒரு முறை செய்தால், பின்பு பழக்கமாகும். —இங்கிலாந்து

பழக்கங்கள் முதலில் சிலந்தி வலைபோல் (மென்மையாக) இருக்கின்றன, பிறகு இரும்புக் கம்பிகளாகி விடுகின்றன.
—இங்கிலாந்து

பழைய வண்டிக்காரன் சவுக்கின் சுண்டுதலையே கேட்க விரும்புகிருன்.
—இங்கிலாந்து

சிந்தனையற்ற கூட்டத்தைப் பழக்கமே ஆள்கின்றது.
—வோர்ட்ஸ்வொர்த்

பழக்கமே நம் இரண்டாவது இயற்கையாக இருக்கிறது.
—மாண்டெயின்

மனிதர்களின் இயற்கை ஒரே மாதிரித்தான்; அவர்களுடைய பழக்கங்களே அவர்களை வெகுதூரம் பிரித்து விடுகின்றன.
—சீனு

மனிதர் பழக்கங்களாலான ஒரு பிராணி. —ஜெர்மனி

பழக்கம் அற்பமானதன்று. —கிரீஸ்

ஆணியை ஆணியால் அகற்றுவது போல், பழக்கத்தைப் பழக்கத்தால் நீக்க வேண்டும்.
—லத்தீன்

பழக்கமே பின்னுல் குணமாக அமையும். —லத்தீன்

பழக்கமில்லாமல் பல் துலக்கவும் முடியாது. —இலங்கை

தவிடு திருடிய கை தனத்தையும் திருடும். —இந்தியா

நாற்றம் பிடித்தவர்களுக்குத் தங்கள் சொந்த வாடை தெரியாது.
—ஜப்பான்

கோடரியால் தலையில் அடிபட்டவனுக்குப் பின்னுல் தண்டாயுதத்தால் அடிபடுவதில் மகிழ்ச்சி.
—சீனு

சிறு வயதில் ஊசி திருடிப் பழகியவனே வயதான பின் பணத்தையும் திருடுவான்.
—சீனு

பழைய கிண்ணத்தில் பால்வாடை இருந்து கொண்டேயிருக்கும்.
—ஆப்பிரிக்கா

பழக்கம் என்பது (ஐம்புலன்களுக்கு மேல்) ஆறுவது புலனுகும்; அது மற்றைப் புலன்களையும் அடக்கி மேலெழுந்துவிடும்.
—அரேபியா

முட்டை திருடுபவனே பின்னுல் ஒட்டகம் திருடுவான்.
—பாரசீகம்

வெங்காயம் விற்பவனுக்கு அதன் வாடை தெரியாது.
—ஜெர்மனி

சிறு நகரங்களில் மூக்கைப் பார்த்தே ஆளைச் சொல்லி விடுவர்.
—ஜெர்மனி

தாடியுள்ளவனிடம் சீப்பும் இருக்கும். —அல்பேனியா

கதையால் அடிபட்ட பிறகு, தடிக்கம்பு உறைக்காது.
—பல்கேரியா

பழக்கம் இரும்புச் சட்டை அணிந்திருக்கும். —ஸெக்

இளமையில் ஏற்பட்ட தவறான பழக்கங்களை முதுமையிலே விட முடியாமல் தவிப்பது வழக்கம். —பின்லந்து

கெட்ட பழக்கம் முதலில் யாத்திரிகனைப்போல் வரும், பிறகு விருந்தாளியாகி, முடிவில் அதுவே யஜமானனாகி விடும். —அமெரிக்கா

பழைய பழக்கங்களுக்கு வேர் நீளம். —அமெரிக்கா

ஓடிப் பழக்கமுள்ள கால் ஒடுங்காது. —அமெரிக்கா

பழக்கம் என்ற அங்கியை நாம் சாகும்வரை அணிகிறோம். —ரஷ்யா

கெட்ட பழக்கத்தின் காலை ஒடி. —ஸ்பெயின்

ஒரு முறை ஒரு முட்டையை எடுத்தவன், பின்பு திருடுவதை நிறுத்த முடியாது. —சுவீடன்

நல்லவன் சத்திரத்தில் தங்கினால் கெடுவதுமில்லை, தீயவன் ஆலயத்திற்குப் போனால் திருந்துவதுமில்லை. —போலந்து

ஒரு பலம் பழக்கம் ஒரு வீசை அறிவுக்குச் சமமாகும். —இங்கிலாந்து

இயற்கையைப் போல் பத்து மடங்கு பலம் கொண்டது பழக்கம். —இங்கிலாந்து

தீய பழக்கங்களை மாற்றுவதைவிட, அவைகளை முதலிலேயே தடுத்தல் எளிது. —இங்கிலாந்து

பழக்கத்தின் ஆற்றல் அபாரம். —லத்தீன்

பழக்கத்தினால் எத்தனை அநீதியான விஷயங்கள் செய்யப் படுகின்றன. —டெரன்ஸ்

## திறமை

ஒவ்வொருவரும் ஏதாவது ஒன்றில் அதிகத் திறமை பெற்றிருப்பர், மற்றொருவர் அதிலே தோல்வி யுறுவர். —லத்தீன்

முயற்சி செய்கிறவரையில் எவருக்கும் தம் திறமை தெரியாது. —லத்தீன்

அவர்களால் (வேலை) முடியும், ஏனெனில் தங்களால் முடியுமென்று அவர்கள் கருதுகிறார்கள். —வர்கில்

நாம் எல்லோரும் எல்லாக் காரியங்களையும் செய்துவிட முடியாது. —வர்கில்

முற்றும் நனைந்தவன் மழைக்கு அஞ்சுவானேன்? —இந்தியா

திறமையுள்ளவன் பின்னால் திறமையுள்ளவர்கள் நிற்பார்கள். —சீனா

நெருப்பில் தப்பி வந்தவன் வெயிலில் வாடமாட்டான். —இந்தியா

விளையாடுவதற்குத் திறமை வேண்டாம், அதை நிறுத்துவதற்குத் திறமை வேண்டும். —போலந்து

ஒருவன் தலைக்குமேல் உயரமாகத் துள்ள முடியாது. —ஃபின்லந்து

முட்டை கல்லை உடைக்காது. —அரேபியா

அசுரனைப் போன்ற வல்லமை பெற்றிருப்பது நல்லதுதான்; ஆனால் அதை அசுரனைப் போலவே உபயோகித்தல் கொடுமையாகும். —ஷேக்ஸ்பியர்

ஆராய்ச்சி அறிவில்லாத உடல் வலிமை தன் கனத்தாலேயே தாழ்வுற்று விடும். —லத்தீன்

பெரும் பலமுடையவன் அதை மெதுவாக உபயோகிக்க வேண்டும். —லத்தீன்

வல்லமை மிகுந்தவனே வெல்கிறான். —லத்தீன்

## வலிமை

வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம். —தமிழ்நாடு

வல்லமையுள்ளவன் முரட்டுத்தனத்தை அடக்கிக் கொள்வது கடினம். —ஜப்பான்

வல்லவன் மணலிலும் பம்பரம் விடுவான். —ஜப்பான்

அடிக்கிறவனுக்கு ஆயுதம் எளிதில் கிடைக்கும். —ஃபின்லந்து

மெலிந்த குதிரை மீதுதான் ஈக்கள் இருக்கும். —செர்பியர்

யானையின் உதையை யானைதான் தாங்க முடியும். —ஆப்பிரிக்கா

## மெலிவு

மெலிந்தவனுக்குத்தான் முதலில் குளிர் விறைக்கும். —சீனு

ஆடுகின்ற சுவரை ஒவ்வொருவனும் தள்ளிவிட்டுப் போவான். —சீனு

கீழே விழுந்து விட்டவனை எல்லோரும் வெறுப்பர். —சயாம்

ஒரு மனிதன் கீழே விழுந்தால், உலகமே அவன் மேல் ஓடத் தொடங்கும். —அமெரிக்கா

ஒருவன் பலவீனமாயிருந்தால் அவனை ஆண்டு அடக்க ஒருவன் வந்தே தீருவான். —லத்தீன்

பலவீனர்களுக்குள்ளே, தன் பலவீனத்தை உணர்ந்திருப்பவனே பலசாலி. —சுவீடன்

மெலிந்தவைகள் ஒன்றுசேர்ந்தால் வலிமைதான். —இங்கிலாந்து

ஒவ்வொரு மனிதனுக்கும் பலவீனமான ஒரு பகுதி இருக்கும். —கிரீஸ்

நியாயமான விஷயத்தில் மெலிந்தவரும் பலவான்களை வென்று விடுகின்றனர். —கிரீஸ்

## மௌனம்

அறிவுக்கு வேலி மௌனம். —யூதர்

மௌனம் என்ற மரத்தில் சாந்தி என்ற கனி தொங்குகின்றது. —அரேபியா

மௌனம் என்பது சிந்தனையின் கூடு. —குதிர்ஸ்தானம்

மூடிய வாயின் இசை இனியது. —அயர்லந்து

மௌனம் வேறு, மறைப்பது வேறு. —இத்தாலி

பதில் சொல்லாமலிருப்பதும் ஒரு பதில்தான். —ஸெக்

பேச்சினுல் பின்னர் வருந்த நேருகின்றது, மௌனத்தினுல் ஒருபோதும் அப்படி நேருவதில்லை. —டென்மார்க்

மௌனமாயிருந்து மூடனென்று கருதப்படுவது, வாய்விட்டுப் பேசிச் சந்தேகமில்லாமல் அப்படித்தான் என்று காட்டிக் கொள்வதைவிட மேலாகும். —லிங்கன்

எப்பொழுது நாவை அடக்கிக் கொள்ள வேண்டுமென்பதை அறிந்தவன் மூடனல்லன். —இங்கிலாந்து

பேசுவதற்கு ஒரு நேரமுண்டு, மௌனமா யிருப்பதற்கும் ஒரு நேரமுண்டு. —காக்ஸ்டன்

சொல்வதற்கு உன்னிடம் விஷயமில்லாத பொழுது, எதுவும் பேசாதே. —இங்கிலாந்து

உன்னைப் பற்றி மக்கள்,பெருமையாக எண்ணவேண்டு மென்று விரும்புகிறாயா? அப்படியானால், பேசாமலிரு. —ஃபிரான்ஸ்

மனிதர்கள் பேசுவதற்குத் திறமையில்லாமலும், பேசாமலிருப் பதற்கு நிதானமில்லாமலும் இருக்கும்பொழுது, பரிதாப மாயிருக்கிறது. —ஃபிரான்ஸ்

பேச்சு வெள்ளி, மௌனம் தங்கம், —ஃபிரான்ஸ்

மௌனத்திற்கு நிகரான ஞானமில்லை. —கிரீஸ்

மௌனம்தான் மனிதன் கற்கும் முக்கியமான பாடம். —கிரீஸ்

அமைதியான நாயிடத்தும், அசைவில்லாத நீரிடத்தும் எச்சரிக்கையா யிருக்கவேண்டும். —லத்தீன்

நீ அமைதியோடு வாழ விரும்பினால் கேள், பார், மௌன மாயிரு. —லத்தீன்

மூடன் வாயை மூடிக்கொண்டிருந்தால், ஞானியாகக் கருதப் படுவான். —லத்தீன்

## பேச்சு

சொற்களை எண்ணக் கூடாது, எடைபோட்டுப் பார்க்க வேண்டும். —போலந்து

மனிதரில் நாவிதனும், பறவைகளில் காகமும் வாயாடிகள். —இந்தியா

வழியைக் கேட்பதில் நஷ்டம் ஒன்றுமில்லை. —சீனா

வாயில் இருக்கிறது வழி. —தமிழ்நாடு

ஒருவன் உள்ளத்தை அறியவேண்டுமானுல், அவன் சொற்களைக் கவனி. —சீனு

அரசர்களும் அழகிகளும் எவ்வளவு குறைவாகப் பேசுகிருர்களோ அவ்வளவுக்கு விஷயங்கள் அதிகமாயிருக்கும். —சீனு

நாக்கின் அடியில் மனிதர்கள் நசுக்கிக் கொல்லப்படுகிருர்கள். —சீனு

கவலைகள் குறைந்தால், கனவுகள் குறையும்; கனவுகள் குறைந்தால், குற்றங்கள் குறையும். —சீனு

நான் (செவி கொடுத்துக்) கேட்டால், எனக்கு நன்மை; நான் பேசினுல், பிறருக்குத்தான் நன்மை. —அரேபியா

இதயம் இரகசியங்களின் இருப்பிடம், உதடுகள் பூட்டுக்கள், நாவு அவைகளின் திறவுகோல். —அரேபியா

நீண்டகாலச் சிறைத் தண்டனைக்கு உரியது நாவுதான். —அரேபியா

நீ வாயைத் திறக்கும் பொழுது, கண்களும் விழிப்பாயிருக்கட்டும். —ஆர்மீனியா

மேடை ஏறியவனெல்லாம் பிரசங்கியாகிவிட மாட்டான். —கீழ் நாடுகள்

ஆயிரம் சொற்களைக் கேட்டுக்கொள், நீயும் ஒரு வார்த்தை பேசு. —கீழ் நாடுகள்

பேச்சு சிம்மத்தைபோல் வீரமா யிருக்கவேண்டும், முயலைப் போல் மென்மையா யிருக்கவேண்டும், நாகத்தைப் போல் கம்பீரமா யிருக்கவேண்டும், அம்பைப்போல் கூரியதா யிருக்கவேண்டும், தராசு முனைபோல் நடுநிலையில் இருக்க வேண்டும். —கீழ்நாடுகள்

விஷயமே இல்லாமல் ஒருவன் வெகு நேரம் பேசிக் கொண்டிருக்க முடியும். —ஜெர்மனி

பேசத் தெரிந்தவனுக்கு எல்லா, இடங்களும் சொந்த இடம் போன்றவை. —ஜெர்மனி

உன்னை நான் தெரிந்து கொள்ளவேண்டும்—கொஞ்சம் பேசு! —ஜெர்மனி

கல்லையும் சொல்லையும் விட்டாற் போச்சு. —இங்கிலாந்து

தலை உயிரோடிருக்கும் பொழுது பாதங்களிடம் பேச வேண்டாம். —அயர்லந்து

புறாவைப்போல் வாயிலிருந்து, பறந்து பறந்து சென்ற ஒரு வார்த்தையை நாலு குதிரைகள் சேர்ந்தாலும் இழுத்து வர முடியாது. —செக்

உன் பேச்சுத் திறமையைக் காட்டி நண்பனை இழக்காதே. —இத்தாலி

நாவாகிய பேனாவை இதயத்தின் மையில் தோய்த்து எழுத வேண்டும். —லத்தீன்

புகழத் தெரியாதவனுக்குப் பேசவே தெரியாது. —லத்தீன்

பேச்சில் அதிகச் சுருக்கமா யிருந்தால் நீ சொல்வதைப் புரிந்து கொள்ளல் அரிது, அதிக விரிவாயிருந்தால் தொந்தரவாக எண்ணப்படும். —ரஷ்யா

பணப்பைக்குத் தக்கபடி வாயை அடக்கிக்கொள். —ஸ்பெயின்

இதயம் சொல்லாததை யெல்லாம் வாய் அளந்துவிடும். —அரேபியா

பேசுவதற்கு ஆளிருந்தால், கேட்பதற்கு ஆள் வருவான். —ஃபின்லந்து

பேசிய வார்த்தை கேட்டவர்களுக்கே சொந்தமாகிவிடும். —அமெரிக்கா

சரியான சந்தர்ப்பத்தில் சொல்லும் வார்த்தை, வெள்ளித் தட்டிலே வைத்த தங்கக் கனி போன்றது. —செர்பியா

பேச்சுக்கு மட்டும் வரி கிடையாது. —அயர்லந்து

இதயத்தின் நிறைவிலிருந்து வாய் பேசுகின்றது. —புதிய ஏற்பாடு

முதலில் சிந்தனை செய், பிறகு பேசு. —இங்கிலாந்து

உன் நண்பனைப்பற்றிப் பெருமையாகப் பேசு, உன் பகைவனைப் பற்றி ஒன்றும் சொல்லாதே. —இங்கிலாந்து

பேச்சின் உண்மையான உபயோகம் நம் சிந்தனைகளை மறைத்துக் கொள்வது. —இங்கிலாந்து

நீ சொல்வதை நான் மறுக்கிறேன், ஆனால், அதைச் சொல்வதற்கு உனக்குள்ள உரிமையை நான் உயிரைக் கொடுத்தும் காப்பேன். —வால்டேர்

அதிகப் பேச்சும் பொய்யும் நெருங்கிய உறவினர்தாம். —ஜெர்மனி

செல்வத்தைவிடப் பேச்சைப் பாதுகாத்தல் நலம். —கிரீஸ்

பேசுபவன் விதைக்கிறான், கேட்டவன் அறுவடை செய்து கொள்கிறான். —ரஷ்யா

பேச்சினால் சோறு வேகாது. —சீனா

பேச்சு வெறும் பேச்சுத்தான்; பணம்தான் நிலம் வாங்கும். —இங்கிலாந்து

சிந்தனை குறையக் குறைய மனிதர்க்குப் பேச்சு அதிகமாகும். —இந்தியா

சிந்திக்காமல் பேசுதல் குறியில்லாமல் அம்பு விடுதலாகும். —இந்தியா

மனிதர்கள் பேசட்டும்; நாய்கள் குரைக்கட்டும். —ஜெர்மனி

அதிகப் பேச்சு, அதிக மடமை. —யூதர்

அதிகம் பேசி அதிகத் தவறு செய். —ஸ்பெயின்

அதிகப் பேச்சாளர் இருவர் நெடுந்தூரம் சேர்ந்து போக முடியாது. —ஸ்பெயின்

## குணம்

பன்றியைக் குளிப்பாட்டி விட்டால், அது சாக்கடைக்கே திரும்பும். —ஸெக்

ஓநாயை அழைத்து எவ்வளவு உபதேசம் செய்தாலும், அது 'காட்டுக்கு வழி எது?' என்றுதான் கேட்கும் —ஸெக்

குழந்தை, குடிகாரன், மூடன் மூவரும் உண்மையைச் சொல்லி விடுவர். —ஹங்கேரி

விளையாட்டுக்களிலும், பிரயாணங்களிலும், மனிதர்களுடைய தரம் தெரிந்துவிடும். —ரஷ்யா

வாள் வளையாது, தங்கம் துருப்பிடிக்காது. —ரஷ்யா

ஒருவனுக்கு ரொட்டி பிடிக்காது, குழந்தையின் குரலும் பிடிக்காது—அவனிடமிருந்து இரண்டு எட்டாவது விலகி நிற்கவும். —ஸ்வீடன்

குணமிருந்தால் விகாரமும் அழகாகும்; குணமில்லாவிட்டால், அழகும் விகாரமாகும். —ஆப்பிரிக்கா

## கடமை

நீ கோழியானால் முட்டையிடு, சேவலானால் கூவு. —இந்தியா

முதலில் வீட்டில் உன் விளக்கை ஏற்று, பிறகு பள்ளி (ஆலய) விளக்கை ஏற்று. —இந்தியா

இன்பத்திற்கு முன்னால் கடமை. —இங்கிலாந்து

கடமைதான் விதியை நிர்ணயிக்கின்றது. —இங்கிலாந்து

மற்றவர்களிடம் எதை எதிர்பார்க்கிறாயோ, அதுவே கடமை. —ஆஸ்கார் ஒயில்டு

உன் முன்னால் நிற்கும் கடமையை நன்றாகச் செய். —கிரீஸ்

தூரத்திலுள்ளதை எதிர்பார்த்து, அருகிலுள்ளதை அலட்சியம் செய்ய வேண்டாம். —கிரீஸ்

செய்ய வேண்டிய கடமையைச் செய்வதில் நமக்குப் பாராட்டுக் கிடையாது. —லத்தீன்

கருத்தரித்தபின் பெற்றுத்தான் ஆகவேண்டும். —இந்தியா

குடும்பக் கடமைகளை முறையாகச் செய்தால், தொலைதூரம் போய்த் தூபதீபம் போடவேண்டுமா? —சீனா

கழுதையை விருந்துக்கு அழைத்தால், அது விறகு சுமக்க வேண்டும். —அரேபியா

எல்லோரும் வண்டியை ஓட்டினால், கோச்சுப்பெட்டியில் அமர்வது யார்? —செக்

எவன் கொன்றானோ அவன் புதைக்கிறான். —எஸ்டோனியா

ஒருவன் பிறந்த வீட்டைக் கௌரவிக்க வேண்டும். தனக்கு நிழலளித்த மரத்தையும், தான் வளர்ந்த கிராமத்தையும் போற்ற வேண்டும். —ஸ்வீடன்

கலியாணத்திற்கு அழைப்பு வரட்டும், இழவுக்கு அழையாமலே செல்ல வேண்டும். —பல்கேரியா

## உரிமை

வெள்ளத்தில் வருவது எல்லோருக்கும் உரியது. —இந்தியா

உரிமை யிருந்தால், தைரியம் வந்துவிடும். —சீனு

கோணி நிறைய உரிமை இருப்பதைவிட, ஒரு கை நிறைய வலிமை இருந்தால் போதும். —ஜெர்மனி

விதைத்தவர்களுக்கு அறுக்க உரிமையுண்டு. —ஜெர்மனி

உரிமை சட்டத்திற்கும் முந்தியது. —எஸ்டோனியா

பிறர் எழுப்பக்கூடிய இடத்தில் நீ அமரவேண்டும். —கிரீஸ்

பிறந்தால் அரசனுகப் பிறக்கவேண்டும், அல்லது மூடனுய்ப் பிறக்க வேண்டும். [எல்லையற்ற உரிமை கிடைக்கும்.] —லத்தீன்

எந்த மனிதனுக்கும் தன் உரிமைகள் அனைத்திலும் உரிமை கிடையாது. —அமெரிக்கா

கீழே நிலமுள்ளவனுக்கு அந்நிலத்திற்கு மேலே வானம்வரை சொந்தம். —லத்தீன்

சொந்த நாற்காலியில்தான் ஒருவன் சுகமாக உட்கார முடியும் —அமெரிக்கா

## கோபம்

இன்சொல் வெகுளியை மாற்றும், ஆனல், கடுஞ் சொற்கள் வெகுளியைக் கிளப்பும். —பழைய ஏற்பாடு

சூரியன் சாயுமுன் உன் கோபத்தை ஆற்றிக்கொள். —புதிய ஏற்பாடு

ஆற்றலில்லாத கோபம் அசட்டுத்தனம். —ஜெர்மனி

ஈக்குக்கூட வெகுளி உண்டு. —லத்தீன்

வெகுளியுள்ள மனிதன் வெறிபிடித்த குதிரைமேல் சவாரி செய்கிறுன். —இங்கிலாந்து

கோபமுள்ளவர்கள் சோகத்தைத் தேடவேண்டியதில்லை. —இங்கிலாந்து

பொறையுள்ளவனின் கோபம் பொல்லாதது. —இங்கிலாந்து

நாய் எறிந்தவனை விட்டுவிட்டுக் கல்லைக் கடிக்கிறது. —இங்கிலாந்து

கோபம் வந்தவுடன் நூறுவரை எண்ணு. —இங்கிலாந்து

காரணமில்லாமல் கோபம் தோன்றுவதில்லை; ஆனால் காரணம் நல்லாயிருப்பதில்லை. —பிராங்க்லின்

கோபம் என்பது தற்காலிகப் பைத்தியம். —ஹொரேஸ்

மறைத்து வைத்த கோபமே கெடுதல் செய்யும். —ஸெனீகா

கோபத்தைத் தணித்துக்கொள்ளச் சிறந்தவழி நேரத்தைக் (மௌனமாகக்) கடத்துதல். —ஸெனீகா

அற்பனுக்கு மூக்கின்மேல் கோபம். —இந்தியா

மூன்று முறை முகத்தில் அடித்தால், புத்தருக்கும் கோபம் வரும். —ஜப்பான்

கோபத்தால் போனது சிரித்தால் வராது. —ஜப்பான்

பிச்சைக்காரனுக்குக் கோபம் வந்தால், அவன் வயிறுதான் காயும். —துருக்கிஸ்தானம்

கோபத்தோடு எழுந்தால் நஷ்டத்தோடு உட்காருவாய். —துருக்கி

அதிகக் கோபமாயிருக்கையில் வியாஜ்யத்திற்குப் போகாதே. —சீனா

உணர்ச்சிமயமா யிருப்பவர்களை எங்கு வேண்டுமானாலும் தூக்கிச் செல்லலாம். —ஃபிரான்ஸ்

இருமுறை சூரியோதயத்தைக் கண்ட பின்பும் கோபத்தை நீடிக்கவிடக் கூடாது. —இங்கிலாந்து

எல்லா விஷயங்களும் உனக்குக் கோபமூட்டுகின்றன; பூனையால்கூட உன் இதயம் வெடித்து விடுகின்றது. —ஸ்காட்லந்து

பூட்டி வைத்த பூனை சிங்கமாக மாறும். —ஹாலந்து

வெகுளியை வெல்லு. —கிரீஸ்

கோபமும் பழிவாங்கும் சுபாவமும் மணந்து கொண்டால், கொடுமை என்ற குழந்தை பிறந்துவிடும். —ரஷ்யா

குளிர்ந்து கிடக்கும் கல்லை அடித்தால். அதிலிருந்து தீப் பொறிகளே துள்ளிவரும். [மிகவும் அமைதியாயிருப்ப வனும் கோப மூட்டப் பெற்றால் சீறிப் பாய்வான்.]
—யூதர்

பிச்சைக்காரனின் கோபம் அவன் தலையிலேயே முடியும்.
—ஆப்பிரிக்கா

நீ ஆடுகளை மேய்ப்பதானால், கோபத்தை விட்டுவிடு.
—ஆப்பிரிக்கா

## பொறுமை

கோதுமைப் பண்டத்தை வேண்டுபவன் மாவரைக்கும் வரை காத்திருக்க வேண்டும். —ஷேக்ஸ்பியர்

கொஞ்சம் பொறுமை யிழந்தால், பெரிய திட்டங்கள் வீணாகும்.
—சீனா

'பொறுமை!' என்ற சொல்லே வீட்டுக்கு அருமையானது.
—சீனா

கன்றைச் சுமந்தவன் நாளடைவில் எருமையையும் சுமக்க முடியும். —இங்கிலாந்து

வண்டி கிறீச்சிட்டாலும் பாரத்தைத் தாங்கும். —வேல்ஸ்

பூமி தழலாய்க் கொதித்தாலும், நாம் அதன்மீதுதான் நடக்க வேண்டியிருக்கிறது. —டென்மார்க்

தரை நன்றாயிருந்தால், சாலை நன்றாயில்லை; நாடு நன்றா யிருந்தால், ஜனங்கள் நல்லவர்களில்லை. —டென்மார்க்

ஒரு நிமிஷப் பொறுமை பத்து ஆண்டுகளுக்கு நன்மை. —கிரீஸ்

பொறுமையுள்ளவனுக்கே உலகம் சொந்தம். —இத்தாலி

அவிழ்க்கக் கூடியதை அறுக்க வேண்டாம். —போர்ச்சுகல்

கரடியை ஓடத்தில் ஏற்றிக்கொண்டவன் கரை சேரும்வரை அதைக் கொண்டு செல்ல வேண்டும். —ஸ்வீடன்

உலகில் பொறுமையோடு வாழ்வாயாக; உன்னை நேசிப்பவர் களைவிட வெறுப்பவர்கள் அதிகமாயிருக்கிறார்கள்.
—ஆப்பிரிக்கா

பொறுமைக்கு அழகான குழந்தையே பிறப்பது வழக்கம்.
—ஆப்பிரிக்கா

நம்மை நம்மிலும் மேலோர்களுடன் ஒப்பிட்டுப்பார்த்தால் அதிருப்தி; நம்மிலும் தாழ்ந்தோருடன் ஒப்பிட்டுப் பார்த்தால் திருப்தி.
—சீனு

நீ குடும்பத்தின் தலைவனுக இருக்கவேண்டுமானுல், உன்னை மூடனுகவும் செவிடனுகவும் காட்டிக்கொள்ள வேண்டும்.
—சீனு

காத்திருந்தவனுக்கு எல்லாக் கதவுகளும் திறந்திருக்கும்.
—சீனு

கையால் தட்டிவிட வேண்டியதற்குக் கத்தியை உருவ வேண்டாம்.
—எஸ்டோனியா

உயரமான இடத்தைச் சுற்றிப் போ, தாழ்ந்ததைத் தாண்டிப் போ.
—எஸ்டோனியா

பொறுமையுள்ள மனிதன் வெற்றி பெறுவான். —அரேபியா

பொறுமை கல்லையும் துளைக்கும். —அரேபியா

பொறுமைக்கு அழகான குழந்தைகளே பிறக்கும்.
—அமெரிக்கா

சிறு குற்றங்களைப் பொருட்படுத்தாதே; உன்னிடமும் பெருங் குறைகள் உண்டு.
—ஸ்காட்லந்து

பொறுமையுள்ளவனுடைய கோபத்தில் நீ எச்சரிக்கையாயிரு.
—டிரைடன்

ஒவ்வொரு தானிய மணியாகப் பொறுக்கிக் கோழி தன் வயிற்றை நிரப்பிக் கொள்கின்றது.
—இங்கிலாந்து

பொறுமையுள்ளவன் எதை விரும்பினுலும் பெறலாம்.
—இங்கிலாந்து

பொறுமையில்லாதவர்கள் எவ்வளவு வறிஞர்கள்!
—ஷேக்ஸ்பியர்

நோயுள்ள ஒரு மனிதனுக்குப் பொறுமைதான் சிறந்த மருந்து.
—இங்கிலாந்து

பொறுமை கசப்புத்தான்; ஆனுல், அதன் கனி இனிப்பானது.
—ஃபிரான்ஸ்

பொறுமை சயித்தானை விழுங்கிவிடும். —ஜெர்மனி

பொறுத்தவனுக்கே உலகம். —இத்தாலி

அடிக்கடி சோதிக்கப்பெற்ற பொறுமை கோபமாக மாறும். —லத்தீன்

பொறுமையில்லாதவனிடம் தத்துவ ஞானமும் இருப்பதில்லை. —ஸாஅதி

பொறுமை வானுலகின் திறவுகோல். —ஸாஅதி

தீமையின் வழியாகச் செல்லாமல், நீ நன்மையை அநுபவிக்க முடியாது. —யூதர்

## நாவடக்கம்

காலம் போகும் வார்த்தை நிற்கும். —தமிழ்நாடு

நாவைக் கொண்டு யானை ஏறலாம்; நாவாலேயே நம் தலையையும் இழக்கலாம். —இந்தியா

நாவுக்கு எலும்பில்லாததால், அது எதையும் பேசும். —( " )

கோபம் மூள்வதும் ஒரு சொல்லாலே, அன்பு பெருகுவதும் ஒரு சொல்லாலே. —இந்தியா

நாவால் அடிபடுவதைவிட, காலால் உதைக்கப்படுவது மேல். —ஃபிரான்ஸ்

வாயைக் காப்பவன், தன் வாழ்வைக் காத்துக் கொள்கிறான். —சுவீடன்

காலம் செய்ததையெல்லாம் வீணாக்கும், நாவு செய்ய வேண்டியதையெல்லாம் வீணாக்கும். —பெல்ஜியம்

எளிதில் இசைந்துவிடுபவன் தன் சொல்லைக் காப்பாற்றுவது அரிது. —சீனா

ஏராளமான சொற்களில் பிழையிருப்பது நிச்சயம். —சீனா

சொற்கள் இதயத்தின் குரல். —சீனா

செத்த மொழிகள் நூறு காட்டுவதைவிட, உயிருள்ள ஒரு சொல் மேல். —ஹாலந்து

ஒவ்வொரு சொல்லாகச் சேர்ந்து நூல் உருவாகின்றது. —ஃபிரான்ஸ்

மனிதர்களின் சொற்கள் செயல்களைவிட வீரமாயிருக்கும்.
—ஜெர்மனி

சொற்களாகிய கடலில் காற்று வீசும் பொழுதெல்லாம் யாத்திரை செல்லவேண்டாம்.
—கிரீஸ்

செயலால் நிறைவு பெறாத ஒவ்வொரு சொல்லும் வீண்.
—கிரீஸ்

சொல் பறவையன்று, அது வெளியே பறந்து சென்றால், நீ அதை மறுபடி பிடிக்க முடியாது.
—ரஷ்யா

பேசிய மொழியை விழுங்க முடியாது.
—ரஷ்யா

என்னிடம் வார்த்தைகளில்லை, என் குரல் என் வாளில் உள்ளது.
—ஷேக்ஸ்பியர்

## இன்சொல்

பையிலே பணம் இருக்கவேண்டும், இல்லாவிட்டால், வாயிலே இன்சொல் வேண்டும்.
—இந்தியா

கொடுப்பதற்குச் சாக்கரை இல்லையானால், வாயால் இனிப்பாகப் பேசு.
—இந்தியா

அவசியம் வந்தால் கழுதையையும் 'ஐயா' என்று அழைப்பதுண்டு.
—ஆப்கானிஸ்தானம்

நல்ல வரவேற்பே பாதி விருந்து.
—ஜெர்மனி

இனிமையாகப் பேசினால், கெட்ட சரக்கும் விற்றுப் போகும்.
—ஜெர்மனி

மனிதனின் அழகு அவன் நாவின் இன்சொல்.
—போர்னியோ

'என் சொத்து', 'என் சொந்த மனைவி' 'வீட்டுக்கு வாருங்கள்' —இவை மூன்றுமே மிக இனிய வசனங்கள்.
—ஸ்காட்லந்து

ஓர் அன்பான வார்த்தை, வசந்த காலத்துப் பகல் போல இன்பமளிக்கும்.
—ரஷ்யா

எனக்கு உணவளிப்பதைவிட, என்னை வரவேற்றால் போதும்.
—எகிப்து

மென்மையான சொற்கள் செல்வத்தைக் கொண்டு வரும்.
—ஆப்பிரிக்கா

குளிர்ச்சியான சொற்கள் நாவைச் சுடுவதில்லை. —இங்கிலாந்து

வாளால் வெட்டுவதைவிட, வார்த்தை அதிக ஆழமாய்ப் பாயும். —இங்கிலாந்து

வாயில் தேன் இருந்தால் பணம் மிச்சமாகும். —இங்கிலாந்து

நல்ல சொல் கொடுங் கோபத்தை அடக்கும். —ஜெர்மனி

வாளி நிறையவுள்ள நீரைப் பார்க்கினும், ஒரு நல்ல சொல் அதிகத் தீயை அணைக்கும். —ஸ்பெயின்

## மன்னிப்பு

மன்னிப்புத்தான் நம்மைத் தேவர்களுக்கு நிகராக்குவது.
—கிரீஸ்

பழி வாங்குவதைவிட மன்னித்தல் மேலானது. —கிரீஸ்

மன்னித்தலே அழகு வாய்ந்தது. —கிரீஸ்

மன்னிப்பது நல்லது, அதைவிட நல்லது மறந்துவிடுவது.
—பிரௌனிங்

'தந்தையே, அவர்களை மன்னித்துவிடும்; ஏனெனில், அவர்கள் தாம் செய்வதை அறியமாட்டார்கள்' —கிறிஸ்து நாதர்

ஒருவன் செய்த குற்றத்தையே மறந்துவிடுதல்தான் முழு மன்னிப்பாகும். —அரேபியா

மற்றவரை மன்னிப்பவனை ஆண்டவன் மன்னிப்பான்.
—அரேபியா

எந்த மன்னிப்பையும் ஏற்க மறுப்பவன் மக்களிலே இழிவான கயவன்; பாவத்திற்குப் பரிகாரம் தேடாதவன் எந்தக் குற்றத்தையும் மன்னிக்காதவன். —அரேபியா

மன்னிப்புள்ள இடத்தில் இறைவனே யிருக்கிறான். —சீக்கியர்

வேலங்களையும் மாத்திரைகளையும் சுவைத்து உருசி பார்க்கக் கூடாது. [அப்படியே விழுங்கிவிடவேண்டும். அதாவது அவமரியாதைகளை நினைத்துக் கொண்டிராமல், மறந்துவிட வேண்டும்.] —ஜெர்மனி

## இன்னு செய்யாமை

பிச்சைக்காரனுக்கு நீ ஒன்றும் போடவில்லையானாலும், அவன் பையைக் கிழிக்காமல் விட்டால் போதும். —அயர்லாந்து

ஒருவனுக்குத் தீங்கு செய்பவன், நூறு பேர்களை அச்சுறுத்துகிறான். —இங்கிலாந்து

இழைக்கப்பட்ட இன்னல்களை மணலில் எழுதவும், செய்த நன்மைகளைப் பளிங்கில் எழுதவும். —ஃபிரான்ஸ்

மதிப்புள்ள மனிதன் பழைய கொடுமைகளை மறந்துவிடுகிறான். —கிரீஸ்

நாம் இழைக்கும் துன்பங்களும், நமக்கு இழைக்கப்படும் துன்பங்களும், ஒரே தராசில் நிறுக்கப்படுவதில்லை. —கிரீஸ்

நீ நன்மைகளை செய்திருக்கையில், துன்பம், பதிலாக விளையுமானுல், மிகவும் வேதனையாய்த்தானிருக்கும். —லத்தீன்

நாம் ஓர் இன்னு செய்தலைவிடப் பிறர் இன்னு செய்தலை ஏற்றம் மேல். —லத்தீன்

இன்னு செய்தலையே அறியாதிருத்தல் நல்ல மனிதனுக்கு அடையாளம். —லத்தீன்

இன்னுதவைகளையே மறத்தலே அவற்றிற்குப் பரிகாரம் —( " )

## நிதானம்

முள்ளின்மேல் சீலை விழுந்தால், மெள்ளத்தான் எடுக்க வேண்டும். —தமிழ்நாடு

நீர் அதிகமாக ஊற்றினுல், மாவு அதிகம் போடவேண்டும்.. —இந்தியா

பாம்பைக் கொல்ல வேண்டியதுதான், ஆனுல் தடி ஒடியக் கூடாது. —இந்தியா

வில்லை வளை, ஆனுல் அம்பு விடாதே; அம்பால் ஆளை அடிப்பதைவிட அச்சுறுத்துவது மேல். —சீனு

மெதுவாய்ச் சென்ருலும், இலட்சியத்தை அடையலாம். —ஜெர்மனி

எல்லாவற்றையும் சீர்திருத்த விரும்புபவன் எல்லாவற்றையும் தலைகீழாகக் கவிழ்ந்து விடுவான். —ஜெர்மனி

ஒரு நல்ல விஷயத்தில் தலை கிறங்கி மகிழவும் வேண்டாம்; இரண்டு கெட்ட விஷயங்களைக் கண்டு கதிகலங்கவும் வேண்டாம். —ஃபின்லந்து

பிள்ளை பிறந்த பிறகுதான் பெயரிட வேண்டும். —ரஷ்யா

காடு முழுவதையும் வெட்ட வேண்டாம், வீட்டிற்கு விறகு இல்லாமலும் போக வேண்டாம். —ஸெர்பியா

முன்னால் பாராதவன் பின்னால் தள்ளப்படுவான். —( ” )

## இடையூறு

இடுக்கண் தாக்கும்போது கொல்லனைப் போல, அடித்து உருவாக்கவும் செய்கின்றது. —இங்கிலாந்து

இடுக்கண் என்பது (நம்) பண்புக்குச் சோதனை. —இங்கிலாந்து

மனிதர்கள் மலை தடுக்கி விழுவதில்லை; சிறு கற்கள் தடுக்கியே விழுகின்றனர். —இந்தியா

நீண்டிருக்கும் கட்டை தலையில் தட்டும். —ஜப்பான்

எல்லாவற்றையும் எளிதாகக் கருதுபவனுக்குக் கஷ்டங்கள் பெருகும். —சீனா

எல்லா விஷயங்களும் எளிதாவதற்கு முன் சிரமமாகத் தானிருக்கும். —இங்கிலாந்து

மன உறுதியுள்ளவனுக்கு எதுவும் கஷ்டமில்லை. —( ” )

மனிதர்கள் எப்படிப்பட்டவர்கள் என்பதைக் காட்டுவது கஷ்டங்களே. —கிரீஸ்

மிகச் சிறந்த விஷயங்கள் மிகக் கடினமானவை. —கிரீஸ்

## சாதுரியம்

காதைப் பிடித்து இழுத்தால் தலை தானாக வரும். —இந்தியா

அதிகச் சாதுரியம் காட்ட வேண்டாம்; உன்னைவிடச் சாமர்த்தியசாலிகள் சிறையிலேயிருக்கின்றனர். —ரஷ்யா

சிறிய பானை சீக்கிரம் கொதிக்கும். —இந்தியா

பருத்தி, எண்ணெய், நெருப்பு—இவற்றின் உதவியால் மாரிக் காலத்தை வெல்ல முடியும். —இந்தியா

முள்ளைக்கொண்டு முள்ளை எடு. —தமிழ்நாடு

சொந்த வண்டியானாலும், மை இல்லாமல் ஓடாது. —இந்தியா

வீரம் என்பது பத்து என்றால், அதில் ஒன்பது தந்திரமாகும். —துருக்கி

நரி பிடிக்க வரும்பொழுதுதான் அதைப் பிடிக்கவேண்டும். —இங்கிலாந்து

ஓடுகிறவனுக்கு ஒரு பாதை, பிடிக்கிறவர்களுக்கு நூறு பாதைகள். —பல்கேரியா

கல்லைத் தூக்க முடியாதவன் அதை உருட்ட வேண்டும். —எஸ்டோனியா

யஜமான் தயவு வேண்டுமானால், அவருடைய நாய்களுக்கும் உணவு வை. —ஃபின்லந்து

உன் உடைவாள் கட்டையாயிருந்தால், நீ ஓர் அடி முன்னால் நகர்வதில் அது நீண்டு விடும். —ஹங்கேரி

உன்னால் அடிக்க முடியாத கையை முத்தமிடு. —ருமேனியா

பால் கறக்கு முன்பு பசுவைத் தட்டிக் கொடு. —ஆப்பிரிக்கா

## அருமை

ஆலையில்லா ஊருக்கு இலுப்பைப்பூச் சர்க்கரை. —தமிழ்நாடு

சதுரமான முட்டையும், உண்மையுள்ள வேசியும் அரியவை. —ஜப்பான்

ரோஜா தோட்டத்தில் ரோஜா மலரின் அருமை தெரியாது. —ஜெர்மனி

வெகு தூரத்திலிருந்து வந்ததானால், அது நல்ல மீன்தான், —ஃபின்லந்து

நல்லது போனால் தெரியும், கெட்டது வந்தால் தெரியும். —இத்தாலி

வலியவந்த பொருள்கள் நாறும். —லத்தீன்

அருகிலுள்ள (கோயில்) சாமி நோயைக் குணமாக்காது
—எகிப்து

## செயல்

நாணிலே கோத்த அம்பு போய்த்தான் தீரவேண்டும். —சீனு

நல்ல சொற்கள் நம்மைச் சிரிக்க வைக்கின்றன. நல்ல செயல்கள் மௌனமாக்குகின்றன. —ஃபிரான்ஸ்

ஒருவன் சொல்வதற்கும் செய்வதற்கும் இடையில் செருப்புத் தேய்ந்து போகும். —ஹாலந்து

நல்ல செயலுக்கு வட்டி கிடைக்கும். —எஸ்டோனியா

நீ என் முகத்தைப் பார்த்துச் சிரித்தால் அந்தக் கேவலம் படைத்தவனுக்கு; நீ என் உடைகளைப் பார்த்துச் சிரித்தால் அது தைத்தவனுக்கு; நீ என் செயல்களைப் பார்த்துச் சிரித்தால் அந்தக் கேவலம் எனக்கு உரியது.
—எஸ்டோனியா

## கருத்துடைமை

கடை வைத்திருப்பவன் ஒரு கால் நொண்டியா யிருந்தால் அவனுக்கு நன்மை. —துருக்கி

கவனமாயிருந்தால் துரதிருஷ்டத்தையும் தூக்கிவிடலாம்.
—அயர்லந்து

வறுமையை எதிர்பார்த்து ஆயத்தமாயிருப்பது செழுமைக்குச் சிறந்த வழி. —வேல்ஸ்

உறையிலும் கத்தி கூர்மையா யிருக்க வேண்டும்.
—ஃபின்லந்து

பெரிய கடலிலிருந்து உப்பு நீரைப் பருகுவதைவிட, சிறு ஓடையிலிருந்து நல்ல நீரைப் பருகுதல் மேல்.
—அமெரிக்கா

## ஊக்கம்

விழித்து இன்பமாயிரு, அல்லது தூங்கி அழுது கொண்டிரு.
—கீழ்நாடுகள்

உறங்குகின்ற ஓநாயின் வாயில் ஆட்டுக்குட்டிகள் போய் விழுவதில்லை.
—டென்மார்க்

வேகவைத்த புறாக்கள் வான வெளியில் பறப்பதில்லை.
—இங்கிலாந்து

அதிருஷ்டத்தில் வலதுகை ஊக்கம், இடது கை சிக்கனம்.
—இங்கிலாந்து

சுறுசுறுப்பு கடன்களை அடைத்துவிடும். —இங்கிலாந்து

நடந்து செல்லும் நாய்க்கு எலும்புத் துண்டு கிடைக்கும்.
—இங்கிலாந்து

உபயோகித்த திறவுகோல் பளபளப்பா யிருக்கும். —( ,, )

டிராய் (நகரம்) ஒரே நாளில் பிடிக்கப்படவில்லை.
—இங்கிலாந்து

ஊக்கமுள்ள கையே பொருளைச் சேர்க்கும். —இங்கிலாந்து

மூடிய வாய்க்குள் பேரிக்காய் வந்து விழுவதில்லை. —இத்தாலி

பூனைக்கு மீன் வேண்டும், ஆனால் அது கால்களை நனைக்காது.
—லத்தின்

இடைவிடாத ஊக்கத்திற்கு எதுவும் கஷ்டமில்லை. —சீனு

கடவுளைத் தொழு; ஆனால் சம்மட்டியை நிறுத்தாதே.
—ஸ்பெயின்

விடாமுயற்சியுள்ளவர்களிடம் கடவுள் இருக்கிறார்.
—பாரசீகம்

ரோமாபுரியை ஒரே நாளில் கட்டவில்லை. —ஃபிரான்ஸ்

அதிருஷ்டத்தின் அன்னை ஊக்கம். —ஃபிரான்ஸ்

வேகமாய் நடக்கும் இரண்டு கால்களைக் கண்டு ஆமைதான் பழிக்கும்.
—ஜப்பான்

தூங்குகின்ற இருவரில், சேவல் கூவியவுடன், முதலில் எழுந்திருப்பவனே முதலில் சுவர்க்கத்தை அடைவான்.
—டாவோ

வாலில்லாத சேவல் நித்தியமான குஞ்சு. —பல்கேரியா

காலம் தாழ்ந்த பறவை (இப்பொழுதுதான்) சிறகுகளைத் தட்டுகின்றது. அதிகாலையில் எழுந்த பறவை உண வுண்ட அலகைத் துடைத்துக் கொள்கிறது. —எஸ்டோனியா

அதிகாலையில் எழுகின்ற பறவை நெடுந்தூரம் செல்லும். —ஸெக்

பழைய கங்கில் விரைவில் தீ மூட்டலாம். —எஸ்டோனியா

ஊக்கமுள்ளவனிடம் கம்பளம் இருக்கும், சோம்பேறியிடம் ஆடுதான் நிற்கும். —எஸ்டோனியா

உண்பதால் செல்வம் தீர்ந்து போகாது, ஊக்கமில்லாமையால் தீர்ந்து போகும். —ஃபின்லந்து

சலிப்பில்லாதவன் வெற்றியடைவான். —அமெரிக்கா

## சோம்பல்

சோம்பேறி சயித்தானின் தோழன். —அரேபியா

சோம்பிக்கிடத்தல் ஒரு மனிதனுக்குக் கந்தல்களை அணிவிக்கும். —பழைய ஏற்பாடு

வேலை செய்யாமல் இருந்து தின்றால், மலைபோன்ற செல்வமும் காலியாகும். —சீனு

சுறுசுறுப்புக்கு எல்லாக் காரியங்களும் எளிது; சோம்பலுக்கு எல்லாம் கஷ்டம். —இங்கிலாந்து

சோம்பலுள்ள மூளை சயித்தானின் தொழிற்சாலை. —( " )

இளமையில் சோம்பல், முதுமையில் திண்டாட்டம். —இங்கிலாந்து

ஒன்றும் செய்யாமல் இருத்தல் என்பது தீமை செய்வதாகும். —இங்கிலாந்து

சோம்பலுள்ள மக்கள் ஓய்வில்லாமல் திரிகிறார்கள். —( " )

சோம்பல் என்பது மனத்திலே தோன்றியுள்ள புண். —( " )

சோம்பல் யாசகத்திற்குத் திறவுகோல். —இங்கிலாந்து

சோம்பல் வறுமைக்குத் தாய். —இங்கிலாந்து

சோம்பலால் புத்தி துருப்பிடிக்கும். —இங்கிலாந்து

சோம்பலாயிருந்தால், தனித்திருக்க வேண்டாம்; தனித்திருந்தால், சோம்பியிருக்க வேண்டாம். —இங்கிலாந்து

மடமை எல்லாத் துன்பங்களையும் அழைத்து வரும். —இங்கிலாந்து

மனத்தின் உறக்கமே சோம்பல். —ஃபிரான்ஸ்

சோம்பேறிகளுக்குத்தான் எல்லா விஷயங்களுக்கும் நேரம் இருக்கும். —பிரான்ஸ்

சோம்பலுக்குக் கூலி தரித்திரம். —ஜெர்மனி

பை நிறையப் பணமிருந்தாலும், சோம்பல் காலி செய்துவிடும். —ஜெர்மனி

சோம்பேறி மூச்சு விடுகிறான், ஆனால் வாழவில்லை. —லத்தீன்

உறுதியான முடிவு செய்ய முடியாமைக்குச் சோம்பலே மூல காரணம். —லத்தீன்

மடமை உயிரோடுள்ள மனிதனுக்குக் கல்லறை. —லத்தின்

சோம்பேறிகளுக்கு எந்தத் தேவதையும் துணையில்லை. —லத்தின்

சோம்பலுள்ள மனத்திற்கு எது தேவை என்றே தெரியாது. —லத்தீன்

நின்றால் காத வழி, அமர்ந்தால் பதினாறு காதம், சாப்பிட்ட பின் ஐம்பது காதமாகும். —இந்தியா

நடப்பதைவிட அமர்வது நலம்; அமர்வதைவிட, படுப்பது நலம்; விழிப்பதைவிடத் துயில்வது நலம், எல்லாவற்றையும்விட மடிவது நலம். —இந்தியா

சயித்தான் வேலை செய்பவனுக்கு ஆசை காட்டுகிறான், சோம்பேறி சயித்தானுக்கே ஆசை காட்டுகிறான். —துருக்கி

அசையாத மணி அடிப்பதே யில்லை. —சீனா

தூங்குபவனை எழுப்புவதற்காகப் பொழுது இருமுறை விடிவதில்லை. —அரேபியா

மாவட்ட

கடவுள் ஒருவனுக்குப் புதையலைக் காட்டினுல், அவனே அதைத் தோண்டியெடுக்கவேண்டும். —ஸெக்

நேரமும் ஓய்வு மிருந்தால், தவளையும் ஒரு மைல் துள்ளிச் செல்லும். —செர்பியா

## உறுதி

பல மரம் கண்ட தச்சன் ஒரு மரமும் வெட்டமாட்டான். —தமிழ்நாடு

ஒன்று கதவைத் திறக்கவேண்டும், அல்லது அடைக்க வேண்டும். —இங்கிலாந்து

அதிகமாக ஆராய்பவன் சொற்பமாகவே செய்து முடிப்பான். —ஜெர்மனி

வேகமான முடிவுகள் உறுதியானவை அல்ல. —கிரீஸ்

தாமதித்து நிற்பவர்களிடம் தெய்வங்களுக்கே வெறுப்பு. —லத்தீன்

உறுதியின்மையிலேயே துக்கமும் இருக்கிறது. —லத்தீன்

உறுதியின்மையால் நல்ல வாய்ப்புக்கள் பல நழுவிப் போகின்றன. —லத்தீன்

எப்பொழுது தொடங்கலாம் என்று நாம் ஆலோசிக்கும் பொழுதே, காலம் கடந்து விடுகின்றது. —லத்தீன்

உறுதியாக நிற்பது மேலே தூக்கிவிடப்படும், கீழே சாய்ந்தது நசுக்கப்படும். —மலாய்

அன்பு விடுமுன் குறியை உறுதி செய்துகொள். —சயாம்

பிடிக்கும் பொழுது உறுதியாகப் பற்றிக் கொள்ளவும்; அழுத்தும் பொழுது உயிர் போகும்படி அழுத்தி விடவும்; குறி பார்க்கும் பொழுது நடுக்கமில்லாமல் பார்க்கவும். —சயாம்

இதயம் உறுதியாயிருந்தால், சுண்டெலி யானையைத் தூக்கி விடும். —திபேத்து

பலமுறை பார்த்துக் கொண்டே யிருப்பவன், அழுகிய பொருளையே வாங்குவான். —ஆப்பிரிக்கா

உறுதியுடன் இரு, காரியம் முடிந்துவிடும். —சீனு

உறுதி கொண்டுவிட்டால், நீ விடுதலை யாவாய்.
—இங்கிலாந்து

நீந்து, அல்லது ஆழ்ந்துவிடு. —இங்கிலாந்து

முள்ளை மென்மையாகப் பிடித்தால்தான் குத்தும். —( " )

ஒன்று கதவைத் திறந்து வை, அல்லது அடைத்துவிடு. —( " )

அதிகமாக ஆராய்பவன் அற்பமாகவே செய்வான்.
—ஜெர்மனி

## இயலாமை

ஒரே காலால் இரண்டு தோணிகளில் நிற்க முடியாது. —சீனு

நீர் குடித்துக் கொண்டே சீட்டியடிக்க முடியாது. —இத்தாலி

ஒரு தண்டை நேராக நடக்கும்படி செய்ய உன்னால் இயலாது.
—கிரீஸ்

இயலாதவற்றில் ஆசை வைத்துக்கொண்டே யிருத்தல் ஆன்மாவைப் பற்றிய ஒரு நோய். —கிரீஸ்

நடக்காது என்ற காரியம்தான் எப்பொழுதும் நடைபெறுகின்றது. —ஃபிரான்ஸ்

முடியாது...அது பிரெஞ்சு மொழியே யில்லை.
—நெப்போலியன்

அநுபவம் அதிகரித்தால், முடியாது என்ற காரியங்கள் பல முடிந்துவிடும். —இங்கிலாந்து

உறுதியுடன் நினைக்கும் உள்ளத்திற்கு இயலாதது எதுவுமில்லை.
—இங்கிலாந்து

ஒரு தொழில் நடக்காது என்று நம்புவது அது நடைபெறாமல் செய்வதற்கு வழி. —இங்கிலாந்து

## த வ று

தவருக ஒருவன் கைது செய்யப்படலாம், தவருக ஒருவன் விடுதலை செய்யப்படுவதில்லை. —சீன

## க ரு வி

சுத்தியல் உளியை அடிக்கிறது, உளி கட்டைக்குள் இறங்குகிறது. —சீன

ஆணியைக்கொண்டு ஆணியை அறைய முடியாது. —போலந்து

சாணை தானே வெட்டுவதில்லை, கத்தியை வெட்டும்படி செய்கிறது. பல்கேரியா

எண்ணெயிட்டதற்கு ஏற்றபடி இயந்திரம் வேலை செய்யும். —அமெரிக்கா

## இ த ய ம்

மனம் உண்டானல் இடம் உண்டு. —தமிழ்நாடு

மனம்போல வாழ்வு. —தமிழ்நாடு

மனம் கொண்டது மாளிகை. —தமிழ்நாடு

மனம் இருந்தால் மலையும் சாயும். —தமிழ்நாடு

மனதுக்கு மனமே சாட்சி. —தமிழ்நாடு

மனமது செம்மையால், மந்திரம் செபிக்க வேண்டாம். —தமிழ்நாடு

உன் பொக்கிஷம் எங்கே இருக்கின்றதோ, அங்கேயே உன் இதயமும் இருக்கும். —புதிய ஏற்பாடு

ஒரு மரக்கால் இதயங்கள் ஒரு மணி அரிசிக்கு ஈடாக மாட்டா. —சீன

இதயத்தில் இடமிருந்தால், வீட்டிலும் இடம் இருக்கும். —ஹாலந்து

இதயம் பொய் சொல்லாது. —ஹாலந்து

கோட்டையுள்ள நகரத்தைக் காட்டினும் வலிமை யுள்ளது உண்மையான இதயம். —இங்கிலாந்து

இதயம் சிறிதுதான், ஆனால் பெரிய பொருள்களாலும் அதை நிரப்ப முடியவில்லை. —இங்கிலாந்து

மனிதனின் இதயம்தான் சயித்தானின் மறைவிடம். —( " )

இதயத்தின் மகிழ்ச்சியை முகத்தின் நிறத்தில் காணலாம். —இங்கிலாந்து

இதயத்தில் நெருப்புப் பற்றும்பொழுது, வாயிலிருந்தும் சில பொறிகள் வெளிவரும். —இங்கிலாந்து

ஒவ்வொரு மனித நெஞ்சிலும் ஒரே இதயம்தான் துடிக்கின்றது. —இங்கிலாந்து

தலைதான் எப்பொழுதும் இதயத்தால் ஏமாற்றப் பெறுகின்றது. —ஃபிரான்ஸ்

இதயம் ஏற்கும் காரணங்கள் இருக்கும், அவைகளைப் பகுத்தறிவு அறியாது. —பாஸ்கல்

காயம்பட்ட இதயத்தைக் குணப்படுத்துவது கடினம். —கத்தே

ஒரு கறையும் இல்லாத இதயமே பூரணமான சாந்தியை அறியும். —ஜெர்மனி

மறைத்து வைக்கப்பெற்ற மனிதனின் பொக்கிஷம் இதயம். —யூதர்

பை நிறைய உள்ள பணத்தைப் பார்க்கிலும், இன்பமுள்ள இதயமே மேல். —இத்தாலி

நல்ல இதயம் துரதிருஷ்டத்தைத் தகர்த்து விடும். —ஸ்பெயின்

இதயம் நிறைந்திருந்தால், கண்களில் நீர் ததும்பி வழியும். —யூதர்

ஆயிரம் சாட்சிகளைவிட இதயத்தின் சாட்சியம் அதிக வலிமையுள்ளது. —துருக்கி

சுவர்க்கத்தை அடையவும், நரகத்தை அடையவும் உன் இதயத்திற்கு ஆற்றலுண்டு. —சயாம்

சொற்ப மூளையும் பெரிய இதயமும் பெருங் காரியங்களைச் சாதிக்க முடியும். —ஜெர்மனி

ஏழை மனிதனுக்கும் ஓர் இதயமுண்டு. —அமெரிக்கா

இதயம் ஒரு வெள்ளாடு, அதைக் கட்டி வைக்க வேண்டும்.
—அமெரிக்கா

உன் சித்தம் சுத்தமாயிருந்தால், நீ கடல்மீது நடக்கலாம்.
—அமெரிக்கா

உன் இதயத்திலும் உன் பணப்பையிலும் இருப்பதை எவரும் பாராக்காமல் இருக்கட்டும்.
—டென்மார்க்

இன்பத்தைப் பங்கு போட்டால் இரட்டிப்பாகும்.
—( " )

என் இதயத்தில் வசிப்பதானால், வாடகை வேண்டாம்.
—அயர்லந்து

இதயத்தை அடைப்பதைவிட வீட்டை அடைத்துவிடுவது மேல்.
—ரஷ்யா

இதயம் ரோஜா மலரா யிருந்தால், பேச்சில் அதன் வாசனை தெரியும்.
—ரஷ்யா

இதயம் ஏற்கும், மூளை ஒதுக்கும்.
—இந்தியா

ஒருவரைத் தெரிந்து கொள்வதில் முதன்மையானது இதயத்தோடு இதயம் பழகுதல்.
—சீனா

எல்லாப் பெரிய மனிதர்களுக்கும் பொதுவான குணம் ஒன்றுண்டு; அவர்களுடைய அறிவுக்கும் ஆண்மைக்கும் அடியிலே ஒரு பச்சைக் குழந்தையின் இதயம் அமைந்திருக்கும்.
—சீனா

மனிதன் ஒவ்வொரு நாட் காலையிலும் தலையை வாரிக் கொள்கிறான்; இதயத்தை மட்டும் ஏன் வாருவதில்லை?
—சீனா

தன் இதயத்தை அறிந்து கொண்டவன், கண்களை நம்ப மாட்டான்.
—சீனா

நேருக்கு நேர் நின்று பேசுகிறார்கள், ஆனால் அவர்களுடைய இதயங்களுக்கு இடையே ஆயிரம் மைல் தூரம்.
—சீனா

ஒட்டியுள்ள இதயங்கள் நெருங்கியிருப்பவை அல்ல.
—சீனா

பெருமையும் நரகமும் இதயத்துள் உள்ளவை.
—சீனா

தன்னை அறிந்தவன் பிறரை அறிவான், இதனால் இதயத்தோடு இதயத்தை ஒப்பிட முடியும்.
—சீ

இதயமே கால்களை இழுத்துச் செல்கின்றது. —யூதர்

இதயமே உடலைத் தாங்குகின்றது. —ஸ்பெயின்

இதயம் கசப்பா யிருக்கும்பொழுது, வாயில் சீனியும் கசக்கும்.
—யூதர்

## உணர்ச்சி

சுவர் மறைவில் நிற்பவன் வேறு எதையும் காணமுடியாது. [உணர்ச்சி வசப்பட்டவன் எதையும் தெளிவாகக் காண முடியாது.] —ஜப்பான்

## வீரம்

வீரனுக்கு எந்த நிலமும் தன் நாடுதான். —இத்தாலி

எதிரிகள் ஓடிவிட்டால், எல்லோரும் வீரர்களே. —இத்தாலி

இதயமில்லாதவனுக்குக் கால்களே பயன்படும் —இத்தாலி

அபாயத்தில் காட்டும் வீரமே போரில் பாதியாகும். —லத்தீன்

மூர்க்கமான விலங்குகளும், அடைத்து வைத்தால், வீரத்தை மறந்து விடுகின்றன. —லத்தீன்

அதிருஷ்டம் வீரர் பக்கமே நிற்கும். —லத்தீன்

வீரர்கள் வீரர்களுக்குப் பிறந்தவர்கள். —லத்தீன்

வீரனுடைய வாக்கு இரும்புக் கவசமாகும். —துருக்கி

வீரனைப் போர்க்களத்திலே அறிய வேண்டும். —துருக்கி

புலிக்குட்டிகள் வேண்டுமானால், புலியின் குகைக்குள் நுழையாமல் முடியாது. —சீனா

வீரமுள்ள மனிதனுக்கு ஆயுதங்கள் தேவையில்லை.
—இங்கிலாந்து

வீரத்திற்கு கைகளைப் போலவே கண்களும் இருக்க வேண்டும். —இங்கிலாந்து

கோழை உள்ளம் அழகிய பெண்ணைக் கவர்ந்ததில்லை. —( " )

வீரத்திற்குச் சோதனை தோல்வியில் கலங்காமை. —இங்கிலாந்து

ஒரே வீரச் செயல் ஒருவனை வீரனாக்கி விடாது. —( " )

வீரர் திருக்குழாத்திலுள்ளவர்கள் வீர விளக்கை ஒருவர் கையிலிருந்து மற்றொருவருக்கு வழங்கிச் செல்கின்றனர். —இங்கிலாந்து

ஒரு வீரனால் வெல்லப்படுவது கௌரவமே. —இங்கிலாந்து

வீரர்க்கே உரியவர் அழகுடைய நங்கையர். —இங்கிலாந்து

வீரர்கள் தொடக்கத்திலிருந்தே வீரர்களா யிருப்பவர்கள். —ஃபிரான்ஸ்

நன்மையைப் போலவே தீமையிலும் வீரர்கள் இருக்கிறார்கள். —ஃபிரான்ஸ்

வீரன்தான் வீரனைப் புரிந்துகொள்ள முடியும். —கதே

ஜீவனம் நடத்தக் கஷ்டமாயுள்ள நாடுகளிலே வீரர்கள் தோன்றுகின்றனர். —கிரீஸ்

வீரரை வழிபடுவதை அடிப்படையாகக் கொண்டே சமுதாயம் அமைக்கப் பெறுகின்றது. —கார்லைல்

வீரமே வெல்லும், ஆயுதங்களல்ல. —ஸ்பெயின்

ஆண்மையுள்ள ஒரு வீரன் மற்றொருவனுடைய அனலை விசிறி எரியச் செய்கிறான். —ஹோமர்

வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம். —தமிழ்நாடு

ஒருவனைக் கொன்றால் கொலைகாரன், பல்லாயிரவரைக் கொன்றால் வீரன். —இந்தியா

நல்ல தளபதியின் கீழ் மோசமான வீரர்களைக் காண முடியாது. —சீனா

ஒரு தளபதியின் பெருமை பதினாயிரம் பிணங்களைக் கொண்டு அமைகிறது. —சீனா

ஒரு தலைமுறையில் வீரர்களாயிருந்தால் பின் பத்துத் தலைமுறையினர் கோழைகளாயிருப்பர். —சீனா

நரிகளுக்குத் தலைமையா யிருப்பதைவிட, சிங்கங்களின் வாலா யிருப்பது மேல். —யூதர்

தைரியம் எண்ணற்ற எதிரிகளை வென்றுவிடும். —குர்திஸ்தானம்

ஓடப் பயந்துபோய் நின்ற சிலரையும் வீரர் என்று நினைப்ப துண்டு. —இங்கிலாந்து

வில்லை வளைக்கத் தெரியாதவரெல்லாம் வில்வீரன் ராபின் ஹூட்டைப் பற்றிப் பேசிக் கொண்டிருப்பர். ( '' )

வீரம் நீடித்து நிற்காது. —அயர்லந்து

புண்படாமல் வீரனாக முடியாது. —பல்கேரியா

ஒரு பாவமும் அறியாதவனைக் கொன்றவன் வீரன்; அயோக்கியனைக் கொன்றவன் கொலைகாரன். —அமெரிக்கா

சுவரின் பாதுகாப்பிருந்தால், கிழவிக்கும் வீரம் வந்துவிடும். —ஸெக்

அறிவு அதிகமாகி விட்டால் தைரியம் வந்துவிடாது. —( '' )

ஓடுகின்ற மனிதனும் மீண்டும் போர் செய்வான். —ஃபின்லந்து

தப்புவதற்கு வேறு வழியில்லாவிட்டால், அநேகர் வீரராகி விடுவர். —நார்வே

வீரரைச் சிறையிலே தேடுங்கள், மூடரைப் பாதிரிகளிடையே தேடுங்கள். —ரஷ்யா

வீரனின் வியர்வை உதிரம். —ஆப்பிரிக்கா

வெற்றி பெற்றபின் தன்னை அடக்கிக் கொள்பவன் இரண்டாம் முறையும் வென்றவனாவான் —லத்தீன்

சண்டை போடத் தைரியம் உள்ளவனே பயமுறுத்த முடியும். —மலாய்

தன்னைத்தான் வெல்பவனே தலைசிறந்த வீரன். —ஸ்பெயின்

## வெற்றியும் தோல்வியும்

மனிதன் வெற்றியிலே கற்பது சொற்பம்; தோல்வியிலே கற்பது அதிகம்.

தோல்வி வெற்றியின் அடிப்படை; வெற்றியை அடையும் வழி —டாவோ

## துணிவு

அபாயமில்லாமல் அபாயத்தைத் தாண்ட முடியாது. —லத்தீன்

## அச்சம்

நல்லது என்று தெரிந்திருந்தும், அதைச் செய்யாமல் விடுதல் கோழையின் குணம். —சீனு

கோழைகள் கொடூரமானவர். —இங்கிலாந்து

அங்கிகள் அணிந்த (பல) கோழைகள் போர்வீரர்கள் —( " )

கோழை ஒருபொழுதும் இரக்கம் காட்டமாட்டான். —( " )

கோழையைப் போராட வைத்துவிட்டால், அவன் சயித் தானையே கொன்றுவிடுவான். —இங்கிலாந்து

பயத்தை மாற்றப் பச்சிலையில்லை. —இங்கிலாந்து

கடவுளுக்கு அஞ்சு, உன் எதிரிகள் உனக்கு அஞ்சுவர். —( " )

அச்சம் அன்பைவிட வலியது. —இங்கிலாந்து

புண்களுக்கு அஞ்சுவோன் போரின் அருகில் வரக்கூடாது. —இங்கிலாந்து

உன் அச்சங்கள் உன்னிடமே இருக்கட்டும், உன் தைரியத்தைப் பிறருக்குப் புகட்டு. —இங்கிலாந்து

பயம்தான் முதலில் ஆயுதங்களை எடுத்தது. —இங்கிலாந்து

அஞ்சவேண்டியதற்கு அஞ்சினால், கவலை தொலையும். —( " )

சாவதற்கு முன்பு பன்முறை சாவோர் கோழைகள். —ஷேக்ஸ்பியர்

ஆராயாமல் பாய்வதைவிட கோழையாயிருத்தல் மேல். —ஃபிரான்ஸ்

பெரும்பாலும் பயத்தினால் தைரியம் பிறக்கும். —ஃபிரான்ஸ்

ஒரு பயங்கொள்ளி பத்துப் பேர்களைப் பயங்கொள்ளிகளாக்கி விடுவான், —ஜெர்மனி

காதலில் அச்சம் இருந்தால், அதிருஷ்டமில்லை. —ஜெர்மனி

பயம் சிங்கங்களையும் வசக்கிவிடும். —ஜெர்மனி

மகாவீரர்களும் திடீரென்று தோன்றும் அபாயங்களுக்கு அஞ்சுவர். —லத்தீன்

அச்சம் மனிதர்களை எதையும் நம்பும்படி செய்துவிடும். —( " )

தீயோரைத் தடுத்து வைப்பது இரக்கமன்று, அச்சம்தான். —லத்தீன்

அபாயங்களைக் காட்டிலும் அச்சங்கள் அதிகம். —லத்தீன்

பயங்கொள்ளி தான் எச்சரிக்கையாயிருப்பதாகச் சொல்வான். —லத்தீன்

உலோபி தான் சிக்கனமாயிருப்பதாகச் சொல்லுவான். —( " )

கோழையும் கோழையும் எதிர்த்தால், முதலில் தாக்கியவன் ஜெயிப்பான். —ஸ்பெயின்

அச்சம் அறிவுக்கு ஆரம்பம். —ஸ்பெயின்

புறாவுக்கு அஞ்சுவோன் தினை விதைக்க மாட்டான். —ரஷ்யா

போரில் கோழைகளால் பயனில்லை; அவர்கள் அங்கே நிற்பார்கள்; ஆனால் போரில் ஈடுபடுவதில்லை. —கிரீஸ்

கோழைகளின் ஆயுதங்கள் வெட்டவும் மாட்டா, குத்தவும் மாட்டா. —இத்தாலி

கோழைக்கு வல்லமை இருந்தும் பயனில்லை. —இத்தாலி

அதிக அச்சம் சண்டை செய்யவும் முடியாது, ஓடிச் செல்லவும் முடியாது. —ஷேக்ஸ்பியர்

அறியாமையிலிருந்தே அச்சம் எழுகின்றது. —எமர்ஸன்

கொடிய அபாயத்தில் அச்சத்திற்கு இரக்கமே தோன்றாது. —ஸீஸர்

போருக்கு அஞ்சுவோர் என்மேல் படுத்துக் கொள்ளுங்கள். —தமிழ்நாடு

கடல்மீது உறங்குவோன் பனிக்கு அஞ்சுவானா? —இந்தியா

பாம்பு கடித்தவனுக்குக் கண்ட கயிறெல்லாம் பாம்புதான். —இந்தியா

சூடுண்ட பூனை அடுப்பண்டை போகாது. —தமிழ்நாடு

உரலில் தலை கொடுத்தபின் உலக்கைக்கு அஞ்சலாமா?
—தமிழ்நாடு

சாவு வருமுன்பே சாகவேண்டாம். —இந்தியா

பயமே ஓடக் கற்றுக் கொடுக்கும். —அரேபியா

இரவு வந்ததும், அச்சம் வீட்டு வாயிலுக்கு வருகின்றது; பொழுது விடிந்ததும், அது மலைக்குச் சென்றுவிடுகின்றது.
—ஆப்பிரிக்கா

அச்சத்தில் மனிதன் பிறக்கிறான், அச்சத்தில் அவன் மரிக்கிறான்.
—சீக்கியர்

புருவின் கோபத்திற்கு அஞ்சவேண்டாம். —ஃபிரான்ஸ்

ஓடுகிறவனுக்குப் பின்னால் யாரோ துரத்தி வருவதுபோலவே இருக்கும். —ஃபிரான்ஸ்

பிறர் தள்ளு முன்னால், நீயாக விழவேண்டாம். —இங்கிலாந்து

அஞ்சவேண்டியதற்கு அஞ்சினால், அபாயம் வராது.
—அயர்லந்து

தெரியாத பாதையில் ஒவ்வோர் அடியும் மெதுவாகவே செல்லும். —அயர்லந்து

பயத்திற்கு எல்லாம் பெரிதாகவே தெரியும். —பல்கேரியா

ஓடுகிறவனைக் கண்டால் கோழையும் பிடிக்க ஓடுவான். —செக்

பயத்தினால் இறப்பவனுக்கு மாதா கோவில் இடுகாட்டில் இடம் பெறத் தகுதியில்லை. —செக்

பயம் இருந்தால் வழி பிறக்கும். —டென்மார்க்

நீ எதற்கு அஞ்சுகிறாயோ அது உன்னை எட்டிப் பிடித்துவிடும்.
—எஸ்டோனியா

பின்னால் பெரும் பயம் ஏற்படாமலிருப்பதற்காக எப்பொழுதும் கொஞ்சம் அச்சத்தோடிருத்தல் நலம். —ஃபின்லந்து

முயல் ஓடுவதைப் பார்த்திராதவன் பயத்தைப் பற்றிப் பேசக் கூடாது. —இத்தாலி

அச்சம் ஒவ்வொரு நற்குணத்திற்கும் தடையாக நிற்கும் —( " )

ஒவ்வொரு பறவைக்கும் மேலே ஒரு காடை பறந்து கொண்டிருக்கும். —ஆர்மீனியா

அச்சம் இதயத்தின் சிறை. —ஸ்பெயின்

பிணமாயிருப்பதைவிடக் கோழையாயிருப்பது மேல். —அயர்லந்து

அரண்டவனுக்குப் பல குரல்கள் கேட்கும். —ஃபின்லந்து

பேச்சில் சிங்கம், இதயத்தில் முயல். —லத்தீன்

சுண்டெலி கற்சட்டியையே தின்பதைக் கண்டு, பூசனிக்காய் நடுங்கும். —எகிப்து

அடியைவிட மோசம் நடுக்கம். —ஆப்பிரிக்கா

போரில் புறங்காட்டி ஓடுபவனுக்காக அவன் வீட்டில் துக்கம் கொண்டாட மாட்டார்கள். —ஆப்பிரிக்கா

கோழையின் வீட்டில் அழுகுரலே கேட்காது. [அவன் முன்னதாகவே சேமமாக வந்திருப்பான்.] —ஆப்பிரிக்கா

## அபாயம்

தீயிலிருந்து தப்புவதற்கு மக்கள் கொதிக்கிற எண்ணெயில் விழுவர். —சீனு

மீனுக்கு (தூண்டிலிலுள்ள) இரைதான் தெரியும், முள் தெரியாது. —சீனு

மனிதருக்கு இலாபம்தான் தெரியும், அதிலுள்ள அபாயம் தெரியாது. —சீனு

புலி வாலைப் பிடித்துக்கொண்டு வெள்ளத்திலிருந்து தப்ப முடியாது. —சீனு

## நட்பு

ஒருவனைவிட இருவர் மேல். —பழைய ஏற்பாடு

நல்லவர்களோடு உறவாடுங்கள், நீங்களும் நல்லவர்களாக முடியும். —சீனு

நண்பனின் யோக்கியதையை நீண்ட பயணத்திலும், சிறிய சத்திரத்திலும் கண்டு கொள்ளலாம். —இங்கிலாந்து

நண்பரை நாடி நரகத்திற்குச் செல்லாதே. —இங்கிலாந்து

நாம் சுகமாயிருக்கும்பொழுது, நோயாளிக்கு உபதேசம் செய்தல் எளிது. —டெரன்ஸ்

உனக்கு வயதானால் உபதேசம் செய், நீ இளமையாயிருந்தால் புத்திமதியை ஏற்றுக்கொள். —சீனு

தான் சண்டை போடும்வரை, எவனும் பிறருக்கு ஆலோசனை சொல்லுவான். —அயர்லந்து

ஒருவன் செய்யக்கூடிய உதவியில் முக்கால் பகுதி தைரியம் ஊட்டுவது. —அயர்லந்து

புது வேலைக்காரன் தண்ணீர்ப் பானையை உடைக்குமுன், இரண்டு தட்டுத் தட்டி வைக்கவும். —வேல்ஸ்

சேணத்தில் அடித்தால், கழுதை யோசிக்கத் தொடங்கும். —வேல்ஸ்

ஜனங்கள் சொல்கிறபடி நீ செய்வதானால், நீ கடலில் முயல்களைப் பிடித்துக் கொண்டிருப்பாய், காட்டில் மீன்களை வேட்டையாடுவாய். —பல்கேரியா

முன்னதாகவே உறுதி செய்து கொண்டவன், பிறர் உபதேசத்தைக் கேட்கமாட்டான். —ரஷ்யா

புத்தி புகல் முட்டிப்போன இடத்தில் ஈசன் இருக்கிறான். —இங்கிலாந்து

உப்பும் ஆலோசனையும் கேட்டால்தான் கொடுக்க வேண்டும் —இத்தாலி

முட்டை, கோழிக்கு உபதேசம் செய்யலாமா? —எஸ்டோனியா

## பெருமை

பெரிய மனிதர்களுக்கு நண்பர்களைவிடப் போற்றுவோர் அதிகமாயிருப்பர். —இங்கிலாந்து

பெரியோர் தம்மினும் பெரியோருக்கு மரியாதை செய்வர். —இங்கிலாந்து

பெரியோர் குறைகளும் குணங்களாய்க் கருதப்படும். —( ”

மிகப் பெரிய மனிதர்கள் (வாழ்க்கையில்) மிக்க எளிமையுடையவர்கள். —இங்கிலாந்து

சிலர் பிறப்பிலே பெருமையுடன் வருகின்றனர், சிலர் பெருமையை அடைகின்றனர், சிலர் மீது பெருமை திணிக்கப் பெறுகின்றது. —ஷேக்ஸ்பியர்

பெரியோர்களுடன் இருக்கும்பொழுது, ஒருவன் ஐந்து என்பது இரட்டை எண் என்று ஒப்புக்கொள்ள வேண்டும். —ஜெர்மனி

அதிகக் குற்றமில்லாத மனிதன் பெரிய மனிதன். —யூதர்

கழுகு ஈக்களை வேட்டையாடாது. —இந்தியா

யானை நடந்து செல்கின்றது, நாய்கள் குரைக்கின்றன. —( ” )

நான் (நீருள்) மூழ்கிவிட்டால், உலகமே மூழ்கிவிட்டதாகும். —இந்தியா

யானைக்கு எல்லோரும் எய்த்தவர்களே. —இந்தியா

யானை எவ்வளவு மெலிந்தாலும், மதிப்பில் குறைவதில்லை. கொன்ருல் யானையைக் கொல்லு, கொள்ளையடித்தால் பொக்கிஷத்தைக் கொள்ளையிடு. —இந்தியா

மனிதர் தலைப்பாகை அணிவது பெருமைக்காக, குளிருக்குக் காப்பாக அன்று. —இந்தியா

மோதிரக் கையால் குட்டினுல் வலி இராது. —இந்தியா

நாயாயிருந்தாலும், பெரிய இடத்து நாயாயிருக்க வேண்டும். —ஜப்பான்

குழம்பு கொதிக்கும்வரை அகப்பைக்கு மதிப்பில்லை. —துருக்கி

உள்ளூரில் மனிதன் தன்மையைக் கவனிப்பார்கள்; தொலைவில் தோற்றத்தைக் கவனிப்பார்கள். —சீனு

துறவிகளின் பாதங்கள் தீண்டும் இடத்தில் தீமைகள் மறையும். —பாரசீகம்

மின்மினிப் பூச்சியைக் கண்டு சூரியன் கோபிக்கக் கூடாது. —சயாம்

கனவானுக்கு வேறு பெயர் கிடையாது; அவன் எப்பொழுதுமே கனவான்தான். —கன்ஃபூஷியஸ்

வட்ட மேஜையைச் சுற்றியுள்ள ஆசனங்களில் ஒவ்வொன்றும் முதல் ஆசனம்தான். —ஜெர்மனி

ஒரு கிண்ணம் மது வேண்டாமென்று சொல்லித் தப்பிக் கொள்வதற்குள், இரண்டு கிண்ணம் குடித்துவிடலாம்.
—போலந்து

குன்றின்மேல் நிற்பவனை எல்லோரும் கவனிப்பர். —சுவீடன்

நீயும் கனவான், நானும் கனவான்; பன்றிகளை மேய்ப்பது யார்?
—ஸெக்

பணம் சம்பாதிப்பவன் பெரிய மனிதனல்லன்; அதைப் பாதுகாப்பவனே பெரிய மனிதன். —ஃபின்லந்து

மகா நதிகளின் பெருமை கடலோடு சரி. —ரஷ்யா

உயர்ந்த ஆடையில்தான் விரைவில் அழுக்குப்படும்.
—ஸ்பெயின்

நரிக்காகச் சிங்கம் வேட்டையாடாது. —ஸ்பெயின்

ஒரு நகரத்தின் வாலாயிருப்பதைவிட ஒரு கிராமத்தின் தலையாயிருப்பது மேல். —அமெரிக்கா

வண்டி கனமாயிருந்தால், பாரம் தோன்றாது. —அமெரிக்கா

முயலின் வெற்றி அதன் கால்களால்; பெண்ணின் வெற்றி அவள் நாவினால்; மனிதனின் வெற்றி அவன் பெருந்தன்மையான உள்ளத்தினால். —பின்லந்து

## மதிப்பு

உனக்கு நிழல் கொடுக்கும் மரத்தைப் பேணு. —டென்மார்க்

சட்டத்தில் குறையிருந்தால், கௌரவம் அக்குறையை நிரப்ப வேண்டும். —டென்மார்க்

கௌரவங்களுக்கு ஆசைப்படுவோன் அவைகளுக்குத் தகுதியற்றவன். —இங்கிலாந்து

கௌரவங்கள் அளித்தால், கலைகள் வளரும். —இங்கிலாந்து

தவறானதைச் செய்து எவரும் கௌரவம் பெற முடியாது.
—இங்கிலாந்து

திருடர்களிடத்திலும் கௌரவம் உண்டு. —இங்கிலாந்து

நான் என் மதிப்பை இழந்தால், என்னையே இழந்ததாகும்.
—ஷேக்ஸ்பியர்

ஒருவன் தன் மதிப்பைப் பற்றி, மேலும் மேலும் உரக்கப் பேசியதும், நாங்கள் எங்கள் கரண்டிகளை எண்ணிச் சரி பார்த்துக் கொண்டோம். [அவ்வளவு 'கௌரவ' முள்ளவன் உணவு உண்ணும் கரண்டிகளையும் திருடிக் கொண்டு போவான் என்று பயம்.] —எமர்ஸன்

ஒரு கௌரவம் அடைந்தால், அது மேலும் பெருமைக்கு அடிப்படையாகும். —ஃபிரான்ஸ்

மானமில்லாத இடத்தில் மதிப்பில்லை. —ஜெர்மனி

கௌரவமுள்ள மனிதர்களிடையே ஒரு சொல்லே உறுதிப் பத்திரமாகும். —இத்தாலி

புறாவை அடக்குதல் கழுகுக்குக் கௌரவம் ஆகாது.—இத்தாலி

கௌரவம் (மனிதனின்) பழக்கங்களை மாற்றிவிடும். —லத்தீன்

பெருமைகளைத் தேடி ஓடவேண்டாம், அவை தாமாகவே உன்னைத் தேடி வரும். —யூதர்

அகௌரவத்தை விட்டு ஓடவேண்டும், ஆனால், கௌரவங்களை நாடி ஓட வேண்டாம். —யூதர்

நரி நரியைத் தூதனுப்பும், சிங்கம் சிங்கத்தைத் தூதனுப்பும். —ஆப்பிரிக்கா

எளிதாக வந்த பொருளுக்குச் சரியான கவனிப்பு இராது. —ஜெர்மனி

நல்ல பொருளை விலை குறைத்துக் கேட்பார்கள்; கெட்ட பொருளைக் கூடுதலாகக் கேட்பார்கள். —ஜெர்மனி

தானாக வந்தது நொண்டியா யிருக்கும். —ஜெர்மனி

வலுவில் வந்தவள் கிழவி. —தமிழ்நாடு

செல்வங்களை விடச் செல்வாக்கு மேலானது. —அயர்லந்து

ஏழையின் ரூபாய்க்கு ஓர் அணா மதிப்புத்தான். —ஸ்வீடன்

நான் யார் என்று கேளுங்கள், நான் எவர் மகன் என்று கேட்க வேண்டாம். —ரஷ்யா

ஒரு ரூபாயின் மதிப்புத் தெரிய வேண்டுமானால், யாரிடமாவது அதைக் கடனாகக் கேட்டுப் பார், —இத்தாலி

குதிரைமேல் சவாரி செய்பவனை மூன்று முறை அழைப்பார்கள்; நடந்து செல்பவனை ஒரு முறைதான் அழைப்பார்கள்
—இத்தால

அழையாத விருந்துக்கு நீ போனால் கையில் ஒரு நாற்காலியுப் கொண்டு போ.
—அயர்லந்து

கண்யமான மனிதன் தன் வீட்டு வாயிற்படியில் உட்கார்ந்திருக்க மாட்டான்.
—அமெரிக்க

வெறும் கௌரவம் விடுமுதலாகாது.
—அமெரிக்க

இலாயத்திலே நல்ல குதிரையிருந்தால், ஒருவன் நடந்து செல்வதை இகழ்ச்சியாக எண்ணமாட்டான்.
—இத்தா

கடைசியாகக் கோணியில் போட்டதுதான் முதலில் வரும்
—சுவீட

# புகழ்

உத்தமர்களைப் பாராட்டினால் உயர்வடைவர், மற்றவர்கள் புகழ் பெற்றதோடு நின்றுவிடுவர்.
—இங்கிலாந்

கரகோஷத்தால் தலை கிறுகிறுப் படைந்துவிடும்.
—(

புகழின் கோயில் கல்லறையின்மேல் நிற்கிறது.
—இங்கிலா

புகழ் அடைய வேண்டியதுதான்; ஆனால், கௌரவத்தை இழக்கக் கூடாது.
—ஜெர்ம

வீரச் செயல்களின் நறுமணமே புகழ்.
—கி

உண்மையான புகழ் தற்செயலாக வருவதில்லை.
—கி

அற்பமான புகழ் இகழ்ச்சியாகும்.
—இந்தி

புகழ்வதுதான் இகழ்வதற்கு ஆரம்பம்.
—ஜப்பா

புலி தன் தோலை விட்டுச் செல்கின்றது; மனிதன் தன் பெயரை விட்டுச் செல்கிறான்.
—ஜப்பா

புகழை விட்டுச் செல்பவன் இறந்தவனாகான்.
—அரே

என்மீது ரோஜா செடிகளை நடும்வரை, நான் சாதாரண எமனாகத்தான் இருந்தேன்.
—கீழ் நா

ஆசிரியர்களை அவர்கள் இருக்கும்பொழுது புகழவும்; வேலையாட்களை வேலை முடிந்தபின் புகழவும்; நண்பர்களை அவர்கள் இல்லாதபொழுது புகழவும். —சயாம்

ஒருவர் புகழ்ந்து பேசுவது தமக்கு அது திரும்ப வரும் என்பதற்காக. —ஃபிரான்ஸ்

புகழ் வரும்பொழுது நினைவு போய்விடும். —ஜெர்மனி

ஒருவனுடைய இகழ்ச்சி அவனுக்கு முன்னால் செல்லும், புகழ் பின்னால் செல்லும். —ஜெர்மனி

புகழில் முக்கால் பகுதி தலையிலுள்ளது. —வேல்ஸ்

புகழ் வாழ்க்கைக்கு அப்பாலும் நிற்கும். —வேல்ஸ்

பேரிகையைப் பார்க்கு முன்பே செவியால் கேட்கிறோம். —வேல்ஸ்

புகழ் நல்லவனை மேலும் பெரியவனாகவும், கெட்டவனை மேலும் தீயவனாகவும் செய்கிறது. —டென்மார்க்

நல்ல பெயர் வந்துவிட்டால், ஒருவன் துணிந்து பாவம் செய்யலாம். —ஹாலந்து

இனிப்புப் பண்டங்கள் உடலைக் கெடுக்கின்றன; புகழ் சிறந்தவர்களையும் கெடுத்து விடுகின்றது. —ஃபின்லந்து

புகழ் என்பது வீரச்செயல்களின் நறுமணம். —ஃபின்லந்து

இளமையிலேயே புகழடைந்தவன் பல தவறுகள் செய்கிறான். —சுவீடன்

புகழ் என்பது பெரிய நிழல். —சுவீடன்

ஒருவன் எவ்வளவு உயரமா யிருந்தாலும், அவன் நிமிர்ந்து நின்றால், அடுத்த ஊரில் தெரியாது; அவன் பெயர்தான் அங்கு செல்ல முடியும். —ஆப்பிரிக்கா

மனிதன் சவக்குழியில்தான் புகழப்படுகிறான். —ஆப்பிரிக்கா

புகழ் வந்த பின்பு பேசாமல் போய்த் தூங்கலாம். —போர்ச்சுக்கல்

நீதியில்லாமல் புகழ்ந்தால், கண்ணியமானவன் வருத்தமடைவான். —ஃபிரான்ஸ்

எல்லோராலும் புகழப்பெறும் ஒருவரால் புகழப்பட்டால், நான் மகிழ்ச்சியடைகிறேன். —லத்தீன்

செய்யவேண்டிய கடமையைச் செய்வதில் நாம் புகழுக்கு உரியவரல்லர். —லத்தீன்

புதிதாகப் புகழ் வராவிட்டால், பழைய புகழும் போய் விடுகிறது. —லத்தீன்

நான் உரக்கப் புகழ்வேன், மெதுவாக இகழ்வேன். —ரஷ்யா

உன்னால் புகழ முடியாதவைகளைப் பற்றிக் குறிப்பிடாமல் இருந்துவிடு. —ரஷ்யா

## வசை

மஞ்சள் துண்டைக் கண்டெடுத்த சுண்டெலி மளிகைக் கடை வைத்ததாம். —இந்தியா

வசையால் செத்தவன் இல்லை; வாழ்த்தால் வாழ்ந்தவனும் இல்லை. —இந்தியா

ஓயாமல் கூறும் நிந்தனை பெருகி வளர்ந்துகொண்டே யிருக்கும். —ஜெர்மனி

சொற்களால் வதைப்பதும் கொலைதான். —ஜெர்மனி

இல்லாத ஆளைப்பற்றியே ஏச்சு அதிகமாயிருக்கும். —போலந்து

ஜனங்கள் ஒருவனைப் புகழ்ந்தால், ஒருவரும் நம்புவதில்லை; இகழ்ந்தால் எல்லோரும் நம்புவர். —பெல்ஜியம்

மற்றவர் வீடுகளிலேயே தங்கியிருப்பவன், தன் வீட்டுக்கு வேற்றாளாகிவிடுவான். —இத்தாலி

வசை மொழிகள் அணைகிற நெருப்புக்குத் துருத்தியாகும். —இங்கிலாந்து

கன்னிப் பெண்ணைச் சுட்டாலும் சுடு; அவளை அவதூறாகப் பேசாதே. —பல்கேரியா

ஒரே கல்லில் இருமுறை தட்டி விழுதல் கேவலம். —கிரீஸ்

மற்றொருவனை நிந்திப்பவன் தான் பரிசுத்தமா யிருக்க வேண்டும். —டென்மார்க்

இகழ்ச்சிக்குச் சாவேயில்லை. —லத்தீன்

## பதவி

ஒட்டகத்தின்மேல் அமர்ந்தவுடன் அம்பாரிக்குள் மறைந்து கொள்ளாதே. [உயர்ந்த பதவி கிடைத்தவுடன் பழைய உறவினர், நண்பர்களை மறந்துவிடக் கூடாது.]
—துருக்கிஸ்தானம்

பதவியில் இல்லாதபோது ஒருவன் கண்டிக்கிற குற்றங்களைப் பதவியில் அமர்ந்தவுடன் அவனே செய்கிறான். —சீனா

உத்தியோகம் மனிதன் குணத்தை அம்பலப்படுத்திவிடுகின்றது
—கிரீஸ்

## உழைப்பு

உழைப்பே ஓய்வுக்குத் திறவுகோல். —இந்தியா

கழுதைபோல் உழைக்க வேண்டும்; பின்பு மனிதனைப்போல் உண்ணவேண்டும். —இந்தியா

அடிமைபோல் உழைப்பவன் அரசனைப்போல் உண்கிறான்.
—இந்தியா

உறங்குகின்ற சிங்கத்தைவிட அலைகின்ற நரி மேலானது.
—துருக்கி

காட்டுப் பறவைக்கு உணவில்லை என்றால், உலகம் முழுவதும் அதற்குத் திறந்து கிடக்கின்றது. —சீனா

ஈச்சம் பழத்தைக் கொட்டையுடன் விழுங்க முடியாது. — ( ” )

அவசரக் காலத்தின் தேவைக்கு ஓய்வு நேரத்தில் தேடி வை.
—சீனா

மத்தளமாய்ப் பிறந்தால் சாகும்வரை அடிதான். —ஜெர்மனி

அடுப்பு ஊதுபவன் கண்களில் பொறிகள் படத்தான் செய்யும்
—ஜெர்மனி

உழைப்பு கல்லிலிருந்து ரொட்டியை உண்டாக்கும். —ஜெர்மனி

துடைப்பக்கட்டை தேய்ந்து போனால், அது செய்துவந்த வேலை துலக்கமாய்த் தெரியும். —ஜெர்மனி

வீட்டில் ஒரு பணியாளனே உண்டு, அவன் பெயர் யஜமானன்.
—ஜெர்மனி

நனையாத கால்சட்டைகளுக்கு உண்ண மீன் கிடைக்காது
—பல்கேரியா

பெண்மையான கைகள்—வேலை செய்வது மற்றவர்கள்
—பல்கேரியா

நடந்தால் ஏதாவது கிடைக்கும்—அமர்ந்தால் ஒன்றுமில்லை
—பல்கேரியா

வண்டியிலே மூட்டைகளை ஏற்றுவதைவிட, கீழே தள்ளுவது
எளிது.
—செ

மாரிக்காலம் வந்தால், உன்னிடம் ஒரு கேள்வி கேட்கும்
'கோடை முழுவதும் நீ என்ன செய்துகொண்டிருந்தாய்
—செ

கையில் அழுக்கு அதிகமானல், ரொட்டியின் வெண்மை
அதிகரிக்கும்.
—எஸ்டோனியா

பச்சை மரத்தையே வெட்ட வேண்டியிருக்கும், உளுத்தமர
தானகச் சாயும்.
—எஸ்டோனியா

உழைப்புத்தான் வாழ்க்கை என்று உணர்ந்து வேலை செ
அதன் கால்பட்ட இடமெல்லாம் ரோஜாச் செடிக
முளைக்கின்றன.
—லத்தி

கழுதைபோல் உழைத்தவன் கனவானைப்போல் உண்பா
கனவானைப் போல் உழைத்தவன் கழுதைபோ
உண்பான்.
—லத்தி

திராட்சைத் தோட்டத்திற்குத் தேவை ஒரு மண்வெட்
பிரார்த்தனை யன்று.
—ஆர்மீனி

உழவே தேவையில்லாத எந்த இடத்திற்கு நீ போக முடிய
—ஸ்பெய

முத்துமாலை அணிபவர்களுக்கு முத்துச் சிப்பிக்காகக் கு
பவனை எத்தனை முறை மீன்கள் கடித்தன என்
தெரியாது.
—ஆப்பிரி

வியர்வையைச் சிந்து, நீ நன்கு வாழ்வாய். —ஆப்பிரி

மனிதன் உழைக்கிறன், கடவுள் வாழ்த்துகிறர். —அமெரி

வெளியே போன கால், எப்பொழுதும் ஏதாவது கொண்டு வரும். —ஸ்காட்லந்து

உண்பதைத் திரும்ப நிரப்பிவிட வேண்டும். [உழைப்பினால் தான் நிரப்ப முடியும்.] —எகிப்து

மனிதன் உழைக்கவே பிறந்தவன். —பழைய ஏற்பாடு

உழைக்கும் மனிதனின் உறக்கம் இனிமையானது. —புதிய ஏற்பாடு

வயலில் முதலாளாகவும், படுக்கைக்குக் கடைசியாளாகவும் இரு. —சீனா

செய்யும் வேலையை மாற்றிக் கொள்ளல் உழைப்புக்குப் பரிகாரம். —இங்கிலாந்து

உழைப்பவர்கள் ஏழைகளா யிருக்கிறார்கள்; ஏனெனில் அவர்கள் பெருந் தொகையினர். —இங்கிலாந்து

உழைப்பு மகிழ்ச்சிக்குத் தந்தையாகும். —ஃபிரான்ஸ்

உழைத்தலே பிரார்த்தனை செய்தல். —லத்தீன்

உழைக்கவே பிறந்த நீ ஓய்வை ஏன் தேடுகிறாய்? —லத்தீன்

உழைப்பிலிருக்கிறது வாழ்க்கை. —ரஷ்யா

தனக்குரிய வேலையைக் கண்டுகொண்டவனே பாக்கியசாலி; அவன் வேறு பாக்கியத்தைக் கேட்க வேண்டியதில்லை. —கார்லைல்

## நேரம்

காகம் கூவிவிட்டது, பொழுதும் புலர்ந்துவிட்டது. —இந்தியா

காகம் இல்லாத இடத்தில் பொழுது விடியாதா? —இந்தியா

ஓர் அங்குல நேரம், ஓர் அங்குலத் தங்கத்தாலும் வாங்க முடியாதது. —சீனா

மீன் பிடிக்க நேரமுண்டு, வலை காயப் போடவும் நேரமுண்டு. —சீனா

காலம் கடவுளுடையது, நம்முடையதன்று. —ஹாலந்து

காலத்தால் ஏற்பட்ட புண் காலத்தாலேயே ஆறும். —இங்கிலாந்து

காலத்தை எதிர்பார்த்திரு, காலம் எவனுக்காகவும் காத்திருப்பதில்லை. —இங்கிலாந்து

நிகழ்காலத்தை நாம் இழப்பதால், எல்லாக் காலத்தையும் இழக்கிறோம். —இங்கிலாந்து

காலம் வந்தால் அடங்காத காளையும் நுகத்தடி ஏந்துகின்றது. —ஷேக்ஸ்பியர்

காலத்தை வீணாக்குவதற்காகக் கடிகாரம் என்னைக் கண்டிக்கின்றது. —ஷேக்ஸ்பியர்

காலமும் வெள்ளமும் எவருக்கும் காத்திருப்பதில்லை. —இங்கிலாந்து

உலகத்துச் செல்வங்களெல்லாம் இழந்து போன ஒரு கணத்தைத் திரும்பப் பெற முடியாது. —ஃபிரான்ஸ்

மனிதன் காலத்தை விலைக்கு வாங்க இயலாது. —ஜெர்மனி

நடந்து வரும் நிகழ்ச்சிகளின் ஆறு, காலம்; அது பாய்ந்து செல்லும் வெள்ளம். —கிரீஸ்

காலம்தான் உலகின் ஆன்மா. —கிரீஸ்

நல்ல நேரம் ஒரு முறைதான் வரும். —இத்தாலி

காலம் ஓசையில்லாத அரம். —இத்தாலி

பறந்து செல்லும் நாட்களைப் பிடிக்க லகானில்லை. —லத்தீன்

## காலம்

பன்னிரண்டு ஆண்டுகள் கழிந்தால், குப்பை மேடும் செழிப்பாகிவிடும். —இந்தியா

முற்காலத்தில் பொய்யர்கள் மாண்டுப் போவார்கள்; இப்பொழுது அவர்களுக்குத் தடுமன்கூடப் பிடிப்பதில்லை. —இந்தியா

பஞ்சக் காலத்தில் குடியானவனிடம் போ; செழிப்பில் சேணியனிடம் போ. —இந்தியா

பல்லுள்ளபோதே தேங்காயைத் தின்ன வேண்டும் —இலங்கை

இரவும் பகவும் எவனுக்காகவும் காத்திருப்பதில்லை. —ஜப்பான்

மழை பெய்யும் பொழுது நீர் ஏந்திக்கொள். —துருக்கி

வெள்ளம் போய்விடும், வண்டலே தங்கும். —துருக்கி

காலத்திற்கு இரண்டு நாட்களே உண்டு—ஒன்று உனக்கு நல்ல நாள், மற்றது உனக்கு ஆகாத நாள். —அரேபியா

வசந்தம் தாய்போல் மெல்ல வருகின்றது; மாரிக்காலம் பகைவனைப் போல் மூர்க்கமாக வருகின்றது. —திபேத்து

எல்லாத் துயரங்களுக்கும் இரண்டு பரிகாரங்கள் உண்டு; அவை காலமும் மௌனமும். —ஃபிரான்ஸ்

மாரிக்காலத்தில் எங்கும் மழை பெய்யும்; கோடையில் கடவுள் விரும்பிய இடங்களில் மட்டும் பெய்யும் —ஃபிரான்ஸ்

மனிதன் மாளிகைகளை அமைக்கிறான்—காலம் அவைகளை அழிக்கின்றது. —ஜெர்மனி

வசந்த காலம் கன்னி, கோடை அன்னை, இலையுதிர் காலம் கைம்பெண், மாரிக்காலம் மாற்றாந்தாய். —போலந்து

ஒவ்வொருவனும் தன் குற்றத்தைக் காலத்தின்மேல் சுமத்துகிறான். —இங்கிலாந்து

இரும்பு யுகத்தில் பொன்னான வாழ்க்கையை நாம் எதிர் பார்க்கக்கூடாது. —அயர்லந்து

எல்லாப் புண்ணுக்கும் காலம்தான் களிம்பு. —வேல்ஸ்

சீப்பு தலையை வழுக்கையாக்குவதில்லை. —ஸெக்

காலை வேலை பொன்; மாலை வேலை மாசு. —ஸெக்

எல்லா ஆண்டுகளும் ஒன்றுபோல் இருக்கமாட்டா. —ஸெக்

திங்கட்கிழமை இழந்தவன் அந்த வாரத்தையே இழந்தவனாவான். —கிரீஸ்

நீதிபதியைப் பார்க்கிலும் காலம் உண்மையை வெளியே கொண்டு வந்துவிடும். —ஹங்கேரி

காலத்தைப்போல் பழிவாங்குவது வேறு எதுவுமில்லை. —லத்தீன்

காலம் என்ற அரம் இராவும் பொழுது, ஓசையே கேட்பதில்லை. —லத்தீன்

பணத்தை இழந்தால் சொற்ப நஷ்டம்; நேரத்தை இழந்தால் எல்லாம் நஷ்டம். —ஆர்மீனியா

கழிந்த நாள் மீளவும் வராது. —இங்கிலாந்து.

காலை நேரம்—சொக்கத் தங்கம். —எஸ்டோனியா

ஆண்டுகள் அழகுக்கு மரியாதை செலுத்துவதில்லை.—செர்பியா

காலம் வந்தால், வெண்ணெயும் தேனும்கூடக் கசக்கும். —பல்கேரியா

## ஓய்வு

வளைத்தே வைத்திருந்த வில் தொய்ந்து போகும். —இந்தியா

ஓடிக் களைப்பதைவிட, அடைத்துக் கிடப்பதில் குதிரை அதிகக் களைப்படையும். —ஃபிரான்ஸ்

ஓய்வுதான் பாதி உணவு. —ஜெர்மனி

வயிறு நிறைந்துவிட்டால், எலும்புகள் கிடையில் கிடக்க ஆசை கொள்ளும். —அயர்லந்து

நண்பகல் என்பதை நாமாக வைத்துக் கொள்ளலாம்; மாலை நேரம் தானாக வரும். —டென்மார்க்

விடுமுறை நாட்கள் அரசர்களைப்போல வந்து, ஆண்டிகளைப் போலச் செல்கின்றன. —எஸ்டோனியா

வேலையோடு ஓய்வைக் கலந்து கொண்டால், உனக்குப் பயித்தியமே பிடிக்காது. —ரஷ்யா

தொழிலில்லாமல் இருத்தல் ஓய்வாகாது. —இங்கிலாந்து

ஓய்வைத் தேடி மக்கள் களைப்படைகின்றனர். —இங்கிலாந்து

இறந்தவர்களுக்குத்தான் ஓய்வு —இங்கிலாந்து

கடுமையான உழைப்புக்குப்பின் ஓய்வு; கடலில் புயலுக்குப் பின் துறைமுகம். —இங்கிலாந்து

ஓய்வெடுத்துக் கொண்டபின் ஒரு மைல் ஓடவும். —ஃபிரான்ஸ்

அதிக ஓய்வே வேதனையாகும். —கிரீஸ்

வயலுக்கு ஓய்வு கொடுத்தால், அதிக விளைச்சல் காணும். —லத்தீன்

செழிப்புள்ள நிலமும் ஓய்வில்லாவிட்டால் களராகிவிடும். —ஸ்பெயின்

வேலையின் மூலமே ஓய்வு கிடைக்கும். —துருக்கி

## வேலை

வேலை இல்லையானால், நோய்தான். —இந்தியா

புது வேலைக்காரனின் சுறுசுறுப்பு இருபது நாட்களுக்குத்தான். —ஜப்பான்

வேலையை இடையில் விடுவது தீது, எல்லை கடந்து செல்வதும் தீது. —சீனா

ஒருவன் இருந்தால் இரண்டு வாளிகள் தண்ணீர் கொண்டு வருவான்; இருவர் இருந்தால் ஒரு வாளி கொண்டுவருவர்; மூவர் இருந்தால் அதுவும் வராது. —சீனா

மூன்று வருடம் பஞ்சம் இருந்தாலும், அது சமையற்காரனை அண்டாது. —சீனா

சாப்பாட்டை மறு நாளைக்கு ஒத்திவைத்தாலும்; வேலையை ஒத்தி வைக்காதே. —குர்திஸ்தானம்

கை பறிப்பதையெல்லாம் தோள்தான் சுமக்க வேண்டும். —மலாய்

வேலைக்காரருக்கு உணவு அளி. —பாரசீகம்

ஓடுகிற குதிரைக்குத்தான் அடி அதிகம். —ஃபிரான்ஸ்

சயித்தான் உன் வீட்டுக் கதவைத் தட்டினாலும், உன் வேலையைத் தொடர்ந்து செய். [உனக்கு வேலையுள்ள இடத்தில் சயித்தானுக்கு வேலை இராது.] —ஜெர்மனி

பொதியேற்றிய கழுதை கனைக்கிறது. —ஜெர்மனி

ஒரு காரியம் முடிந்தால், தொடக்கமும் முடிவும் கைகோத்துக் குலாவும். —ஜெர்மனி

முதுகிலே சுமையுள்ளவன் மெதுவாக நடப்பான். —ஜெர்மனி

வேலை செய்யும் கையிலிருந்தே செழிப்புண்டாகும். —அயர்லந்து

தொடங்காமலிருத்தல் நலம், தொடங்கியதை இடையில் நிறுத்துதல் தீது. —ஸெக்

வேலையில் ஈடுபட்டிருப்பவனுக்குச் செய்திகள் கேட்க விருப்பம் இராது. —ஸெக்

திரிகையில், அடியில் சும்மா கிடக்கும் கல்லும் மாவு திரிக்கிறது.
—டென்மார்க்

வேலை முடியவில்லை; உன் கைகள் இரண்டும் மார்பின்மீது தூக்கி வைக்கப்படும்வரை உனக்கு வேலையுண்டு.
—எஸ்டோனியா

எனக்கு எது ரொட்டி அளிக்கின்றதோ அது எனக்குக் கடவுள்.
—ஃபின்லந்து

செய்வதை திருந்தச் செய், இருமுறை செய்ய இடம் வைக்க வேண்டாம்.
—இங்கிலாந்து

வேலையினால் செல்வம் பெருகுவதற்குப் பதிலாக ஒருவனுக்கு முதுகில் கூனல் ஏற்படலாம்.
—ரஷ்யா

ஆரம்பம் கஷ்டம், நடுவில் எளிது, முடிவில் இன்பம்.
—எஸ்டோனியா

வீட்டின் கதவுக்குத்தான் கடுமையான வேலை.
—ஸெக்

வண்டி செல்லும்பொழுது பாரம் தெரியாது.
—எஸ்டோனியா

கொட்டாவி விட்டுக்கொண்பட வேலை செய்யாதே, கண்ணை மூடிக் கொண்டு ஓடாதே.
—எஸ்டோனியா

அதிக வேலைக்காரர்கள் அதிக எதிரிகள்.
—லத்தீன்

பல விஷயங்களை நினைக்கலாம்; ஒன்றையே செய்ய வேண்டும்.
—அமெரிக்கா

வந்தவர்களுக்கெல்லாம் கதவு திறப்பவன் நல்ல காவற்காரனல்லன்.
—சுவீடன்

வேலைக்காரனுக்கு நீ நல்ல உணவு கொடுத்தால், பசு அதிகப் பால் கறக்கும்; பூனையும் குறைவாகப் பால் குடிக்கும்.
—சுவீடன்

ஒருவனுக்கு மேலாக மற்றொருவனைத் தூக்கிவிடுவது வேலை தான்.
—ஆப்பிரிக்கா

சரியாகச் செய்யாத வேலையை இருமுறை செய்ய நேரும்.
—இங்கிலாந்து

குதிரைகளைப்போல் வேலை செய்துவிட்டு, நாய்களைப்போல் சண்டையிட வேண்டாம்.
—இங்கிலாந்து

மூட்டுவுதான் வேலைக்கு உரைகல்.
—வாஷிங்டன்

அதிகப் பேர்கள் இருந்தால், குறைந்த வேலைதான் நடக்கும்.
—ஜெர்மனி

நன்றாகத் தொடங்கிய வேலை பாதி முடிந்ததாகும். —கிரீஸ்

எந்த வேலையும் இழிவில்லை, சோம்பல்தான் இழிவு. —கிரீஸ்

நீண்டபொழுது வேலையை முடிப்பதில்லை, இதயம்தான் செய்து முடிக்கின்றது. —இத்தாலி

முடிந்த வேலை பணத்தை எதிர்பார்க்கும். —போர்ச்சுகல்

## களைப்பு

சிறு சுமையாயிருந்தாலும் கடைசி நேரத்தில் கனம் அதிகமாகத் தோன்றும். —அமெரிக்கா

## தொழில்

எதிலும் ஆரம்பம் கஷ்டம். —எஸ்டோனியா

கண் பார்த்ததைக் கை செய்யும். —தமிழ்நாடு

வண்ணார், பாணர், நாவிதர் மூவருக்கும் கவலையே யில்லை.
—இந்தியா

பாய் முடைபவர்கள் பாயில் படுப்பதில்லை. —இந்தியா

குயவன் உடைந்த சட்டியிலேயே உண்பான். —இந்தியா

தொழிலாளி வீட்டில் பசி எட்டிப் பார்த்தாலும், உள்ளே நுழையத் துணிவதில்லை. —இங்கிலாந்து

ஏர்தான் அரசன், கடை இராணி, மற்றைத் தொழில்கள் நரக வாசனையுள்ளவை. —இந்தியா

முதன்மையான தொழில் விவசாயம், நடுத்தரமானது வாணிபம், மட்டமானது பிறரிடம் ஊழியம், மூடத்தனமானது பிச்சையெடுத்தல். —இந்தியா

வேலை செய்தால்தான் தொழிலைக் கற்கலாம். —இந்தியா

பெண்ணுக்குக் கணவன் மனிதன்; மனிதனுக்கும் கணவனாயிருப்பது அவன் நடத்தும் தொழில். —இந்தியா

நாவு துணிகளுக்காக நெய்கின்றது; பேனு உணவுக்காக உழுகின்றது. [கல்வி கற்பிப்பதும், நூல் எழுதுவதும் பிழைப்புக்காக.] —சீனு

உறுதியுள்ள மனிதனைக் கண்டு வேலையே அஞ்சும். —சீனு

கைத்தொழில் என்ற குழாய் கனகமாய்ச் சொரியும். —அரேபியா

பல தொழில்களுள்ளவன் பட்டினியால் இறப்பான். —( " )

உன் வேலையை நேசி. —யூதர்

இந்த உலகம் வேலை நிறைந்தது, மறு உலகம் ஓய்வு நிறைந்தது. —யூதர்

கை வேலை செய்கிறவரைதான் வாய்க்கு வேலையிருக்கும். [தொழில் செய்கிறவரையே உணவு கிடைக்கும்.] —யூதர்

சிலர் கடவுளின் விபூதிகளைக் கண்டு வியக்கின்றனர்; மற்றவர்கள் துணி தைப்பதைக்கூட வியந்து பார்க்கின்றனர். —ஆப்பிரிக்கா

நூற்கக் கற்றுக்கொள்ளுமுன்னால், கொஞ்சம் பஞ்சு (கம்பளம்) சேதமாகத்தான் செய்யும். —ஃபிரான்ஸ்

செல்வத்தைவிட ஒரு தொழில் மேலானது. —வேல்ஸ்

தொழிலாளிகள் சகோதரர்கள். —வேல்ஸ்

சரியாக வெட்டாத 'கிராப்' இருவருக்குக் கேவலம். —டென்மார்க்

பன்னிரண்டு தொழில்கள்—பதின்மூன்று தோல்விகள். —ஹாலந்து

ஒவ்வொருவனும் தன் தொழிலில் திருடன்தான். —ஹாலந்து

எவ்வளவு காலம் தோல் தைக்கும் ஊசி பைக்குள்ளே கிடக்கும்? —எஸ்டோனியா

நீ எந்த ஓடத்திலிருந்தாலும், ஓடத்தை ஓட்டிக்கொண்டிரு. —எஸ்டோனியா

ஒரு கூடை முடைந்தவன் நூறு கூடைகள் முடைவான். —எஸ்டோனியா

கடலில் கை ஆட்சி செய்கின்றது; பூமியில் உதடு ஆட்சி செய்கின்றது. —ஸ்பெயின்

ஒரு மனிதனுடைய தொழில் அவனுக்கு கல்வியுமாகும்.
—அயர்லந்து

தொழில் தெரிந்தவனிடம் வேலையே நடுங்கும்.
—எஸ்டோனியா

## பயன்

நிறையப் பால் கொடுக்கும் பசு இரண்டு கால்களால் உதைத்தாலும் தாங்கலாம்.
—இந்தியா

தேனடையைப் பிழிந்தவன் கையை நக்கத்தான் செய்வான்
—இந்தியா

என் செருப்பு சிறிதா யிருந்தால், உலகம் பெரிதா யிருந்து என்ன பயன்?
—துருக்கி

பல்லில்லாதவனுக்கு முத்திரிக்கொட்டை கிடைக்கிறது.
—சீனு

சில பற்கள் உண்ணப் பயன்படும், சில வெளியே காட்டுவதற்கே பயன்படும்.
—கீழ்நாடுகள்

பயனுள்ள பொருள் சுமையாகத் தோன்ருது.
—ஃபிரான்ஸ்

சாறு குடித்தவனுக்குத் தோடு தேவையில்லை.
—ஜெர்மனி

முட்கள் இல்லாவிட்டால், கடிகாரம் பயனற்றது.
—போலந்து

சேவலே கிராமத்தின் கடிகாரம்.
—போலந்து

மையை உபயோகிக்காவிட்டால் காய்ந்துவிடும்.
—போலந்து

அவன் வண்டியின் ஐந்தாவது சக்கரம். [வண்டிக்கு நான்கு சக்கரங்களே தேவை; ஐந்தாவது வீண்.]
—பெல்ஜியம்

விளக்கைப் பார்க்க வேண்டாம். வெளிச்சத்தைப் பார்.
—அயர்லந்து

மலட்டுப் பசுவைவிட, பால்கறக்கும் வெள்ளாடு மேல்.
—எஸ்டோனியா

(பிறருக்குச் சொல்லிக் கொடுக்காமல்) கட்டி வைத்திருக்கும் அறிவு பயனற்றது.
—லத்தீன்

இன்று செய்த நன்மை நாளைய இன்பம். —ஸ்பெயின்

நல்ல மணி நெடுந்தூரம் கேட்கும்! கெட்டமணி அதைவிட அதிகத் தூரம் கேட்கும். —ஃபின்லந்து

உடுத்திவரும் பட்டைப் பூச்சி அரிப்பதில்லை. —ஸெர்பியா

நாம் கைகளை உபயோகித்தால் அறிவு பெறுகிறோம்; மூளையை உபயோகித்தால் வலிமை பெறுகிறோம்; இதயத்தை உபயோகித்தால் இரக்கம் பெறுகிறோம். —ஸெர்பியா

## வியாபாரம்

விற்க வேண்டியவைகளை மலர்களால் அலங்கரித்து வை. —ஜப்பான்

கூட்டு வியாபாரம் குடுமிப் பிடி. —இந்தியா

கடைத் தெருவில் தாய் யார், தந்தை யார்? —துருக்கி

கொள்முதல் செய்வதற்குமுன்னால், விற்பனை பற்றி யோசனை செய். —சீனா

நீ ஏமாறாமலிருக்க வேண்டுமானால், மூன்று கடைகளில் விலை விசாரிக்க வேண்டும். —சீனா

சிரித்த முகமில்லாதவன் கடை வைக்கக் கூடாது. —சீனா

ரொக்கம் கொடுத்து வாங்குபவன் பங்காளிபோல் நடத்தப் படுவான். —ஆப்பிரிக்கா

கழுதையைப் பற்றிக் குறைசொல்பவனே அதை வாங்குவான். —அல்பேனியா

சரக்கை நிறையக் கேட்டால், விலையைக் குறைக்கலாம். —இங்கிலாந்து

கம்பளம் விற்பவன் கம்பளம் வாங்குவோனைத் தெரிந்திருப் பான். —இங்கிலாந்து

நல்ல மதுவுக்கு விளம்பரம் தேவையில்லை. —இங்கிலாந்து

சந்தைக்குப் போன மட்டப் பொருள்களையும் வாங்க ஒரு குருடன் இருப்பான். —அயர்லந்து

கம்பளம் வாங்கப் போனவன், தன் உரோமத்தையும் இழந்து விட்டு வருவதுண்டு. —ஸ்காட்லந்து

சரக்கைப் புகழ்ந்து பேசுபவன் விற்க விரும்புகிறான், குறைத்துப் பேசுபவன் வாங்க விரும்புகிறான். —ஸெக்

ஒன்பது வியாபாரம் செய்பவனுக்கு, தரித்திரத்தைச் சேர்த்துப் பத்தாகும். —ஸெக்

வியாபாரம் தங்கப் பெட்டி. —எஸ்டோனியா

ஒரு மனிதனுக்கு உணவளிக்க முடியாத வியாபாரமே இல்லை. —எஸ்டோனியா

கனவான்களிடம் விற்கப் போனால், பழங்களோடு கூடையும் போய்விடும். —ஃபின்லந்து

வாணிபத்திற்குப் பகுத்தறிவு (கருத்து) வேண்டும். —பின்லந்து

விலைக்கு வாங்கப் போகிறவன் குறை சொல்லிக்கொண்டே யிருப்பான். —இத்தாலி

கடனுக்கு வாங்கி ரொக்கத்திற்கு விற்கவேண்டும். —இத்தாலி

போணி பண்ண வந்தவனை விட்டுவிடாதே. —ரஷ்யா

பொன்னில் இழப்பதைவிட, தவிட்டில் ஆதாயம் தேடு —ஆர்மீனியா

வியாபாரம் சில சமயங்களில் தாயாயிருக்கும், சில சமயங்களில் மாற்றுந் தாயாகிவிடும். —ஆர்மீனியா

விற்காத பொருள்களுக்கு விளம்பரம் தேவை. —அமெரிக்கா

வியாபாரியா யிருப்பதன் நுட்பம் பணத்தை வாங்குவதில், விற்பனையிலன்று. —ஸ்பெயின்

இரகசியமாகக் கொள்முதல் செய்து, வெளிப்படையாக விற்க வேண்டும். —ஸ்பெயின்

கடவுள் ஒருவரையே நாங்கள் நம்புகிறோம், மற்றவர்களெல்லோரும் ரொக்கமே கொடுக்க வேண்டும். —அமெரிக்கா

பணமில்லாத வியாபாரி நிலமில்லாத குடியானவன். —சுவீடன்

பணம்தான் சந்தையை உண்டாக்கும்; மனிதர்கள் அல்லர். —சுவீடன்

நெடுநாள் தேங்கிக் கிடந்த சரக்குகளின் விலைகள் மறந்து போம். —சுவீடன்

கூட்டு வியாபாரத்தைக் கண்டுபிடித்தவன் சயித்தான்.
—போலந்து

கஸ்தூரி விற்று நஷ்டமடைவதைப் பார்க்கிலும், புழுதியை விற்று லாபமடைய வேண்டும். —அரேபியா

சரக்கு தானே தன்னைப்பற்றிப் பேசும். —பல்கேரியா

சிறு தொழில்களில் இலாபம் அதிகம். —சீனு

பல தொழில் கற்றவன் ஒன்றிலும் உருப்படான்.
—இங்கிலாந்து

உத்தியோகத்தைவிட வாணிபமே சிறந்தது. —இங்கிலாந்து

வாணிபம் பணத்திற்குத் தாய். —இங்கிலாந்து

ஒவ்வொருவனும் தன் தொழிலைக் குறை சொல்லுவான்.
—இத்தாலி

ஒரு தொழிலுள்ளவன் உலகைச் சுற்றலாம். —ஸ்பெயின்

எம்பொழுதும் இலாபமடைந்து கொண்டே யிருப்பவன் வணிகனல்லன். —ஹாலந்து

விற்றுக்கொண்டே யிருத்தல் வணிகனின் திறமையன்று; பணம் வசூலித்தலே திறமையாகும். —ஸ்பெயின்

நஷ்டமடையும் வியாபாரி சிரிக்க முடியாது. —இங்கிலாந்து

எந்தப் பொருள் கிராக்கியாகும் என்பதைத் தெரிந்து கொள்ளக் கூடியவன் ஓராண்டு வாணிபம் செய்தால் போதும். —இங்கிலாந்து

## இலேவாதேவி

இலேவாதேவிக்காரன் அரசனுக்கு ஒருபடி மேல். —இந்தியா

விதையைப் பூச்சி அரிக்கின்றது; நகர மக்களை இலேவா தேவிக்காரன் அரித்துவிடுகிறான். —டென்மார்க்

மறு உலகிலே இலவோதேவிக்காரன் பழுக்கக் காய்ந்த நாணயங்களை எண்ண வேண்டியிருக்கும். —ரஷ்யா

# இரகசியம்

ஒருவர் அறிந்தால் இரகசியம், இருவர் அறிந்தால் பரசியம்.
—தமிழ்நாடு

சுவர்களில் சுண்டெலிகள் உண்டு. சுண்டெலிகளுக்கும் செவிகள் உண்டு.
—பாரசீகம்

ஒரு பெண் அந்தரங்கமாக வைத்துக் கொள்ளக்கூடிய விஷயம் அவளுடைய வயதுதான்.
—ஃபிரான்ஸ்

பகலுக்கு கண்கள் உண்டு, இரவுக்குச் செவிகள் உண்டு.
—ஜெர்மனி

வாயாடிகளுக்கு ஓர் இரகசியம் பாரமா யிருக்கும்.
—போலந்து

உன் நண்பனிடம் ஒரு பொய்யைச் சொல்லிவை; அவன் அதை வெளியிடாமலிருந்தால், அவனிடம் உண்மையைச் சொல்லு.
—அயர்லந்து

இரகசியப் பேச்சு இல்லாத வீடே இல்லை. —ஸ்பெயின்

உன் அன்பை மனைவியிடம் கொடு; அந்தரங்கத்தை அன்னையிடம் கொடு.
—ஸ்பெயின்

இரகசியத்தை வெளியே சொல்பவன் மற்றவருக்குக் கையாளாகிறான்.
—இங்கிலாந்து

எதிரிக்குத் தெரியாமல் உன் இரகசியத்தைக் காக்கவேண்டுமானால், அதை ஒரு நண்பனுக்கும் சொல்லாதே. —( " )

காலத்தில் வெளியாகாத இரகசியமில்லை. —இங்கிலாந்து

இருவருக்குத் தெரிந்த இரகசியம் தேவ ரகசியம்; மூவருக்குத் தெரிந்தது எல்லோருக்கும் தெரிந்ததாகும்.
—ஃபிரான்ஸ்

இரகசியத்தில் கொஞ்சம் வெளியிட்டால் போதும், எல்லாம் வந்துவிடும்.
—ஜெர்மனி

என் செருப்புக் கடிக்குமிடம் என்னைவிட வேறு எவருக்கும் தெரியாது.
—கிரீஸ்

பேச்சின் முத்திரை இரகசியம். —கிரீஸ்

இரகசியம் உன் கைதி, நீ அதை விட்டுவிட்டால், அது உன்னைக் கைதியாக்கிவிடும். —யூதர்

இரகசியத்தைக் காப்பதைவிட வாயில் தீயை அடக்கிக் கொள்ளல் எளிது. —லத்தீன்

## இலாபமும் நஷ்டமும்

கௌரவமும் இலாபமும் ஒரே கிண்ணியில் இருக்கமாட்டா. —இந்தியா

காயைத் தின்பவனுக்குக் கனியும் கிடைக்கும். —இங்கிலாந்து

தவறான லாபங்கள் உண்மையில் நஷ்டங்கள். —இங்கிலாந்து

ஆபத்தில் சிக்காமல் தப்புவதும் ஒருவனுக்கு ஆதாயம்தான். —இங்கிலாந்து

கௌரவமும் ஆதாயமும் ஒரே கோணியில் இருப்பதில்லை. —இங்கிலாந்து

சொற்ப லாபங்கள் பெரு நிதியாகிவிடும். —இங்கிலாந்து

தீய வழியில் வந்த நன்மை மூன்றும் தலைமுறைக்கு நில்லாது. —இங்கிலாந்து

லாபம் வருமானால் சிரமம் மறந்துபோம். —இங்கிலாந்து

சட்டென்று வருவது பொட்டென்று போகும். —இங்கிலாந்து

கருவாட்டில் போனது எனக்கு அயிரை மீனில் கிடைத்து விட்டது. —இங்கிலாந்து

நடக்கிற கால் லாபத்தோடு வரும். —இங்கிலாந்து

ஒருவன் நஷ்டமில்லாமல் ஆதாயமடைய முடியாது. —லத்தீன்

மற்றொருவனின் அறியாமையைப் பயன்படுத்தி எவனும் லாபமடையக் கூடாது. —லத்தீன்

நீ உன் சிலுவையைச் சரியாகச் சுமந்தால், அதுவும் உன்னைச் சுமக்கும். [சிலுவையைச் சுமத்தல் என்பது வாழ்க்கையின். துயரங்களைப் பொறுமையுடன் தாங்குதல்.] —லத்தீன்

என் மோதிரம் போனாலும், விரல்கள் இன்னும் இருக்கின்றன. —இத்தாலி

**லாபத்தின் ஆசையால் அறிவாளரும் மூடராகின்றனர்.**
—சீனு

இலாபம் ஏதாவது வேண்டுமானுல், முதல் ஏதாவது முடக்க வேண்டும்.
—ஹாலந்து

முதலில் கிடைத்த லாபத்தை விடாது பிடித்துக் கொள்.
—போலந்து

யூதனைப்போல் பேரம் பேசி, கிறிஸ்தவனைப்போல் பணம் கொடு.
—போலந்து

இலாபமும் நஷ்டமும் அண்ணனும் தங்கையும். —பெல்ஜியம்

நாளைக்கு எருது வருவதைவிட இன்று ஒரு முட்டை கிடைத்தால் போதும்.
—ருமேனியா

குண்டூசித் தலைபோன்ற அற்ப லாபங்களுக்காக மக்கள் கிழக்கும் மேற்கும் அலைகிறுர்கள்.
—சீனு

மூன்றணுவுக்கு நரித்தோல் வாங்கி, ஒருவன் வாலை மட்டும் முக்கால் ரூபாய்க்கு விற்றுவிட்டான். —இங்கிலாந்து

இலாபம் கிடைக்குமானுல் அவன் நரகத்திற்கும் போவான்.
—இங்கிலாந்து

முக்கியமான வாய்ப்பைக் கவனித்துக் கொண்டிரு. —( ” )

புகழைவிட ஆதாயம் மேல் —இங்கிலாந்து

ஆதாயமில்லாத விஷயத்தில் எனக்கு அக்கறையில்லை. ( ” )

நங்கூரம் போனுலும், கப்பலாவது மிஞ்சட்டும். —ஹாலந்து

நெருப்பில் இழந்ததைச் சாம்பலில் தேடு. —ஹாலந்து

தோற்கும் குதிரை சேணத்தைக் குறை சொல்லுகின்றது.
—இங்கிலாந்து

குதிரையை இழப்பதிலும் சேணத்தை இழ. —இத்தாலி

சொற்ப நஷ்டம் திடுக்கிடச் செய்யும், பெரு நஷ்டம் பழகிப் போகும்.
—ஸ்பெயின்

வாளியைப் போட்டுவிட்டுக் கயிற்றையும் இழக்க வேண்டாம்.
—ஸ்பெயின்

எது நன்மை என்பது அதை இழந்தால்தான் தெரியும்.
—ஸ்பெயின்

இழப்பதற்கு உன்னிடம் எதுவுமில்லையானால், நீ எதையும் செய்து பார்க்கலாம்.
—யூதர்

## ஊதியம்

நாவிதர், வைத்தியர், வக்கீல்கள், வேசிகள்—இவர்களுக்குக் கைமேல் காசு வைக்கவேண்டும்.
—இந்தியா

கூலிக்குத் தக்கபடி சலவை.
—இந்தியா

பாட்டின் முடிவு பணம்தான்.
—இந்தியா

ஆட்டம் ஆடுவது கரடி, பணம் பெறுவது கூத்தாடி.
—ரஷ்யா

உன் காலடியிலுள்ளது பிழைப்பு.
—ஆப்பிரிக்கா

கூலி யில்லாமல் வேலை பார்ப்பவன் நல்வாழ்க்கை வாழ முடியாது.
—இத்தாலி

அலையவைத்துக் கொடுப்பவன் இரட்டிப்பாகக் கொடுக்கவே மாட்டான்.
—இங்கிலாந்து

மேளத்திற்குக் கூலி கொடுப்பவன் இஷ்டமான ராகத்தை வாசிக்கச் சொல்லலாம்.
—இங்கிலாந்து

முன்னால் கூலியைக் கொடுத்துவிட்டால், பின்னால்தான் வேலை நடக்கும்.
—இங்கிலாந்து

## அற்பம் அற்பமா?

ஊசிதான் தையற்காரனுக்கு உணவளிக்கிறது; அற்பமான பொருளுக்கும் அதற்குரிய மதிப்பு உண்டு.
—ஜெர்மனி

காற்று வீசுகையில் கைவிசிறியின் பயன் தெரியாது.
—இந்தியா

மழை பெய்து ஓடைகள் நிறையும்; பனியால் அன்று.
—இலங்கை

குப்பை குவிந்தால், மலையாகிவிடும்.
—இந்தியா

ஓர் ஆணி ஒரு லாடத்தைக் காக்கும், ஒரு லாடம் ஒரு குதிரையைக் காக்கும், ஒரு குதிரை ஒரு வீரனைக் காக்கும், ஒரு வீரன் ஒரு நாட்டையே காப்பான்.
—துருக்கி

இற்றுப்போன ஓடத்திலும், மூவாயிரம் ஆணிகள் இருக்கும்.
—சீனு

கடலில் ஒரு துளிகூட விழுந்தாலும் (அந்த அளவுக்குக்) கடல் பெரிதாகும்.
—கீழ் நாடுகள்

எலி வளை அற்பமானதுதான், ஆனால் விரைவில் அதுவே பெரிய பாதையாகி விடும்.
—கீழ் நாடுகள்

நீ வந்ததும் எனக்குத் தெரியாது, போவதும் தெரியாது. [ஒரு கொசுகு ஓர் யானையின் காதில் நூறு வருடம் தங்கியிருந்து விட்டு வெளியேறும்போது, 'போய் வருகிறேன்!' என்று சொல்லிற்று. அப்பொழுது யானை சொல்லிய பதில் மேலேயுள்ளது. கொசுகுவைப்போல், முன்பின் தெரியாத சிலர் நம் வீடுகளில் வந்து பிரமாதமாகப் பேசிவிட்டுப் போவார்கள். அவர்களுக்கும் இது பொருந்தும்.]
—ஆப்பிரிக்கா

ஒவ்வோர் இலையாகச் சேர்ந்துவிட்டால், ஒரு காடாகும்.
—அல்பேனியா

மணிக்கு ஓர் அங்குலமானாலும், ஒரு நாளைக்கு ஓர் அடியாகும்.
—இங்கிலாந்து

சொற்ப விலையுள்ளது அற்பமென்று பழிக்கப்படும். —( " )

ஒவ்வொரு பெருமைக்கும் ஒரு நுண்ணிய விதையே காரணம்.
—வேல்ஸ்

ஒவ்வொரு ரோமமாய் உதிர்ந்து, தலை வழுக்கையாகும்.
—வேல்ஸ்

ஆளுக்கு ஒரு ரோமம், அடியேன் தலை மொட்டை.
—தமிழ்நாடு

ஓர் அணு நூறு அணுக்களைக் கொண்டுவரும். —இந்தியா

எறும்புக்கும் நிழலுண்டு. —இந்தியா

தோல் தைக்கும் ஊசியைக் கோணியில் கொண்டு செல்வதில்லை.
—பல்கேரியா

சிறிது சிறிதாகப் பறவை தன் கூட்டைக் கட்டுகிறது.
—பல்கேரியா

காலம் விழுங்குவதைவிட அதிகமாக எலி விழுங்கிவிடும்.
—டென்மார்க்

பழைய துடைப்பமும் வீட்டைப் பெருக்கும். —எஸ்டோனியா

ஒரு நாள் போனது தெரியாது; ஒரு பித்தான் இல்லாதது கண்ணுக்குத் தெரியும். —எஸ்டோனியா

சிறு சக்கரமே முதலில் சுற்றும். —எஸ்டோனியா

இருளில் சிறு நட்சத்திரமும் பளிச்சிடுகின்றது. —ஃபின்லந்து

சிறிய கைகள் பெரிய உதவி செய்ய முடியும். —நார்வே

ஒரு சுண்டெலியை இருவர் உண்ண முடியாது. —நார்வே

சிறு ஓடத்திலும் ஓடக்காரனுக்கு இடமிருக்கும்.
—ஆப்பிரிக்கா

செத்த பூனைகளைச் சுண்டெலிகளும் கடிக்கும். —ஜெர்மனி

தானியத்தோடு தானியம் சேர்ந்தால் ரொட்டி; கல்லோடு கல் சேர்ந்தால் மாளிகையாகும். —பல்கேரியா

## சிக்கனம்

சாமான்கள் கிராக்கியா யிருந்தால் ஒருமுறை அழுங்கள்; மலிவா யிருந்தால் பலமுறை அழவேண்டியிருக்கும்.
—இந்தியா

சில்லறைச் செலவுகளில் எச்சரிக்கையாயிரு; கப்பலை ஒரு சிறு ஓட்டை ஆழ்த்திவிடும். —பிராங்க்லின்

உன் துணிக்குத் தக்கபடி சட்டைக்கு வெட்டு. —பிராங்க்லின்

சிக்கனமே பெரிய வருமானம். —இங்கிலாந்து

சேமிப்பதுதான் செல்வமாகிறது. —இங்கிலாந்து

சில்லறைக் காசுகளை நீ கவனி; தங்கக் காசு தன்னைத் தானே பேணிக் கொள்ளும். —இங்கிலாந்து

சிக்கனமில்லாமல் எவரும் செல்வரானதில்லை; சிக்கனத்தால் ஏழையானவருமில்லை. —இங்கிலாந்து

சிக்கனம் என்பது ஏழைகளுக்குச் சொத்து, செல்வர்களுக்கு நல்லறிவு —ஃபிரான்ஸ்

சேமித்து வைத்த ஒரு பைசா இருமுறை சம்பாதித்ததாகும். —இத்தாலி

பையில் காசு தட்டிப்போனபின், சிக்கனம் செய்தல் பயனில்லை. —லத்தீன்

சிக்கனம் இருந்தால், மற்ற நல்ல பண்புகள் யாவும் வந்துவிடும். —லத்தீன்

வருவாயில் ஒரு பகுதியைச் செலவு செய்யவும், இரு பகுதியைத் தொழிலுக்குப் பயன் படுத்தவும், நான்காம் பகுதியை ஆபத்துக் காலத்திற்காகச் சேமித்து வைக்கவும். —பர்மா

அறுவடைக்குத் தக்கபடி வாழ்ந்துகொள். —பாரசீகம்

குறைவான பணத்தைச் செலவழிப்பது கஷ்டம், அதிகப் பணத்தை அள்ளிவிடலாம். —சயாம்

தேவையில்லாதவைகளை வாங்குவோன், விரைவில் அவசியமானவைகளையும் விற்க நேரும். —ஃபிரான்ஸ்

பெரும் செல்வம் சேர்க்க அதிகக் கஷ்டம் தேவையில்லை; (முதலில்) சிறிதளவு சேர்க்கவே சிரமப்படவேண்டும். —ஃபிரான்ஸ்

பணம் சேர்ப்பது கைகளால், ஆனால் செலவழிப்பது கால்களால்! —ஜெர்மனி

'பீர்' குடிக்க வசதி யிருந்தால், நீரைக் குடி; திராட்சை மது குடிக்க வசதியிருந்தால், 'பீ'ரைக் குடி. —போலந்து

சிக்கனத்திற்கு மேலான ரசவாதமில்லை. —அமெரிக்கா

தொப்பியை உடனே தூக்கவேண்டும், பணப் பையைத் திறக்கத் தாமதம் வேண்டும். —இங்கிலாந்து

அவசியமில்லாததை வாங்கினால், விரைவில் அவசியமானதை விற்கவேண்டியதிருக்கும். —ஸெக்

சிக்கனமுள்ளவனுக்கு மூன்று பேர்களின் வருவாயைப்போல் சேரும். —ஸெக்

தங்கத்தை விட்டெறிபவன் செம்பைப் பொறுக்கும்படி நேரும். —ஸெக்

நீண்ட உபவாசத்தால் ரொட்டி மிச்சமாகாது. —டென்மார்க்

எப்போதும் மிச்சப்படுத்திக் கொண்டிருப்பது எப்பொழுதும் வறுமையில் வாழ்வதாகும். —டென்மார்க்

கந்தலுக்கு ஒட்டுப் போட்டால், அதைத் தூரப்போட வேண்டியதுதான். —எஸ்டோனியா

பணப்பையைக் காப்பது கடவுளல்ல, அதைக் கட்டி வைத்திருக்கும் கயிறுதான். —ஸெர்பியா

பணக்காரனுவதற்குப் பணத்தைக் குவிக்கவேண்டியதில்லை; தேவைகளைக் குறைத்தாற் போதும். —ஸ்பெயின்

உனக்குத் தேவையானதை வாங்கவேண்டாம்; எது இல்லாமல் முடியாதோ, அதை வாங்கினுல் போதும். —ஸ்பெயின்

சிக்கனமே சம்பாத்தியம். —இத்தாலி

தகுதிக்குமேல் செலவு செய்பவன் தன் உயிரை முடித்துக் கொள்ளக் கயிறு தயாரிக்கிருன். —இங்கிலாந்து

காசோடு காசு சேர்ந்தால், பல காசுகளாகப் பெருகிவிடும். —இங்கிலாந்து

வருவதையெல்லாம் செலவு செய்பவன் பிச்சையெடுக்க வழி தேடுகிருன். —இங்கிலாந்து

குண்டூசியை எடுக்கக் குனிய முடியாதவன் ஒரு பவுன்கூடச் சேர்க்க முடியாது. —இங்கிலாந்து

## செழிப்பு

அறுவடைக் காலத்தில் எலிக்கு நான்கு பெண்டாட்டிகள். —இந்தியா

வீட்டில் கோதுமை யிருந்தால், மாமியாருக்குத் தினமும் விருந்துதான். —இந்தியா

வாய்க்காலில் நீர் நிறைந்திருந்தால், கிணறுகளும் நிறைந்திருக்கும். —சீனு

செழிப்பு தாயையும் தந்தையையும் மறக்கச் செய்யும் —ஸ்பெயின்

செழிப்பு பசியைக் கொன்றுவிடும். —ஸ்பெயின்

## வீண்

ஒருவன் தனக்குத் தேவையில்லாததை விலைக்கு வாங்கினால், அவன் தன் பணத்தைத் தானே திருடுவதாகும்.
—ஸ்வீடன்

குருடனுடைய கண்ணாடிக்கும், பிக்குவின் சீப்புக்கும் வேலையில்லை.
—ஜப்பான்

உடைந்த பானைக்கு ஒட்டிய மூடி.
—ஜப்பான்

கிழிந்த சட்டைக்குத் தங்கப் பொத்தான்கள் தேவையில்லை.
—துருக்கி

பணத்தை விரயம் செய்யாதவன், பீங்கான் தட்டை வாங்கிக் கீழே போட்டால் போதும்.
—ஹாலந்து

வழுக்கைத் தலையனுக்குச் சீப்பு எதற்கு? அலிக்கு ஆசை நாயகி எதற்கு? செவிடனுக்குப் புல்லாங்குழல் வாசிப்பவன் வேண்டுமா? குருடனுக்குக் கண்ணாடி தேவையா? நிலத்திலிருப்பவனுக்குத் துடுப்பு வேண்டுமா? கப்பலோட்டிக்குக் கலப்பை எதற்கு?
—ஃபின்லந்து

வீண் சொற்கள் மாவாகமாட்டா. [அதிகமாக உபயோகிக்கும் பழமொழி.]
—ஃபின்லந்து

ஆமையைக் கடித்த ஈக்கு வாய்தான் வலிக்கும்.
—லத்தீன்

புதைத்து வைத்த பொருளுக்கும், மறைத்து வைத்த அறிவுக்கும் வேற்றுமையில்லை.
—லத்தீன்

கந்தலைத் தைத்து நூலை வீணாக்க வேண்டாம்; கிழவியை முத்தமிட்டு நாளை வீணாக்கவேண்டாம்.
—ஸெர்பியா

## அவசியம்

குளிர் வந்துவிட்டால், அழுக்குத் துணியும் அவசியம்.
—ஜப்பான்

## வாய்ப்பு

வாய்ப்பு வந்ததும், அதன் தாடியைப் பிடித்துக்கொள்; ஏனெனில், அதற்குப் பின் தலை வழுக்கை.
—பல்கேரியா

## மலிவு

மலிவான பொருள்கள் நல்லவையல்ல; நல்ல பொருள்கள் மலிவானவை யல்ல. —சீனு

மலிவாக வாங்கிய இறைச்சி மட்டமாயிருக்கும். —இங்கிலாந்து

நல்ல சரக்கே மலிவான சரக்கு. —ஃபிரான்ஸ்

மலிவான இறைச்சியை வேகவைக்கும்போது, நீ மிச்சப் படுத்திய தன் வாசனை தெரியும். —அரேபியா

எல்லாப் பொருள்களும் கிராக்கியாகிவிட்டால், தங்கம் மலிவாகி விடும். —ஜெர்மனி

ஒட்டகம் ஒரணு விலையானல் கிராக்கி, ஆயிரம் அணுவானல் மலிவு. —பல்கேரியா

## கிராக்கி

எருதின் விலைக்கு மீன் விற்கும் ஊர் பாழாகும். —லத்தீன்

கிராக்கியே மலிவு, மலிவே கிராக்கி. —போர்ச்சுகல்

## விவசாயம்

கலப்பையும் மண்வெட்டியும் உலகுக்கு உணவளிக்கின்றன. —பல்கேரியா

உங்கள் சந்ததியார்களுக்குச் சரியான இரண்டு மார்க்கங்களைப் பற்றிச் சொல்லிக் கொடுங்கள்; அவை இலக்கியமும் விவசாயமும். —சீனு

வயலுக்கு முந்து, படுக்கைக்குப் பிந்து. —சீனு

நாள்தோறும் தன் நிலங்களைச் சுற்றிப் பார்ப்பவனுக்கு ஒவ்வொரு தடவையும் ஒரு நாணயம் கிடைக்கும். —யூதர்

பறவைகளுக்குப் பயந்து விதைக்காமல் இருக்கவேண்டாம். —ஜப்பான்

தானியத்தைத விதைப்பவன் புண்ணியத்தை விதைக்கிறன். —பாரசீகம்

நீ உழும்பொழுது, ஆண்டவன் உனக்கு அளித்துள்ள நிலத்தில் பாடுபடு. —எகிப்து

வயலுக்கு மிக உயர்ந்த உரம், அடிக்கடி சொந்தக்காரன் பார்வையிடுதல். —ஜெர்மனி

அரை ஏக்கரில் அதிகம் விளையும். [சொற்ப நிலமுடையவன் அதிலேயே கண்ணும் கருத்துமாயிருந்து உழைப்பான். அதனால் மிகுந்த பயன் விளையும்.] —ஸ்காட்லந்து

விவசாயியின் வரவேற்புக் கூடம் தொழுவின் முற்றம். —வேல்ஸ்

கலப்பையுடன் முதலில் சென்றவன்தான் அறுவடைக்கும் முதலில் செல்வான். —வேல்ஸ்

ஏர் உழ உழ, இயந்திரம் மாவு திரித்துக் கொண்டேயிருக்கும். —வேல்ஸ்

உடையவன் கால் தடங்களே வயலுக்குச் செழிப்பளிக்கும். —ஸெக்

கடவுளுக்கும் நிலத்திற்கும் கடன் கொடுப்பது நல்லது; அவர்கள் நல்ல வட்டி கொடுக்கிறார்கள். —டென்மார்க்

உரவண்டிதான் 'கோச்சு' வண்டிக்கு உணவளிக்கிறது. —எஸ்டோனியா

மண்தான் பொன்னிலும் அருமையானது. —எஸ்டோனியா

உடையவனில்லாத வயல் தாயில்லாக் குழந்தை. —( " )

ஏழைப் பெண்ணின் வயல் அவளுடைய முன்தானையிலேயேயிருக்கும். [வேறு கதியில்லாதவன் அதிலேயே கவனமாயிருப்பான்.] —எஸ்டோனியா

நிலத்தை ஒருவன் ஒருமுறை ஏமாற்றினால், அது அவனை ஒன்பது முறை ஏமாற்றிவிடும். —எஸ்டோனியா

வயலில் ஒரு முறையாவது உழுதவன்தான் மனிதன். —( " )

ஓர் அதிகாரி சில சமயங்களில் பணக்காரராகலாம்—ஒரு வியாபாரி அடிக்கடி பணக்காரராகலாம், ஒரு விவசாயி என்றுமே பணக்காரன். —எஸ்டோனியா

பனி மழையாகாது, எனினும் தன் அளவுக்குப் பலன் கொடுக்கும். —ஜியார்ஜியா

தொல்லை மா... 6281

உடையவன் கண் பார்வையால் பயிர் வளரும். —ஹங்கேரி

மேற்கேயிருந்து கிழக்கே பார்த்து உழுபவனுக்கு ஒவ்வொரு சாலிலும் விளைவு குறையும். —இத்தாலி

கதிர் முற்றிவிட்டால், அறுவடையை நாளைக்கு என்று ஒத்தி வைக்கக் கூடாது. —லத்தீன்

பெரிய நிலத்தைப் புகழ்ந்து பேசு, ஆனால் சிறு நிலத்தில் பயிர் செய். —லத்தீன்

அடிக்கடி பறித்து நட்ட செடி ஒருபோதும் வளர்வதில்லை. —லத்தீன்

நிலம் ஒரு தட்டு. அதில் போட்டதை யெல்லாம் திரும்ப எடுத்து விடலாம். —ரஷ்யா

உடையவன் இல்லாத நிலம் அநாதைக் குழந்தை. —ரஷ்யா

கழுத்திருந்தால், நுகத்தடியும் இருக்கும். —ரஷ்யா

இரவில் உழுதால் விளைவு குறையும். —சுவீடன்

எத்தனை முறை உழுகிறாயோ, அந்த அளவுக்குத் தானியம் குவியும். —இந்தியா

எல்லாத் தொழில்களுக்கும் ஏர்தான் அடிப்படை. —இந்தியா

அதிருஷ்டம் அதன் போக்கில் வரும், உழவு உறுதியாய்ப் பயனளிக்கும். —இந்தியா

விதைப்பதை அறு. —இந்தியா

விதை விதைத்ததும் வேலியை அமை. —இந்தியா

உரம் போட்ட வயலில் பயிர் செய்தால், திருமணங்கள் நடத்திக் கொண்டே யிருக்கலாம். —இந்தியா

நிலம் வாங்கும்வரை ஒவ்வொருவனும் மூடன்தான். —அயர்லந்து

நாம் வயலை உழுதால் கடவுள் தானியத்தை அளிப்பார். —ஸெக்

புறக்கூடுள்ள தோட்டம் பூலோக சுவர்க்கம். —ஸ்பெயின்

வயலுக்கு அதிபதி உரம். —எஸ்டோனியா

உரமே குடியானவனின் தங்கம். —எஸ்டோனியா

உழவில் ஓடிப் பயனில்லை. —வேல்ஸ்

ஈர நிலத்திற்குக் கொஞ்சம் மழை போதும். —செர்பியா

நல்ல விளைவிருந்தால் விரைவில் விற்றுவிடு, விளைவு குறைந்திருந்தால் தாமதித்து விற்கவேண்டும். —ரஷ்யா

குனிந்து பணியும் பிரபுவைவிட நிமிர்ந்து நிற்கும் குடியானவன் மேல். —இங்கிலாந்து

பஞ்சக் காலத்திலும் குடியானவர்கள் செழிப்பாயிருக்கிறார்கள். —இங்கிலாந்து

எவனும் தன் களஞ்சியம் நிறைந்திருப்பதாகச் சொல்வதில்லை. —இங்கிலாந்து

ஏரைக் கொண்டு நாம் உணவைத் தேடுவோம். —லத்தீன்

விவசாயம் எளிதானதன்று. —லத்தீன்

## குடியானவர்

நோயுற்ற அரசனைவிடத் திடமான குடியானவனா யிருத்தல் மேலானது. —ஜெர்மனி

இடி பலமாக இடிக்காவிட்டால், குடியானவன் தொழ மறந்து விடுவான். —ரஷ்யா

குடியானவனைக் குதிரைமேல் ஏற்றிவை, அவன் கடவுளையும் மறந்து, மனிதனையும் மறந்து விடுவான். —ஸ்பெயின்

வயல்களில் சிரமப்படாதவன் விருந்துகளில் நடனமாட முடியாது. —பல்கேரியா

குடியானவன் கனவானாகிவிட்டால், கண்ணாடி மாட்டிக் கொண்டுதான் கலப்பையைப் பார்ப்பான். —ஜெர்மனி

குடியானவன் வாயை ரொட்டியால் அடைத்துவிடு. —போலந்து

குடியானவன் சம்பாதிக்கிறான், பிரபு செலவழிக்கிறான், யூதன் ஆதாயமடைகிறான். —போலந்து

குடியானவன் ஏழையாயிருந்தால், நாடு முழுவதும் ஏழையானதுதான். —போலந்து

குடியானவன் பிறவியிலேயே தத்துவஞானி; பிரபு அப்படி யாவதற்குப் படித்தாக வேண்டும். —போலந்து

பிரபுக்களுக்குள்ளே சண்டை வரப்போகின்றது; குடியானவர்களே, உங்கள் குடுமிகளைக் கொடுங்கள். [பிரபுக்களுக்காகக் குடியானவர்களே சண்டையிட்டு மடிய வேண்டியிருக்கும்.] —செக்

குடியானவன் வைக்கோலை விற்றல் உணவை விற்ற மாதிரி. —எஸ்டோனியா

நாம் எதைப் போட்டு வைத்தாலும், கோணியைச் சுமப்பவன் குடியானவன். —ரஷ்யா

ஏர் பிடிப்பவன் ஒருவன், தட்டுடன் நிற்பவர் எழுவர். —ரஷ்யா

உழுபவனுக்குத் தீங்கு செய்ய நேரமில்லை. —ரஷ்யா

உழுபவனுக்குப் பாட்டு வரும். —ரஷ்யா

மகா மூடரான குடியானவர்களுக்குத்தான் மிகப் பெரிய உருளைக் கிழங்குகள் விளைகின்றன. —ஸ்வீடன்

## பொதுமை

பொதுவிலுள்ள குதிரைக்கு லாடக் கூலி யார் கொடுப்பது? —இத்தாலி

பொதுவிலுள்ள மாடு புழுத்துச் செத்தது. —தமிழ்நாடு

பொதுப்பானை நடுச்சந்தியில் உடையும். —இந்தியா

பொதுவிலுள்ள கூடத்தைத் தூப்பாரில்லை. —சீனு

எல்லோரும் சேர்ந்து ஒரு பொருளைப் பாதுகாத்தால், அது விரைவில் மறைந்துவிடும். —போலந்து

கூட்டாக உள்ள வயலைக் கரடிகள் அழிக்கும். —அமெரிக்கா

பொதுப் பணம் புனித நீர் போன்றது, ஆளுக்கு ஒரு கை அள்ளிக் குடிக்கலாம். —இத்தாலி

# கடன்

கடனைக் கொடுத்துச் சண்டையை விலைக்கு வாங்கு.
—இந்தியா

இரவிலும் வட்டி ஏறிக்கொண்டேயிருக்கும். —இந்தியா

நோயாளியின் உணவும், கடன்காரன் வருமானமும் ஒன்று போல. —இந்தியா

உண்டதும் குடித்ததுமே லாபம், மிஞ்சியதெல்லாம் கடனுக்குப் போய்விடும். —இந்தியா

பட்டினி கிடத்தல் நண்பன்; கடன் வாங்குதல் பகைவன்.
—இந்தியா

கண்ணீர் விடுவதால், கடன் அடையாது. —ஜப்பான்

யாத்திரை சென்றால்தான் தீரும், கடன் அடைத்தால்தான் தீரும். —துருக்கி

கையால் கொடுத்ததைக் காலால் வாங்கவேண்டும்.
[கொடுத்ததை வசூலிக்கப் பன்முறை நடக்கவேண்டும்.]
—அரேபியா

அடகு வைப்பதைவிட விற்று விடு. —அரேபியா

அதிகமாகக் கடன் வாங்குபவன் அதிகமா யிழப்பவன்.
—ஃபிரான்ஸ்

உனக்கு உபதேசம் செய்பவர்கள், உன் கடன்களைச் செலுத்த மாட்டார்கள். —ஃபிரான்ஸ்

கடன் அடைப்பவன் தன் முதலைப் பெருக்குகிறான். —ஜெர்மனி

பழைய கடனுக்கு ஒரு துரும்பு கிடைத்தாலும் பெற்றுக் கொள்; இல்லாவிடில் வக்கீலுக்குத்தான் லாபம். —( " )

கடன்களே நம் வாரிசுகள். —ஜெர்மனி

குத்தகைகளும், வட்டிகளும் உறங்குவதே யில்லை. —ஜெர்மனி

கடன்களும் பாவங்களும் நாம் நினைப்பதைவிட அதிகமாகவே யிருக்கும். —இங்கிலாந்து

கடன் கேட்க வருபவனை யாரும் வரவேற்க மாட்டார்.
—அயர்லந்து

நாட்பட்ட கடன் தீர்ந்து போனமாதிரிதான். —வேல்ஸ்

கடன்களோடு வாழ்வதைவிட இரவில் சாப்பிடாமல் படுப்பது நலம். —ஸெக்

கடனுக்கு வாங்கியதெல்லாம் மலிவாகவே தெரிகிறது. —ஸெக்

செலுத்தாக கடன்கள் மன்னிக்கப் பெருத பாவங்கள். —ஸெக்

நாம் உண்ணும்போது அதே தட்டிலிருந்து நம் கடன்களும் உண்ணுகின்றன. —ஸெக்

கடன் பலரை மேலே தூக்கிவிடும்; பலரைக் கீழே அமுக்கியும் விடும். —டென்மார்க்

கொடுக்கமாட்டாத கடன்காரர்களிடம் கருகிய கருவாடுதான் கிடைக்கும். —டென்மார்க்

கடனைத் திருப்பிக் கொடுத்தவன் மறுபடி வாங்க முடியும். —ஹாலந்து

கடன்காரன் பன்முறை பொய் சொல்ல வேண்டியிருக்கிறது. —ஹங்கேரி

கடனில்லாதவனே சீமான். —ஹங்கேரி

கொடுக்க முடியாத கடன்காரரிடம் கிடைத்தது ஆதாயம். —லத்தீன்

நீ கடன் கொடுக்கும்போது அவர்கள் உன்னை வணங்கிஞர்கள்; வசூலிக்கும்போது நீ அவர்களை வணங்க வேண்டும். —ரஷ்யா

கடனுக்கு அழகு திருப்பிக் கொடுத்தல். —ரஷ்யா

காலையில் அதிக நேரம் உறங்குவோன் ஒரு கடன்காரனிடம் தலையணையை இரவல் வாங்கி வைத்துக் கொள்ள வேண்டும். [கவலையால் உறங்காத கடன்காரனின் தலையணைகூட உறக்கத்தைத் தொலைத்துவிடும்.] —ஸ்பெயின்

கடன்கள் குழந்தை மாதிரி; குறைவான கடன்கள் அதிகக் கூச்சலிடும். —ஸ்பெயின்

யசமானருக்குக் கடன்கள் ஏறிவிட்டால், வேலைக்காரர்கள் திருடர்களாவார்கள். —ஸ்பெயின்

கடன்கள் நம்மை அடிமைகளாக்கும். —ஆப்பிரிக்கா

நாயிடம் கடன் பட்டிருந்தால், அதையும் 'ஐயா' என்று அழைக்கவேண்டும். —ஆப்பிரிக்கா

ஒருவன் பணம் கடன் வாங்கும்பொழுது, புறவைப் போல் தரையில் தலை வைத்துக் கேட்பான்; திரும்பக் கொடுக்கும் பொழுது, முதலைபோல், தலையைத் தூக்கிக் கொண்டு கொடுப்பான். —ஆப்பிரிக்கா

கடன் வாங்குபவன் கொடுப்பவனுடைய பணியாளாகிறான். —பழைய ஏற்பாடு

கடன்காரர்களைவிடக் கடன் கொடுத்தவர்களுக்கு நினைவு அதிகம். —ஸ்பெயின்

நோயாளிக்காவது நித்திரை உண்டு; கடன்காரனுக்கு அதுவுமில்லை. —ஸ்பெயின்

கடன் வாங்குதல் பிச்சையெடுத்தலைவிட அதிக உயர்வில்லை. —ஜெர்மனி

கடனுக்கு விற்பவனிடம் வியாபாரம் பெருகும்; ஆனால் பணம் சுருங்கும். —ஜெர்மனி

கடனில்லாதவனே சீமான். —ஃபிரான்ஸ்

கடன்களை அடைப்பவன் தன் செல்வத்தைப் பெருக்குகிறான். —ஃபிரான்ஸ்

கண்ணீரால் கடன்களை அடைக்க முடியாது. —யூதர்

துன்பங்களின் தாய் கடன். —யூதர்

கடன் வாங்காதவனுக்குக் கவலைகள் இல்லை. —யூதர்

சட்டென்று கடன் வாங்குவோன் சட்டென்று பொய்யும் பேசுவான். —ஜெர்மனி

கடன் வாங்கி விருந்துவைத்து ஆண்டியாக வேண்டாம். —கிரீஸ்

இரவல் வாங்கிய உடை வாடை தாங்காது. —அரேபியா

கடனாகை ஆயிரத்திற்கு விற்பதைக் காட்டினும், ரொக்கமாக எண்ணூறு பெறுவது மேல். —சீனா

கடனால் வாடிக்கைக்காரர்கள் வராமல் ஒழிவார்கள். ( ” )

இப்போது வாங்கும் கடன் அடுத்த ஆண்டு மகசூலுக்கு ஆபத்து. —நீகிரோ

பரம ஏழைக்கு கடனே இராது. —லத்தீன்

கடன்படுதலே முதலாவது தீமை. —இங்கிலாந்து

பிறர் பணத்தால் நிரம்பியுள்ள பை காலியான பைதான். —இங்கிலாந்து

பணம் கைக்கு வருமுன்னே செலவு செய்யத் தொடங்க வேண்டாம். —இங்கிலாந்து

ஊக்கம் கடன்களை அடைக்கும்; ஏக்கம் அவைகளை அதிகமாக்கும். —இங்கிலாந்து

கடனைவிட்டு வெளி வருபவன் பணக்காரனுவான். ( '' )

ஏழையின் கடன் ஊருக்கெல்லாம் தெரியும். —இங்கிலாந்து

கடனுள்ள மனிதன் வலையுள் சிக்கியவன். —இங்கிலாந்து

கடன் வாங்கவும் கதியற்றவன் உலகுக்குப் பாரம். —( '' )

இரவல் வாங்குவதைவிட விலைக்கு வாங்குவதே மேல். —( '' )

உனக்குச் சொந்தக் குதிரை ஒன்று இருந்தால், மற்றொன்றைக் கடனுக வாங்கலாம். —இங்கிலாந்து

கடன் கொடுக்கவும் வேண்டாம், கடன் வாங்கவும் வேண்டாம். —ஷேக்ஸ்பியர்

நின்று வாங்கிக் கொண்டுபோன கடனை நாம் பணிந்துதான் வசூலிக்க வேண்டும்! —சீனு

நீ ஒரு மனிதனிடம் கலப்பையோ தலையணையோ இரவலாக வாங்கியிருந்தால், காலையில் கலப்பையையும், இரவில் தலையணையையும் திருப்பிக் கொண்டுபோய் கொடுத்து விடு. —யூதர்

செத்தவனுக்குக் கடனெல்லாம் தீரும். —இங்கிலாந்து

கடன் வாங்குதல் வறுமையின் முதற் குழந்தை. —அரேபியா

## இரவல்

மற்றவர் வண்டியில் ஆசை வைத்தால், பாதி வழி நடக்க வேண்டும். —போலந்து

எருதுகளை மற்லவர்களுக்குக் கொடுத்தவன் தன் விரல்களாலேயே உழவேண்டும். —ஃபின்லந்து

இரவல் கொடுத்தது திரும்ப வராது. வந்தால் முழுதும் வராது; முழுதும் வந்தாலும், திரும்பக் கொடுத்தவனுக்கும் நமக்கும் தீராப் பகை தோன்றும். —ஸ்பெயின்

## இனாம்

இனாமாக ஒன்றைப் பெற்றுக் கொள்வதில், உன் சுதந்தரம் குறைகின்றது. —போலந்து

(காசில்லாமல்) 'கடவுள் காப்பாராக!' என்ற சொற்களைக் கொண்டே அதிகச் சரக்குகள் வாங்க முடியாது. —போலந்து

பிறர் அளிக்கும் இறைச்சியை ஓநாய்கூடத் தின்பதில்லை. —எஸ்டோனியா

வாங்கிக் கொண்டே யிருக்கிற கைக்கு அலுப்பு சலிப்பே இராது. —ரஷ்யா

## பரிசு

பாத்திரங்கள் இருந்தால், பரிசுகள் வரும். —எஸ்டோனியா

வருகிற பரிசுகளில் பல நமக்கு நஷ்டங்களாகும். —இத்தாலி

பரிசு பரிசை எதிர்பார்க்கும். —ரஷ்யா

## பசி

பசியுள்ள கொசு பலமாய்க் கடிக்கும். —ஜெர்மனி

பசித்தவன் உருசி பார்க்க மாட்டான், களைத்தவனுக்குத் தலையணை தேவையில்லை. —இந்தியா

ஏழைகள் உணவைத் தேடுகின்றனர், செல்வர் பசியைத் தேடுகின்றனர். —இந்தியா

பசியுடையவர்கள் கொட்டாவி விடுகிறார்கள், திருப்தியாக உண்டவர்கள் ஏப்பம் விடுகிறார்கள். —ரஷ்யா

பசியாயிருக்கையில் யூதன் பாடுகிறான், குடியானவன் தன் மனைவியை அடிக்கிறான். —ரஷ்யா

நிறைந்த வயிற்றுக்குப் பசி ஒன்று இருப்பதாகவே நம்பிக்கை கிடையாது. —இத்தாலி

பசியுள்ள குதிரை அடிப் புல்லைக் காலியாக்கி விடும். —ஃபிரான்ஸ்

தொட்டி வரண்டிருப்பதைக் குருட்டுக் குதிரையும் அறியும். —நீகிரோ

பசியுள்ள நாய் தடிக்கு அஞ்சாது. —இங்கிலாந்து

பசியுள்ள மனிதன் கோபமுள்ள மனிதன். —இங்கிலாந்து

பஞ்ச காலத்தில் எல்லாம் நல்லதுதான். —இங்கிலாந்து

பசியும் குளிரும் மனிதனை எதிரியிடம் ஒப்படைக்கின்றன. —இங்கிலாந்து

பசியுள்ளவன் சமையற்காரனைக் குற்றம் சொல்வதில்லை. —இங்கிலாந்து

வாளினும் கூர்மையுள்ளது பசி. —இங்கிலாந்து

வயிறுதான் நம்மை வேலை செய்யத் தூண்டுகிறது. —( " )

பசியுள்ள கரடி நடனம் செய்யாது. —துருக்கி

உணவு விடுதிக்காரனுக்கு உன் பசி எவ்வளவு அதிகம் என்பதைப் பற்றிக் கவலையில்லை. —சீனா

பதினைந்து நாட்களுக்கு முந்திச் செய்த ரொட்டிக்கு இருபத்தொரு நாட்களாக உள்ள பசி வேண்டும். —ஃபிரான்ஸ்

பசி ஒரு கடன்காரன், வாங்கினாலொழிய மீளமாட்டான். —ஜெர்மனி

பசியுள்ளவனின் புன்னகை பொய்யானது. —போலந்து

பசியுள்ள கண் நெடுந்தூரம் பார்க்கும். —அயர்லந்து

பசிக்கு ரொட்டியைத் தவிர வேறு எதுவும் கண்ணில் படாது. —பல்கேரியா

மனிதரின் கொடிய பகைவர்களில் பசி ஒன்று. —அமெரிக்கா

வயிறு, வசூலித்தாலொழிய விடாத அமீனு போன்றது.
—எஸ்டோனியா

வைத்து விட்டுப்போன ரொட்டி பின்னால் இனிப்பாகிவிடும்.
—எஸ்டோனியா

பசியுள்ளவனுக்கு அவரையும் முந்திரிப் பருப்பாகும்.
—இத்தாலி

பசியில்லாதவன் தேங்காயின் மேல் சிரட்டையிருக்கிறது என்று குறை சொல்லுவான். —ஆப்பிரிக்கா

வயிற்றை ஏமாற்ற முடியாது. —செர்பியா

## உணவு

இறைச்சியில்லாத உணவு புல்லைத் தின்பது போன்றது.
—இந்தியா

வாழ்வதற்காக உண்பாயாக, உண்பதற்காக வாழவேண்டாம்.
—கிரீஸ்

நீ என்ன உண்கிறாய் என்பதைச் சொன்னால், நான் உன் தன்மையைச் சொல்லிவிடுவேன். —ஃபிரான்ஸ்

சாப்பாட்டில் கூச்சம் வேண்டாம். —லத்தீன்

கொஞ்சம் பசி இருக்கும்போதே உண்பதை நிறுத்திவிடு.
—லத்தீன்

சிலர் நாவுக்காகவே உயிர் வாழ்கின்றனர். —லத்தீன்

ஒருவனுடைய உணவு மற்றொருவனுக்கு விடமாகலாம்.
—லத்தீன்

கனியை உண்பாய், மரத்தைப் பற்றி விசாரிக்க வேண்டாம்.
—துருக்கி

ஒவ்வொரு மரமும் தூக்கு மரமாய் நின்றாலும், மனிதன் உண்ணாமல் முடியாது. —ஹாலந்து

தேவையான அளவு உண்ணுங்கள், அளவறிந்து குடியுங்கள்.
—இங்கிலாந்து

பலவகை உண்டிகள் பலவகை நோய்களுக்குக் காரணம்.
—இங்கிலாந்து

திருடன் கொள்ளையிடுவதைவிட, உணவில் அதிகம் செலவாகும்.
—இங்கிலாந்து

மனிதனின் இதயத்தை தொடுவதற்கு வழி அவன் வயிற்றிலிருக்கிறது.
—இங்கிலாந்து

ஆயுளை நீடிக்க உணவுகளைக் குறை. —இங்கிலாந்து

நாம் குறைவாக உண்டோம் என்று குறைபட்டு கொள்வதேயில்லை.
—இங்கிலாந்து

உண்டி சுருங்குதல் பெண்டிர்க்கு அழகு. —தமிழ்நாடு

முப்பத்தாறு வகைக் கறிகளில் எழுபத்திரண்டு நோய்கள் இருக்கும்.
—இந்தியா

சோற்றுக்கு ஈடான நிதியில்லை. —இந்தியா

தானியத்தில் பழையது, வெண்ணெயில் புதியது. —இந்தியா

வெறும் வயிறு நன்ருகத் தாண்டிக் குதிக்க முடியாது; முழு வயிறு தாண்டவே முடியாது.
—அல்பேனியா

புசித்தல், குடித்தல், துடைத்தல்—மூன்றும் தொடங்கினுல் போதும், முடிந்துவிடும்.
—ஸ்காட்லந்து

பாலும் தானியமுமே உலகிற் சிறந்த பொருள்கள். —வேல்ஸ்

குழந்தைக்குப் பால், வயது வந்தவனுக்கு இறைச்சி, முதியவருக்கு 'பீர்'.
—வேல்ஸ்

உண்ணத் தகுந்த பறவைகள் நெடுநாள் வாழ்வதில்லை.
—பல்கேரியா

இரவு உணவு குறைந்தால், ஆயுள் நீளும். —பல்கேரியா

பட்டினியிருக்கவேண்டிய சமயத்தில் உணவுண்டால், உண்ண வேண்டிய நேரத்தில் பட்டினி கிடக்க நேரும்.
—டென்மார்க்

வாய்க்காகத்தான் ஒவ்வொருவனும் பாடுபடுகிருன். —( " )

நன்ருக உண்டவன் பலமாகக் கதிரடிப்பான். —எஸ்டோனியா

உண்ட பிறகு ரொட்டி பிடிக்காது. —எஸ்டோனியா

குறையச் சாப்பிட்டதற்காக ஒருபோதும் வருந்தவேண்டாம்.
—எஸ்டோனியா

நக்கிக் குடித்தால் வயிறு நிறையாது. —எஸ்டோனியா

வயிறு நிறைந்துவிட்டால், மனம் வெறுமையாகும். —கிரீஸ்

தின்பண்டங்கள் தெவிட்டலாம், ரொட்டி ஒருபோதும் தெவிட்டாது. —ரஷ்யா

எவ்வளவு வேண்டுமானாலும் யோசனை செய்யுங்கள்—ரொட்டிக்கும் உப்புக்கும் மேலாக எதையும் நீங்கள் கண்டு பிடிக்க முடியாது. —ரஷ்யா

ரொட்டி தந்தை, தண்ணீர் தாய். —ரஷ்யா

வழிப் பயணத்தில் ரொட்டி ஒரு சுமையாயிராது. —ரஷ்யா

இறைவன் பணக்காரருக்குப் பசியின்மையையும், பிஸ்கோத்தையும் கொடுக்கிறான்; ஏழைகளுக்குப் பசியையும், ரொட்டியையும் அளிக்கிறான். —ரஷ்யா

கஞ்சியை வெண்ணெ கெடுத்துவிடாது. —ரஷ்யா

சமயலறை, முதலில் வீட்டை விழுங்கி, பிறகு தன்னையும் விழுங்கிவிடுகின்றது. —ரஷ்யா

பன்றிக்கு உணவு நேரம் கிடையாது. —ரஷ்யா

எந்த இரையும் வெண்ணெயிலே பொரித்தால், நன்றாய்த் தானிருக்கும். —ஸெர்பியா

அறுத்து வைத்த ரொட்டி உண்பதற்கு எளிது. —ஸெர்பியா

இரவுச் சாப்பாட்டைக் குறைத்தால், ஆயுள் நீளும். —அமெரிக்கா

அதிகமாய் உண்டு வந்தால். உணவும் வெறுத்துப்போம். —ஸ்பெயின்

நிறைந்த வயிற்றுடன் ஓடவும் முடியாது, சண்டைபோடவும் முடியாது. —ஸ்பெயின்

தண்ணீரை எருதுபோலக் குடி, மதுவை அரசனைப் போலக் குடி. —ஸ்பெயின்

முதலில் கருப்பு ரொட்டியைத் தின்றுவிட்டு, பிறகு வெள்ளை ரொட்டியை உண்ணவேண்டும். —ஸ்விட்சர்லந்து

தண்ணீர்தான் உணவுகளின் அரசன். —ஆப்பிரிக்கா

ஆரோக்கிய முள்ளவனைப்போல் உண்ணவேண்டும், ஆனால் நோயாளியைப் போல் (சொற்பமாக) மதுவருந்த வேண்டும். —ஜெர்மனி

மனிதன் எதை உண்கிறானோ அதன்படி மாறுகிறான். —( ” )

தேநீரில் முதல் கோப்பை பயனில்லை, அடுத்தது இன்பமளிக்கும், மூன்றாவது தேவையற்றது. —ஆப்பிரிக்கா

விலையைச் சொன்னால், உண்பதின் சுவை போய்விடும். —ஃபிரான்ஸ்

பல தலைமுறைகளாக ஒரு குடும்பம் நிலைத்திருக்க வேண்டுமானால், ஒரே வழிதான் உண்டு; கீரைத் தண்டுகள் இனியவை என்று கருதவேண்டும். —சீனா

வெண்ணெய்தான் உயிர். —இந்தியா

ஒரு முஸ்லிம் தனியாகப் பிரயாணம் செய்தால், உடல் பருத்துவிடுவார்; இருவராய்ச் சென்றால், மெலிந்துவிடுவார். —சீனா

வாய் உண்ணும்போது வயிற்றைக் கலந்துகொள்ள வேண்டும். —சீனா

எருதுக்கு உணவளித்த கைதான், அது வளர்ந்து கொழுத்தவுடன், கத்தியேந்தி நிற்கிறது. —சீனா

நிறைய உணவும், ஒரு கிண்ணம் தேநீரும் அருந்தியபின், ஒருவன் அமரனுக்கு நிகராவான். —சீனா

சாப்பிடுகையில் அளவைப் பாராதே. —சீனா

இருவர் உணவை ஒருவன் உண்டால், அவன் மூவர் வேலையைச் செய்யவேண்டும். —குர்திஸ்தானம்

மனிதர்கள் கொல்வதைக் காட்டிலும், கடவுளால் கொல்லப்பட்டவை மேலானவை. —ஐரோப்பிய நாடோடிகள்

பலரோடு சென்று, பலரோடு உண்ணவும். —ஆப்பிரிக்கா

அதிகமாக உண்பவன் உறங்குவான். —ஜைனம்

பருத்த வயிற்றுக்கு மெலிந்த மூளைதான் அமையும். —ஜெர்மனி

மீன் உருசியாயிருக்க வேண்டுமானால், அது தண்ணீரிலும், வெண்ணெயிலும், மதுவிலுமாக மும்முறை நீந்த வேண்டும். —போலந்து

வயிறு நிறைந்த புறாவுக்குக் கனியெல்லாம் புளிப்பு. —ஃபிரான்ஸ்

புளித்த ஆப்பிள்களையும் உண்ணத்தான் வேண்டும். —எஸ்டோனியா

## பெருந்தீனி

பானையிலே இருக்கிறது மரணம். —பழைய ஏற்பாடு

வயிறு நிறைய உணவிருந்தால், விரும்பிப் படிக்க முடியாது. —இங்கிலாந்து

ஒரு வருடக் குத்தகையை, ஒருவன் ஒரு வேளை உணவுக்குச் செலவழிப்பான். —இங்கிலாந்து

பசியால் இறப்பவர் சிலரே; உண்பதால் இறப்பவர் நூறாயிரம் பேர். —இங்கிலாந்து

வயிறு இல்லாதிருந்தால், முதுகுக்குத் தங்க அங்கி கிடைத்திருக்கும். —இங்கிலாந்து

வாளால் மாண்டவரைவிட, பெருந்திண்டியால் மாண்டவர் அநேகர். —இங்கிலாந்து

பஞ்சத்தைவிட, பெருந்திண்டியே அதிகப் பேரைக் கொன்றிருக்கிறது. —கிரீஸ்

விருந்திலே முதல் ஆள், போரிலே கடைசி ஆள். —கிரீஸ்

வாயின் துவாரம் சிறிதுதான், ஆனால் அது கூரையோடுசேர்த்து வீட்டையே விழுங்கிவிடும். —யூதர்

ஊசித் தொண்டை, தாழி வயிறு. —தமிழ்நாடு

பானையிலே சோறுள்ளவரை, பார்ப்பான் கண் உறங்காது. —தமிழ்நாடு

உடுத்துக் கெட்டான் துலுக்கன், உண்டு கெட்டான் மாத்துவன். —தமிழ்நாடு

உண்டு ருசி கண்டவனும், பெண்டு ருசி கண்டவனும் விடான். —தமிழ்நாடு

வயிறு நிறைந்துள்ளபோது உண்பவன் தன் பற்களாலேயே தனக்குச் சவக்குழி தோண்டிக் கொள்கிறன். —துருக்கி

இன்றைக்கு அமிதமான உணவு. நாளை பட்டினி, —அமெரிக்கா

## சுவை

மிட்டாய்க் கடையிலிருந்து ஈ வெளியேறுது. —இந்தியா

தேன் சிந்திய இடத்தில் ஈக்கள் கூடியிருக்கும். —இந்தியா

உருசி பார்ப்பதற்கு முழுக்கோழியையும் விழுங்க வேண்டியதில்லை. —சீனு

உருசி பார்க்குமுன் ஆசையிருப்பது இயல்பு; ஆனல் உருசி கண்டவனுக்கோ, நூறு மடங்கு ஆசை பெருகிவிடும். —பாரசீகம்

பசி கெட்டுப் போகாமலிக்க வேண்டுமானுல், ஒருவன் சமையலறைக்குள் போகக்கூடாது. —ஜெர்மனி

புளித்த பழத்தைத் தின்றவனுக்கு நல்ல பழம் அதிக இனிப்பாயிருக்கும். —ஜெர்மனி

சமையற்காரனுக்கு முதலாளியின் உருசி தெரிந்திருக்க வேண்டும். —இத்தாலி

## உபவாசம்

இலங்கணம் பரம ஔடதம். —தமிழ்நாடு

## சமையல்

தாளித வாடை வெகு தூரம், கருகின வாடை அதற்கப்பாலும் வீசும். —ஸெக்

## உடை

உடைகளே மனிதர் —எகிப்து

ஆள்பாதி, ஆடை பாதி. —தமிழ்நாடு

உடையைக் கொண்டு மனிதனை மதிப்பர். —ஹலந்து

உன் நாட்டில் உன் பெயரைக் கேட்பார்கள், வெளி நாடுகளில் உன் உடையைப் பார்ப்பார்கள். —யூதர்

பெண்கள் உடையணிந்தும் நிர்வாணமாய்ப் போவதற்காக பட்டு கண்டுபிடிக்கப் பெற்றது. —அரேபியா

உணவு உண்பது உன் இன்பத்திற்கு, உடைபணிவது மற்றவர் இன்பத்திற்கு. —இங்கிலாந்து

நல்ல உடைக்கு நல்ல வரவேற்பு. —இங்கிலாந்து

எவனுடைய உடையை எவரும் கவனிப்பதில்லையோ, அவன் உடையே சிறந்த உடை. —இங்கிலாந்து

மனிதனைத் தையற்காரன் தயாரிக்கிறான். —இங்கிலாந்து

உடையில்லாதவர்கள் காட்டிலும் உறங்காலம். —இந்தியா

ஆளின் திறமை பத்தில் மூன்று பங்கு, ஆடை பத்தில் ஏழு பங்கு. —சீனா

ஆளை மதிப்பது உடைகளால், குதிரையை மதிப்பது சேணத்தால். —சீனா

## நாடு

படைகைக் காப்பது நாட்டின் கொடி. —ஃபிரான்ஸ்

ஒவ்வொரு நாடும் தாய்நாடுதான். —கிரீஸ்

தாய்நாட்டிற்காக மடிவது உயர்வு. அதைவிட உயர்வு தாய் நாட்டிற்காக உயிர் வாழ்தல். —ஹங்கேரி

ஒருவன் பிறந்த இடத்தில் புல்லும் மகிழ்ச்சி தரும். —இத்தாலி

என் கைகளையும் கால்களையும் கட்டினாலும், என்னை என் மக்களுள்ள இடத்தில் தள்ளி விடுங்கள் —லத்தீன்

ஒருவர் நாட்டில் அந்நியர்கள் குடிபுகுவதைப் போன்ற தீமை வேறில்லை. —ருமேனியா

வேற்றானின் இரக்கம் முள்ளின் நிழல் போன்றது. —ருமேனியா

## தேசபக்தி

எட்டுப் பேர்களுள்ள கிராமத்திலும் ஒரு தேசபக்தன் இருப்பான். —ஜப்பான்

## போர்

உனக்கு ஓய்வு வேண்டுமானால், பட்டாளத்தில் சேர். —போலந்து

அமைதி செல்வத்தை உண்டாக்குகின்றது; செல்வம் போரை உண்டாக்குகின்றது. —ஃபிரான்ஸ்

வென்றவர்கள் அரசர்கள்; தோற்றவர்கள் திருடர்கள். —மங்கோலியா

சிப்பாய்களும், நீரும், நெருப்பும், விரைவிலே இடங்களைக் காலியாக்கி விடுவார்கள். —ஜெர்மனி

போரில் ஏற்பட்ட நஷ்டங்களை வெற்றி ஒரு காலும் திருப்பிக் கொடாது. —ஜெர்மனி

போர்க்களத்தில் புல் முளைப்பதில்லை. —போலந்து

போர் இல்லாவிட்டால் நிலையான அமைதி இல்லை. —( " )

முதலில் தாக்குவோன் இருமுறை தாக்கியவன் ஆவான். —பெல்ஜியம்

போர்க்களத்தில் வாளை இரவல் கொடுக்க முடியாது. —அமெரிக்கா

வெற்றி கண்டவன் செய்வதெல்லாம் சரிதான். —அமெரிக்கா

போர்க்களத்தைவிடச் சிறந்த நீதிபதி முன் இருந்ததுமில்லை, இனி இருக்கப் போவதுமில்லை. —அயர்லந்து

வெற்றி பெற்றவனுக்குக் களைப்புத் தோன்றாது. —பல்கேரியா

போர்வீரர் இருவர், தளபதிகள் ஒன்பது பேர்! —அமெரிக்கா

ஒரு சிங்கத்தின் தலைமையில் மான்கள் திரண்டு சென்றால், அது ஒரு மானின் தலைமையில் திரண்டு வரும் சிங்கப் படையைக் காட்டிலும் வல்லமை மிக்கதா யிருக்கும். —லத்தீன்

போரிலே வென்றவையெல்லாம் புனிதமானவை. —ரஷ்யா

சிப்பாயின் மனைவி மனைவியுமில்லை, விதவையுமில்லை. —ரஷ்யா

கோடை காலத்துக் களிப்பைப் போன்றவன் அமைதியான காலத்தில் சிப்பாய். —செர்பியா

போர் யாருக்கும் சகோதரனில்லை. —செர்பியா

வாள் பிடித்த கையை முத்தமிட வேண்டும். —அமெரிக்கா

போருக்கு ஆயத்தமாயிருப்பவன் பாதி யுத்தத்தை வென்றவனாவான். —ஸ்பெயின்

ஒவ்வொரு போரும் எங்கே தொடங்க வேண்டுமோ அங்கே முடிவடைகிறது. —ஸ்பெயின்

யுத்தத்தில் எல்லோருக்கும் தோல்விதான், வென்றவர்களுக்கும் தோல்விதான். —ஸ்வீடன்

ஈட்டியைத் தீட்டுவதைவிட தானியக் கதிர்களை அடித்தல் நல்லது. —அமெரிக்கா

ஆயுதமுள்ளவனுக்குப் போரில்லை. —ஆப்பிரிக்கா

அநீதியான சமாதானத்தைவிட நீதியான போர் மேல். —இங்கிலாந்து

யுத்தம் முடிவில்லாத யுத்தத்தைத் தவிர வேறு எதை உண்டாக்க முடியும்? — மில்டன்

பலாத்காரமும் ஏமாற்றமும் போரின் முக்கியமான இரண்டு பண்புகள். —ஹாப்ஸ்

போரில் நல்லதும் இருந்ததில்லை, அமைதியில் கெட்டதும் கிடையாது. —இங்கிலாந்து

போர் மரணத்தின் விருந்து. —இங்கிலாந்து

போர் மன்னர்களின் தொழில். —டிரைடன்

போர் தொடங்கியதும், சயித்தான் நரகத்தைப் பெரிதாக்கி அமைக்கிறான். —இங்கிலாந்து

கடவுள் பெரும்படைகளின் பக்கமே இருக்கிறார். —ஃபிரான்ஸ்

கூர்மையான பேச்சுகளைக் காட்டிலும் கூர்மையானவை குண்டுகள். —பிஸ்மார்க்

பணம்தான் போருக்குரிய தளவாடம். —கிரீஸ்

தாமதிப்பவர்களைப் போர்க் கடவுள் வெறுக்கிறார். —கிரீஸ்

இறப்பதா, வெல்வதா என்பவை போரின் முடிவுகள். —கிரீஸ்

போரைப் பற்றிய பயம் போரைவிட மோசமானது.—இத்தாலி

யுத்தத்தின் தொடக்கம் நரகத்தை அவிழ்த்து விட்டது போன்றது. —இத்தாலி

போர் நடக்கும் பொழுது சட்டங்கள் ஊமைகளாகி விடுகின்றன. —லத்தீன்

எதிரியைத் தந்திரத்தால் வென்றார்களா, வீரத்தால் வென்றார்களா என்று எவர்கள் கேட்கிறார்கள்? —வர்கில்

போரைப் பற்றிப் பேசுங்கள், ஆனால் போர் செய்யவேண்டாம். —ஸ்பெயின்

## அமைதி

சாந்தியுள்ள இடத்தில் ஈசன் உள்ளான். —இங்கிலாந்து

உன் ஜப மாலையின் மணிகள் பளபளப்பாயிருக்கட்டும், உன் ஆயுதங்களில் துரு ஏறட்டும். —வேல்ஸ்

அமைதியான காலத்தில் சிங்கங்களாய் இருப்பவை, போரில் மான்களாக இருக்கும். —லத்தீன்

நித்தியமான அமைதி என்பது முதற் சண்டை வரை. —ரஷ்யா

சாந்தமாக வாழ விரும்புவோன் ஒரு கையில் நெருப்பு, ஒரு கையில் தண்ணீர் வைத்துக் கொண்டேயிருக்க வேண்டும். —ஸெர்பியா

சமாதானத்தை உண்டாக்குபவர்கள் பாக்கியசாலிகள். —புதிய ஏற்பாடு

அமைதி உணவளிக்கிறது, போர் வீணாக்குகிறது; அமைதி ஜனப் பெருக்கத்தை உண்டாக்குகிறது, போர் அவர்களை அழிக்கிறது. —டென்மார்க்

போரினால் ஓர் எருதைப் பெறுவதைவிட, அமைதியினால் ஒரு முட்டையை பெறுதல் மேலாகும். —இங்கிலாந்து

அமைதியான காலத்தில் போருக்குத் தயாரிக்கவும். —( " )

பேராசை தீர்ந்ததும் அமைதி ஆரம்பமாகிறது. —இங்கிலாந்து

போருக்குக் குறையாத பெருமையுள்ள வெற்றிகள் அமைதிக்கும் உண்டு. —மில்டன்

அமைதி எப்பொழுது அழகானது. —ஃபிரான்ஸ்

போரைப் போலவே அமைதியிலும் புகழ் பெற முடியும். —லத்தீன்

இனிய அமைதி மக்களுக்கு ஏற்றது; கொடுமையான கோபம் விலங்குகளுக்கு உரியது. —லத்தீன்

ஒரு பாலைவனத்தை உண்டாக்கிவிட்டு அதை அமைதி என்று சொல்லுகிறார்கள். —டாஸிடஸ்

## மொழி

இரண்டு மொழிகள் தெரிந்தவன் இரண்டு மனிதர்களுக்குச் சமம். —ஃபிரான்ஸ்

பாஷை உயிரோடிருக்கும் வரை சமூகம் உயிரோடிருக்கும். —ஸெக்.

நீ புதிதாகக் கற்கும் ஒவ்வொரு மொழியும் உனக்கு ஒரு ஆன்மா போன்றது. —ஸெர்பியா

---

6281
கிளை